# Chanakya Sahasam
OR
# Chandragupta Charitram.

(PART SECOND)

AN HISTORICAL TAMIL NOVEL.

BY

Sister V. BALAMMAL.

# சாணக்ய சாகஸம்

அல்லது

# சந்திரகுப்த சரித்திரம்.

இரண்டாம் பாகம்.

ஸ்ரீமதி: பாலம்மாள் இயற்றியது.

Revised, Published & Copy-Righted by
Pandit: M. GOPALAKRISHNIER,
Editor "Vivekodayam", etc., Madura,
Lecturer in Tamil, National College, Trichinopoly.

FIRST EDITION.

E. M. GOPALAKRISHNA KONE,
Book-seller, Pudumandapam,
MADURA.

All Rights Reserved] 1921. [Price Rs. 1—8—

# விளம்பரம்.

---

நானும் ஸ்ரீமதி வி. பாலம்மாளும் நடத்திவந்த "விவேகோதயத்"தையேனும், "நச்சினார்க்கினியன்" என்னும் வேறு பத்திரிகையையேனும் சித்திரை மாதத்துக்குள் நடத்த எண்ணியுளேன். மிகுந்த பொருள் நஷ்டம் நேர்ந்ததன் பொருட்டு முன்பு பத்திரிகையை நிறுத்தியிருந்த நான், "சூடுண்ட பூனை அடுப்பங்கரையேறாது" என்பதற்கு மாறாக, இப்பொழுது மீண்டும் நடத்தத் துணிந்து முற்பட்டிருப்பதற்கு, எனது பல தற்கால முற்கால மாணவர்களின் வேண்டுகோளும், சில நண்பர்களின் வாக்குதானமுமே காரணங்களாகும். ஆயினும் குறைந்தது 350-பேர்களேனும் சந்தாதார்களாகச் சேர்வதாய் உறுதிமொழிச் சீட்டளித்த பின்னரே பத்திரிகை வேலையை ஆரம்பிப்பேன்.

"சிறுகக் கட்டிப் பெருகவாழ்" என்பதற்கேற்ப, இப்பொழுது 4 பாரங்களுடன் (அதாவது 32 பக்கங்களுடன்) பத்திரிகையைத் தொடங்குவேன். பெண்டிரும் எளிதில் உணரத்தக்கவிதம் இனிய எளியநடையில் நான் நடத்திய எப்பத்திரிகையும் நடைபெற்ற விஷயம், பல பத்திரிகைகளும் நடுவுநிலையினின்றும் அறிவித்துள்ள அபிப்பிராயம்கொண்டே அறியலாகும். சாணக்ய சாகஸம், கமலாவதி, வள்ளுவர்நேரிசை, புதல்வர்கடமை, மௌனதேசிகர், தனித்தமிழ்ப் பாக்கள், கதைப்பூங்கொத்து, விநோதக்கூற்றும் விடுகதை வினாக்களும், முதலியன விவேகோதயத்தில் வெளிவந்தவைகளே என்பதை அறிந்தவர்களுக்கு என் முயற்சியையும் பத்திரிகையின் பான்மையையும்பற்றி அதிகம் சொல்வது அநாவசியம். இதில் மாதந்தோறும் இனிய வியாசங்கள், நாவல், நாடகம், விநோதக் கூற்று, விடுகதைவினா, அச்சில் வாரா இலக்கியங்கள், மொழிபெயர்ப்புக்கள், சமாசாரக்கொத்து, முதலியன வெளிவரும்.

இதன் வருடசந்தா: தபாற்கூலி, வி. பி. கூலிமுதலிய யாவும் உட்பட ரூ 2-8-0. மாணவர்க்கும் பெண்பாலார்க்கும் மட்டும் ரூ 2-0-0. வெளிநாடுகளுக்கு ரூ 3-0-0. (தற்கால தபால் இலாகாவிதிகளை அநுசரித்து) அன்பர்கள் பத்திரிகையை வி. பி.யில் பெறாமல், மணியார்டர் அனுப்பிப் பெறலே நலமாகும். அப்பொழுது முன்னையோர் ரூ 2-4-0ம் பின்னையோர் ரூ 1-12-0ம் மணியார்டர் மூலம் அனுப்பினாற் போதும். விளம்பரவிகிதம்:-பக்கத்திற்கு ரூ 5. சகாய விகிதம் நீடித்தகால விளம்பரங்களுக் குண்டு.

பத்திரிகையின் மாதிரிப் பிரதிவேண்டுவோர் 3-அணா ஸ்டாம்பு அனுப்புக. அஃதின்றி அது கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது. தக்க சந்தாதார்தொகை சேர்ந்தபின்னரே பத்திரிகை வெளிவருமாதலின் பத்திரிகை வேண்டுவோரும் எனக்கு உதவிபுரிய விரும்புவோரும் தமதுபெயர், விலாசத்தை உடனே எனக்கு அறிவிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

ம. கோபாலகிருஷ்ணையர்

Lecturer in Tamil, National College, Trichinopoly.

போகிதும் மங்களம் எங்தும் நங்துக.

# முகவுரை.

"இந்நூலின் நடை மிகவும் பாராட்டற்பாலது. குற்றமற்று இலகுவாய் அமைந்துள்ளது. கதை தேன்போல் தித்திக்குமாயினும் தெவிட்டாத் தெள்ளமுதுபோன்றது. முற்றும் படித்து முடித்தாலொழியப் புத்தகத்தைக் கீழேவைக்க மனம்வராது. பெண்மக்களும் சிறுவர்களும் படித்தற்கு ஏலாவாறு சில நாவல்களிற் காணப்படும் பதப்பிரயோகங்களும் வாக்கியங்களும் மருந்திற்கும் இந்நாவலில் இல்லை" —என்பதும், "இந்நூல் வித்யா இலாகா அதிகாரிகளால் அங்கீகரிக்கக்கூடிய சகல சிறப்புக்களுடனும் விளங்குவதால் அதனைக் காலேஜ் வகுப்புக்களுக் கேனும் ஸ்கூல்பைனல் வகுப்புக்களுக்கேனும் பாடமாகவைப்பது மிகவும் விரும்பத்தக்கது"-என்பதும், "சாணக்யசாகஸம்" அல்லது "சந்திரகுப்தசரித்திர"த்தின் முதற்பாகத்தைக் குறித்துச் சுதேசமித்திரன், வைசியமித்திரன், இந்துநேசன், இந்து, செந்தமிழ், மெயில் முதலியன், பல்வேறு விதங்களில் வெளியிட்ட அபிப்பிராயங்களாகும். அதன் அருமை பெருமைகளை எண்ணித் துரைத்தனத்தார், சென்னை மாகாணத்திலுள்ள சகல கலாசாலைகளிலும் அதை 1919வ௵ பாடபுத்தகமாக ஏற்படுத்தி என்னையும் அதன் ஆசிரியரையும் பெருமைப்படுத்தியதும் யாவரும் அறிவர்.

முதற்பாகத்தினும் இனிமை மிக்கு, படிப்போர் மனத்தைக் கவரத்தக்க பலவிஷயங்கள்கொண்டு பயனளிப்பது இவ்விரண்டாம்பாகம். முதற்பாகத்தினும் 50 பக்கங்கள் அதிகங்கொண்டுள இந்நூல், சில ஆண்டுகளுக்கு முன்பே (அதாவது முதற்பாகம் வெளிவந்த இரண்டொருவருடங்களுக்குள்ளே) வெளிவந்திருக்கவேண்டியது. பொருளின்மையும் ஆதரவின்மையும், எனக்கு நேர்ந்தபல அசௌகரியங்களுமே, காலந்தாழ்ந்து இதனை வெளியிடநேர்ந்த காரணங்களுட் சிலவாகும்.

என்னிடத் தபிமானமிக்க இருவரின் 'காலத்திற் செய்த நன்றி'யும், 'செய்யாமற் செய்த உதவி'யுமே இப்பொழுதேனும் இது வெளிவந்தமைக்குக் காரணமாகும். இவர்களுள் ஒருவர் ரூ 50 நன்கொடையாகவும், மற்றொருவர், "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யெனும் பெருமையுடைத்திவ் வுலகு" என்பதை நன்கறிந்தும், ரூ 150-வட்டியில்லாக் கட

ருகவும் (பாதொரு ஆதரவுச்சீட்டும் பெருதும்) வலிந்த...
என் கஷ்டநிசைக் கிரங்கியும் தமிழ்நூலியற்றி வெளியிடும் என் மு...
தளர்வுறுதிருக்குமாறும் அவர்கள் புரிந்த நல்லுதவியையும், அவர்கள் என்மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பன்முறை வியந்தோதிப் பாராட்டுவதினும் நான் செயற்பாலது யாது ?

இவ்விருவர் தொகையையுமே முதலாகக்கொண்டு சென்றவருஷம் இந்நூல் வேலையைத் தொடங்கினேன். ஆயினுமென்? காகிதப் பஞ்சத்தாலும், முத்திராசாலைகளின் ஒழுங்கீனத்தாலும், வாழ்க்கைப் போராட்டத்திற்குள்ளாகிய சிப்பந்திகளின் வேலை நிறுத்தத்தாலும், எனக்குற்ற படியாலும் மிடியாலும் இவ்வேலை விரைவில் முடியாததாயிற்று. இந்நூலிற் காணும் பலவகைக் காகிதங்களும், பதியா எழுத்துக்களும், சிதறிச் செருகப்பட்ட எழுத்துக்களால் நேர்ந்த பிழைகளும், பிறவும் பெரும்பாலும் எனது வெளியூர்வாசம் பற்றி நேர்ந்தவையாகும். பிழையின்றி விளங்கும் பிற்பாதி, மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலையாசிரியரும் எனது மெய்ந்நண்பர்களுள் ஒருவருமான ஸ்ரீமத்: சு. நல்லசிவன் பிள்ளையவர்களின் பேருதவியைப் பிறங்கச் செய்வதாகும்.

முதற்பாகம் படித்தோர், மழையை விரும்பி எதிர்பார்த்த வண்ணம் நிற்கும் சகோர சாதகப் புட்களைப்போன்று இவ்விரண்டாம்பாகம் வெளிவருவதை விரும்பி எதிர்பார்த்தவண்ணமாக இருக்கின்றனர் என்பதை நன்கறிவேன். போதிய பொருளின்மை காரணமாகச் சொற்பப் பிரதிகளே இப்பொழுது வெளியிட்டுள்ளேனாதலின், அதிவிரைவில் இப்பதிப்பு முழுதும் விலையாய்விடு மென்பதும், இரண்டாம் பதிப்பு நல்ல காகிதத்தில் அற்பசொற்பப்பிழையுமின்றி வெளிவருமென்பதும் எனது துணிபு. இத்துணிபு இனிது நிறைவேற எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிக.

ஞாலம் புகழ்ந்திடுமிந் நன்னூல்போல் இன்னூல்கள்
பாலம்பாள் இன்னும் பலஇயற்றிச்—சிலய்சேர்
நந்தமிழ்க்கு நல்கி நலமுறுக; நம்நாடு
சந்ததமும் வாழ்க தழைத்து.

திரிசிரபுரம்
1–12–1921.

ம. கோபாலகிருஷ்ணன்.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | பாகுராயணன் ஸர்வார்த்தஸித்தியைத் தேற்றுதல் | 1 |
| 2. | நந்த பத்தினிகள் தீர்மானம் | 3 |
| 3. | ராக்ஷஸனும் பாகுராயணனும் | 5 |
| 4. | ராக்ஷஸன் ஸர்வார்த்தஸித்தியைத் தேற்றுதல் | 8 |
| 5. | காவலாளிகட்கு எச்சரிக்கை | 11 |
| 6. | ஸித்தார்த்தகனது யோசனை | 12 |
| 7. | அதிகாரிகளும் அரசர்களும் சந்திரகுப்தனைத் தரிசித்தல். | 13 |
| 8. | உடன் கட்டையேற உத்தரவு வேண்டல் | 15 |
| 9. | மாமியின் துயரமு மருகியமுர் உறுதியும் | 17 |
| 10. | உடன் கட்டை யேறல் | 20 |
| 11. | ராக்ஷஸன் தன் மனைவிமக்களை மறைத்து வைத்தல் | 27 |
| 12. | விஷகன்னிகை | 28 |
| 13. | ராக்ஷஸனது பிற சூழ்ச்சிகளும் மறைவும் | 31 |
| 14. | சாணக்யன் ராக்ஷஸனைத் தேட ஆள்விடல் | 33 |
| 15. | சாணக்யனது யோசனை | 36 |
| 16. | சந்திரகுப்தனது திருவோலக்கம் | 37 |
| 17. | சாணக்யன் பர்வதேய சேனைகளை அனுப்பிவிடல் | 40 |
| 18. | இந்து சர்மன் இரட்டுற மொழிதல் | 41 |
| 19. | இரகசியப் பொருளுணர்தல் | 45 |
| 20. | சாணக்யனது சூழ்ச்சி | 49 |
| 21. | பர்வதேசனது மரணம் | 51 |
| 22. | மலையகேதுவை ஓட்டுதல் | 56 |
| 23. | பாகுராயணன் மலயகேதுவைத் தேற்றுதல் | 61 |
| 24. | சாணக்யனது போலிப்பரிவு | 65 |
| 25. | சாணக்யனது சந்தேகங்கள் | 68 |
| 26. | விரோசனனது மரணம் | 70 |
| 27. | கட்டிடசோதனை | 74 |
| 28. | செய்தவினை செய்தவனைச் சார்தல் | 76 |
| 29. | சந்திரகுப்தன் ஸர்வார்த்த ஸித்தியைக் காணல் | 78 |
| 30. | பவன பாலகனைக் கண்டு பிடித்தல் | 80 |
| 31. | விருத்த தம்பதிகள் வெளிக் கிளம்பல் | 82 |
| 32. | அரசனைக்கொல்ல ஆட்களை விடுத்தல் | 84 |
| 33. | அரச தம்பதிகள் அருந்தவமேற் கொளல் | 86 |
| 34. | விருத்த தம்பதிகளின் மரணம் | 89 |
| 35. | ராக்ஷஸன் பர்வத ராஜ்யம் செல்லல் | 92 |
| 36. | சாணக்யன் சந்திரகுப்தனைத் தேற்றல் | 95 |
| 37. | மலயகேதுவிடம் ராக்ஷஸனை அழைத்து வரல் | 96 |
| 38. | ராக்ஷஸன் மலயகேதுவைக் காணல் | 99 |
| 39. | மலயகேதுவுடன் ராக்ஷஸன் ஆலோசித்தல் | 101 |
| 40. | ராக்ஷஸனை ஸர்வாதிகாரி யாக்கல் | 102 |
| 41. | அஷ்டசேனாதிபதிகளையும் அப்புறப்படுத்தல் | 105 |
| 42. | பத்ரபடனாதியோர் பர்வத ராஜ்யம் செல்லல் | 107 |
| 43. | எழுவரும் வேலையில் அமர்தல் | 110 |

| | | |
|---|---|---|
| 44. | ராக்ஷஸனது மனைவி மக்களின் மறைவிடம் அறிதல் | 114 |
| 45. | கணையாழிக் களவு | 118 |
| 46. | அமாத்ய ராக்ஷஸனை அடைதற்கான முயற்சி | 120 |
| 47. | சந்தனதாஸனது மனவுறுதி | 124 |
| 48. | சாணக்யன் ஜனாபிப்பிராயம் அறிதல் | 128 |
| 49. | கௌமதி மஹோத்ஸவ நிறுத்தம் | 130 |
| 50. | உத்ஸவ நிறுத்தத்தின் உண்மைக்காரணம் | 132 |
| 51. | சாணக்யன் தன் கர்மத்தைச் சாரங்காரவனுக்குக்கூறல் | 134 |
| 52. | விராதகுப்தன் விளம்பத் தொடங்கல் | 136 |
| 53. | சகடதாஸனும் ஸித்தார்த்தகனும் ராக்ஷஸன்பால் வரல் | 140 |
| 54. | விராதகுப்தன் தன் விஷயத்தை முடித்தல் | 143 |
| 55. | ராக்ஷஸனது நகை வியாபாரமும் மனோராஜ்யமும் | 144 |
| 56. | சந்திரகுப்தனது யோசனை | 146 |
| 57. | போலி மனஸ்தாபங்கள் | 149 |
| 58. | பாகுராயணன் மலயகேதுவைப் பேதித்தல் | 158 |
| 59. | போர்க்கெழ முயற்சி செய்தல் | 165 |
| 60. | ஜீவ்ஸித்தியின் சேஷ்டை | 168 |
| 61. | மலயகேதுவின் சீற்றத்தைத் தணித்தல் | 175 |
| 62. | ஸித்தார்த்தகனது சேஷ்டை | 177 |
| 63. | ராக்ஷஸன் மலயகேதுவிடம் வரல் | 183 |
| 64. | மலயகேதுவின் உத்தரவு | 186 |
| 65. | ராக்ஷஸன் நகரினின்றும் நீங்கல் | 194 |
| 66. | மலயகேதுவைச் சிறை செய்தல் | 197 |
| 67. | சாணக்யனும் ஸித்தார்த்தகனும் | 201 |
| 68 | ராக்ஷஸனும் பசுலோமனும் | 203 |
| 69. | சந்தனதாஸன் கொலைக்களம் சார்தல் | 209 |
| 70. | ராக்ஷஸன் தன்னை ஒப்புக்கொடுக்க உடன்படல் | 212 |
| 71. | சாணக்யன் ராக்ஷஸனைச் சரீப்படுத்துதல் | 215 |
| 72. | அமாத்ய ராக்ஷஸன் அமைச்சனாய் அமர்தல் | 220 |
| 73. | மலயகேதுவுக்கும் சந்தனதாஸனுக்கும் மரியாதை செய்தல் | 224 |
| 74 | சந்திரகுப்தனுக்குப்பட்டம் கட்ட முயற்சி செய்தல் | 227 |
| 75. | பட்டாபிஷேக வைபவம் | 229 |
| 76. | சாணக்யன் சந்திரகுப்தனுக்குச் சற்புத்தி கூறல் | 232 |
| 77. | சாணக்ய னாதியோர் நைமிசாரண்யம் செல்லல் | 236 |
| 78. | பின்னர் நிகழ்ந்தவை | 237 |

# பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 14 | 4 | அஸ்மித்த | அஸ்தமித்த |
| 19 | 5 | ஸ்திதிரீகள் | ஸ்திரீகள் |
| ,, | 23 & 25 | திவிலே | திவலே |
| 45 | 4 | சமுத்தி | சமுத்திரத்தி |
| 49 | 9 | முடிக்குக் | முடிக்கும் |
| 61 | 15 | கொண்டிருக்கிறீர் | கொண்டிருக்கிறா |
| 62 | 25 | படுத்திக்கோள் | படுத்திக்கொள் |
| 63 | 15 | தம்முன் | தம்முள் |
| ,, | 31 | விடைப்பெற்று | விடைபெற்று |
| 66 | 18 | தலையையை | தலையை |
| 67 | 30 | ஸ்ந னம் | ஸ்நானம் |
| 68 | 23 | பறையயைக | பறையறைக |
| 71 | 24 | பாட்டாடை | பட்டாடை |
| ,, | 25 | பாரிவாரங்கள் | பரிவாரங்கள் |
| 80 | 22 | வீட்டு | விட்டு |
| 83 | 6 | ரிஷபத்தினி | ரிஷிபத்தினி |
| 88 | 4 | பத்திளி | பத்தினி |
| ,, | 7 | தன்பால் | தம்பால் |
| ,, | 8 | சமேதனுக | சமேதராக |
| ,, | 7,8 | செய்தான் | செய்தார் |
| 92 | 4 | சிந்தித்துத்துக் | சிந்தித்துக் |
| 95 | 6 | சர | சரி |
| 103 | 29 | விளக்கியுள்ள | விலக்கியுள்ள |
| 120 | 3 | ஆசுவாசுப் | ஆசுவாசப் |
| 131 | 24 | விஷயஷங்களை | விஷயங்களை |
| 178 | 22 | உள்ளே | உள்ள |

☞ 57-ஆம் பக்கம் 22-ம் வரி: 'கொண்டு' என்பதன்பின் 'வரும் சைனியங்களைக் கண்டதும்' என்றும்,

62 ஆம்பக்கம் 29-ம் வரி 'அதற்கடுத்தது' என்பதன் பின், 'சேனு பலம்.' என்றும், கூட்டிப் படிக்க.

154 ஆம் பக்கம் 8-ம் வரியில் 'என்று' என இருப்பதை, 'என்ற அபவாதம் நம்மை' எனத் திருத்திப் படிக்க.

குறிப்பு:-பிறபிழைகளிற் பெரும்பான்மைய பல பிரதிகளிற் காணப் படா ஆதலின் முக்கிய பிழைகள் மட்டுமே இங்குக்குறிக்கப்பட்டுள்ளன.

ம. கோ,

# விலைக்குத் தயாராயிருக்கும் வேறு நூல்கள்.

## சொற்பப் பிரதிகளே உள்ளன.

## ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரது பிரசுரங்கள்:—

[* இக்குறிப்புள்ளவை கலாசாலைகளில் பாடபுத்தகமாகத் தெரிந்தெடுக்கப்பட்டவையாகும்.]

ரூ. அ. பை.

A. *அரும்பொருட்டிரட்டு-முதற்பாகம் 0-10—0

[இது தோத்திரப்பாக்களும், வாழ்த்துக்கவிகளும், இரங்கற் பாக்களும் பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்களும், கொண்ட செய்யுள் நூல். 55-விஷயங்கள் கொண்டு, 8-பிரபல கனவான்களுடைய படங்களுடன் விளங்கும் இது, சுமார் 100-பக்கங்கள் கொண்டது.]

B. *அரும்பொருட்டிரட்டு-இரண்டாம்பாகம் 0-12—0

[இது ஆங்கிலப் புலவர்கள் செய்துள்ள பாடல்கள், நீதிக்கதைகள், நன்மொழிகள், முதலியவற்றின் பொருள் சிறிதும் குன்றாவாறு, விஷயத்திற்கேற்ற பாவினத்தில், நிறுத்த சொல்லும் குறித்த மொழியும் கொண்டு மொழி பெயர்க்கப்பட்டுள்ள செய்யுள் நூல். ஆங்கிலச் செய்யுள் மூலமும் நேருக்கு நேர் வைத்து அச்சிடப்பட்டுளது. 47 கவிரத்னங்களின் மொழி பெயர்ப்புச் செய்யுட்கள்கொண்டு, சுமார் 140 பக்கங்களுடன் விளங்குவது.]

C. *அரும்பொருட்டிரட்டு-மூன்றாம்பாகம் 1—8—0

[இயற்கைப் பொருள்கள், சரித்திரங்கள், நீதி விஷயங்கள் முதலியவற்றைப்பற்றிய அரிய பெரிய வியாசங்கள் கொண்டது. இது உபந்யாசம் செய்ய விரும்புவோர்க்கும், வியாசம் எழுதக் கற்போர்க்கும், உபாத்தியாயர்களுக்கும், தமிழ்ப் பண்டிதர்கட்கும், ஸ்திரீ சிறுவர்கட்கும் பெறுதற் கரிதான பேறாகும். சகல வியாச புத்தகங்களிலும் மிகவும் பெரிதும், அரிய விஷயங்கள்கொண்டதும், விலை சரசமானதும் இதுவே. சுமார் 400-பக்கங்கள் அடங்கியது.]

☞ மூன்று பாகங்களும் சேர்த்து வாங்குவோர்க்கு ரூபாய் இரண்டே காலுக்குக் கொடுக்கப்படும்.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

சாணக்ய ஸாஹஸம்

என்னும்

# சந்திரகுப்த சரித்திரம்.

## இரண்டாம் பாகம்.

---

### முதலாவது அத்தியாயம்.

### பாருராயணன் ஸர்வார்த்தஸித்தியைத் தேற்றுதல்.

---

சாணக்யன் தனது சபதத்தை நிறைவேற்றியதும் சந்திரகுப்தனுடன் கங்காநதியில் ஸ்நானம் செய்து, அவிழ்ந்து கிடக்கவிட்டிருந்த தனது சிகையை முடிந்து கொண்டு, தன் விடுதி வந்து சேர்ந்தான். இவ் விஷயத்தையும், 'சத்துருக்களின் கபடத்தினால் நந்தர்கள் ஒன்பது பேர்களும் மாண்டுவிட்டார்கள்' என்பதையும் பற்றிப் பாடலீபுரத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும், வியப்புடனும் விசனத்துடனும் பேசிக்கொண்டார்கள். இவ் வதிதுக்ககரமான சமாசாரத்தைப் பெரிய அரசனை ஸர்வார்த்தஸித்தியினிடம் தெரிவிக்க எவருமே துணியவில்லை. ஆயினும், வாயில் காவலர்களும் மெய்காப்பாளரும் இதனைக் குறித்து அதி ரசஸ்யமாகப் பேசிக்கொண்ட விஷயம், எவ்வாறோ அரசன் செவிக்கெட்டியது. உடனே அக் கிழவரசன், திடீரென்று பூமியில் விழுந்து, மூர்ச்சை யடைந்தான். இது கண்டு சுநந்தை முதலிய அந்தப்புரத்திலுள்ள ராஜஸ்திரீகள் எல்லோரும் கதறியழும் ஓசை பட்டணத்தை அதிரச் செய்துவிடும்போல் இருந்தது.

அப்பொழுது கோட்டை மதிலின்மீது சுற்றிவந்து கொண்டிருந்த சேனாதிபதியான பாகுராயணன் இவ்வோசையைக் கேட்டு "இஃதென்ன?" என்று விசாரித்தான். "'நவநந்தர்களும் சத்துருக்களால் ஒரே சமயத்தில் கொல்லப்பட்டார்கள்' என்றறிந்த அந்தப்புரத்திலுள்ள ராஜ ஸ்திரீகள் கதறுகிறார்கள்" என்பதை அவன் அறிந்ததும், "ஆஹா! என்ன ஆச்சரியம்! என்ன ஸாஹஸம்! ஐயோ! 'சுத்த க்ஷத்திரிய வம்சம் இனி இருக்கக் கூடாது' என்பது தெய்வ சங்கற்பமாகில், மனிதப் பிரயத்தனத்தால் அதை நிவர்த்திக்கமுடியுமோ? இச்சமயம் விருத்த தம்பதிகளுக்குச் சமாதானம் சொல்லக்கூடிய தக்கோர் ஒருவரும் இல்லையே! புத்திர சோகத்தால் அவர்கள் உயிர் விடாதபடி, நான் உடனே சென்று அரசனது மனத்தைத்தேற்றிச் சமாதானம் செய்தலே முக்கியம்" என்று கோட்டையை விட்டுக் கீழ் இறங்கி ராஜக்கிருக வாயில் அருகில் வந்தான். அங்கு, நந்த பத்தினிகளால், பலகணி வழியாகக் கழற்றி எறியப்பட்ட புஷ்பமாலைகளும், ஆபரண வகைகளும் தெருவில் சிதறிக் கிடந்தன. அம் மாதர்களின் கண்களிலிருந்து பெருகி வழியும் கண்ணீர்ப் பிரவாகமானது, அவர்களுடைய கண்களில் இடப்பட்ட மை கரைந்து வருவதால் கறுத்து, 'காளிந்தி' நதியே போல் அலைமோதி ஓடும்போது, ஆங்கு சிதறிக் கிடந்த புஷ்பமாலைகளையும் ஆபரணங்களையும் இழுத்துச் சென்றது.

பாகுராயணன் இதைத் தாண்டி, உள்ளே சென்று, பீடத்திலிருந்து மூர்ச்சையுற்றுக் கீழ்விழுந் திருக்கும் அரசனைக் குளிர்ந்த ஜலத்தாலும் விசிறியின் காற்றாலும் பிரக்ஞை வரும்படி செய்து, "மகாப் பிரபுவே! தங்களுக்கு இவ்வித புத்திர சோகத்தை ஏற்படுத்திய காலத்தின் கோலத்தை என்னென்று சொல்வது? ஐயோ! ஸஹிக்க முடியவில்லையே! தங்களுக்குத் தெரியாத விஷயம் இல்லை. சத்துருக்கள் மத்தியில் அநாதர்களாக ராஜ ஸ்திரீகள் இப்பொழுது இருக்கின்றனர். அவர்களுக்குத் தங்களையன்றி வேறு ரக்ஷகர் கிடையாதாகையால், எப்படியாகிலும் மனதைத் தேற்றிக் கொண்டு இருக்க வேண்டும்" என்று சமயோசிதமாகவும், துக்கம் ஸமாதானம் அடையும்படிக்கும், சிற்சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, 'நகர வாசலுக்கு அருகில் சத்துருக்கள் நெருங்கி வந்துவிடக்கூடு'மென்று, அங்குவிட்டு, மிக்க அவசரமாகத் திரும்பினான்.

---

## இரண்டாவது அத்தியாயம்.

## நந்த பத்தினிகளின் தீர்மானம்.

சேனாபதியான பாகுராயணன் கிழவரசனிடம் வந்து செல்வதை, தத்தம் அருமைக் கணவரை இழந்து கதறிக்கொண்டிருந்த நவநந்த பத்தினிகளும் அறிந்து, அச்சம் அடக்கம் நாணம் இவைகளைத் துறந்து, அந்தப்புரவாயிலில் வந்து நின்றார்கள். அவர்களில் ஜேஷ்ட நந்தனது பட்டமகிஷி, பாகுராயணனை நோக்கி, "ஐய பாகுராயண! இப்பொழுது தெய்வ சங்கற்பத்தால் நடந்திருக்கும் இந் நவநந்தப் பிரளயத்தை நீயும் அறிந்திருக்கிறா யல்லவா? நாங்கள் கணவர்களை இழந்தபின், இனி ஏனோ இவ்வுலகில் இருக்கவேண்டும்? சைத்தியம் (குளிர்ச்சி) அதிகரிப்பதால் தானும் அதிகரித்து ஜ்வலிக்கும் 'வடவாக்கினி' போல, சமாதான வார்த்தைகளால் அதிகமாக சுடர் விட்டெரிகின்ற (பதியை இழந்த தாலுண்டான) சோகாக்கினி யானது, கொழுந்து விட்டெரியும் அக்கினி யால் அல்லது, மற்றப்படி ஒன்றாலும் சமனம் அடையமாட்டாது. பெரிய அரசர், புத்திர சோகத்தால் மனங்குழம்பி இருப்பது பற்றி அறி விழந்து உலக விவகாரத்தை முழுதும் மறந்தவராக இருக்கிறார். ஆத லால், எங்கள் அபிப்பிராயத்தை அவர் இச்சமயம் மறுக்கவும் கூடும். எங்களுடைய எண்ணத்திற்கு ஒரு விதத்திலும் தடை ஏற்படாமல் நீ முன்னின்று, எங்களுக்கு நற்கதி கிடைத்துப் பதிஸந்நிதானத்தை யடை யும்படியான காரியங்களை நடத்தித் தரல் அவசியமும் முக்கியமுமாக இருக்கிறது. நீ இப்பொழுது ஒரு காரியம் செய்:- இனி அரசனாகும் சந்திரகுப்தனிடம் சென்று, "எங்கள் பரலோக ஸாதகத்தின் பொருட்டு இதோ இந்தக் கோடிக்கணக்கான திரவியத்திற் காற்பங்கு பிராமண சிரேஷ்டர்களுக்கும், காற்பங்கு ஸஹகமனம் (உடன் கட்டையேறல்) செய்வதற்குரிய பூர்வ கர்மத்திற்கும், காற்பங்கு அநாதைகளைப் போஷிப் பதற்கும், செலவழிக்கப்படட்டும்" என்றும், "மீந்துள்ள காற்பங்கை ராஜ பொக்கிஷத்தில் அவன் சேர்த்துக் கொள்ளட்டும்" என்றும், தெரி விப்பாயாக. சத்துரு உபத்திரவமின்றியும், துஷ்டநிக்ரக சிஷ்ட பரி பாலனத்துடனும், கீர்த்தியுடனும், புத்திர பௌத்திருடன், அவன் நெடுநாள் அரசாட்சி புரியும்படி நாங்கள் யாவரும் முழுமனதுடனும்

மெய்ப் பிரியத்துடனும் அவனை ஆசீர்வதித்ததாகவும் அவனுக்குச் சொல்க. இனி எங்களுக்காகவேண்டிய காரியங்களுக்கு அதிவிரைவில் ஏற்பாடு செய்து, எல்லாம் தயாரானதும் அறிவித்திடுக" என்றாள்.

இது கேட்டு, சமீபத்திலிருந்தவர்களில் ஒருத்தி, "அன்புள்ள தமக்கைமார்களே! "முடியுமானால், 'எங்கள் பர்த்தாவை அழைத்து வந்து உயிருடன் காண்பியுங்கள்' என்று கெஞ்சிக் கேட்கலாம். 'இல்லை, முடியாது' என்றால், 'பர்த்தாவின் பிரேதத்தையேனும் காண்பியுங்கள்' என்று சொல்லலாம். நாமோ அதுகூடக் காண்பதற்கில்லை. நினைத்த இடத்தில் கிடைக்கும் அக்கினியை "நீ மூட்டிக் கொடு" என்று வேறொருவரை என்ன கேட்கிறது! நாமே இது செய்து கொள்ள முடியாதா? நமது கணவர்கள் பரலோகம் சென்றபின் இந்த மாளிகையை யாருக்கு நாம் உபயோகப்படுத்த வேண்டும்? தன தானியங்களாலும் வஸ்திராபரணங்களாலும் பூரணமாக நிறைந்திருக்கும் இவ்வரமனையை அக்கினிக்கு ஆகுதி யாக்கி, நமது சரீரத்தையும் அத் தீக்கே ஸமர்ப்பித்து விடுவோம்" என்றாள்.

இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த பாகுராயணன் "பதிவியோகத்தால் உண்டாயிருக்கும் விசனத்தைத் தாங்கமாட்டாது, அறிவிழந்து பரிதவிக்கும் இந்த ராஜஸ்திரீகள், பிறரது யோகக்ஷேமம் இன்னதென்றும், இது 'செய்யலாம்' அல்லது 'கூடாது' என்றும், சற்றும் யோசிக்கப் போகிறதில்லை. இதனால் இந்தப் பட்டணத்திற்கே பெருத்த அபாயம் உண்டாகும்போலிருக்கிறது. இவர்களில் ஜேஷ்ட நந்தனது பட்டமகிஷி ஒருத்தியே விவேகியாகவும், பொறுமை வாய்ந்தவளாகவும் காணப்படுகிறாள். அவள் சொல்லும் விதமே செய்ய வேண்டியது முக்கியமும் அவசியமுமாக இருக்கிறது" என்று தனக்குள் நிச்சயித்து,

"மாதுஸ்ரீகளே! தங்கள் வார்த்தை நல்வழிக்கு ஒத்ததாக இராததுடன், தர்ம விருத்தமாயும் இருப்பதால், அது உங்களுக்கு நற்கதி தரமாட்டாது. மஹா மாதுஸ்ரீயவர்கள் உத்திரவிட்டிருக்கும் வழியைத் தாங்கள் எல்லோரும் தயவுசெய்து அனுசரிக்கும் பக்ஷத்தில், எல்லோருக்கும் கீர்த்தி உண்டு. நீங்கள் அதனால் பரமபதம் அடைவ

திற் சந்தேகமே இல்லை. சற்றுப் பொறுங்கள். யுத்த பூமியைப் பரிசோதித்துவந்து விக்ஞாபனம் செய்துகொள்கிறேன். உத்தரவாக வேண்டும்” என்று கைகூப்பிக் கும்பிட்டுவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

---

## மூன்றுவது அத்தியாயம்.

## ராக்ஷஸனும் பாகுராயணனும்.

இதற்குள் மந்திரியான ராக்ஷஸன், இப்பொழுது 'நவநந்தர்களையும் ஸம்ஹரித்து ஜயமடைந்து விட்டோம்' என்று இறுமாந்து இருக்கும் சத்துருக்கள், இப் பட்டணத்தையும் எப்போது வந்து வளைகின்றார்களோ! அங்ஙனம் அவர்கள் செய்துவிடுவார்களாகில், சத்துரு சைனியத்தி லிருக்கும் மிலேச்சர்களும் துருக்கர்களும் ராஜ ஸ்திரீகளுக்கும் பட்டமகிஷிகளுக்கும் பெருத்த துன்பத்தையும் அவமானத்தையும் விளைவிப்பதில் தடையே இல்லை. இப்பொழுது ராஜ்யம் 'அநாயக'மாக இருப்பதால், பட்டணத்திற்கு உள்ளும் வெளியிலும் இருக்கும் சைனியங்கள், சத்துருக்களைத் தகைந்து மேல்விழுந்து யுத்தம் செய்யப் போகிறதில்லை. அவரவர்கள் தங்களுயிரைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே கருத்தாயிருக்கும் இச்சமயம், நானே நேரில் நின்று கட்டளையிட்டபோதிலும், அவர்கள் கண் மறைவாக ஓடி ஒளிப்பார்களேயன்றி, கீழ்ப்படிந்து யுத்தம் செய்ய மாட்டார்கள். நகரம் கொள்ளைபோவதுடன் வேறு பிரமாத ஆபத்தும் உண்டாய்விடும்: 'இதுவரையிலும் ராஜாதிராஜனாய், கீர்த்திமானாய் இருந்து, விருத்த பருவத்தை அடைந்திருக்கும் ஸர்வார்த்த ஸித்தி மகாராஜா அவர்கள், தம் புத்திரர்களை யிழந்து பரிதவிக்கும் வேளையில், தமது அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளை மிலேச்சர்கள் அவமதிப்பதையும் தம் கண்களால் கண்டார்' என்ற பழிச் சொல்லுக்கிடமின்றி இம்மட்டோடாவது இருக்கட்டும்” என்று தனக்குள்ளே நிச்சயித்து, அருகிலிருந்த ஒருவனை அழைத்து, “நமது சேநாபதியான 'பாகுராயணன்' எங்கிருந்தாலும் தேடியறிந்து, 'உடனே என்னைக் கண்டு

பேசிவிட்டுப் பிறகு எவ்வித அவசர காரியமிருந்தாலும் 'அதனைப் பார்க்க வேண்டியது' என்று நான் அவனுக்குச் சொன்னதாகச் சொல்லி அழைத்து வா" என்ன, அவன், எங்கும் சென்று, கடைசியில் அரண் மனையிலிருந்து வந்துகொண்டிருந்த பாகுராயணனைக் கண்டு, "ஸ்வாமீ! அமாத்தியர் உங்களைக் கூடிய சீக்கிரம் கையோடு அழைத்துவரும்படி உத்தரவிட்டிருக்கிறார்" என்றான்.

பாகுராயணன் உடனே ராக்ஷஸனிடம் வந்தான். நவநந்தர்களை நினைத்து நினைத்து இருவரும் பிரலாபித்து, ஒருவாறாக மனதைத்தேற் றிக் கொண்டனர். பிறகு ராக்ஷஸன், "ஐய, பாகுராயண! இன்றோடு நமது புத்தி பலம் பௌருஷம் இவைகளெல்லாம் வீணாய்விட்டன. இப் பொழுதோ, இன்னும் சற்று நேரத்திற்குள்ளோ, சத்துருக்கள் இப்பட் டணத்தை வளைந்து கொள்வார்கள் என்பது நிச்சயம். இதுபற்றி உன் அபிப்பிராயமும் யோசனையும் என்ன?" என்று கேட்டான்.

பாகுராயணன். "ஸ்வாமி அமாத்தியரே! புத்தியிலும் ஆலோசனை யிலும் தங்களைக் காட்டிலும் நான் அதிகமானவனோ? தாங்கள் சொல் வதை யனுசரித்தே எப்பொழுதும் நடந்து வந்திருக்கிறேன். இப்பொழு தும் தங்கள் உத்தரவைச் சிரசால் வகித்து நடக்கக் காத்திருக்கிறேன். ஆயினும், தாங்கள் அநுமதியளித்தால் எனக்குத் தோன்றியதை விக் ஞாபனம் செய்துகொள்கிறேன்: இப்பொழுது நவநந்தர்கள் நாசமடைந்த தாலும், விருத்த திசையில் புத்திரசோகத்தினால் பிராணாபிமானமற்று ஜடஸ்வரூபமாக இருக்கும் ஸர்வார்த்தஸித்தி அரசரின் ஜீவதிசையில் நம்பிக்கை ஏற்பட நியாயமில்லாதிருப்பதாலும், வேறு ஆதாரமற்று நாம் தவித்துக்கொண்டிருக்கிறோம். இச்சமயத்தில், சத்துருக்களின் உபத் திரவம் ஒரு சிறிதும் அற்றவனும், கொடையாளியும், பிரஜைகளின் மனதைச் சந்தோஷிக்கச்செய்து அவர்களை ஸ்வாதீனப் படுத்திக்கொள் ளக்கூடிய சாமர்த்தியசாலியும், விநயாதி குணசம்பன்னனுமாக இருப்ப வன், சந்திரகுப்தனே. நமது ஸர்வார்த்தஸித்தி யரசனுக்குப் பேரனாக வும், இப்பொழுது சகல விதத்திலும் இவ் விராஜ்ய கோசங்களுக்கு உரியவனாகவும் அவனே இருப்பவன். இச் சந்திரகுப்தன் அளவற்ற சேனைகளுடன் தண்டிறங்கி இப்பொழுது ஜயசீலனாக இருப்பதால் நமது

பக்கத்திய ஜனங்களுக்கு யுத்தம் செய்யவேண்டுமென்ற ஆவேசமும் அகங்காரமும் லவலேசமு மில்லை. எல்லோரும் கவலையற்றுத் தங்கள் காரியத்திலேயே கண்ணுயிருக்கிறார்கள். அரசனற்று இருக்கும் இந்த ராஜ்யத்திலுள்ள பிரஜைகளைத் துன்பப்படுத்தக் கூடிய துஷ்டர்களை யடக்குவதற்குக் கூட நமக்கு நேரமில்லை. அன்றியும் அது அசாத்ய மான காரியம். ஆகவே இனிச் சத்துருக்களைத் தகைந்து யுத்தம் செய் வது எங்ஙனம் இயலும்? என்னையோ நகர ரக்ஷணத்தின்பொருட்டு நிய மித்து இருக்கிறீர்கள். நான் கோட்டைமீது எதிரிகள் 'லங்கர்' ஏற்றிப் பிரவேசியாது யுத்தம் செய்து கொண்டிருக்கிறேனே. பத்ரபடன் முத லிய தளகர்த்தர்களும் தத்தம் சைனியங்களுடன் எங்கேயோ மறைந் திருக்கிறார்கள். சத்துருக்கள் கோட்டையை முற்றுகையிட்டு என்னை யும் மீறிப் பட்டணத்திற்குள் வந்து அந்தப்புரத்தில் ஹடத்துடன் பிர வேசித்து விட்டால் என்ன செய்கிறது? நம்மை இதுவரையிலும் பெற்ற பிள்ளைகள் போல் காப்பாற்றிவந்த அந்தப்புர ஸ்திரீஜனங்களை இவர்கள் கண்ணால் பார்த்தாலும் அதைக் காட்டிலும் நமக்கு வேறு அவமானமும் லோகாபவாதமும் உண்டோ? அப்பொழுது இதுவரை நாம் பிழைத்த பிழைப்பு என்ன ஆய்விடும்? நமது ஜன்மத்தை நெருப்பிலிட் டன்றோ சுடவேண்டும்? இதற்குமேல் யான் என்ன சொல்ல இருக்கிறது? தாங் கள் எவ்விதம் உத்தரவிட்டாலும் அவ்விதமே நடக்கக் காத்துக்கொண் டிருக்கிறேன்" என்றான்.

இது கேட்டு ராக்ஷஸன், தனக்குள், "யாது காரணம் பற்றியோ இப் பாகுராயணன் யுத்தம் செய்வதில் இஷ்டமில்லாமல் இருக்கிறான். எனது கட்டாயத்தினாலும் பிரயத்தனத்தாலும் இப்பொழுது ஒன்றுமே முடியாது. ராஜபத்தினிகளின் மானத்தைக் காப்பாற்றும் நிமித்தம் இப்பொழுது கோட்டை கொத்தளங்களின் திறவுகோலைச் சந்திரகுப்த னிடம் வலுவில் ஒப்புவித்து, அவனை அரசனாக ஏற்று, நகருக் கழைத்து வர வேண்டியது அவசியமாயிருக்கிறது. கவலை ஏன்? நான் கண்மறைவி லிருந்து தக்க வழியில் முயற்சி செய்து, காரியத்தை ஜயித்து, பர லோகத்திலிருக்கும் நந்தர்களுக்குச் சந்தோஷத்தை உண்டு பண்ணும லிருக்கமாட்டேன்" என்று நிச்சயித்து, "ஐய, பாகுராயண! நீ சொன்ன வைகள் முழுதும் சரி என்றே எனக்கும் தோன்றுகிறது. தெய்வ யத்

தினத்தால் நடந்தது நடந்துவிட்டது. அதற்காக இனிநாம் ஆவேசங் கொண்டு செய்யும் ஸாஹஸ காரியங்களைக் கண்டு சந்தோஷிப்பவர்களு மில்லைதான். ஐயோ! அடியோடு நந்தர்கள் ஒன்பது பேரும் ஒரே காலத்தில் மாண்டு விட்டார்களே! இனி நாம் என்ன ஸாஹஸங்கள் செய்தாலும் கூடிவரப் போகிறதா? ஜீவித்திருக்கும் ஜனங்களை ரக்ஷிப்பதின் பொருட்டுச் சந்திரகுப்தன் தடையேது மற்றுச் சுகமாகப் பட்டணத் திற்குள் வந்ததும், எல்லா ஆசையையும் ஒழித்து விரக்தனுகிப் புத்திர சோகத்தில் மூழ்கிக் கிடக்கும் கிழவரசன் செய்யக் கூடியதும் சொல்லக் கூடியதும் என்ன இருக்கிறது? நாமும் நமது மனம் ஒப்பி அங்ஙனம் செய்ய இடங்கொடுத்தால் சந்திரகுப்தனுக்குக் கீழ்ப்படிந்து அவன் ஆக்ஞைக்கு உட்பட்டு நடக்கலாம். ஆதலால் சத்துருக்கள் பட்டணத்தை வளைந்து கொள்வதற்கு முன் திறவுகோல்களைச் சீக்கிரமாகச் சந்திரகுப்தனிடம் ஒப்புவித்துவிடு" என்று உரைத்து, அவனை அங்ஙனமே செய்து வருமாறு அனுப்பினுன்.

---

## நான்காவது அத்தியாயம்.

## ராக்ஷஸன் ஸர்வார்த்தஸித்தியைத் தேற்றுதல்.

பாகுராயணனை அனுப்பிய பிறகு, ராக்ஷஸன், அங்கிருந்து வெளியில் வந்து விருத்த அரசனது துக்கத்தைச் சமனப் படுத்தும் வண்ணம் ராஜக்கிருஹத்தின் அருகில் வரும்போது, அங்கு வெகு நேரமாகக் கதறி யழுததினுல் தொண்டை வற்றிப்போய்ச் சம்மியிருக்கும் குரலுடன், "ஹா நாதா! ஹா பதியே! ஹா பிராணநாயகா! ஹா குமாரர்களே! ஹா குழந்தைகளே! ஹா கண்மணிகளே! ஹா பாலர்களே! ஹா விதியே! ஹா தெய்வமே! ஹா துரதிருஷ்டமே! ஹா மக்களே! ஐயோ! புத்திரர்களே!" என்று பிரலாபித்துக்கொண் டிருந்த நாறு ஸ்திரீகளின் பிரலாபத்தையும், "வேண்டாம் அம்மா! வேண்டாம் அம்மா!" என்று கெஞ்சி

மன்றுடும் தாதிமார்களின் குரலோசையையும் கேட்டு, ஸஹிக்கமாட்டாத துக்கத்துடன் அரண்மனைக்குள் சென்றான். அப்பொழுது நிலத்தில் விழுந்து கடகடவென்று புரண்டு அழுது மூர்ச்சித்திருந்த அரசனைத்தூக்கி எடுத்துச் சாய்த்துவைத்துத் தான் வந்திருப்பதை அவன் அறியும்படி அவனுக்குச் சைத்தியோபசாரம் செய்தான்.

ஸர்வார்த்தஸித்தி மன்னனுக்குத் தன் நினைவு வந்ததும், ராக்ஷஸன், "மஹாஸ்வாமி! க்ஷத்திரிய தர்மப்படி, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்து நீதிதவறாது அரசாண்டுவந்த தங்களுக்கு, இவ்வித துக்கம் ஏற்படலாமோ? தாங்கள் ஸாதுக்களையும் வாய்தவறியும் தூஷித்ததில்லையே? தேவ பிராமணர்களுக்கும் எவ்வித அவமதிப்பையும் செய்ததில்லையே! அபராதிகளுக்குக் கடுமையானதும் நீதித்தவறானதுமான தண்டனையை விதித்ததில்லையே! போகட்டும். தங்கள் நியாயத்தீர்ப்பிலேனும் பக்ஷபாதம் ஏதும் உண்டோ? பூஜிக்கத்தகாதவர்களைப் பூஜித்தாவது இருப்பீர்களா? ஒன்றும் இல்லையே! இப்பேர்ப்பட்ட தங்களுக்கு, இம் மகத்தான புத்திரசோகமென்னும் துர்த்திசையானது வயதுகாலத்தில் ஏற்படக் காரணம் என்ன? இது பூர்வஜன்மத்தின் கன்மப்பயனே. உள்ளபடியே தாங்கள் இப்பிறப்பில் ஒன்றும் செய்யவேயில்லை. இத் தீவினை சம்பவிக்க நந்தர்களிடம் ஏதேனும் தோஷமுண்டோவென்று தாங்கள் ஐயமுறலாம். நான் அவர்களிடம் சேவகனாக இருந்தவன். அவர்களைப் பற்றிக் குறைகூறுவது நியாயமாகாது. ஆயினும் சில சொல்லித் தீரவேண்டியிருக்கிறது. உள்ளபடியே அவர்களிடம் சில துர்க்குணங்கள் இருந்தே வந்தன: அதிகாரத்திற்கு யோக்கியர்களல்லாத சூத்திரர்கள், வேதமோதும் விப்பிரர்களை நிந்தித்துவந்ததையும் பிராமண ஸ்திரீகளை உற்றுநோக்கல் முதலிய கெட்ட காரியங்கள் செய்துவந்ததையும் அறிந்தும், நந்தர்கள் அவர்களைத் தண்டிக்கவில்லை. தாக்ஷண்யத்தால் இவை ஒன்றுமே கவனியாதவர்கள்போல் இருந்துவந்தார்கள். நான் தனிமையில் எவ்வளவோ நயமாகவும் பயமாகவும் சொல்லியும், அவர்கள் கேட்டனரில்லை. ஆதலால் அவர்களது இந்த மகா துரோகத்தாலேயே ராஜ்யத்துக்குக் கெடுதி யேற்பட்டது. 'பிரஜைகள் பாபம் அரசனைச்சேரும்' என்ற வாக்கியப்படி, அந்தப் பாபமே நந்தர்களுக்கு இவ்வித அவமிருத்யுவை யுண்டுபண்ணிற்று. இதற்கு மௌரிய புத்திரனான சந்திரகுப்தன் வியாஜமானான். மிஞ்சிப்போன காரி

யத்தைப்பற்றி நினைத்தும் விசனித்தும் பயனென்ன? தங்கள் வம்சத்தினனாகிய திருதராஷ்டிரனுக்குப் புத்திரசோக முண்டானதுபோலத் தங்களுக்கும் இப்பொழுது உண்டாய்விட்டது. ஆயினும் ஒன்று: யுத்தத்தில் மடிவது க்ஷத்திரிய தர்மமேயாகும். தங்கள் குமாரர்கள் சத்துருக்களின் கபடத்திற்கு உட்பட்டாலும், துணிந்து, முன்வைத்த காலைப் பின்வைக்காது, சத்துருக்கள்மேல் விழுந்து, ஆயிரக்கணக்கான சைன்யங்களைச் சங்கரித்து வீரசொர்க்க மடைந்தார்களேயன்றி, 'எதிரிகள் கையில் தெரியாத்தனமாய் அகப்பட்டுவிட்டோமே' என்று பின்னடைந்து குலத்திற்கு அபகீர்த்தியை உண்டாக்கவில்லை. இக்கலியுகத்தில் இனிமேல் சுத்த க்ஷத்திரியர்கள் இருக்கக்கூடாதென்ற தெய்வசங்கற்பத்தை மீறக்கூடிய சாமர்த்தியம் நமக்குண்டோ? "இச் சம்சாரத்தைத் துச்சமென்று அறிந்து, சுகதுக்க காலங்களில் மனவேற்றுமை கொள்ளாது, ஸமத்வ புத்தியுடன் இருப்பவர்களே விவேகிகள். அவர்களே மோக்ஷத்திற்கு உரியவர்கள்" என்று தாங்களே அடிக்கடி சொல்வீர்களே! உலகத்தில் சொல்வதுபோல் நடப்பவனே சிரேஷ்டன். அதற்குத் தாங்களே நிதர்சனமாக நிற்கக் கூடியவர். ஆகையால் பிரயோஜனமற்ற துக்கத்தைத் தள்ளி ஈசுவரனைத் தியானிப்பதில் மனதைச் செலுத்த வேண்டுமேயன்றி வேறில்லை. நான் இனி இங்கு இருந்தால் அரசனாக வரும் சந்திரகுப்தன் என்னை 'நந்தர்களுக்கு மித்திரன்' என்று கொன்றுவிடுவான். ஆதலின் இப்பொழுது எங்காவது செல்லப்போகிறேன். சந்திரகுப்தன் தங்களுக்குப் பௌத்திரனானதுபற்றி, நந்தர்களிடம் இருந்ததுபோல் தங்களிடமும் த்வேஷமுள்ளவனாக இருக்கமாட்டான். முந்தியே தங்களுக்குத் தெரிவித்திருந்தால் இவ்வளவு அநர்த்தமு முண்டாயிருக்கமாட்டாது. நந்தர்கள் தாமாகவே தமக்கு இவ்வித ஆபத்தை விளைவித்துக் கொண்டார்கள். இனி, சந்திரகுப்தன் தங்களைக் கண்டுகொள்ளும் சமயங்களில் அவன் மனம் வித்யாஸப்படாதபடி சமயோசிதமாயும், முன்னுக்குப்பின் விரோதமற்றும், ஒரேவிதமாகப் பேசி, அவன் கொடுப்பவைகளைக்கொண்டு திருப்தி காண்பித்தும், அவனையே ஔரஸ புத்திரனென்று பாவனைகாட்டியும் வாருங்கள். சிறிதுகாலம் செல்லட்டும். மேல் கிடைக்கக்கூடிய க்ஷேமலாபங்களைப் பின்னர் பார்த்துக் கொள்வோம். அதைப் பற்றி இப்பொழுது வாயாற் சொல்வதில் என்ன பிரயோஜனம்? ஏதோ, எல்லாம் தெய்வ கிருபையிருந்தால் கை

கூடலாம். நான் போய்வருகிறேன்" என்று விருத்த ராஜனைச் சமாதானம் செய்து தன் வீடுவந்து சேர்ந்தான்.

---

## ஐந்தாவது அத்தியாயம்.

## காவலாளிகட்கு எச்சரிக்கை.

சூரியோதயம் ஆயிற்று. சாணக்யன் எழுந்திருந்து காலேக்கடனை முடித்துக்கொண்டு, சேகரனை வரவழைத்து, "ஐய, சேனபதியே! நீ ஸகல சேனைகளையும் அழைத்துக்கொண்டு பிரகாரங்களை இடித்து வீழ்த்தக்கூடிய பீரங்கிகளைப் பட்டணத்தின் நான்கு புறங்களிலும் நிறுத்து. கோட்டை மதில்மீது 'லங்கர்' ஏற்றக்கூடிய தைரியசாலிகளைச் சித்தப்படுத்திப் பட்டணத்தை முற்றுகையிடு. கோட்டைகள்மீது குண்டுகளை இறைத்து அங்குள்ள காவலர்களுக்கு,

'சந்திரகுப்த மஹாராஜாவானவர் சத்துருக்களான நந்தர்களை ஸம்ஹரித்து ஜயமடைந்திருப்பதாலும், முறைமையாலும் இவ் வரசாட்சிக்கு உரியவராக இருக்கிறார். நீங்கள் வீணாக உபேட்சையாலும் துடுக்காலும் பிராணனை இழக்காதேயுங்கள். உடனே புத்திர பந்து ஸமேதர்களாக நேரில் வந்து ராஜாக்கினைக் குட்பட்டுப் பிரபுவின் மனத்திற்கு அனுசரணையாக நடந்துகொள்ளுங்கள். அப்பொழுதுதான் நீங்கள் முன்பு இருந்ததைக் காட்டிலும் அதிகச் செல்வாக்குடனும் சௌக்கியத்துடனும் இருக்கலாம். இவ் எண்ணம் உங்களுக்கு உண்மையில் இருந்தால் கோட்டை கொத்தளங்கள், பொக்கிஷங்கள் இவற்றின் திறவுகோல்களை உடனே ஒப்புவிக்கவேண்டியது'

என்றுசொல்லி யனுப்பு. ஒருக்கால ராக்ஷஸனது துர்ப்போதனையால் காலதாமதம் ஆகுமாயின், அப்பொழுது' தக்க உபாயங்களால் பட்டணத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொள்ளலாம்" என்று சொன்னான்.

அதுகேட்டுச் சேகரன் "உத்தரவு" என்று சாணக்யனது சொற்படியே பாடலீபுரத்தை முற்றுகையிட்டு ஜயபேரிகை முழக்கினான். இவ்வொலி கேட்டதும், நகரத்திலுள்ள ஜனங்களெல்லாரும் பீதியால் பிரமிப்படைந்தார்கள். அப்பொழுது பாகுராயணன் தன் அருகிலிருந்த தூதர்களை யழைத்து, "நீங்கள் பர்வதராஜ சேனபதியான சேகரனைக்

கண்டு, இவ்விதம் சொல்லி வாருங்கள்" என்று ஏதோ சொல்லியனுப்பினன். அவர்கள் சென்று, சேகரனைக்கண்டு கும்பிட்டு, சேநாபதியே! நகரை ரக்ஷித்துக்கொண்டிருக்கும் சேநாபதியான பாகுராயணர், தங்களைக் கண்டு 'நந்தர்களுக்குப் பின் இந்நகரத்தில் உங்களுக்குச் சத்துருக்கள் ஒருவருமில்லை. ராஜ முத்திரையையும் கோட்டைப் பொக்கிஷத் திறவு கோல்களையு மெடுத்துக்கொண்டு சந்திரகுப்த மஹாராஜாவைக் கண்டு கொள்ளும் நிமித்தம் இப்பொழுதே நாங்கள் எல்லோரும் வரப்போகிறோம். இனி யுத்தம் செய்யவேண்டிய காரணம் சற்றுமே இல்லை' என்று தெரிவித்துவரச் சொன்னார்" என்றனர்.

அது கேட்ட சேகரன், "தூதர்களே! ஊர்க் காவலர்களின் மனதை அறியும்படி எங்கள் பிரபுவின் கட்டளையை அநுசரித்து முற்றுகையிட்டிருக்கிறோம். இப்போது முத்திரையை ஒப்புவித்தால் யுத்தப் பிரயத்தினத்தை நிறுத்திவிடத் தடையில்லை. சீக்கிரம் வந்து சேரும்படி பாகுராயணனிடம் சொல்லுங்கள்" என்றான். தூதர்கள் திரும்பி வந்து, இச் சமாசாரத்தைப் பாகுராயணனிடம் தெரிவித்தார்கள்.

---

## ஆறுவது அத்தியாயம்.

## ஸித்தார்த்தகனது யோசனை.

பாகுராயணன் பொக்கிஷ அதிகாரியான ருக்மன் முதலிய முக்கிய அதிகாரிகளனைவர்களையும், வரவழைத்துப் புதிய அரசனைக்காண வேண்டியதற்குரிய சகல வஸ்துக்களையும் சித்தப் படுத்திக்கொண்டு, புறப்படத் தயாராய் இருந்தான். இச்சமயத்தில், ஸித்தார்த்தகன் அவ்விடம் வந்து, பாகுராயணனைக் கண்டு, "என்ன ஐயா! க்ஷேமமா? என்றான்.

"ஐயா! புத்திமானாகிய ஸித்தார்த்தக! நீ சொன்ன விஷயங்களெல்லாம் ஸித்தியடைந்து அநுபவத்திற்கு வந்துவிட்டதால் 'ஸித்தார்த்தகன்' என்ற பெயர் உனக்கு தகும்! தகும்! நாங்கள் யாவரும் சந்திரகுப்தனைக் காணும்பொருட்டுப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம்" என்று பாகுராயணன் சொன்னான்.

ஸித்தார்த்தகன் அது கேட்டுப் பாகுராயணனைத் தனிமையில் அழைத்து, "ஐயா சேனாபதியே! இப்பொழுது நீ நேராகச் சென்று சந்திரகுப்தனைக் காணவேண்டிய அவசியமில்லை. இதனால் சந்திரகுப்தன் உன்னைக் கோபிக்கமாட்டான். ஏதோ நீ அவன் காரிய நிமித்தமாகவே தாமதிக்கிறாய் என்றும், பின்னால் நீ வருவாய் என்றும் அறிந்து, உன்னிடம் அதிக விசுவாஸம் கொள்வானே அல்லாது, வேறு வித்தியாசமாக எண்ணான். இப்பொழுது உனக்குத் தம்பியான வத்ஸலாயனன் கையில் ராஜமுத்திரையை அனுப்பிவிடு. இவ்விதமே உனக்கு மித்திரர்களான பத்ரபடாதி சேனாபதிகளையும் நிறுத்திவிட்டு, வேறு மனிதர்களை அவர்களுக்குப் பதிலாகவும் அனுப்பிவிடு. காரணம் இப்பொழுது கேட்காதே" என்றான்.

இது கேட்டுப் பாகுராயணன், "ஏதோ இனி நடக்கவேண்டிய பெருத்த காரியத்தின் நிமித்தமே ஸித்தார்த்தகன் இவ்வாறு சொல்லுகிறான். இவன் வார்த்தை பிரயோஜன மற்றதா யிராது" என்று உணர்ந்து, "அப்படியே ஆகட்டும்" என்று தன் தம்பியான வத்ஸலாயனனை அழைத்து, சகல சாமான்களையும் அவனிடம் கொடுத்து, "நீ ருக்மன் முதலிய முக்கிய அதிகாரிகளுடன் சென்று, சந்திரகுப்த மகாராஜாவைக்கண்டு திறவுகோல்களையும் முத்திரையையும் ஒப்புவித்து, 'உத்தரவுப் பிரகாரமே நடந்து கொள்கிறோம்' என்று தெரிவித்து அங்கு இருக்கவேண்டியது" என்று அனுப்பினான்.

---

## ஏழாவது அத்தியாயம்.

## அதிகாரிகளும் அரசர்களும் சந்திரகுப்தனைத் தரிசித்தல்.

வத்ஸலாயனன் சமஸ்த வைபவத்துடனும் சென்று, தூரத்திலிருந்தே சந்திரகுப்தனைக் கண்டு நமஸ்கரித்து, சமீபம் வந்து, காணிக்கைகளை ஒப்புவித்துத் திறவுகோல்களையும் ராஜமுத்திரையையும் முன் வைத்து, மறுபடியும் கும்பிட்டு நின்றான். அவனுடன் வந்த எல்லா முக்கிய அதிகாரிகளும் கைகூப்பி வந்தனம் செய்து நின்றார்கள்.

சந்திரகுப்தன் அவர்கள் யாவரையும் கிரமப்படி யோக க்ஷேமம் விசாரித்து, அவரவர்கட்குரிய ஆசனங்களில் அமரச்செய்தான். பின்பு, வத்ஸலாயனன் எழுந்து நின்று, கைகட்டிக் கொண்டு, "மஹா பிரபுவே! அஸ்தமன பர்வதத்தில் அஸ்மித்த சூரியனைப் பின்னுகச் செய்து உதிக்கும், சுக்ல பக்ஷத்திய பால சந்திரனது தரிசனத்தை அபேக்ஷித்துக் கொண்டிருக்கும் குமுத புஷ்பக் கூட்டம் போல், 'நாளுக்குநாள் விருத்தியடையும் ஸம்பத்துடன் யானை மீதேறி ராஜவீதியில் பவனி வரும் தங்களைத் தரிசித்து, அதனுல் என்று தமது கண்கள் சபலம் அடையுமோ' என்று சகலப் பிரஜைகளும் மிக்க ஆவலுடனும் ஆனந்தத்துடனும் எதிர் பார்க்கின்றார்கள். அவ்விதமே நந்த ராஜ்ய லக்ஷ்மியும், வரமாலையைக் கையிற் பிடித்து, ராஜகுப்தனுகிய தங்களை எதிர் பார்த்தவளாகக் காத்திருக்கின்றாள். பட்டணத்திற்கு விஜயம் செய்து எல்லோரையும் ஆனந்தப் படுத்த வேண்டும்" என்று விக்ஞாபித்துக் கொண்டிருந்தான்.

அப்போது பத்ரபடாதி சேனுதிபதிகளின் தம்பி தமையன்மார்கள் வந்து, தூரத்திலிருந்தே கைகூப்பி, நமஸ்கரித்து, தம் காணிக்கைகளை முன் வைத்து உத்தரவுப் பிரகாரம் உசிதமான விடங்களில் உட்கார்ந்தார்கள். சந்திரகுப்தன் அவர்களை நோக்கிப் பத்ரபடாதி சேனுநாயகர்கள் எங்கிருக்கிறார்கள்?" என்று வினவினுன். வினவலும், அவர்கள், அரசே! நமது ஸேனா நாயகர்கள் "சிதறிக் கிடக்கும் சைன்யங்களைத் திரட்டிக் கொண்டு சீக்கிரமாகவே மகா ராஜாவைத் தரிசிக்க வருகிறேம். நீங்கள் முந்திச் சென்று பிரபுவைக் கண்டு அவர் உத்தரவிட்டபடி நடந்துகொள்ள வேண்டியது" என்று எங்களை யனுப்பினுர்கள்" என்று வணக்கமாய்த் தெரிவித்தார்கள்.

'சரி' என்று அவர்க ளெல்லோர்க்கும் தாம்பூலம் அளிக்கும்படி சந்திரகுப்தன் உத்திரவிட்டு, "முன் போலவே அவரவர்களின் அதிகாரத்தில் எச்சரிப்புடனும் சாவதானத்துடனு மிருக்க வேண்டியது" என்று ஆக்ஞாபித்துப் பொக்கிஷாதிகாரியான ருக்மனைப் பார்த்து, "ஐய! பூஜ்யரான பிதாமகர்க்கு இப்பொழுது எந்த வஸ்துக்களில் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும், நம் கைவச மில்லாவிட்டாலும், உடனே எங்கிருந்தேனும் வரவழைத்தாவது தடையின்றியும் தாமத

மின்றியும் அனுப்புக. நந்த பத்தினிகள் தங்களிடமிருக்கும் வஸ்துக்களைத் தங்கள் தங்கள் இஷ்டம் போல் செலவு செய்து கொள்ளட்டும்" என்று கூறி, வந்தோர் யாவர்க்கும் அனுமதி கொடுத்து அனுப்பினான்.

பிறகு, சிற்றரசர்க ளெல்லோரும் வந்து, சந்திரகுப்தனைக் கண்டு வந்தனம் செய்தனர். சந்திரகுப்தன் எழுந்து, நாலைந்தடி நடந்து வந்து, அவர்களை ஆலிங்கனம் செய்து, க்ஷேமம் விசாரித்து, அவர்களைத் தக்க ஆசனங்களில் இருத்தித் தானும் உட்கார்ந்து, அவர்கட்கு முகமுன் கூற, அவர்கள், "அநேக நக்ஷத்திரங்களாற் சோபிக்கும் ஆகாய வீதியானது, உதித்து வரும் சந்திரனால் மிகப் பிரகாசிப்பது போல் விளங்கும் ராஜாதி ராஜரான சந்திரகுப்த மகாராஜவே! உங்கள் ஆளுகைக்குட்பட்ட சகல ராஜ்யங்களும் சத்துரு பயமே யின்றிப் பெரு மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் விளங்கிக்கொண் டிருக்கின்றன. ஒரு குறைவும் எங்கட்கில்லை" என்றனர்.

அநந்தரம், சந்திரகுப்தன் அவர்க ளனைவரையும் கந்த மாலைகளாலும் கற்பூர தாம்பூலங்களாலும் மரியாதை செய்து உபசரித்து, அவர்களுக்குச் செலவு கொடுத்து அனுப்பினன்.

---

## எட்டாவது அத்தியாயம்.

## உடன் கட்டையேற உத்தரவு வேண்டல்.

பாகுராயணன், நந்த பத்தினிகளிடம் சொல்லி வந்தபடியே யுத்த களத்தைச் சோதித்தான். நந்தர்களின் உடல்கள் ஜபசாலையிலுள்ள அக்கினி குண்டத்தில் இடப்பட்டுச் சாம்பலானதையும் தலைகள்மட்டும் சேகரனுடைய உத்தரவுப்படி தைலக் கொப்பறையில் வைக்கப்பட்டிருப்பதையும் அறிந்தான். அறிந்ததும், அவன், ஸித்தார்த்தகனை வரவழைத்து, "ஐயா! நந்த பத்தினிகள் ஸஹகமனம் செய்யச் சித்தமாயிருக்கின்றனர். அவர்கள் தங்களிடமிருக்கும் திரவியம் ஆபரண மிவைகளில் நாலில் ஒரு பங்கு ராஜ பொக்கிஷத்திற்கும், மீந்த முக்காற் பங்கைத் தங்களுக்குப் பரலோக வழிக்கும், உபயோகிக்க வேண்டுமெனத் தீர்மானித்திருக்கின்றனர். 'தமது எண்ணப்படி நடத்தித் தந்து சந்

திரகுப்தன் அதிக கீர்த்தியையும் க்ஷேமத்தையும் அடையட்டும்' என்று சொல்லி அவர்கள் அவசரப்பட்டுக்கொண் டிருக்கிறார்கள். நீ ஒரு காரியம் செய்யவேண்டும்: இப்பொழுதே இவ் விஷயத்தைச் சந்திரகுப்தனுக்குத் தெரிவித்து, அவனது உத்தரவு பெற்றுக்கொண்டு, நந்தர்களின் தலைகளை நகருக்கு வெளியில் கங்காநதிக் கரையிலிருக்கும் உத்தியான வனத்தில் கொண்டு வந்து வைத்து, உடனே எனக்குத் தெரியப் படுத்த வேண்டும்" என்றான்.

ஸித்தார்த்தகன் அவ்விதமே செய்வதாக ஒப்புக்கொண்டு விடுதியிலிருக்கும் சந்திரகுப்தனைக் கண்டு கும்பிட்டுப் பாகுராயணன் சொன்ன சமாசாரங்களைத் தெரிவித்தான். அது கேட்டுச் சந்திரகுப்தன், "நந்தர்கள் எங்கள் பிதாவுக்கும், சகோதரர்களுக்கும் செய்த துரோகத்தைத் தெய்வம் சகிக்கமாட்டாது, அவர்களுக் கிவ்வித ஆபத்தை விளைவித்து விட்டது. மிஞ்சிப்போன காரியத்தைக் குறித்துக் கொள்ளும் கவலையாலும் விசனத்தாலும் பயனில்லை. நந்த பத்தினிகள் எனக்குத் தாய்மார்களே யன்றி வேறில்லை. சுமங்கலித் தன்மை இல்லாதது பெருங் குறைவே யாயினும் என்ன செய்கிறது? அவர்களைக் கௌரவமாகவே நடத்துகிறேன். என் தாய்மார்களை விட அதிக அன்புடன் நடத்தக் காத்திருக்கிறேன். அவர்களும் என்னை அபிமான புத்திரனாக பாவித்து ஆசீர்வதித்துக் கொண்டிருக்கட்டும். விருத்த பருவமடைந்திருக்கும் அரச தம்பதிகளை அடிக்கடி தேற்றிக்கொண்டும், என்னை யாதரித்துக் கொண்டும், நான் செய்யும் பணிவிடைகளால் சகல துக்கத்தையும் அவர்கள் மறந்து என்னால் பூஜிக்கப்பட்டுக் கொண்டும் இருக்கட்டும். நான் இச்சமயம் நேரில் அங்கு வந்து பணிந்து கேட்டுக்கொள்ள வேண்டியவனாக இருந்தும், என்னைக் கண்டதும் அவர்களுக்கு, 'துரியோதனாதிகளைக் கொன்ற பீமஸேனனைக் கண்டதும், காந்தாரிக்கிரட்டிப்புத் துக்கமுண்டானது போல, விஸனம் அதிகரிக்குமாகையால் நான் நேரில் காணும் சமயம் இஃதன்று. இவைகளை எல்லாம் நான் பெரிய அரசரிடமும் தாய்மார்களிடமும், நமஸ்கரித்து பக்தியுடனும், வணக்கத்துடனும் விக்ஞாபித்துக்கொண்டதாக பாகுராயணனைக் கொண்டு தெரியப் படுத்த வேண்டியது. பிதாமகரின் ஸமாதான வார்த்தையையும், என்னுடைய பிரார்த்தனையையும் கேளாமல் ஸஹகமனம் செய்யவேண்டுமென்று அவர்கள் பிடிவாதமாகத் தீர்மானித்துவிடும் பக்ஷத்தில், ஒரு

வராலும் தடை செய்ய முடியாது. அவர்கள் மனம்போல் 'ஆகட்டும்' என்று சொல்வதைக் காட்டிலும் அதிகம் என்னால் செய்ய முடியுமோ? எனது யத்தனம் பலிக்குமோ? அங்கு ஆகவேண்டிய விஷயங்களுக் கெல்லாம் பொக்கிஷாதிகாரியான ருக்மனுக்கு, முன்பே உத்திரவிடப் பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் பாகுராயணனே முன்நின்று நடத்தட்டும்" என்று சொல்லலும், ஸித்தார்த்தகன் அங்கிருந்து வெளிப்பட்டு, தைலக் கொப்பறைகளிலிருந்த நந்தர்களின் தலையை எடுத்து வரச்செய்து, உத்தியான வனத்தில் இறக்கிவிட்டு, பிறகு பாகுராயணனைக் கண்டு, சந்திரகுப்தன் சொல்லி யனுப்பியவைகளை எல்லாம் விவரமாகத் தெரிவித்தான்.

---

## ஒன்பதாவது அத்தியாயம்.

## மாமியின் துயரமு மருகியர் உறுதியும்.

பாகுராயணன் அரண்மனை சென்று ராஜஸ்திரீகளைக் கண்டு சந்திரகுப்தன் சொல்லியனுப்பிய சமாசாரங்களை உரைத்தான். அதற்கவர்கள், "ஐய, பாகுராயண! சந்திரகுப்த னுரைத்த சமாதானங்களை அறிந்தோம். அவன் மஹா குணசாலி. சொன்னபிரகாரம் நடத்தத் தவறமாட்டான். எங்களுக்கு அவனிடம் புத்திரவாஞ்சை யிருக்கிறது. ஆனாலும், இப்பொழுது சஹகமனம் செய்வதே எங்களுக்கு நற்கதி யளிப்பதாயும், யுக்தமாயும் தோன்றுகிறது. எங்கள் வம்சத்தில் சந்திரகுப்தனாவது கீர்த்திமானாயும், க்ஷேமத்துடனும், புத்திர பௌத்திரருடன் வாழ்ந்து கொண்டு இருக்கவேண்டியது. மேல் ஆகவேண்டிய காரியங்களை நாங்கள் முன் சொன்னதுபோலச் சீக்கிரம் சித்தப்படுத்து. இதோ நாங்கள் புறப்பட்டு விட்டோம்" என்றனர். பாகுராயணன் பதில் ஏதும் சொல்ல நாவெழாமல், 'உத்தரவு' என்று அவர்களைக் கும்பிட்டுச் சென்றான்.

இவை யாவும் கேட்டுக்கொண்டிருந்த ஸுநந்தாதேவி, மருமக்களின் கையைப் பிடித்துக்கொண்டு, "அருமைக் குழந்தைகளே! என் புத்திரர்களெல்லாம் விதிவசத்தால் மாண்டுபோனார்கள். நீங்களாவது உயிருடனிருந்து என்னை இந்த வயதுகாலத்தில் ஆதரிக்கவேண்டாமா?

பெற்ற பெண்களைப்போல் பிரியமாக உங்களை நடத்திவந்தேனே!. என்னைத் தனியேவிட்டுக் குழந்தைகளாகிய நீங்கள் உயிர் துறக்கலாமா? என் கண்மணிகளே! இந்த நிலைமையில் உங்களைப் பார்த்துச் சகிப்பது கஷ்டந்தான். ஆனாலும் என் புத்திரர்களை யிழந்த துக்கம் பாதியேனும் உங்களைப் பார்த்தவுடன் தெரியாதிருக்குமே!. என் பிள்ளைகளாவது யுத்தத்தில் "ஜயித்துத் திரும்பிவருகிறோம்" என்று சொல்லிச்சென்று கண்காணுமல் மடிந்தார்கள். நீங்க ளிப்போது என் கண்ணிரண்டும் காண உயிர்விடும் நிமித்தம் செல்வதை நான் கண்டு எவ்விதம் ஸஹிப்பேன்! பர்த்தாவிட மிவ்வளவு பக்தியுள்ள நீங்கள் மாமியாகிய என்னை அநாதரவு செய்யலாமோ? புத்திரர்களை இழந்து வருந்தும் இச் சமயம் உங்களையும் இழந்து எவ்விதம் பொறுப்பேன்!" என்று பலவாறு இரங்கிக் கூறினள்.

அப்போது அவர்கள், "தாயே! எங்களை மன்னிக்கவேண்டும். உயிரினும் சிறந்த கணவனை யிழந்தபின் ஸ்திரீ ஜாதிக்கு உலகில் சுகமுண்டோ? தம் நாயகர்கள் உயிருடன் இருக்கும்வரை அடிதொழுது உபசரித்து, அவர்கள் காலமாய்விடில் ஸஹகமனம் செய்வதே பதிவிரதைகட்கு அழகு. இது தாங்கள் அறியாததோ? முன்பும் நமது வம்சத்தில் அநேகம் ஸ்திரீகள் இவ்விதம் செய்திருக்கிறார்களே. இப்போது தாங்கள் எங்களிடமுள்ள அபிமானத்தினல் எங்கள் பிரிவுக்கிரங்கித் தடுக்கிறீர்கள். ஆயினும் இதுவரை கந்த புஷ்பங்களாலும், விலையுயர்ந்த ஆடை ஆபரணங்களாலும், மஞ்சள் குங்கும மிவைகளாலும் அலங்கரிக்கப்பட்டு, சுகமாகவும் சந்தோஷமாகவும் தங்கள் புத்திருடன் நாங்கள் இருந்ததைக் கண்டு களித்த தாங்கள், இப்பொழுது நாங்கள் வைதவிய துர்த்திசையை யடைந்து, சகலத்தையும் துறந்து காயக்கிலேசத்துடனும் கண்ணீருடனும் காலங் கழிப்பதைக் கண்டு ஸஹித்துக் கொண்டிருப்பது முடியாத காரியம். தாங்கள் க்ஷத்திரிய வம்சத்திற் பிறந்து சுத்த க்ஷத்திரியர்களைப் புருஷனுகவும் பிள்ளைகளாகவும் அடைந்தும் கேவலம் இது விஷயத்தில் இவ்வளவு வருத்தப்படலாமோ? க்ஷத்திரியர்கள் யுத்த களத்தில் மடிவதும், அவர்களுடைய பத்தினிகள் ஸஹகமனம் செய்வதும் ஸகஜமே. ·சாவித்திரியைப் போல் இறந்த புருஷனை எழுப்பிக்கொள்ளக் கூடிய மகிமை யடையா

விடினும், கேவலம் புருஷன் சென்ற வழிக்கேனும் செல்லாது, சூரிய னற்ற ஆகாயம் போலும், தண்ணீர் வற்றிய தடாகம் போலும் உயிரு டன் இருந்து பயனென்ன? வேர் அறுபட்டபின் விருக்ஷம் நிலைக்குமோ? உயிரற்ற உடலை உடனே வீட்டினின்றும் வெளிப்படுத்துவது போல் நாதனற்ற ஸ்திரீகள் ஸஹகமனம் செய்யவேண்டியது சாஸ்திர ஸித்த மாயிற்றே? அரைநாழிகையும் பிரியாமலிருந்த பர்த்தாவைச் சீக்கிரம் கண்டு களிக்கும்படி தாங்கள் அனுக்கிரஹிக்க வேண்டும். தாயே! தங் கள் திருவாக்கினால் உத்தரவளித்து எங்களுக்கு 'நற்கதி உண்டாகுக' என ஆசீர்வதிக்க வேண்டும்" என்று மன்றாடினர்.

இங்ஙனம் மன்றாடி நிற்கும் மருமக்களின் உறுதி கண்டு, ஸர் வார்த்தஸித்தி, தனது மனைவியை நோக்கி, "ஸுநந்தே! நீ எவ்வளவு ஸமாதானம் செய்தபோதிலும் இந்தப் பாலிகைகள் ஸம்மதிக்கக் கூடியு வர்கள் அல்லர். அவர்கள் சொல்வதே ஞாயமாக இருக்கிறது. அவர்கள் நற்கதி தேடிக்கொள்ளும் விஷயத்தில் நீயும் ஸம்மதப்படவே வேண்டும். முந்தி நமக்குரைத்த மகரிஷி வாக்கியம் வீண்போகாமல் அவ்வண்ணமே நடந்து விட்டது: புத்திரனை இச்சித்திருந்த நான் வீதிஹோத்ர ரிஷி யின வரவைக்கண்டு எதிர் சென்றழைத்து உபசரித்து அவரது பாத தீர்த்தத்தை உன் தலையில் தெளித்தேன். உன் தலையில் இருந்த ஒன்பது திவிலைகளும் உருண்டு கீழே விழுந்து விட்டன. பிரிய பத்தினியாகிய முறையின் சிரசில் தெளித்தபோது, ஒரே திவிலையாக அது அசைவற்றிருந் தது கண்டு, "இதன் காரணம் என்ன?" வென்று மகரிஷியை நான் கேட் டேன். அவர் "அலைகள் ஓய்ந்த பின் சந்திரபிம்பம் ஒன்றே இருக்கும்" என்று பதிலளித்ததன் அர்த்தம் இப்பொழுது தான் புலப்பட்டது. நாம் இனி துக்கப்படுவதில் யாது பயன்? முன் சென்றதெல்லாம் கன வெனத் தள்ளி, விவேகத்தை யடைந்து, நமக்கு இனி நற்கதி கிடைக்க வேண்டுமென்று ஈசுவரப் பிரார்த்தனையுடன் காலங்கழிக்க வேண்டுமே யன்றிப் பிரலாபித் தழுவதிற் பயனில்லை" யென்று தேற்ற ஸுநந்தா தேவி மௌனமாயிருந்தாள்.

ராஜ ஸ்திரீகள் ஸஹகமனம் செய்வது நிச்சய மென்றறிந்த தாதி மார்கள் வாய்விட்டலறத் தொடங்கினார்கள். அவர்களுடைய "ஹா! ஹா!!" காரமானது பட்டணத்தைப் பிளந்து கொண்டு செல்வது

போலிருந்தது. நகரிலுள்ள ஜனங்களெல்லோரும் அந்தப்புர வாயிலில் கூட்டமாகக் கூடிக் கதறி யழுதார்கள்.

நந்த பத்தினிகள் தங்களிட மிருக்கும் வஸ்துக்களை சுமங்கலி களுக்குத் தானமாக வாரிக் கொடுத்து அவஸரமாகப் புறப்பட்டுப் புயற் காற்றினால் தரையில் விழும் வாழை மரங்கள் போல், விருத்த ராஜ தம் பதிகளுடைய காலில் விழுந்து, கடைசி நமஸ்காரத்தைச் செய்துவிட்டு ராஜத் துவாரத்திலிருந்து வெளிவந்தார்கள்.

---

## பத்தாவது அத்தியாயம்.

## உடன்கட்டை யேறல்.

அப்பொழுது நகர மக்களால் வாரி யிறைக்கப்படும் மஞ்சள் குங் குமம் புஷ்பம் இவைகளாலும், தூளிகளாலும், சூரியப் பிரகாசம் மறைந்ததானது, "இதுவரையிலும் அந்தப்புரம் விட்டு வெளிவராத இந்த ராஜஸ்திரீகள் இப்பொழுது தெருவில் சகலரும் காணும்படி கால் நடையாக வருவதைக்கண்டு சகியாது, சூரியன் மறைந்துவிட்டானே" என்று சொல்லும்படியாக இருந்தது. எழுந்த பற்பல புகைப்படலங் களால் எங்கும் இருள் மூடிற்று. ஸ்திரீ புருஷர்களின் கண்ணீர்ப் பெருக்கினால் வீதிகளெல்லாம் சேறாயின. அறுந் தெறிந்து வாரி யிறைக்கப்படும் நாணு மணிகள் பதித்த, ஆபரண காந்திகளாகிற இந்திர வில்லாலும், கண்ணீர்ப் பெருக்காகிற நீர்த் திவலைகளாலும், அடிக்கடி அலறுவதான இடிசப்தங்களாலும், தேஹகாந்தியாகிற மின்னலொளி யாலும், அச்சமயம் மழை காலத்துக் கொப்பாகவே இருந்தது.

இவ்விதமாக எல்லோரும் கங்கைக்கரையிலிருக்கும் உத்தியான வனம் சென்றனர். அங்கு, இடிவிழுந்த அதிர்ச்சியா லுதிர்ந்துகிடக்கும் பழக்குலைகள்போலும், காட்டானைகளால் பிய்த்தெறியப்பட்ட தாமரைப் புஷ்பங்கள் போலும், ஆகாயத்திலிருந்து உதிர்ந்துவிழும நக்ஷத்திரங்கள் போலும், குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்ட காதுகளுடனும், சுகந் தங்கள் பூசிய கழுத்துடனும், அவிழ்ந்துபுரளும் சிகையுடனும், அரைக்

கண் மூடிச் சுகபரவசத்தில் ஆழ்ந்தவர்கள்போல் முககாந்தி குறையாது இருக்கும் தமது பதிகளின் தலைகளைக் கண்டதும், பருவதத்தி னுச்சியி லிருந்து உருண்டு விழுபவர்கள் போல் நந்தபத்தினிகள் தரையில் வீழ்ந்து மூர்ச்சித்தார்கள். சற்றுநேரம் கழித்துப் பிரக்ஞை வந்ததும், தத்தம் புருஷர்களின் சிரங்களைத் தத்தம் மார்பில் வைத்துக்கொண்டு அடிக் கடி முத்தமிட்டு "ஸ்வாமி", "நாதா"வென்று தம் கண்ணீர்ப் பெருக்கி னல் அபிஷேகம் செய்து துக்கசாகரத்தில் அழுந்திச் சித்தப் பிரமை கொண்டோர் போல் அச்சம் நாணமாதிய நீங்கிப் பிரலாபித்தார்கள்.

"ஹா! ரமணா! ஏன் என்னுடன் பேசவில்லை? என்னிடத்திலும் உமக்குக் கோபமுண்டானதன் காரணம் என்ன? நான்செய்த குற்றம் இன்னதென்று சொல்லக்கூடாதோ? நீர் இவ்விதம் மௌனமா யிருந்தால் நான் பொறுப்பேனோ" என்று புலம்பினள் ஒரு பூவை.

பதியின் அங்கத்தில் ஐக்கிய மடைந்தவள்போல் சற்றுநேரம் பேசா திருந்து, பிறகு கைகளைக் கூப்பிக்கொண்டு, "பிராணநாதா! நீர் ஒரு வார்த்தைகூடப் பேசாதிருப்பது நீதியோ? என்மீதுற்ற வாஞ்சையின் நியாய மிதுவோ? அல்லது போகஸ்திரீயி னிடத்திலுள்ள வாஞ்சையின் நீதியோ?" என்று அரற்றினள் ஓர் அரிவை.

"ஹா! காந்தா! எவ்வளவு விதமாய்ப் பிரலாபித்துய், மன்றாடியும், என் கண்திறந்து பார்க்கவில்லை? உமது ஹிருதயமேன் இவ்வளவு கல் லாயிற்று? என்னை அரைநாழிகையும் பிரியாமலிருந்த நீர் இப்பொழுது கண்ணை மூடிக்கொண்டு வாய்திறவா திருக்கக் காரணமென்ன? ஐயையோ தெய்வமே! ஆ விதியே!" என்று கதறினள் ஒரு காரிகை.

"புஷ்ப சயனத்தின்மீது படுத்துறங்கும் உமக்கு இந்தக்கல்லிலும் முள்ளிலும் இருக்கவிதியோ?" என்று தன் முன்றானையால் முகத்தைத் துடைத்துத் தலையை மடிமீது வைத்துக்கொண்டு, "ஆஹா அஸஹாய சூரா! பிராணேசா! நீர் இறந்துவிட்டது நிஜந்தானோ? இதென்ன ஆச் சரியம்! ஆஹா! மன்னாதி மன்னனை உமக்கு இந்தத்துர்த்திசையும் ஏற்படுமோ?" என்று ஏங்கித் தவித்தனள் ஓர் ஏந்திழை.

"வீர லட்சுமியே! இனி நீ யாரை யடைவாய்? சாஸ்திரவித்தையே! எங்களைப்போல் நீயும் நாயகனை இழந்துவிட்டனையே? க்ஷத்திரிய தர்

மமே! ஆதாரமற்று விட்டாயே? ஹா வனதேவதைகளே! எங்களுக்கு மங்கிலிய பிட்சை அளித்திருக்கக் கூடாதோ?" என்று அழுது தவித்தனள் ஓர் அங்கனே.

"தாயே! பாகீரதி! எங்கள் தாபத்தை நீயாவது தணிக்கக்கூடாதா! ஹா! விப்ர சிரேஷ்டர்களே! உங்களுடைய ஆசீர்வாதங்களும் வீணுய் விட்டனவே. சுமங்கலியப் பெண்டுகாள்! எங்கள் கணவர்களை எழுப்பித் தரவேண்டியது உங்கள் கடமை" யென்று எதிரிலிருப்பவர்கள் கால்களைப் பிடித்துக்கொண்டு எழுந்திராமல் இரங்கி அழுதனள் ஓர் இலங்கிழையாள்.

"ஹா ஹிருதயேச! நான் சொல்லியிருந்ததைக் கொண்டுவந்து கொடுக்கவில்லையே! சீக்கிரம் திரும்பி வருவதாக என்னை ஏமாற்றிவிட்டு எங்கு ஒளித்திருக்கிறீர்? ஹா! ஸகி ஜனங்களே! உலகில் உங்களுக்கு ஸமானம் ஆன பாக்கியசாலிக ளில்லை" என்று அடிக்கடி சொல்வீர்களே! பதியின் மனங்கோணுதபடி நடந்ததற்குப் பலனிது தானே?—அடி தங்காய்! உன்னிடம் ஏதேனும் உன்நாயகர் சொல்லிப்போனுரோ? அடி அழகி! நமது நாயகர் இவ்விதம் நம்மை வஞ்சித்து விடுவதை நாமறிய வில்லையே?" என்று பரிதவித்தனள் ஒருபாவை.

இவ்வாறு அவர்கள் தத்தமக்கு வாயில் வந்தவிதம் சொல்லிக்கதற, ஜேஷ்டநந்தனது பட்டமஹிஷியான விதர்ப்பராஜனது குமாரியானவள், "ஹா பிராணகாந்த! ஹா பதியே! ஹா பிராணநாதா! ஹா பிரிய! ஹா ஜீவிதேச! ஹா நாதா! ராஜாதி ராஜரான உமக்கு இத்தரையில் உயிரற்றுக் கிடக்கவும் விதியோ? ஹா கமலாம்பிகையே! ஹா தந்தையான விதர்ப்பமன்னனே! பலநாள் தவமிருந்து என்னைப் பெற்ற பலனிது தானே? ஹா கங்காதேவியே! ஹா தேவதைகளே! ஹா விதியே! ஐயோ! ஹா ஸ்திரீஜன்மமே! ஹா அகால ம்ருத்யுவே! இரக்கமற்ற விதியே! பொல்லாத தினமே! ஹா தாயே! நானிக் கடுங்காட்சியைக் கண்டு எவ்விதம் ஸஹிப்பேன்? என் உயிருக் குயிரான பதியே! நான் ஆதியில் எவ்வளவோ தூரம் எடுத்துச் சொல்லியும் என்னை மறுத்துவிட்டுத் தாமும் சத்துருக்களின் வஞ்சனைக் குட்பட்டு மடிந்து, என்னையும் ஆதரவற்ற பூங்கொடிபோல ஆக்கி விட்டீரே. பிடிவாதத்தினுலும், எல்லோரும் சேர்ந்

திருக்கிறேமென்ற ஒற்றுமையாலும், இவ்வித கஷ்டத்திற் குட்பட்டு விட்டீர்களே! பிரம சாபம் வீண்போமோ? நீறுபூத்த நெருப்பைப் போலிருந்த தவ சிரேஷ்டனை சாணக்யனை அவமதித்து இவ்வித ஆபத்துக் குட்பட்டு விட்டீர்களே! சாணக்யனுடைய தயவிற்கும், ஆசீர்வாதத்திற்கும், பாத்திரமாக சந்திரகுப்த னேற்பட்டு, அவனுடைய கொடிய சாபத்திற்கு நீங்கள் ஆளாக வேண்டுமோ? ஹா கஷ்டமே! அரசர்கள் கோபத்தினலோ, மதத்தினலோ ஒருகெடுதல் செய்தாலும் ஸமீபத்திலிருப்பவர்களாவது சிற்றந்தணித்து ஸமாதானம் செய்யாமல், எல்லோரும் பேசாது இருந்துவிட்டார்களே!

"நினைத்த ஸமயம் தனியே வெளியே செல்வதினும், மந்திரிகளைக் கலக்காது ஓர் காரியம் தாமாகச் செய்வதினும், மன்னர்க்கு வேறு தீங்குண்டோ? 'பிரஜைகளின் நன்மையைக் கோருவதே அரசாட்சி' என்று எண்ணுமல், தமக்குப் பிரஜைகள் அடிமைகளென்றும், தமக்காகவே பொக்கிஷத்தில் திரவியம் குவிக்கப்பட்டிருக்கிறதென்றும், தாம் எது செய்தாலும் ஒருவரும் தடைசொல்லக் கூடாதென்றும், தமக்கிருக்கும் அதிகாரத்தினல் பாபம் புண்ணிய மிவைகளைச் சற்றும் லக்ஷியம் செய்ய வேண்டிய தில்லையென்றும், எண்ணும் அரசர்களிடம் ராஜ்ய லக்ஷ்மியானவள் நிலைத்திருக்கச் சம்மதிப்பாளோ? சுபாவத்தில் சஞ்சலையான லக்ஷ்மியை மன உறுதியாலும், நீதிவழியாலும், கட்டுப்படுத்தாது அவனுக்கு மனவெறுப்பை உண்டாக்கினல் அவள் ஸஹித்திருப்பாளோ? காலதேச வர்த்தமானங்களை அறியாது, அதிதியாக வந்த பிராமணனை அவமதித்ததாலன்றோ இவ்விதக் கஷ்டம் நேரிட்டது?. இனி, சொல்லிப் பிரயோஜனமென்ன? எதுவும் 'விதியை அனுஸரிக்கும் மதி' என்று நடந்துவிட்டது" என்று வெகுநேரம் புலம்பினள்.

அச்சமயம் அங்கிருக்கும் தாதிகளில் ஒருத்தி, "ஹா! என் அம்மணி! 'நாதன் சீக்கிரம் திரும்பி வந்துவிடுவார்' என்று அவசரத்துடன் அலங்கரித்துக்கொண்டாயே! என்னல் அலங்கரிக்கப்பட்ட புஷ்பங்கள் இன்னும் வாடவில்லையே! கேளிக் கிருஹத்தில் உன் நாயகனல் உன் கபோலதேசத்தில் எழுதப்பட்ட மகரபத்திரங்கள் அழியவில்லையே. இதற்குள்ளாகவே உனக்கு இவ்வித கஷ்டம் நேர்ந்ததே?" என்று வருந்தினள்.

போக ஸ்திரீகளிடம் எவ்வளவு மையலுடனிருந்தாலும் நீ வாய் திறந்தவளில்லையே! குணசாலியான உன்னைக் கண்டு எவ்விதம் ஸஹிப்பேன்!" என்று மறுகினள் ஓர் மங்கை.

"நமது பூந்தோட்டத்தி லிருந்து வரும் புஷ்பங்களை இனி யார் சூடுவார்கள்" என்றும் "தாயே உனது கிருஹத்தில் வளர்க்கப்பட்ட கிளிகளையும் மயூரங்களையும் இனியார் வளர்ப்பார்கள்" என்றும் மனம் புழுங்கினாள் ஒரு பூங்கொடி.

"நாயகன் வருவதற்கு சற்றுத் தாமதமாகில், ஆபரணங்களை வாரி யெறிந்து அலங்காரங்களைக் கலைந்துக் கோபத்துடன் சயனக் கிருஹத்தில் படுத்துவிடுவாயே!" என்று பரிந்தனள் ஓர் பாவை.

"எவ்விதமாக அலங்கரித்தாலும், குற்றம் குறைகள்சொல்லி நிலைக் கண்ணாடியின்கீழ் நின்றுகொண் டிருப்பாயே! இனி அக் கண்ணாடியை யார் பார்ப்பார்கள்?" என்று கதறினாள் ஒரு காரிகை.

"சயனக் கிருஹத்தில் நாயகன் எவ்வளவு நய வார்த்தைகளை உரைக்கினும் சமாதானமடையாது நீ பிடிவாதம் செய்வதையும், அரசன் உன் காலில்விழுந்து நல்லவார்த்தை கூறி ஸந்தோஷப்படுத்துவதையும் கண்டிருந்த என் கண்ணால் இந்தப் பரிதாபத்தைக் கண்டு எப்படிச் சகிப்பேன்" என்று தவித்தனள் ஒரு தையலாள்.

"இருந்த வரையில் உன்னை லக்ஷியம்செய்யாது, போக ஸ்திரீயுடன் உன் நாயகன் சுகித்ததுபோலவே, இப்பொழுதும் வீரசுவர்க்கம் அடைந்து ரம்பாதி ஸ்திரீகளுடன் சுகித்துக்கொண் டிருக்கிறானே" என்று நொந்தனள் ஒரு நுண்ணிடையாள்.

"உனது பூந்தோட்டத்தில் உன்னால் பயிராக்கப்பட்ட ஜாதிமல்லிகை பூவிடும் சமயமாயிற்றே! அசோக விருக்ஷத்திற்கு உதைகொடுக்கும் சமயமுமாயிற்றே" என்று அரற்றினள் ஒரு அங்கனை.

"அம்மா! மாலினியே! தூங்கி யெழுந்ததும், மாமன் மாமிகளை நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றதெல்லாம் வீணாய்ப் போய்விட்டதே! நீ செய்துவந்த சுமங்கலி பூஜைகளெல்லாம் பலனளிக்க இல்லையே!

ஆரம்பித்திருந்த லக்ஷ்மி விரதமும் இன்னும் ஸம்பூரணமாக வில்லையே" என்று உயங்கினள் ஓர் உத்தமி.

"நீங்கள் எல்லோரும் ஸஹகமனம் செய்தபின் நாங்கள் எங்குச் செல்வோம்? யாரை அடுப்போம்? எவ்விதம் ஜீவிப்போம்? எங்ஙனம் ஸஹிப்போம்? எவ்விடம் நிலைப்போம்?" என்று பிரலாபித்தனள் ஒரு பேதை.

இவ்விதம் நெடுநேரம் பிரலாபித்தபின், ஜேஷ்ட நந்தபத்தினி தனது ஸகோதரிகளைப் பார்த்து "அன்புள்ள தங்கைமார்களே! உயிரை வெறுத்து இங்கு வந்தபின், வீணாகப் புலம்பி அழுவதில் பயனென்ன? மறு உலகெய்திய நம் நாயகர்கள் நம்மைக் காணாது கஷ்டப்படுவார்கள். நமக்கிதோ ஆகாயத்தில் விமானங்கள் தயாராக இருக்கின்றன. சீக்கிரம் எழுந்திருங்கள். கங்காநதியில் ஸ்நானம் செய்வோமாகில் பாகீரதி நமது தாபத்தைத் தணிப்பதில் தடையில்லை" என்றுகூறி எல்லோரையும் அழைத்துக் கொண்டுபோய் அவர்களுடன் கங்காதீரம் சென்று நதியில் ஸ்நானம் செய்தனள். பிறகு யாவரும் தத்தம் ஆருயிர்க் கொழுநரது சிரங்களைக் கங்கா ஜலத்தில் முழுக்காட்டிக் கரை யேறினர்.

அச்சமயத்தில் நந்தர்களின் போக ஸ்திரீகளெல்லாம் கூட்டமாய் வந்து அவர்களை நமஸ்கரித்து, "தமக்கைமார்களே! எங்களுக்கும் ஸ்நானமாய் விட்டது. நாங்களும் உங்களுடனேயே வருவோம். இதற்குச் சம்மதித்துத் தயை புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள்.

அப்பொழுது விதர்ப்ப ராஜகுமாரி அவர்களை நோக்கிப் "பேதைகாள்! ஸஹகமனமென்பது தர்ம பத்தினிகளுக் கன்றி மற்றவர்களுக் கில்லை. நீங்கள் எங்கள் நாயகரது பிரிவாற்றாது அவ்விதம் செய்தால், அது துர்மரணமாகுமேயன்றி நற்கதி யளிக்க மாட்டாது. ஆகையால் பதியைத் தியானித்துக்கொண்டு இக் கர்ம பூமியின் வாசத்தைத் தொலையுங்கள். மஹா குணசாலியான சந்திரகுப்தன் உங்களைப் பெற்றதாயினும் அதிகமாக மதித்து ஆதரிக்கத் தவற மாட்டான். நீங்களும் அவனிடம் புத்திரவாஞ்சையுட னிருந்து, முடிவில் நற்கதி யடையலாம்." என்று கட்டளையிட்டு அவர்களை நிறுத்தினள். உடனே நந்த ஸ்திரீகள் ஞானிகளான பிராமணோத்தமர்களுக்கு மஹா தானமாக லக்ஷக்கணக்

கான திரவியங்களை ஈசுவரார்ப்பணமாக அளித்து, அநேக விப்ர தம்பதிகளை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து அவர்களுக்குப் பூசை செய்து, வாசனாதிகள் அளித்தனர். பிறகு விருத்த அரசரின் உத்தரவுப்படி அங்கு வந்து அச்சமயத்திற்குரிய கிரியைகளை நடத்தும் புரோகிதர்களுக்குப் பொன் அளித்து, லக்ஷக்கணக்கான கோக்களைக் கன்றுகளுடன் தானம் செய்தனர். ஏழை எளியவர்களுக்கு ஆபரணங்கள் வஸ்திரங்களாதியன ஈந்தனர். அநந்தரம் கங்கா தேவியைப் பூஜித்து, சகல தேவதைகளையும் தியானித்து, நமஸ்கரித்து விருத்த ராஜதம்பதிகளை மனதினுல் தொழுது இஷ்டதேவதைகளை வணங்கி, தம் பிராணேசர்களின் இணையடிகளை இருதயத்தில் நிலைநிறுத்தி, அவர்கள் சிரசைக் கையாலெடுத்துக்கொண்டு, அகில் சந்தனக் கட்டைகளாலும், சுகந்த திரவியங்களாலும் ஜ்வலித்துச் சுடர் விட்டெரியும் அக்கினி குண்டத்தைப் பிரதக்ஷிணம் செய்து, அவைகளிலுள்ள சிதைகளில் படுத்துத் தங்கள் பதியின் சிரங்களை ஹிருதயத்தில் வைத்து "சிவ சிவா! ஹரி! ஹரி! ஹரி! முகுந்த! கோவிந்த! நாராயணு! வாஸுதேவா!" என்று ஹரி ஹரத் தியானம் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது அக்கினி பகவான் பிரதக்ஷிணமாய் சுழன்று ஜ்வலிக்கலாயினன்.

அச்சமயம் அக்கினிக்கிடும் ஆஹுதியே போன்றும், காட்டுத்தீயில் வாடும் பூங்கொடிகள் போன்றும், சூரிய கிரணத்தில் மறையும் நக்ஷத்திரங்கள் போன்றும் நந்த பத்தினிகள் தமது சரீரத்தை அக்கினிக் கர்ப்பணம் செய்து நற்கதி யடைந்தார்கள். ஜனங்களெல்லோரும் "ஜய ஜய" வென்று ஒலித்து, "இவர்களே உத்தமிகள்! இவர்களே பதிவிரதைகள்! இவர்களே ஸஹகமனம் செய்து நற்கதியடைந்த புண்ணியசாலிகள்?" என்று அவ் அக்கினி குண்டங்களைப்பிரதக்ஷிணம் செய்து நகருக்குத் திரும்பினுர்கள். பாகுராயணன் முதலியவர்களும் அநேகருக்குப் பூரி தக்ஷிணைகள் அளித்துக் கங்கையில் ஸ்நானம் செய்து திரும்பினுர்கள். பாகுராயணன் அரண்மனை வந்து விருத்த அரசனிடம் எல்லாவற்றையும் தெரிவித்து, அவர் உத்தரவுப்படி நந்தர்களுக்கு நற்கதியுண்டாகும் பொருட்டு லக்ஷக்கணக்காகப் பிராமண போஜனங்கள் நடத்தி நித்திய தரித்திரம் ஹதமாகும்படி பிராமணர்களுக்கும் பிறர்க்கும் அநேக திரவியங்களைத் தானம் செய்து, நடத்தவேண்டிய கருமங்களை விமரிசையாக நடத்தினுன்.

---

## பதினோராவது அத்தியாயம்.

## ராக்ஷஸன் மனைவி மக்களை மறைத்து வைத்தல்.

அநந்தரம், அமாத்திய ராக்ஷஸன், "இப்பொழுது பர்வதராஜனுடைய சேனை, நகரைச் சூழ்ந்து காவல் செய்துகொண் டிருக்கிறது. நான் நந்தர்களுக்குப் பரம மித்திரனும், தனக்கு வைரியாயு மிருந்ததினால், சந்திரகுப்தன் என்னை என்ன செய்வானோ! இப்பொழுது இருக்கும் காலபலம், மித்திரர்களையும் சத்துருக்களாகச் செய்யத் தடையில்லை. நவநந்தர்களைக் கும்பிட்ட இதே கைகளால் வேறு எவனையேனும் 'பிரபு' என்று கும்பிடுவேனாகில், என்னுடைய பௌருஷம், ஸாஹஸம், ஸ்வாமி பக்தி, இவைகளெல்லாம் வீணேயாகும். ஆகையால் நந்தர்களுக்குச் சத்துருவான இச் சந்திரகுப்தனை எவ்வித உபாயத்தாலேனும், சங்கரித்து, விண்ணுலகெய்திய பிரபுக்களின் ஆத்மாவுக்கு ஸந்தோஷத்தையும், திருப்தியையும் விளைவிப்பேனே அல்லாது, வீண் காலக்ஷேபம் செய்வேனோ? இதற்குரிய காரியங்களில் நான் பிரவேசிக்குமுன், எனது மனைவி மக்களுக்குச் சத்துருக்களால் உபத்திரவம் ஏற்படாதிருக்கும்படி செய்ய வேண்டிய தவசியம்." என்று தனக்குள் நிச்சயித்தான்.

பிறகு அவன் ஓர் ரஹஸ்யமான விடத்தில் தனக்குப் பிரிய மித்திரனாகிய சந்தனதாஸன் என்ற வர்த்தகனை வரவழைத்து, அவனை நோக்கி, "ஐயா! மித்திர! நந்த வைரியான சந்திரகுப்தனை எவ்வித உபாயத்திலேனும் சங்கரித்து, விருத்தனான ஸர்வார்த்தஸித்திக்கு ஒரு ஸ்வீகார புத்திரனை ஏற்படுத்தி, அச்சிறுவனுக்கு இந்த நந்த ராஜ்யத்தை அளித்து, அவர்களது வம்சம் க்ஷீணிக்காமல் இருக்கச் செய்வதே என்னுடைய கடமையும் தீர்மானமுமாகும். இவைகளை யெல்லாம் நான் இங்கிருந்து செய்தல் சரியன்று. ஆகையால் நான் இப்பொழுது இந் நகரை விட்டு வெளியில் செல்லப்போகிறேன். நான் திரும்பி வருமளவும் எனது பத்தினியையும் புத்திரர்களையும், சத்துருக்களால் உபத்திரவம் ஏற்படாது நீ காப்பாற்றிவர வேண்டும். அவர்கள் உன்னிடமிருப்பது ஒருவருக்குமே தெரியக்கூடாது. இவ் வஸ்துக்களையும், திரவியங்களையும் வைத்துக்கொண்டு அவர்களைக் காப்பாற்றி வா" என்று சொல்லித் தன் வீட்டிலுள்ள எல்லோரையும் சந்தனதாஸனுடன் அனுப்பி விட்டான்.

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

# விஷ கன்னிகை.

---

ராக்ஷஸன், அதன் பிறகுதான் சத்துருவை வெல்லுவதற்குரிய கபட உபாயங்களைப் பலவிதத்திலும் நினைத்துப் பார்த்தான். "விஷ கன்னிகையைக் கொண்டு வேலை செய்வோம். இதனால் காரியம் ஜயமாய் விடும் பக்ஷத்தில் வேறு உபாயங்கள் ஏனோ?" என்று நினைத்து, அவளை வரவழைத்தான்.

இவ் விஷகன்னிகையின் வரலாறு இது:—ஏதாவது ஒரு சமயம், ஸாம, தான, பேத, தண்டம் என்கிற நான்கு உபாயங்களாலும் ஜயிக்க முடியாத அதி விரோதமுள்ள சத்துரு நெருங்கிவிடும் பட்சத்தில், அவனை ஸமாதானம் செய்து கொள்ளும் காணிக்கையாக ராக்ஷஸன் ஒரு சூழ்ச்சி செய்திருந்தான்: சமுத்திரத்திலிருக்கும் விஷ மச்சங்களைக் கர்ப்பத்திலிருக்கும் பருவ முதற் கொண்டே ஆகாரமாகப் பெறும்படி ஊட்டப்பெற்ற ஓர் பெண்குழந்தைக்கு, பாதரஸம் முதலியவைகளை வார்த்து, அதை வளர்ப்பித்தான். ஒரு வயது முதல் அக்குழந்தைக்கு விஷத்தை மேன்மேலும் சிறிது சிறிதாகத் தேகத்தி லேற்றி வந்தான். வயதாக ஆக, அதிக விஷம் சேர்த்துப் பன்னிரண்டு வயதுவரை அக்குழந்தையை வளர்த்து வந்தான். அப்பெண்ணின் தேகத்தில் பட்ட ஈ, எறும்பு, கொசுகுகளும் விஷவேகத்தால் மாளும் என்றால் அதிகம் சொல்வானேன்? அதி சௌந்தரியத்துடன் விளங்கும் அக் கன்னிகைக்கு, சங்கீதம், நாட்டியம், முதலிய வித்தைகளைப் பயிற்றுவித்தான். அவளும் கண்டோர் காமுறும்படி தேஜோமயமாய் விளங்கினாள். 'இவள் தக்க ஸமயத்தில் உபயோகப்படுவாள்' என்று, ராக்ஷஸன் அவளை ஒரு தனிக் கிருஹத்தில் வைத்துப் போஷித்து வந்தான். அவள் யௌவன பருவம் அடைந்தாள். இவளைக் கொண்டேதான் சந்திரகுப்தனை வெல்ல எண்ணினான் ராக்ஷஸன்.

இவ் விஷகன்னிகையை வரவழைத்து, அவளுக்கு விலைமதிக்க முடியாத ஆடையாபரணங்களால் பாதாதி கேசபரியந்தம் அலங்கரித்து, தனக்கு மிக்க நம்பிக்கையுள்ள ஜீவஸித்தி யென்ற பௌத்த ஸந்நியா

ஸியை வரவழைத்து, "ஐய, ஜீவஸித்தியே! இக் கன்னிகை யார் தெரியுமா? முன்பு ஒரு சமயம் சிறைப்பிடிக்கப்பட்ட வல்லபராஜனுடைய ஏகபுத்திரி. இவள் மிகவும் கட்டழகியானது பற்றி, ஜேஷ்ட நந்தனுக்குப் பிரிய பத்தினியாகச் செய்ய வேண்டுமென்ற ஆசையால், குழந்தை முதல், வெகு சீரும் சிறப்புமாக இவளை வளர்த்து வந்தேன். ஈசுவர ஸங்கற்பம் வேறு விதமாய் முடிந்ததால், நவ யௌவனம் வாய்ந்த இத் தருணீமணி, சந்திரகுப்தனுக்காவது பயன்பட வேண்டுமென்பது, எனது அந்தரங்கமான எண்ணம். ஆயினும், 'கேவலம் ஒரு ஸ்திரீ மூலமாகச் சந்திரகுப்தனுடைய தயவை ராக்ஷஸன் அடைந்தான்' என்ற பழிச்சொல் உண்டாவதில் எனக்கு இஷ்டமில்லை. இவள் ராஜயோகயமாக என்னால் வளர்க்கப் பட்டவளானாலும், இதை நீ வெளிக்காட்டலாகாது. உனது சிஷ்யை என்று சொல்லி, நீயாகவே சந்திரகுப்தனுக்கு ஒப்புவிப்பதாக ஒப்புவித்து, இந்தக் கோமளாங்கியுடன் அவனை இன்புற்று வாழச் செய்வாயாகில், என் மனோபீஷ்டம் நிறைவேறிவிடத் தடையில்லை. "நான் ஸந்யாஸி யாயிற்றே! எனக்கு இவ் வியாபாரம் கண்ணியதைக் குறைவு. ஆனதுபற்றி நான் மாட்டேன்" என்று நீ மறுக்கக் கூடாது. வேறு யாருடனாவது இவளை அனுப்பினால், அவர்கள் இவளுடைய சௌந்தர்யத்தைக் கண்டு மோஹித்து அவளைத் தாமே அபகரிக்க எண்ணுவார்கள். பின்னும், இவ்விதம் சாதுர்யமாய்க் காரியத்தை நடத்தி, உடன்படுத்தக்கூடிய சாமர்த்தியம் உனக்கேயன்றி வேறொருவருக்கும் கிடையாது. எப்படியாவது இந் நாரீமணியின் தேக ஸம்பந்தம் சற்றாயினும் உண்டானால், ஸஹிக்கமுடியாதபடி என் இருதயத்தில் தவிப்பை யுண்டாக்கிக் கொண்டிருக்கும், நவநந்த நாசத்தினால் எழும் துக்கம், தணிந்து விடும். நீ அதுவரை இவளுக்கு ஆகாரமளித்துக் காப்பாற்றித் தக்க ஸமயத்தில் சந்திரகுப்தனிடம் ஒப்புவித்து விடு" என்று ராக்ஷஸன் சொன்னான்.

அதற்கு க்ஷபணகன், "ஐய, ராக்ஷஸ! இப்பேர்ப்பட்ட சமயத்தில் நான் உன் வார்த்தையை மறுப்பவன் அல்லன். இந்த உபகாரம் செய்யாவிடில் நான் உனது மித்திரன் ஆவேனோ? இதென்ன பிரமாதமான காரியம்! என் புத்தி சக்தி சாமர்த்தியங்களை யெல்லாம் செலவழித்து, எவ்விதத்திலேனும் சந்திரகுப்தனை வசப்படுத்தி, இவளுடன் பிரியமாய் நடந்து சுகிக்குமாறு செய்து விடுகிறேன். இது பற்றி ஸந்தேகியாதே.

ஆனால், ஒரு ஸமயம், எல்லாம் வல்ல சாணக்யன், "இவள் ராக்ஷஸனால் வளர்க்கப்பட்டவளாகையால் நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது" என்று சொல்லும் வார்த்தையை யனுசரித்துச் சந்திரகுப்தன் இவளை அங்கீ கரிக்காவிடில், உனது சங்கற்பம் வீணாய் விடுமன்றோ? அப்பொழு தேனும் சந்திரகுப்தனைச் சரணமடையப் போகிறாயோ, அல்லது இன் னம் வேறு யோசனைகளும் பிரயத்தினங்களும் செய்யப் போகிறாயோ?" என்று கேட்டான்.

அதற்கு ராக்ஷஸன் 'க்ஷபணக! உன்னிடம் மறைத்துப் பேசு வேனோ? இவ்விதம் உன்னைக்கொண்டு செய்யப்பட்ட ஸாம தானங்களுக் குச் சந்திரகுப்தன் வசப்படாவிடில் பேத உபாயத்தைக் கைக்கொள் வேன். சாணக்யன் விழிப்பாளியானதாலும், விரக்தனாயிருப்பதாலும், சாணக்ய சந்திரகுப்தர்களுக்குப் பேதமுண்டாக்க முடியாமற்போனால், தண்டோபாயத்தை அனுஸரிக்க வேண்டியதேயாகும். நந்தர்களின் பொக்கிஷ ரகஸியமெல்லாம் நான் அறிந்தவன். ஒருபக்கத்திலிருக்கும் புதைபொருளை எடுத்துச் செலவழிப்பேனாகில், பர்வதேசனைப்போல் எவ் வளவு அரசர்கள் வேண்டுமானாலும் எனக்கு ஸ்வாதீனப்படுவார்கள். இந்தப் பர்வதேசனும் எனக்கு முன்பு மித்திரனாகையால், அவனிடம் சென்றால், நான் முன்பு செய்திருக்கும் உபகாரத்தை நினைத்துத் தன் பங்கிற்குக் கிடைக்கும் ராஜ்யத்திற்கு என்னையே அதிபதியாக்கிவிடத் தடையில்லை. பாதி ராஜ்யமும் என் வசத்திலிருந்து, பர்வதேசனைப் போன்ற அரசர்களும் எனக்குச் சகாயமாக இருக்கும்போது, மீதிப் பாதிராஜ்யத்திலிருக்கும் சந்திரகுப்தனுக்குப் பட்டம் நிலைக்குமா?" இவைகளெல்லாம் உன் மனதிலேயே இருக்கட்டும்." உன்னால் செய்யப் படும் மத்யஸ்தம் பலிக்காவிடில் பிறகு இந்த ஆலோசனை" என்று சொல்லி அவனிடம் அக் கன்னிகையை ஒப்புவித்து அனுப்பினான்.

ஜீவஸித்தி ராக்ஷஸன் சொல்லிய பிரகாரம் அவளை அழைத்து வரும்போது, தனக்குள், "ராக்ஷஸன் என்னிடம் சொல்லிவந்த வார்த் தைகளில், "எவ்விதத்திலேனும் இவ்வழகியின் தேக ஸம்பந்தம் கொஞ்ச மாகிலும் சந்திரகுப்தனுக்கு ஏற்படுமாகில் என் மனோபீஷ்டம் நிறை வேறிவிடும்" என்று எனக்கு ஒளித்துச் சொன்னதால், இக்கன்னிகை யிடம் ஏதோ விசேஷம் இருக்கவேண்டும். ஸாமமும் தானமும் பலியா

விட்டால், பிறகு பேத, தண்டங்கள் என்ற உபாயங்களால் சந்திரகுப்தனை வெல்லுவதாகவும் சொல்கிறான். நமது சாணக்யர் இருக்கும்வரை இவனைப்போல் நூறு ராக்ஷஸர்கள் இருந்தாலும் ஒன்றும் நடவாது. ஆகிலும், இவளால் சந்திரகுப்தனுக்கு நேரிடக்கூடும் ஆபத்து இன்ன விதமென்று அறிய முடியவில்லை. இவளுடைய ரூப சௌந்தர்யங்களைக் கண்டால், முற்றும் உணர்ந்து பற்றை விலக்கிய மெய்ஞ்ஞானிகளும் காம பரவசமடைவார்கள். இவளிடமிருக்கும் குணதோஷம் இன்னதென்று எவ்விதத்திலேனும் அறிந்துகொண்டபின்பு, மற்றவைகளை ஆலோசிக்க வேண்டும்" என்று தீர்மானித்து, அப் பெண்மணியுடன் தன திருப்பிடம் சேர்ந்து, அவளை ஓரிட முட்காரச்செய்து, சிறிது நேரங்கழித்து 'சாப்பிடு' என்று கூறி அன்னமிட்டான். அவளும் சாப்பிட்டு அதிகமாகவிருக்கும் சாதத்தை வெளியில் எறிந்துவிட்டுக் கைகழுவிக்கொண்டு வந்தாள். அப்போது இவள் எறிந்த எச்சில் அன்னத்தை ஒரு பூனை தின்றது. உடனே அது கீழே விழுந்து உயிரிழந்தது. அதுகண்டு ஜீவஸித்தி, "ஓஹோ! இவள் விஷகன்னிகைபோலும்! ராக்ஷஸன் சந்திரகுப்தனை நாசம் செய்யும் நிமித்தம் என்னிட மொருவிதமாகச் சொல்லி இவளை அனுப்பி இருக்கிறான். நல்லதிருக்கட்டும். இவனை விட்டேனா? இந்த அபிப்பிராயங்கள் எல்லாவற்றையும் நன்குவிளங்க நமது சாணக்யருக்குச் சாடையாய்த் தெரியப்படுத்தவேண்டும்" என்று நிச்சயித்து அதற்கேற்ற சமயத்தை எதிர்பார்த்துக் கொண் டிருந்தான்.

---

## பதின்மூன்றுவது அத்தியாயம்.

## ராக்ஷஸனது பிற சூழ்ச்சிகளும் மறைவும்.

---

மறுபடியும் ராக்ஷஸன், தனக்குள், "நாம் அனுப்பிய கன்னிகைக்கும் சந்திரகுப்தனுக்கும் ஒருவேளை எவ்விதத்தாலேனும் சம்பந்தம் ஏற்படாது போய்விட்டாலும் போகலாம். அல்லது அது நிறைவேறத் தாமதமானாலும் ஆகலாம். ஆதலால் இன்னம் சில உபாயங்களைச்செய்து வைத்துக்கொள்ளலே நலம்" என்று தீர்மானித்து, நந்தர்களின் பட்டத்து யானையாகிய "கந்தமாதனம்" என்ற ஓர் யானையின் மாவுத்தனை, ஓர் தனி இடத்திற்கு வரவழைத்து, "அடா பற்பரக! நம்முடைய அர

சர்களுக்கு வைரியான சந்திரகுப்தன், இப்பொழுது ஜயமடைந்திருப்பதால், அவன் வழக்கப்படி பட்டாபிஷேகம் செய்யப்பட்ட அரசனைப்போல், பட்டத்து யானையின்மீது உட்கார்ந்து நகருக்குள் பவனிவருவான். அவன் கோட்டைவாயிலுக்கருகில் வரும்போது, ஜனச் சந்தடியிராது. உனக்குத் தக்கசமயம் கிடைக்கும். இதோ இந்த ஸ்வர்ண தண்டத்தில் பதித்திருக்கும், "குப்தி" என்ற சஸ்திரத்தினால், உனக்குப் பின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் சந்திரகுப்தனைக் குத்திக் கொன்றுவிட்டு, ஜனச் சந்தடியில் தப்பி ஓடிவிடு" என்று சொல்லி அவனுக்கு அளவற்ற பொருள் அளித்து அனுப்பினான்.

பிறகு, தாருவர்மன் என்ற சிற்பியை வரவழைத்து, "எஜமான விசுவாசமுள்ள நீ செய்துதீரவேண்டிய காரியம் ஒன்றுளது: அதாவது, நமது அரசர்கட்கு வைரியான சந்திரகுப்தன் அரமனைவாயிலாகப் பவனி வரும்போது, நீ 'இவ்வித' ஏற்பாடுகளை முந்தியே அங்கு செய்து, மேற்பக்கத்தை அலங்கரித்து வைத்து, தக்க சமயத்தில் சந்திரகுப்தனைக் கொன்றுவிடு; உனக்கு வேண்டிய திரவியங்களை எடுத்துக்கொள்" என்று அவனுக்கும் அளவற்ற திரவியங்களைக் கொடுத்தனுப்பினான்.

பிறகு, அவன் மாளிகை அதிகாரியான பவனபாலகனை வரவழைத்து, "ஆப்த நண்ப! இன்னம் ஐந்தாறு தினங்களில் சந்திரகுப்தன் அரசனாக நகருக்குள் வருவான். அவனுக்கு ஏற்ற இடம் தயாரிக்க வேண்டியவன் நீயன்றோ? அவன் தந்தை இருந்த இடம் இப்பொழுது உக்ராணமாய் உபயோகப்பட்டிருப்பதால், மிகப் பழுதுற்றிருப்பது பற்றி அவனுக்கு அது வெறுப்பாகவிருக்கும். நந்தர்களின் உறைவிடமோ பதியை யிழந்த விசனத்தால் அறுபது நாழிகையும் கதறிக்கொண்டிருக்கும் போகஸ்திரீகளால் நிறைந்துளது. ஆதலின் சந்திரகுப்தன் அதை எட்டிப் பார்க்கமாட்டான். விருத்த ராஜதம்பதிகள் புத்திரசோகத்தால் தவித்துக்கொண் டிருப்பதால், அவர்களருகில் அவன் இருக்கவும், சம்மதியான். "வாணீவிலாஸம்" என்ற பகுதியோ, வித்வான்கள் சேருமிடம். ஆகையால் அதையும் அவன் உபயோகிக்கமுடியாது. "ஸரஸ்வதீ பண்டார"த்தில் புத்தக அலமாரிகள் நிரம்பி இருப்பதால் கால் வைக்கவும் இடமில்லை. ஆயினும், சந்திரகுப்தன் பிரபுவாகையால் பிறர் ஜாகையி லிறங்கமாட்டான். ஆகையினல் கொலுமண்டபத்திற்குப்

பின்னால் நந்தர்களின் விநோதார்த்தத்திற்காகக் கட்டப்பட்டிருக்கும் "குமாரபவன"த்தை அலங்கரித்து, அதற்கு ஆறுவது கட்டில் அவனுக்குச் சயனக்கிருகம் ஜோடித்து, அங்கு சந்திரகுப்தனைச் சங்கரிக்கும்படி ஆட்களை நியமி. அவன் சயனக்கிருகம் சென்ற உடனே ராஜபவனத்திலிருக்கும் சுரங்கத்தின் வழியாகத் தப்பித்து ஓடிவிடு. நானும் இப்பொழுது அவ் வழியாகவே இந் நகரை விட்டுச் செல்லப்போகிறேன். பொக்கிஷாதிகாரியிடம் இந்த அடையாளத்தைக் காண்பித்து வேண்டுமான தனத்தைப் பெற்றுக்கொள்" என்று சொல்லி, சயனக் கிருகத்தில் சந்திரகுப்தனைக் கொல்லும் விதத்தையும் அவனுக்கு நன்கு எடுத்துரைத்து அனுப்பினான்.

பிறகு, தன்னிடம் கணக்கனாயுள்ள சகடதாசனை அழைத்து, அவனிடம் சொல்ல வேண்டியவற்றைச் சொன்னான். பின்னர் மாறு வேஷத்துடன் இருந்தே துப்பறிவோர்களை அழைத்து, அவர்கள் நடத்தவேண்டிய விஷயத்தையும் எடுத்துரைத்தான். அநந்தரம் தன் பரிசாரர்களுக்கு "இன்னின்ன பொருள்களுடன் இன்னின்ன இடங்களில் வந்து காத்திருக்கவேண்டியது" என்று நியமித்து எல்லோரையும் அனுப்பினான். பிறகு உயிரிழந்த உடல்போலும், பரிசுத்தமற்ற இருதயம் போலும், நேத்திர ஒளியற்ற உயிர்போலும், நந்தர்களை இழந்த சோகத்தினால் நினைவற்றுத் தடுமாற்றத்தையும், துக்கத்தையும் அடைந்துள்ள ராக்ஷஸன், ராஜபவனத்திலுள்ள சுரங்க மார்க்கமாக வெளிப்பட்டு, அந் நகரைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தான்.

---

## பதினைன்காவது அத்தியாயம்.

## சாணக்யன் ராக்ஷஸனைத் தேட ஆள்விடல்.

---

சாணக்யன் சபையிலுட்கார்ந்துகொண்டிருந்த சந்திரகுப்தனைப் பார்த்து, "ஐய அரசனே! பாடலீபுரத்திலுள்ள அதிகாரிகள் எல்லோரும் உன்னைக் கண்டுகொண்டு மரியாதை பெற்றுத் தமது அதிகாரங்களில் சரிவர நடந்துகொள்வதாய் உன்னிடம் உத்திரவுபெற்றுச் சென்றார்கள். இன்னம் சிலர் தங்களைச் சேர்ந்தவர்களிடம் காணிக்கை

களை யனுப்பிச் 'சிதறி யிருக்கும் சேனைகளை ஒன்று சேர்த்துக்கொண்டு நாங்கள் பின்பு வருகிறோம்' என்று தெரிவித்துக் கொண்டதனால் அவர்களும் நேரில் வந்ததற்குச் சமானமாயிற்று. காரியவசத்தால் அவர்கள் தாமதிப்பதுபற்றி நாம் வித்தியாசமாக எண்ண இடமில்லை. அது இருக்கட்டும். இவர்கள் எல்லோர்களுக்கும் முக்கியனாய் ராஜ தந்திரத்தை நிர்வகித்துக்கொண்டுவரும் அமாத்ய ராக்ஷஸனை மட்டும் இது வரையில் உன்னைக் கண்டுகொள்ளாததுடன், தனனைச் சேர்ந்தவரையேனும் யனுப்பவவது, தான் வருவதற்குத் தாமதப்படும் காரணத்தைச் சொல்லி யனுப்பவாவது இல்லையே! இதற்கென்ன காரணம் என்று இது வரை தெரியவில்லை" என்று சொல்லிவிட்டு "அவன் எங்கு இருக்கிறான்? என்ன செய்கிறான்? என்பதை விசாரித்தறிந்து வாருங்கள்" என வேலையாட்களுக்குக் கட்டளையிட்டான்.

உடனே அவர்கள் "உத்தரவு" என்று சென்று, ராக்ஷஸன் வீட்டில் அவனைத்தேடி, அங்கு அவன் பெண்பிள்ளைகள் ஒருவருமே இல்லாமல் வீடு காலியா யிருப்பது கண்டு, அவனது 'ராயஸக்கார'னாகிய சகடதாஸனை விசாரித்தார்கள். விசாரிக்கவும், அவன், "ஐயன்மீர்! ராக்ஷஸரை, அவர் யுத்தத்திற்குச் சென்ற பின் நான் காணவே இல்லை. எனது வீட்டு வேலைகளின் தொந்தரவினால் சாவகாசமின்றி இன்றுதான் அவரைக் காண எண்ணி இங்கு வந்தேன். அவர் தரிசனம் கிடைக்கவில்லை. வீட்டிலுள்ள ஜனங்களையும் காணேன். இதைக்குறித்து நான் ஆலோசித்துக்கொண் டிருக்கும்போதே நீங்களும் அவரைப்பற்றி என்னைக் கேட்டீர்கள். உங்களுக்கு ஏதாவது தெரியவந்தால் எனக்கும் சொல்லுங்கள்" என்றான்.

அதுகேட்ட அரசனது ஆட்கள் அங்கிருந்து சென்று, கோட்டைவாயில்களை காக்கும் காவலாளிகளை விசாரிக்க, அவர்கள், "நந்தர்களுக்கு ஆபத்து நேர்ந்ததினத்தில், சேனைகள் பிரமித்துத் தத்தளிக்கும் சமயத்தில் இதே வழியாக அமாத்தியர் உள்ளே சென்றார். உள்ளே சென்ற அவர் திரும்பி வரவில்லை." என்றனர். உடனே அவ்வாட்கள் தாம் எங்கெங்கு தேடக்கூடுமோ, அங்கங்கெல்லாம் தேடினர். ஆயினும் அவர்கள் அமாத்ய ராக்ஷஸனைக் காணாது சாணக்யனிடம் வந்து, "மகாஸ்வாமி! உத்தரவு பிரகாரம் அமாத்யரை அவர் வீட்டிலும் இங்

நகர் முழுதும் தேடிப்பார்த்தோம். அவர் தென்படவில்லை. அவர் வீட்டிலுள்ள பெண்டு பிள்ளைகளும் அங்கில்லை. கோட்டை வாயிலி லிருக்கும் காவலர்களை விசாரித்தோம். 'யுத்தம் முடிந்தபின் நகருக்குள் சென்றவர் இதுவரையில் வெளியே வரவே இல்லை.' என்றார்கள். அமாத்தியரின் வீட்டுக் கணக்கனான சகடதாஸனையும் கேட்டோம். அவன் 'ஐயன்மீர்! நான் இன்றுதான் இங்குவந்தேன். அமாத்தியரை அவர் யுத்தத்திற்குச் செல்லும்போது கண்டேனே யல்லாது இதுவரை காணவேயில்லை' என்றான்" என்றார்கள்.

இது கேட்டு, சாணக்யன், "ஏவலீர்! அமாத்திய ராக்ஷஸன் நந்தர்களுக்கு ஆப்தன். ஆதலின், சந்திரகுப்தனால் தனக்குக் கெடுதல் வருமோ என்றஞ்சி, இந்நகரில் தனக்கு அந்தரங்கமானவர்களிடம் தன் மனைவி மக்களை மறைத்து வைத்துத் தானும் ஏதோ ஒரு கள்ளவழியா லேயே வெளிச்சென்றிருக்கவேண்டும். சந்திரகுப்தனுக்கு நந்தர்கள்மீது பகைபல்லாது இந்த அமாத்ய ராக்ஷஸன்மீது பகைகொள்ள நியாய முண்டோ? அந்தப் பாம துஷ்டர்கள் மௌரியர்களை அநியாயமாய்க் கொன்றது, மகா மேதாவியும் புத்திமானுமான ராக்ஷஸனுக்குச் சற்றும் சம்மதமற்ற விஷயம். இது சகல ஜனங்களுக்கும் தெரியும். எல்லோ ரும் வந்ததுபோல், தானும் அரசனைத் தரிசித்து சம்மானம்பெற்று முன் னிலும் அதிக கௌரவத்துடனும் அதிகாரத்துடனும் இருக்கவேண்டி யிருக்க, தீரனாகிய இவன், இவ்விதம் பயமடைந்து ஒளிவது இழுக் கன்றோ? ராக்ஷஸனில்லா இந்த ஆஸ்தானம், நக்ஷத்திரங்கள் இருந்தும் சந்திரனற்ற ஆகாசம்போலும், சூரசேனாபதியற்ற சைன்யம்போலும், கம்பீரமற்ற கவிதைபோலும், ஔதாரியமற்ற ஐசுவரியம்போலும், புஜ பராக்ரமமற்ற அரசனுடைய அரசாட்சிபோலும், நீதிக்குணமற்ற மந்திரி போலும், ஆசாரமற்ற பிராமணன்போலும், பெருந்தன்மை யற்ற பிரபு வைப்போலும், வித்வான்களற்ற ராஜ ஸபைபோலும், வேதாத்தியயன மற்ற வேதியன் முகம்போலும், அரசனற்ற நாடுபோலும், ஹரிகதை யற்ற காவியம்போலும், மகப்பேறற்ற மனைவிலைப்போலும், கலசமற்ற உப்பரிகைபோலும், விசேஷமற்ற வித்யாப்பியாசம்போலும், விநயமற்ற வித்வான்போலும், அச்சம் நாணம் முதலியன இல்லாத வடிவழகியின் சௌந்தரியம்போலும், ஆலயமற்ற ஊர்போலுமே உள்ளது. உள்ள படியே ராக்ஷஸனின்றி நம் சந்திரகுப்தனுடைய சபை சோபிக்கவில்லை.

ஆகையால் ஊரெங்கும் தேடி அமாத்யனைக் கண்டு நம்பிக்கை வார்த்தைகளைச் சொல்லி அவனை அழைத்துவாருங்கள். ராக்ஷஸன் சொற்படியே சந்திரகுப்தன் நடந்து அவன் விரும்பியவைகளையே நடத்துவான். இதில் சிறிதும் தடையில்லை” என்று கூறி அவர்களை ராக்ஷஸனைத் தேடிவருமாறு அனுப்பினான்.

---

## பதினைந்தாவது அத்தியாயம்.

## சாணக்யனது யோசனை.

ஏவலாட்கள் சென்றதும், சாணக்யன், “நந்தர்களுக்குப் பரம ஆப்தனாகிய ராக்ஷஸன், இப்பொழுது சந்திரகுப்தனிடமுள்ள பயத்தினாலோ, அல்லது அவனிடம் தான் கொண்டுள்ள வைரத்தைச் சாதிப்பதற்கோ, நகரை விட்டுச் சென்றிருக்க வேண்டும். பயத்தினால் ஓடியிருப்பானாகில், போட்டது போட்டபடி யன்றோ போட்டுவிட்டு ஓட வேண்டும். அங்ஙனம் செய்யாமல் அவன் தனது பெண்டு பிள்ளைகளை மறைத்து வைத்திருப்பதை யோசித்தால், ஏதோ பகை பாராட்டியும், தீர்க்காலோசனையுடனும், தனது எண்ணத்தை முடித்துக் கொள்ளவே சென்றிருப்பான் எனத் தோன்றுகிறது. இவ்விடத்தில் முக்கிய அதிகாரியாக விருந்து அரசாட்சியை அவனே நடத்தி வந்திருக்கிறானாகலால், பேருக்கு அரசர்களாக இருந்த நந்தர்களினும், இவனிடமே சகல பிரஜைகளுக்கும் கௌரவமும் பயமும் இன்னும் இருந்து கொண்டிருக்கின்றன. பழிக்குப் பழிவாங்க அவன் இங்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறானோ தெரியவில்லை. அவன் பகைமேற் கொள்ளாது, “பயந்திருக்கிறேன்” என்று சொல்லியனுப்புவானாகில், அவனுக்கு முன்னினும் அதிக அதிகாரம் அளிக்கலாம். ஆனால் அவன் இவ்வளவு வைரத்துட னிருக்கும் போது, அவனைக் கட்டாயப்படுத்தி அழைப்பதும் பிசகு. ஜ்வரமுள்ளவனுக்கு அபத்தியத்தினால் உள்ளிருக்கும் தோஷத்தை நாக்கானது காட்டுவதுபோல, ராக்ஷஸனுடைய கொடிய எண்ணமும் அவனது ஏற்பாடுகளும் அவன் மறைந்திருப்பதாலேயே தெரிகிறது. உண்மை கொஞ்ச நாளிலே வெளிப்படாமல் இராது. அதற்குமேல் தக்கபடி நடத்திக் காரியத்தை முடித்துக் கொள்வோம். நிற்க.

'நந்தர்களைச் சங்கரித்துச் சந்திரகுப்தனுக்கு முடிசூட்டுகிறேன்' என்று நான் செய்த சபதப்படி நந்தர்களை வேருடன் களைந்துவிட்டத னாலேயே "சந்திரகுப்தனே இந் நந்த ராஜ்யத்திற்கு அதிபதியாய் விட்டான்" என்று அறிந்து எனது சிகையை அன்றே கட்டிவிட்டேன். சந்திரகுப்தனுக்கு நந்த ராஜ்யாபிஷேகம் செய்வித்து "ஸார்வபௌமன்" என்று மண்டலாதிபதிகளைக் கொண்டு கப்பம் கட்டும்படி செய்யவேண்டு மானால், 'முந்தி நீர் சொல்லியிருந்த பிரகாரம் பாதி ராஜ்யத்தை எனக் களித்து விட்டு, மீதிப் பாதியைச் சந்திரகுப்தனுக்குத் தர வேண்டும்' என்று பர்வதேசன் சொல்வானே! எவ்வித உபாயத்தாலேனும் இப் பர்வதேசனு லுண்டாகும் பெருத்த விக்கினத்தை நிவர்த்தித்துக் கொண்ட பிறகுதான், சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டி யிருக்கிறது. தர்ம ஸ்தாபனத்தின் பொருட்டு நான் தண்ட நீதியை அப்பியசித்து வந்திருப்பது ஸத்யமானல், ஸமீபத்தில் இதற்கோர் வழி ஏற்படாமல் இராது." என்று யோசித்துக்கொண்டே அன்றைப் பொழுதைப் போக்கினன் சாணக்யன்.

---

## பதினறுவது அத்தியாயம்.

## சந்திரகுப்தனது திருவோலக்கம்.

---

மறுநாள் சந்திரகுப்தனுக்கு ஞாதி சூதகம் நிவர்த்தியாய் சுத்த ஸ்நானம் செய்ததும், சாணக்யன் நந்தர்களின் பொக்கிஷத்திலிருந்து, திவ்ய வஸ்திராபரணங்களையும் முத்து ஹாரங்களையும் வரவழைத்துச் சந்திரகுப்தனை அலங்கரித்துப் புஷ்பம் சந்தனம் தாம்பூல மிவைகளை யணியச்செய்து, ராஜசபை கூட்டி ஸ்வர்ணபீடத்தி லுட்காரச்செய்து, அருகிலிருந்த வேலையாட்களை நோக்கி, "பத்ரபடன் முதலிய சேனைபதிகள் தங்கள் சேனைகளுடன் வந்தனம் செய்யவாகிறோம்" என்று சொல்லி யனுப்பிய எண்ணம் இது வரை வரவில்லை. சேனைகளை ஒன்று சேர்த் தாயிற்றோ, இல்லையோ அதுவும் தெரியவில்லை. இப்பொழுது சித்தமா யிருக்கும் ஸைன்யங்களுடன் புன்வர்களவர்களே வந்து அரசனை வந்தித் துச் செல்லட்டும்" என்று ஆக்ஞாபித்தான்.

உடனே அத் தூதர்கள் ஓட்டமாக ஓடி, சேனாபதிகளைக் கண்டு "புறப்படுங்கள். புறப்படுங்கள். அரசர் சபையிலிருக்கிறார். உத்தரவாயிருக்கிறது. சீக்கிரம் புறப்படுங்கள்." என்று மொழிந்தனர். மொழியவும், அவ் வதிகாரிகளும் மற்றுமுள்ள சிற்றரசர்களும் ராஜசபைவந்து தமது சேனைகளுடன் வரிசை வரிசையாக நின்று கைகளைக் கூப்பிக் கும்பிடும்போது, வழக்கப்படி ஸ்துதி பாடகர்கள் அவரவர்களின் பெயரை அரசனுக்குச் சொல்ல வாரம்பித்தார்கள்:

"ராஜாதிராஜ! வந்தனம் செய்யும் இவன் இவ்வளவு லக்ஷம் அசுவ சேனைக்கு அதிகாரி. மகாப்பிரபு! இவன் இவ்வளவு லக்ஷம் யானைப் படைகளுக்கு எஜமானன். இவன் இவ்வளவு லக்ஷம் வில்லாளிகட்குத் தலைவன். இவன் இவ்வளவு லக்ஷம் குந்ததாரிகளுக்கு நாயகன். இவன் இவ்வளவு லக்ஷம் மஹா ரதர்களுக்கு நாதன். இவன் இவ்வளவு லக்ஷம் கதாதாரிகளுக்கு அதிகாரி. இவன் இவ்வளவு ஆயிரம் பீரங்கிக்காரர்களுக்குத் தலைவன். இவன் இவ்வளவு பதாதிகளுக்கு எஜமானன். இவன் இவ்வளவு ஈட்டி வீரர்களுக்கு இறைவன். நமஸ்கரிக்கும் இவர் பங்காள தேசாதிபதி. இவர் கலிங்க மன்னர். இவர் ஒட்ர தேசாதிபதி. இவர் மச்ச வேந்தர். இவர் அவந்தீ ராஜர். இவர் கோசல மன்னர். இவர் ஸௌராஷ்டிர பூபதி. இவர்கள் தக்ஷிணதேச பாலகர்கள். இவர்கள் கீழ்த்திசை மன்னர்கள். இவர் பல்லவர் கோமான்" என்று அவரவர்களுக்கு உரிய விருதுகளையும் சேனைகளின் கணக்கையும் எடுத்துக் கூறி, மீண்டும் சந்திரகுப்தனை நோக்கி "மகா ஸ்வாமீ! நமஸ்கரிக்கின்றார்கள். காணிக்கைகளை ஒப்புவிக்கிறார்கள். ராஜாதி ராஜ, ராஜ கம்பீர, ராஜ மார்த்தாண்ட சந்திர குப்த மஹாராஜருக்கு பராக்" என்று துதி கூறினர்.

அப்பொழுது சந்திரகுப்தன் எல்லோரையும் அவரவருடைய அந்தஸ்துக்கேற்ற விடங்களில் உட்காரச் செய்து, அவர்கள் ஒப்புவித்த காணிக்கைகளை ஸ்வீகரித்துப் பொக்கிஷத்திலிருந்து உயர்ந்த வஸ்திராபரணங்களை வரவழைத்து, அவர்களுக்கு ஈந்து, மரியாதை செய்து, கந்த மாலிகையுடன் தாம்பூலம் அளித்து, "அரசர்களே! நமது பிதாமகர் ஆதிபத்தியத்தில் உங்களுக்கிருந்த தேசாதிபத்தியத்தை இனியும் அவ்விதமே ஆண்டு வந்து, தக்க சமயங்களில், நமக்கு வழக்கப் பிரகா

ரம் ஸகாயம் செய்தும், கணக்குப்படி பகுதிகளையும் கப்பங்களையும் உரிய காலங்களில் சேர்ப்பித்தும், சௌக்கியமாயிருந்து வரவேண்டியது" என்று கட்டளையிட்டான்.

பிறகு அவன் அதிகாரிகளை நோக்கி, "பரம்பரையாக நமது அரசாட்சியில் உத்யோகம் வகித்துவரும் அதிகாரிகளே! புத்தியிலும் நீதியில் தேவகுருவிற்கு நிகரானவரும் நமக்கு ஆப்த பந்துவும் எஜமானருமாகிய சாணக்யர், தேச மரியாதைகளின் ஸ்தாபனத்தின் பொருட்டு, நம்மிடம் மந்திரி பதத்திலிருக்க அனுக்ரஹித்துப் பிரதான சஸ்திரத்தை ஸ்வீகரித்திருக்கிறார். அவரிட்ட கட்டளையை அரசனாகிய நானும் சிரசால் வகித்து நடக்கக் காத்திருக்கிறேன். ஆகையால் எச்சமயத்தில் அவர் எவ்விதமான உத்தரவிட்டாலும், உடனே அதை அவ்விதமே செய்து முடித்து நமக்குத் தெரியப்படுத்த வேண்டியது" என்று ஆக்ஞாபித்தனன்.

அவர்களெல்லோரும் "மஹாப் பிரஸாதம்" என்று கும்பிட்டு, உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். அவர்கள் சைன்யங்களும் மஹா சமுத்திரம்போல் பின் சென்றன. இதுகண்டு பர்வதேசனது மந்திரி சேனாபதி முதலிய ஜனங்கள், "ஆகா! என்ன ஆச்சரியம்! இவ்வளவு பலத்தோடு கூடிய நந்தர்கள் ஒரு நிமிஷத்தில் ஹதமடைந்தது தெய்வ யத்தினமன்றி மனிதச் செயலில்லை யானாலும், இச் சாணக்கியரது கூரிய புத்தியே இதற்குக் காரணமாகும். அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணன் ஸஹாயம் செய்ததும் பெரிதன்று. சந்திரகுப்தன் விஷயமாக சாணக்கியர் செய்யும் நன்மையே நன்மை. அவர் செய்த ஸாஹஸமே ஸாஹஸம். அம்மம்மா! இதெல்லாம் உள்ளபடியே சாணக்ய ஸாஹஸ காரியமே யல்லாது யுத்தத்தின் விளைவன்று. அவரது முயற்சியால் அரசனான சந்திரகுப்தன் வணக்கமும் பக்தியுமாய் நடந்துகொள்வதும் பெரிதல்ல.. எவ்வளவு சேனைகள்! எவ்வளவு வீரர்கள்! எவ்வளவு ரதிகர்கள்! எவ்வளவு சிற்றரசர்கள்! எங்கு பார்த்தாலும் சேனை வெள்ளமாகவே இருக்கிறதே! இவ்வளவையும் யுத்தம் செய்து ஜயிப்பதென்றால் முடியுமோ? ஆச்சரியம்! சந்திரகுப்தனது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்" என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

## பதினேழாவது அத்தியாயம்.

## சாணக்யன் பர்வதேய சேனைகளை அனுப்பிவிடல்.

சேனைகள் யாவும் நகரத்தின் கிழக்குத் தெற்கு பாகங்களில் இரு[illegible]கின. அப்பொழுது சாணக்யன் சேகரனை யழைத்து, "ஐய, சேனாபதியே! நாம் சொல்லியபடியே சேனைகளை ஒன்றாகூட்டி, ஸாஹஸம் செய்து நந்த ஸம்ஹாரமும் செய்து தந்தாய். பர்வதராஜனுக்கு எப்படி ஆப்தனாயிருக்கிறாயோ, அப்படியே நீ நமக்கும் ஆப்தனாக விருக்கிறாய். சத்துரு நிக்ரஹமானபின் மறுபடியும் யுத்தத்திற்கு இடமில்லை. பிரஜைகளெல்லாம் வணங்கி விட்டார்கள். இரு பக்கத்து ஸேனைகளும் அபரிமிதமாயிருப்பதால் அவை ஒரே இடத்தில் தங்கியிருக்குமாயின் பிரஜைகளுக்கு க்ஷாமமும் வியாதியும் சிரமமு முண்டாய் விடும். அதனால் அரசனுக்கும் கெடுதல். ஆகையால் பர்வதேயர்க்குக் கீழ் அடங்கிய படைகளில் உங்க ளெல்லோர்களுடைய சேனைகளிலும், இப்போதைக்கு இன்றியமையாத சில சைனியங்களை மட்டும் நிறுத்திக்கொண்டு மீந்த சேனைகளைத் தந்தம் தேசங்களுக்குச் செல்லும்படி பர்வதேசரிடம் சொல்லி ஏற்பாடுசெய். நந்த ராஜ்யத்திற் பாதியைப் பர்வதேசனுக்கு நாம் கொடுக்கும்போது, அதற்கேற்றபடி சைனியங்களையும் வகுத்துக் கொடுக்க வேண்டியிருக்கிறது" என்று சொல்லி விலைமதிக்க முடியாத ஆபரணங்கள் பீதாம்பரங்கள் இவைகளை வரவழைத்துச் சேகரனுக்கும் அவன் பக்கத்திய அரசர்களுக்கும் அளித்து மரியாதை செய்து, அவர்களுக்குச் சந்தனம் புஷ்பஹாரம் கற்பூர தாம்பூலம் இவைகள் வழங்கிச் சமயோசித மொழிகளால் அவர்கள் எல்லோரையும் சந்தோஷப்படுத்தி அனுப்பினான்.

சேகரன் தனக்குக்கொடுத்த வஸ்திராபரணங்களைப் பர்வதேசன் முன் வைத்து, சாணக்யன் உரைத்த சமாசாரங்களையும் தெரிவித்தான். அதுகேட்டு அரசன், "ஐய! சேனாபதியே! சாணக்யர் சொன்ன விஷயங்கள் உண்மையே. அவ்விதமே நமது சேனைகளை யனுப்பிவிடு. நம்முடன் வந்திருக்கும் அரசர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இது விஷயத்தைத் தெரியப்படுத்து. சாணக்யர் ஸந்தோஷத்துடன் உனக்களித்

திருக்கும் வெகுமதிகளை நீயே எடுத்துக்கொள்" என்று சொன்னான். "உத்தரவு" என்று சேகரன் படைகளிருக்குமிடம் வந்து, சிறிது சேனையை மட்டும் நிறுத்திக்கொண்டு மற்றவற்றைத் தத்தம் தேசம் செல்லும்படி கட்டளையிட்டான். உடனே பிரயாண பேரிகைகளை முழக்கிக்கொண்டு பர்வதேசனது படைகள் தத்தம் தேசம் சென்றன. இது கண்டு சாணக்யன், "சந்திரகுப்தனது ராஜ்யாபிஷேகத்திற்குப் பாதி விக்கினம் நீங்கிற்று. இன்னும் பாதி நீங்க என்ன செய்யலாம்?" என்று ஆலோசித்துக் கொண்டிருந்தான்.

---

## பதினெட்டாவது அத்தியாயம்

## இந்துசர்மன் இரட்டுற மொழிதல்.

---

மற்றொருநாள் மாலை சாணக்யனும், சந்திரகுப்தனும், மிதமான பரிவாரத்துடன் ஆஸ்தானத்தில் இருக்கக்கண்டு, ராக்ஷஸனுக்கு மித்திரன்போல் நடந்துவரும் க்ஷபணகன், 'இதுவே தக்கசமயம்' என்று அமாத்யர் அனுப்பிய விஷகன்னிகையை அழைத்துக்கொண்டு வந்தான்.

ஆ! ஆ! முத்தாபரணங்கள் தரித்து சிவப்புப் பட்டை முக்காடிட்டுத் தோன்றிய அவளைக்கண்டு "இவள் நக்ஷத்திரங்களுடன் விளங்கும் சந்தியாகால லக்ஷ்மியோ? அமிருதம் உண்டானசமயம் ஸ்திரீ வேஷம் தரித்துக் கடைக்கண் பார்வையினாலேயே அசுர வர்க்கங்களின் மனதை மன்மத விகாரத்திற்கு உட்படுத்திய ஸ்ரீமந் நாராயணனது மோஹினி ரூபமோ? சுந்த உபசுந்தர்கள் என்ற அசுரரை வெல்லும் நிமித்தம் பிரமாவினால் சிருஷ்டிக்கப்பட்ட ஊர்வசியோ? கண்ணால்கண்ட மாத்திரத்தில் கூட்டங் கூட்டமாகத் தொடர்ந்து வரும் விட ஜனங்களின் சித்த விருத்தியை அபகரித்துச் சஞ்சரிக்கும் சிங்கார கலையோ? லாவண்யமே ஓர் ஸ்திரீரூபமாக வந்திருக்கிறதோ?" என்று அவளை வியவாதார் இலர். உருவற்ற பதார்த்தம்போல் ஸ்பரிசிக்க முடியாததும், சித்தரிக்கப்பட்ட உருவம்போல் போகத்திற்கு உபயோக மற்றும், கேவலம், கண் பார்வையினாலேயே ஜனங்களின் சித்தத்தைக் கலக்கியும்,

அதர்வண வேதிகளுக்குப் பிரியமான ஆபிசார வித்தையே ஸ்திரீ உருவமாக வந்ததுபோலு மிருந்த அவள், ஸ்வர்ண கலசம்போன்ற ஸ்தன பாரத்தினால் ஆடி அலையும் சிறுத்த இடையுடனும், மின்னற்கொடி போன்ற தேக லாவண்யத்துடனும், பூர்ண சந்திரன்போன்ற முகமண்டலத்துடனும், கார்மேகக் கூட்டம்போன்ற கேசபாரத்துடனும், வேல் விழிகளைக்கொண்டு நோக்கும் கம்பீரமான பார்வையுடனும், விளங்கினாள். இவ்வாறு பிரகாசிக்கும் அந்தப் பெண்மணியுடன் வந்த க்ஷபணகன் சந்திரகுப்தனை, 'தர்மாபிவிருத்தி யுண்டாகுக' என்று வாழ்த்தி, அக் கன்னிகையை அவன் முன் நிறுத்தினான். அத் தருணி, நவரத்ன கங்கணங்களால் மனோகரமாகத் தோன்றும் கைகளைக் கூப்பிச் சந்திரகுப்தனைக் கும்பிட்டு, கடைக்கண் பார்வையாகிய வலையைவீசி, மந்தஹாஸத்துடனும், தலைகுனிந்த வண்ணமாகவும், க்ஷபணகனுக்குப் பின்னால் நின்றுகொண் டிருந்தாள்.

சாணக்யன் அக் கன்னிகையின் அதிசயமான சௌந்தரியத்தைக் கண்டு, க்ஷபணக வேஷந் தரித்திருக்கும் தனது மித்திரனான இந்து சர்மனை நோக்கி, அறியாதவன்போல, "ஐயா! க்ஷபணகரே! நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? தங்கள் நாமதேயம் யாதோ? 'சாபத்தினால் புரூரவச் சக்ரவர்த்தியைக் கண்டு மோஹித்துப் பூமியில் வாசம்செய்த ஊர்வசியோ! பிரமரிஷி யாகவேண்டுமென்று கொடுந்தவம்புரிந்த விசுவாமித்திரரது தவத்தைக் கெடுக்கவந்த 'ஹேமை' என்ற அப்ஸர ஸ்திரியோ! அல்லது ருக்மாங்கதனது மனதைச் சோதிக்க வந்த மோஹினியோ!' என்று ஐயுறத்தக்கவளாயும், ஸர்வாங்க சுந்தரியாயும், நவ யௌவனசாலினியாயும் உள்ள இப்பெண் யாருடைய புத்திரி? தங்களுக்கு எவ்விடத்தில் கிடைத்தாள்? தங்கள் தேசம் எது? அப்பெண்ணையும் உட்காரச் சொல்லித் தாங்களும் உட்கார்ந்து எல்லாவற்றையும் விவரமாகத் தெரிவிக்கவேண்டும்" என்றான்.

அதற்கு அவன், "ஐயா! முன்னம் நந்தர்களுக்கு ஆப்தராயிருந்து இப்பொழுது சந்திரகுப்தனைக் கண்டு பயந்து சென்றிருக்கும் அமாத்ய ராக்ஷஸருக்கு நான் சிநேகன். என்னை ஜீவஸித்தி என்று சொல்வார்கள். இந்த யுவதி யாரெனில், சிறைப்பட்ட வல்லப ராஜனுடைய புத்திரி. இவளைப் பாலியம் முதல் பதினைந்து வயதுவரை போஷித்து

நாட்டிய சங்கீத வித்தைகளில் தேர்ச்சியுறச் செய்யும்படி என்னை ஏற்படுத்தினர் ராக்ஷஸர். என்னால் பயிற்றுவிக்கப்பட்ட இவளது கல்வித்திறமையைக் கண்டு சந்தோஷப்பட்டு, அவன் இவளை ஜேஷ்ட நந்தனுக்குப் பிரிய பத்தினியாகச் செய்யவேண்டுமென நிச்சயித்திருந்தான். தெய்வ வசத்தினால் நடந்த விபரீதங் கண்டு சகிக்கமாட்டாமல், ராக்ஷஸன் வேற்றிடம் சென்றுவிட்டான். சென்றுவிடவே, "ஐயோ! நான் அநாதையாய்விட்டேனே! ஆதாரமற்று வாடும் மாலதிக் கொடிபோல் தவிக்கிறேனே! காட்டில் இறைக்கும் சந்திரிகைப்போல் என் யௌவனம் வீணாயிற்றே!" என்று பிரலாபித்தனள் இத்தருணி. பாவம்! இவளைக் கண்டதும், எனக்கு மிகப் பரிதாபமுண்டாயிற்று. உடனே "அம்மா! குழந்தாய்! ராஜயோக்கியளான உனக்கு ஏற்ற பதியைக் காட்டுகிறேன்" என்று சமாதானம் செய்தேன். பரிபக்குவமடைந்து யௌவன திசையால் விளங்கும் இவளை இதரர் அபேக்ஷிப்பதற்கு முன்பாகவே தங்கள் ஸந்நிதானத்திற்கு அழைத்துவந்தேன். ராஜோத்தமரான சந்திரகுப்தருக்கு வெற்றிலை மடிப்பதற்கேனும், பாத சேவைக்கேனும், ஸபபம் போல் இங்கிதம் அறிந்து நடந்துகொள்ளக் கூடிய தன்மை யுடையவள் இவள் என்பதிற் சந்தேகமில்லை" என்றுரைத்து, "ஐயா! உசிதமான விஷயங்களை அறியக் கூடிய சாணக்யரே!" என்றழைத்து, ஒரு முறை ஜாடையாக அவனை உற்றுநோக்கி, "இக் கன்னிகையைச் சாதாரண ஸ்திரீ என்றெண்ணலாகாது! அர்ச்சுனன் மனத்தை அபகரித்த நாக கன்னிகையாகிய உலூபிபோல் அதிசாமர்த்தியம் வாய்ந்தவள். கால சர்ப்பம்போல் தோன்றும் கேச பாரத்தினால் ரஸிகர்கள் மனத்தை வசப்படுத்தக்கூடியவள். காள கண்டரது கழுத்தைப்போற் கறுத்த விழியால் தனது நாயகனது சித்தத்தை மோக சாகரத்தில் ஆழ்த்திவிடுவாள். இவளது தேக சுகத்தை அனுபவித்துத் திருப்தியுற்ற புருஷன், இவளைவிட் டகன்று சயனக் கிருகத்திலிருந்து திரும்பவும் வெளிவரான்" என்று சொல்லி நிறுத்தினான்.

இம் மொழிகளைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த சாணக்யன், தனக்குள், "ஜீவஸித்தி இங்கிருப்பவர்கள் அறியாவண்ணம் ஜாடையாகச் சொன்ன வாக்கியங்களில், 'உலூபி' என்றும், 'காளகண்டரது கழுத்து' என்றும், 'காலசர்ப்பம்' என்றும், பதப் பிரயோகம் செய்ததிலிருந்து, இக் கன்னியிடம் விஷதோஷம் மிகுதியும் உளதென்பது அறி

யக்கிடக்கின்றது. அன்றியும், "இவளது சரீர சுகம் அனுபவித்தவன், திரும்பவும் சயனக்கிருகம்விட்டு எழுந்து வரமாட்டான்" என்றதால், 'இவள் சரீரத்திலுள்ள விஷசம்பந்தத்தினல் இவளை அணைந்தவன் உயிருடன் திரும்பான்' என்ற விஷயம் விளங்குகின்றது. ராக்ஷஸன் சந்திரகுப்தனைக் கொல்லுவதன் நிமித்தம் இவளை அனுப்பிவிட்டுப் பழிக்குப் பழிவாங்கும் எண்ணங் கொண்டு ஒளிந்திருக்கிறானே யன்றி, பயத்தால் அவன் ஓடிவிட்டதாகத் தெரியவில்லை. இவளிடம் இருக்கும் விஷதோஷத்தை நன்றாகப் பரீக்ஷித்துக்கொண்டு, இனி ஆகவேண்டியதைத் தீர்மானிப்போம்" என்று யோசித்துத் திரும்பவும் க்ஷபணகன் முகத்தை நோக்கினன்.

தன்னை நோக்கிய சாணக்யனைப் பார்த்து, க்ஷபணகன், "கால தேச வர்த்தமானம் அறியும் ஐய! 'உன் தேசம் யாது?' என்று என்னைக் கேட்டீர்களல்லவா? சொல்கிறேன் கேளுங்கள்: ஒரு சமயம் பூலோகாதிபதியாக விரும்பிய ராக்ஷஸர், தேவர்களால் தோல்வியுற்றபோது, கடலில் ஒளிந்தும், பிறகு வெளிப்பட்டுப் பூவுலகை வருத்தியும், தேவேந்திரனல் துரத்துண்டு மீண்டும் ஒளிந்தும், பிறகு சமயம் வாய்க்கும் போது யாவரையும் இம்சித்து வந்தார்கள் என்பதும், இது பொருத இந்திரன், அகஸ்திய மகரிஷியை, ராக்ஷஸர் மறைந்த கடலையே பானம் செய்யச் செய்தான் என்பதும் நாம் அறிவோமே? இங்ஙனம் கடல் நீர் முழுதும் பானம்செய்யப் பட்டமையின் ராக்ஷஸர்க்கு இருப்பிடமற்றுப் போகவே, அவர்கள் பாதாளத்தில் ஒளிந்து, தக்க சமயங்களில், பூமியின் நவ கண்டங்களிலும் இருக்கும் மகா பர்வதங்களை அடுத்தனர். அதனல் பக்கபலமுற்ற பெரிய பர்வதங்கள் மதமேறித் தங்கள் தங்கள் சிறகை விரித்து ஆகாயத்திற் பறந்துகொண்டு தமக்குத் தோன்றிய தேசங்கள் தோறும் விழுந்து, பசு, பக்ஷி பிராணிகள், முதலிய யாவையும் நாசம் செய்யலாயின. இது கண்டு இந்திரன் கோபாவேசமுற்று, விருத்திராசுரனது குருதி குடித்துக் கொழுத்துக் கூரிய நுனி வாய்ந்த வச்சிராயுதத்தினல் அப் பர்வதங்களின் சிறகுகளை வெட்டி வீழ்த்திக் கொண்டுவந்தான். வருகிறவன், தேவர்களது வாசத்திற்குத் தகுதி வாய்ந்ததும், மகரிஷிகளால் கொண்டாடப்பட்டதுமான இமய பர்வதத்தைக் கண்டு, "இதுவும் ஒருக்கால் ராக்ஷஸர்க்கிருப்பிடமாக ஏற்படக் கூடு"மென்று சந்தேகித்து, 'பர்வதராஜன்' என்றும் பாராமல்,

தாக்ஷண்யமே யின்றி அவ் இமயமலையின் சிறகுகளையும் வெட்டிவிட்டான். தன் தந்தை சிறகு அறுபட்ட தறிந்து, வாயுவின் ஏவுதலால் ஓடும் மைநாக பர்வதத்தைக் கண்ட இந்திரன், அதன் சிறகை வெட்டாமல், "பாதளத்திலிருந்து ராக்ஷஸர் வாராவண்ணம், நீ இனி சமுத்திலிருந்தபடியே அவர்கள் வரும் பாதையைத் தடுத்துக் கொண்டிரு" என்று அதற்கு ஆக்ஞாபித்துத் தனது இருப்பிடம் சென்றான். இந்திரன் மட்டும், முக்யமான பர்வதங்களின் பக்ஷங்களைச் சேதியாதும், கிரிராஜனை 'நமக்கு மிக உபகாரி' என்று எண்ணி அதனிடம் தாக்ஷண்யம் காட்டி மன்னித்தும், மைநாகனைத் தன் உத்திரவுப்படி நடக்குமாறு நியமிக்காமலும் இருந்தால், உலகிற்கு ராக்ஷஸரது ஹிம்ஸை என்றேனும் நிவிர்த்தியாகுமா? அன்றியும் தேவேந்திரனது குருவான பிரகஸ்பதி பகவானது ஆசீர்வாதமும், முயற்சியும் வீணாகாதா?—இதெல்லாம் எதற்கு?—அந்தணோத்தமரே! நான் சொல்லவந்த தென்னவெனில், இந்திரன் அவ்விதம் பர்வதங்களின் சிறகுகளை வெட்டும்போது அவற்றில் ஒன்று சிதறிக் கீழேவிழுந்த இடம் 'வஜ்ரபாத க்ஷேத்திரம்' என்னப்படும். அதுவே என தேசம்" என்றான்.

---

## பத்தொன்பதாவது அத்தியாயம்.

# இரகசியப் பொருளுணர்தல்.

ஜீவஸித்தியின் வாய்மொழிகளை நன்கு கவனித்துக் கேட்டு வந்த சாணக்யன், அவன் அறிவித்த விஷயங்களைச் சிந்தித்துப் பின்வருமாறு முடிவு செய்து கொள்ளலானான்:

'ராக்ஷஸர்' என்ற சொல் 'அமாத்ய ராக்ஷஸ'னையும், 'கிரி ராஜன்' என்றது 'பர்வ தேச'னையும் குறிக்கும்.

"ராக்ஷஸர் வெளிப்படுமாறு அகஸ்திய மகரிஷி அவர்கள் மறைந்தொளிந்த கடலைப் பானஞ்செய்தனர்" என்றதனால் "அமாத்ய ராக்ஷஸன் எங்கு மறைந்திருந்தாலும், தக்க உபாயங்களால் அவனை இருப்பிட மறச் செய்து வெளிக்கிளப்பி ஓட்டவேண்டும்" என்றுகிறது.

"ராக்ஷஸர்க்கு ஆதாரமாக இருந்த 'பக்க பலமுற்ற பெரிய பர்வதங்கள்' சிறகு வெட்டுண்டு வீழ்ந்த செய்தி" குறிப்பது, அமாத்ய ராக்ஷஸனுக்குப் பெருந்துணையாயிருந்து, பல மன்னரது படைத்துணை பெற்ற நவநந்தர்களது நாசமே ஆகும்.

'இதுவும் ஒருக்கால் ராக்ஷஸர்க் கிருப்பிடமாக ஏற்படக் கூடும்' என்று நினைந்து 'பர்வதராஜன்' என்றும் 'தனது உபகாரி' என்றும் பாராமல் இமயமலையின் சிறகுகளையும் வெட்டிய விஷயம், "(நந்தரது மரணத்தால் நிராதரவெய்திய) ராக்ஷஸன் இப்பொழுது பர்வதேசனிடமே அடைக்கலம் புகுந்துளான். ஆதலின் அப் பர்வதேசனைச் சிறிதும் தயை தாக்ஷண்யமின்றிச் சங்கரித்தே தீரவேண்டும்" என்பதை வற்புறுத்தவே கூறப்பட்டதாகும்.

"தந்தையை இழந்து வாயுவின் ஏவுதலால் ஓடும் மைநாகனைக் கண்ட இந்திரன் அவனது சிறகை வெட்டிக்கொல்லாமல், அவனை, அவன் இருந்த சமுத்திரத்திலேயே நிறுத்தி, 'ராக்ஷஸர் அவ்வழி வாரா வண்ணம் பாதளம் செல்லும் வழியைக் குறுக்கிட்டுத் தடுத்துக்கொண்டிரு' என்று கட்டளையிட்ட"தாகக் கூறியது, "பர்வதராஜனது மரணத்தால் அஞ்சி ஓடும் மலயகேதுவைக் கொல்லாது அவனை அவனது தேசத்திலேயே ஓட்டி, அங்கேயே இருத்தி, அங்கிருந்தபடியே நமது ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு செய்யவேண்டும்" என்பதைக் குறிப்பிடவே.

"இந்திரன் கோபாவேசமுற்று, விருத்திராசுரனது குருதி குடித்துக் கொழுத்த கூரிய நுனிவாய்ந்த வச்சிராயுதத்தால் கிரிராஜனைத் தனக்கு மிக்க உபகாரி என்றெண்ணி தயா தாக்ஷண்யம் கொண்டு அவனை மன்னித்தும், அவனது மகனை மைநாகனைத் தனது உத்தரவின்படி நடக்குமாறு நியமிக்காமலு மிருந்தால், உலகிற்கு ராக்ஷஸரது ஹிம்ஸை என்றேனும் நிவிர்த்தியாகுமா?" என்றது, "எவ்விதத்தேனும் விஷ கன்னிகையைச் சம்பந்தப்படுத்திப் பர்வதேசனைக் கொல்லாமலும், அவனது மகனாகிய மலயகேதுவை ஓட்டாமலும் இருந்தால் அமாத்ய ராக்ஷஸரது ஹிம்ஸை நிவிர்த்தியாகுமா? சந்திரகுப்தனுக்கு (முன்பு வாக்களிக்கப்பட்ட பிரகாரம்) அகண்ட ராஜ்யாதிபத்தியம் கிடைக்குமா? சந்திரகுப்தனுக்குச் சிறிதேனும் சுகம் உண்டாமா?" என்று உணர்த்தற் பொருட்டே

என்றிவ்வாறு சாணக்யன் தீர்மானித்து, இந்து சர்மனை நோக்கி, "க்ஷபணக சிரேஷ்ட! தான் கை சளைத்த காலத்தில், இந்திரன், தற்காத்துக் கொள்ளுமாறு கிரிராஜனது இறக்கைகளை வெட்டியே தீரவேண்டி வந்ததல்லவா?" என்று கேட்டான்.

தான் கூடார்த்தமாகக் கூறியவை சாணக்யனுக்கு விளங்கிவிட்டன என அறிந்து மகிழ்ந்த இந்து சர்மன், "எல்லாம் தெரிந்த தங்களுக்கு நான் விசேஷமாகத் தெரிவிப்பதென்ன இருக்கிறது?" என்று அவனை மெச்சினான்.

சாணக்யன் சற்று நிதானித்து, "நமது மித்திரனாகிய இந்து சர்மன் உரைப்பதுபோல், ராக்ஷஸன் இப்பொழுது பர்வதேசனை வசப்படுத்திச் சந்திரகுப்தனைக் கெடுத்துவிடுவதில் தடையிராது. அவன் அது செய்யச் சமர்த்தன் என்பது நாம் அறிந்த விஷயமே. 'எவ்விதத்திலேனும் பர்வதேசனைக்கொண்டு ராக்ஷஸனைக் கொன்று விடுவோம்' என்றால், புத்தியும் ஆண்மையும் ராஜவிசுவாசமும் வாய்ந்து விளங்கும் ராக்ஷஸனைப்போன்ற மகா புருஷன் இனி நமக்கு எங்கும் கிடைக்கமாட்டான். ராஜவிசுவாசியாக இருத்தலினாலேயே இவ்வாறெல்லாம் அவன் நந்தர்களுக்கு விரோதியான சந்திரகுப்தனிடம் வைரம் சாதிக்கிறான். ஆதலின், இத்தகைய மகா புருஷனையே நான் சந்திரகுப்தனுக்கு மந்திரியாக்காவிடில் என் சாகஸத்திற்குக் கௌரவமே இல்லை. ராக்ஷஸன் ஒரு பக்கம் இருக்கும்போது, சந்திரகுப்தனுக்குச் செய்யும் ராஜ்யாபிஷேகம், சூரியகாந்தியில் வைத்த தீப ஒளியே ஆகும்.—இச்சமயம் பாதிராஜ்யம் பர்வதேசனுக்குக் கொடுத்துத் தீரவேண்டியிருக்கிறது. இப் பர்வதேசனோ முன்பு நமக்கு அளித்த அபய மொழியை மீறினவன். லம்பாக மன்னனால் தனக்கு ஏற்பட்டிருந்த விபத்தை நாம் அதிவிரைவிற் பரிகரித்ததையும் மறந்தவன். நமது சாகஸத்தையும் அறிவு ஆண்மைகளையும் சற்றும் எண்ணாமல், நந்தர்கள் விடுத்த "விஷ்ணுதாஸன்" என்ற நியோகியின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டுச் சந்திரகுப்தனை நாம் இருக்கும்போதே நந்தர்களிடம் ஒப்புவிக்கத் துணிந்தவன். ஆதலால், இவனினும், செய்ந்நன்றி மறந்தோனும் பொய்யனும் வஞ்சகனும் எவனுமிரான். ராக்ஷஸனோ தனது பிரபுக்களான நந்தர்கள் இறந்ததால், அவர்களுடைய பகைவனான சந்திரகுப்தனை அடுக்காமல், அவனால் அடைய

லாகும் பெரும் பதவியையும் வெறுத்து, எவ்விதமேனும் அவனைக் கொன்று தனது எஜமான விசுவாசத்தை நாட்ட முயன்றுளான். தேனும் நெய்யும் சமமாகக் கலக்கப்படுமாயின், அது விஷமே ஆகிவிடுவதுபோல, ராக்ஷஸனும் பர்வதேசனும் ஒன்றுகூடினால், சந்திரகுப்தன் தன் அரசுரிமையை இழந்து நமக்குப் பின்னாலேயே தபோவனம் வந்து சேரத் தடையில்லை. பர்வதேசனுக்கு ராக்ஷஸன் துணையாய்விடின், பாதி ராஜ்யத்திற்கும் உடன்படாமல் இப்பொழுதே முழு ராஜ்யமும் பெற யுத்தம் செய்யப் பின் வாங்கான். கிராமத்திற்குப் பலமாக இருக்குமாறு இடப்பட்டவேலி, திருடர்களுக்கும் துஷ்ட மிருகங்களுக்கும் இடமாவதாகில், அதனை வெட்டியே தீரவேண்டுமன்றோ? பர்வதராஜனே இப்பொழுது ராக்ஷஸனுக்கு ஆதாரமாக இருக்கின்றான். ஆதலின் இப்போதே அவனைக் கொன்று, அதன்பிறகு, பாம்புப்பிடாரன் தந்திரமாகப் பாம்பைப் புற்றினின்றும் வெளிப்படுத்திப் பிடித்தல் போல் ராக்ஷஸனை வெளிப்படுத்திப் பிடிக்கவேண்டும். முதலில் பர்வதேசனைப் பற்றிய காரியத்தை முடிப்போம். அதற்குச் சாதகமாக, தன்னையறியாமலே நிற்கக்கூடியவள் இவ் விஷகன்னிகையே. இவளைப்பற்றிய உண்மையைச் சிறிது சோதித்தறிவோம்" என்று தனக்குள் எண்ணி, அருகிருந்த அரமனை வேலைக்காரர்களை நோக்கி, "புதிதாகப் பிடித்துவந்த கிளிகளுக்குப் பேச்சுக் கற்றுத்தர உத்தரவிடப்பட்டிருந்ததே? கற்றுத் தந்தீர்களா? அவை இப்பொழுது பேசுமா? சகோர பக்ஷிகளைப் போற்றி வளர்க்குமாறு உங்களிடம் ஒப்புவித்தோமே; அவை எப்படியிருக்கின்றன இப்பொழுது? இருவகைப் பக்ஷிகளையும் கொண்டுவாருங்கள் பார்ப்போம்" என்றான்.

வேலையாட்கள் தத்தமிடத்து ஒப்புவிக்கப்பட்டிருந்த அரிய பறவைகளை அவையிருந்த கூண்டுகளுடன் சாணக்யன் முன் வைத்துக் கும்பிட்டு ஒதுங்கி நின்றனர். இப் பறவைகள் விஷகன்னிகையைக் கண்ட மாத்திரத்தில் பயங்கர தொனியுடன் கதறி, விதிர் விதிர்த்துச் சிறகுகளை உதறிக் கண்களைச் சுழலச் சுழல விழித்து, மறு நிமிஷமே சவமாய் விழுந்தன. சாணக்யன் விஷகன்னியின் தன்மையை இப்பொழுது ஐயந்திரிபறக் கண்டுகொண்டான். பிறகு ஒன்றும் தெரியாதவன்போல், கோபம் அபிநயித்து, அவற்றைக் காத்துவந்த வேலையாட்களை நோக்கி "தக்கவாறு அன்ன ஆகாரதிகளாற் போஷியாமையே இவை

இறந்தமைக்குக் காரணம். தக்க போஷணையிருந்தால் இறவாவே. நல்லது. இறந்தவற்றை எடுத்தெறியுங்கள் வெளியே." என்று கட்டளையிட்டவர்களை அனுப்பினான்.

---

## இருபதாவது அத்தியாயம்.

## சாணக்யனது சூழ்ச்சி.

பிறகு, சாணக்யன், விஷகன்னிகையுடன் வந்த இந்துசர்மனைப் பர்வதராஜனிடம் அனுப்ப எண்ணி, "இக் காமினியாகிய விஷகன்னிகையால் பர்வதராஜன் மரணமுறுவது திண்ணம். அவன் இறந்த பிறகு, அவனது மகனான மலயகேதுவை மோசடியால் இவ்விடத்திருந்து அவனது நாட்டிற்கு ஓட்டி, அதன் பின்னரே சந்திரகுப்தனுக்கு ராஜ்பாபிஷேகம் செய்யவேண்டும்" என்று மனத்தில் எண்ணி, இந்துசர்மனை நோக்கி, "ஐய, ஜீவஸித்தி! பாணிக்கிரகணம் செய்த பத்தினியிடமின்றி வேறு எவரிடமும் சந்திரகுப்தனது மனம் செல்லாது. இதனை நான் நன்கறிவேன். ஆதலின் ஒரு காரியம் செய்: நம் எல்லோருக்கும் பிரபுவாயுள்ள பர்வதேசரிடம் இச் சுந்தரியை அழைத்துச் செல். அழகு மிக்க இவளது யௌவனம் வீண்போகலாகாது. அரசர்க்கே உரியவள் இவள். இவ் விளம் பெண்ணுடன் பர்வதராஜன் சுகமாக இருப்பின், அதுவே நமக்குப் பரமாநந்தம் விளைக்கும். இங்ஙனம் செய்வதால் பிறிதொரு விதத்திலும் நன்மை ஏற்படுகின்றது: இக் கன்னிகை காரணமாகப் பர்வதேசனுக் குண்டாகும் மகிழ்வே, சந்திரகுப்தனுக்கு ராக்ஷஸன் மீதுள்ள கோபம் ஆறுதற்குக் காரணமாகும். அவர்களிருவரும் நண்பினராவர்.— ஆம். இதுவே சரி. இப்பொழுது அசுவனி நக்ஷத்திரம் தோன்றும் சமயம். சீக்கிரம் அழைத்துச் செல்: பர்வதேசன் சயனக் கிருகம் செல்லும் சமயம் நெருங்கிவிட்டது. தாமதியாதே. தக்க சமயத்தில் இம் மின்னற் கொடியை அவனிடம் ஒப்பித்துவிடு. அதனால் விளையும் நன்மையை அதிசீக்கிரம் காண்பாய். நல்லது செல்க" என்றான்.

க்ஷபணகன் "விரும்பிய வண்ணமே செய்வேன்" என உரைத்துச் சாணக்யனிடமிருந்து விடைபெற்று விஷகன்னிகையுடன் பர்வதேசனிருக்குமிடம் நோக்கிச் செல்லலானான்.

பிறகு சாணக்யன் மேல் ஆகவேண்டிய காரியங்களை யோசித்து முடித்து, அவற்றை விவரமாக ஒரு கடிதத்தில் எழுதி, அக்கடிதத்தைத் தனது அந்தரங்க சிஷ்யன் ஒருவனிடம் கொடுத்து, "இதனை எதிரி பக்கம் உள்ள ஸித்தார்த்தகனிடம் கொடுத்து வா" எனக் கட்டளையிட்டான். அச் சிஷ்யனும் அவ்விதமே செய்தான்.

கடிதத்தைப் படித்து விஷயமறிந்த ஸித்தார்த்தகன், 'சரி' என்று கூறி அவனை அனுப்பிவிட்டு, அக் கடிதத்துடன் சேனாபதியாகிய பாகுராயணன் இருக்குமிடம் வந்து, அவனுடன் ஓர் தனியிடத் திருந்து, அவனை நோக்கி, "ஐய, காரிய முடிக்குக் திறனுள்ள பாகுராயண! சாணக்யருக்கு உன் மீதுள்ள நம்பிக்கை இவ்வளவவ்வளவில்லை. சந்திரகுப்தன் சம்பந்தமாகப் பல காரியங்கள் உன்னாலேயே ஆகவேண்டியுள்ளன. ராக்ஷஸனைப்போல் அதிநிபுணத்துவம் வாய்ந்த உனக்கு அதிகமாகச் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேதுமின்று. இக்கடிதத்தைப் படி. இதிற் கண்டுள்ளபடி செய்து முடிப்பாயாயின், உனக்குப் பெரும்புகழும் திரவிய லாபமும் சித்திக்கும். இதில் தடையே இல்லை." என்று கூறித் தன் கைக் கடிதத்தை அவனிடம் கொடுத்தான். அக் கடிதத்தில்,

"ஸ்வாமி பக்தியிற்சிறந்த பாகுராயணன் காண்க: விஷகன்னிகையின் சேர்க்கையால் இன்றிரவு பர்வதேசன் மரணமுறுவது திண்ணம். இச் சமயத்தில் சேனைகளை மலயகேதுவின் கூடாரத்தைச் சூழ்ந்து நிற்குமாறு ஏற்பாடு செய்து, மலயகேதுவுக்குப் பெரும் பீதி உண்டாக்கி, அவனை அழைத்துக்கொண்டு அவனது நகர்க்குச் சென்று, அங்கே அவனது ஆப்த மந்திரியாக இருந்துகொண்டிரு. ராக்ஷஸன் சமயத்தில் அங்கு வருவான். அவன் வந்ததும், மலயகேதுவை அடுத்து சந்திரகுப்தன்மீது படையெடுக்கச்செய்வன். அவன் அங்ஙனம் செய்யும்வரை ஏதும் பேசாதிருந்து, தக்க சமயத்தில் ராக்ஷஸனிடம் மலயகேதுவுக்குக் கோபம் உண்டாகும்படி தோஷாரோபணம் செய்க. ராக்ஷஸனது உயிர்க்குத் தீங்கு நேரிடாமலும் பிறர்க்கு விகற்பமாகத் தோன்றுவிதமாயும் காரியங்களைச் செய்து, அவனை அங்கிருந்து ஓட்டிவிடுக. பின்னர் மலயகேதுவைச் சிறை செய்து வருக. சந்திரகுப்தனை நேரிற் கண்டுகொள்ளாது தாமதித்த சேனாபதிகளை மலயகேதுவிடம் வந்து சேருமாறு செய்க. நீயும், பத்திரபடன் முதலிய சேனாபதிகளும்

இறைவனது காரியத்தை நிறைவேற்றுவதில் அதி ஜாக்கிரதையுடனும், உண்மையுடனும், சிரத்தையுடனும், மெய்யன்புடனும் நடந்துகொள்வீர்களாக. இதனால் வரும் பலனைப் பின் பறிந்து மகிழ்வாய்" என்று எழுதி இருந்தது.

பாகுராயணன் மிக்க ஆச்சரியம் அடைந்து, சிறிது நேரத்திற்கெல்லாம், "நன்று. சாணக்யனது ஆணையைச் சிரமிசைக் கொண்டேன்" என்று ஸித்தார்த்தகனுக்கு உறுதி கூறி அவனை அனுப்பினான். பிறகு, பாகுராயணன், டிங்கிராதன், பலகுப்தன், புருஷதத்தன் முதலியோர்க்கு, "நீங்கள் அனைவரும் இந்த க்ஷணமே சகல சேனைகளுடனும் மலயகேதுவின் விடுதிக்கு மேற்கில் சற்றும் அரவமின்றிப் படைவகுத்து நிற்கவேண்டுமென்பது சந்திரகுப்த மன்னரது கட்டளை" என்று கடித மூலம் அறிவித்தான்.

ஸ்வாமிகாரிய துரந்திரர்களான அச் சேனாபதிகள் அனைவரும், தமக்கிட்டப்பட்ட கட்டளைக்கிணங்கிச் சந்தடி சிறிதுமின்றி, அந் நள்ளிரவிற் சென்று மலயகேதுவின் கூடாரத்தின் மேற்றிசையில் தத்தம் சேனைகளை அணிவகுத்து நின்றனர்.

இஃதறிந்த பாகுராயணன், "இனி நாம் தாமதிக்கவொண்ணாது. சிறிதேனும் ராஜகாரியத்திற்குப் பழுது நேருமாயின், மகாராஜாவின் கோபத்திற்குள்ளாக வேண்டிவரும். வேந்தன் சீறின் ஆந்துணையேது?" என்று எழுந்து, தனது ஆபரணங்களையெல்லாம் கழற்றி வைத்துவிட்டுக் கைச் சவுக்கத்தைத் தலையிற் சுற்றிக்கொண்டு சேணமிடாத ஒரு குதிரைமீதேறிப் பர்வதேசனது கூடாரத்திற்குச் சென்று, நடக்கும் விஷயங்களையெல்லாம் ஓர் மறைவிடத்திருந்து கவனித்துக்கொண்டிருந்தான்.

---

## இருபத்தோன்றாவது அத்தியாயம்.

## பர்வதேசனது மரணம்.

---

பாகுராயணன் செய்தி அவ்வாறிருக்க க்ஷபணகன் பர்வதேசனது கூடாரத்தின் முன்னின்று ஆங்கு நின்ற கஞ்சுகியை நோக்கி, "நாம்

வந்திருப்பதாக உங்கள் பிரபுவிற்குத் தெரியப்படுத்துக" என்றான். கஞ்சுகி உள்ளே சென்று, தனது பரிவார ஜனங்களிற் பிரிந்து சயனக் கிருகம் செல்வதற்கிருந்த பர்வதேசனைக் கண்டு, கை கூப்பிக் கும்பிட்டு, "மகா ஸ்வாமீ! ஒரு க்ஷபணகன் கூடாரவாயிலில் வந்து நிற்கிறான். அவன் 'உலக சிருஷ்டியில் எழில் மிக்க வஸ்துக்கள் யாவினுமிருந்து வடித் தெடுக்கப்பெற்ற லாவண்யாம்சங்களை ஒருங்கு திரட்டிப் பிரம தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட திலோத்தமையோ' என்று எண்ணக்கூடிய அதி மோகனாங்கியுடன் வந்துளான். மந்தமாருதத்தினால் அசையும் கர்நெறில் தளங்கள்போன்ற நேத்திரகாந்தி வாய்ந்துளாள் அவள். சந்திரனைப் பழித்த முகாரவிந்தத்தினள். மந்தகாசத்துடன் கூடியவள். சிவப்பு வஸ்திரத்தினால், முக்காடிட்டு, ஸ்தனபாரத்தினால் துவளும் தனது நுண்ணிடைக்கு ஆதாரமாக இடது கையைக்கொண்டு நிற்கின்றாள். தனது கடாக்ஷ வீக்ஷண்யத்தாற் கண்டோருள்ளத்தைக் கொள்ளைகொள்ளக்கூடிய கன்னியா ரத்தினம் அவள். அவளுடன் வந்துள க்ஷபணகன் சந்நிதானத்தின் சமயம் அறிந்துவரச் சொல்லினன். இடும் உத்திரவு எவ்விதம்?" என்றான்.

இயற்கையில் ஸ்திரீலோலனானதாலும், யுத்தம் தொடங்கியது முதல் அந்தப்புர ஸ்திரீகளை விட்டுப் பிரிந்திருந்ததாலும், பர்வதேசன், காம பரவசனாகி, "நல்லது வரச்சொல் அவர்களை" என்றான். அரசனுடைய இங்கித முணர்ந்த கஞ்சுகி, அதிவிரைவில் க்ஷபணகனை அக்கன்னிகையுடன் அழைத்துவந்தான். அவ் யுவதி அரசனை வணங்கி க்ஷபணகன் பின் நின்றாள்.

கன்னிகையைக் கண்ணுற்றதும், பர்வதேசன், "மானிடரில் இவள் போன்ற ரூப லாவண்யமும் தேஜஸும் கம்பீரமும் உள்ள நாரீமணியைக் காண்பது அரிதினும் அரிது. இவளை யடைவோன் மகா பாக்யசாலியே. இவளது தேக சம்பந்தம் பெற்றவனே தன்யன். இவளது பார்வையும் தனுக்கும் மினுக்கும், விரக்தர்களாய் வனவாஸஞ் செய்யும் பரம யோகிகளையும் ஸ்வாதீனப்படுத்தியே விடும். உள்ளபடியே,

"வண்டார் மலர்க்குழல் மாதர சாம்இவள் வாண்முகத்தைக்
கண்டால் முனிவரும் கைவிடுவார் தத்தங் காரியங்கள்
கொண்டாடு பூசையும் வேதாந் தமுமடக் கொள்கையும்போம்
பண்டாரமேது? மடமேது? சைவமும் பாழ்த்திடுமே."

நான் எவ்வளவோ ஸ்திரீகளைக் கண்டவன். இத்துணை லக்ஷணமும் சர்வாங்க சுந்தரியுமானவளை இதுவரை கண்டதே இல்லை. இவள் மட்டும் எனக்குக் கிடைப்பாளாகில், நான் என் உயிரையும் கொடுப்பேன். இதிற் சிறிதும் பின்வாங்கேன்'' என்று தனக்குள்ளே எண்ணி, க்ஷபண கனை நோக்கி, "ஐய! நீர் யார்? எங்கிருந்து வருகின்றீர்? இந் நாரீ ரத்நம் யாங்குக் கிடைத்தனள்?" எனக் கேட்டான்.

அதற்கு க்ஷபணகன், "ஐய, பூபதியே! சந்திரகுப்தனுக்குப் பயந்து நகர்நீங்கிச் சென்றிருக்கும் அமாத்ய ராக்ஷஸனது மித்திரன் யான். என்னை "ஜீவஸித்தி" என்று அழைப்பார்கள். சந்திரகுப்த னுக் கருள்புரிந்து நந்தர்களை நிக்ரகித்தபின் சகல ராஜ்யங்கட்கும் அதி பதியாக விளங்கும் தங்கள் தயவை நாடி அமாத்ய ராக்ஷஸனால் என் மூலம் அனுப்பப்பட்டவள் இப் பெண்மணி. இங்கிதம் அறிவதில் இவளினும் சமர்த்தி எவரும் இலர். அன்றியும் இவள் அரச குலத்திற் றோன்றிய ஆரணங்காவள். மாலை வேளையில் மலர்ந்த நாண்மலர் போன்று நவ யௌவன சாலினியாக இருக்கும் இக் கன்னிகையைத் தாங்கள் அங்கீ கரித்து, ராக்ஷஸனிடம் கிருபை கூர்ந்து, அவனுக்கும் சந்திரகுப்த னுக்கும் உள்ள பகைமையை நீக்கத் திருவருள் புரிய வேண்டும்." என்று இறைஞ்சினன்.

க்ஷபணகனது மொழிகளைக் கேட்ட பர்வதேசன், அவனை நோக்கி, "ஐய, ஜீவஸித்தியே! கவலையே வேண்டாம். இனி ராக்ஷஸனுக்குச் சந்திரகுப்த பீதி ஏற்பட நியாயமே இல்லை. நான் ராக்ஷஸனிடம் பிரியம் வைக்கும்போது, அவனுக்கு ஒருவிதக் குறைவு மிராது என்பதை உறுதி யாக உணரும். இதற்கு முன்பே கடிதமூலம் அவனை அறிந்துளேன். சாணக்யரது சாகஸத்தால் நவநந்தர்களும் நாசமுற்றதன் நிமித்தம் ராக்ஷஸனுக்கு மனவருத்தம் உண்டானது எனக்கும் அத்தியந்த விச னத்தையே விளைவிக்கின்றது. இனி ஒருக்கால் சந்திரகுப்தனால் ராக்ஷஸ னுக்கு எவ்வகையேனும் தீங்கு நேரிடுமாயின், நான் சும்மா இருப்பேனோ? எனக்குக் கிடைக்கும் பாதி ராஜ்யத்தை ராக்ஷஸனுக்கே தந்து, அவ னுக்கு முடி சூட்டுவேன். என் உயிருள்ளவரை ராக்ஷஸனுக்குப் பயமே வேண்டுவதில்லை." என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவ னது எண்ணமும் பார்வையும் விஷகன்னிகையை நாடின. அவனுக்குக்

காலம் குறுகிவிட்டமையால் காமபரவசனுகிச் சமீபத்தில் இருந்தோரை ஒருமுறை சுற்றிப் பார்த்தனன். அரசனது உள்ளக் குறிப்புணர்ந்த பரிவார ஜனங்கள் யாவரும், உடனே அவனைப் பிரிந்து வெளியே சென்றனர். யாவரும் சென்றதும், ஜீவஸித்தி, "பெண்கள் சிகாமணி! உனக்குத் தக்க நாயகன் கிடைத்துளான். அவனே இவர். இவர் மனப்படி நடந்துகொள். சிறிதும் அச்சமுறேல். நான் வெளியில் இருக்கின்றேன்." என்று ரகசியமாக உரைத்து, அரசனை நோக்கி, "மன்னவர் மன்ன! மாலதிக் கொடியே போன்றவளும் சுகுமார தேகமுடையவளும் பாவையர் திலகமுமான இவளைப் பெறுக' என்று கூறி, அவளைத் தன் கை மயிற் பீலியால் அரசனிடம் ஒப்புவித்து வெளியே வந்தான்.

இதன்பின், ஐயோ! பாவம்! பர்வதேசனது ஆயுள் அன்றே முடிவுற இருந்தமையால், அவன் பிராந்தியினல் காட்டுத்தீயை மாமிசமெனக் கருதி நா நீட்டும் மிருகேந்திரனை யொப்ப, விஷகன்னிகையைப் போக ஸ்திரீயென மதித்து, அதிஆவலுடன் அவளைச் சேர்ந்தான். சேரலும், விஷம் தலைக்கேறவே, தக்ஷகனற் கடியுண்ட பரீக்ஷித்து மன்னன் போன்றும், கிந்தமுனியின் சாபவசத்தால், மாத்திராதேவியைச் சேர்ந்ததும் உயிர் இழந்த பாண்டு மகாராஜன் போன்றும், சயனமஞ்சத்தில் அக்கன்னிகையின் அருகிலேயே உயிர் துறந்து பிணமாய் விழுந்தனன். உண்மை யறியாத விஷகன்னிகை, அவனைப் பலவிதம் உபசரித்தும் அவன் எழாதது கண்டு, அவன் சரீரத்தை முற்றும் உற்று நோக்கினள். அவன் தேகம் முழுதும் பசுமை நிற முற்றிருந்தது. தனக்கு நாதனக ஏற்பட்ட பர்வதேசன் இறந்த விஷயம் அவளுக்கு அப்பொழுது தெரியவந்தது. அவள் மிக்க விசனமுற்று 'இனி நான் இங்கிருக்க வொண்ணுது' என்று இறங்கினள் மஞ்சத்தினின்று. அரசனது உடலைக் கட்டிலின்மீது முறைப்படி கிடத்தி, அதனைப் போர்வையால் மூடி, "ஐயோ! மகா பாபியான என்னல், பிரஜைகளைப் பரிபாலிக்கும் இம்மன்னன் அரைக்கணத்தில் ஆருயிர் நீத்தனனே! எனது எஜமானனுகிய ராக்ஷஸன் என்னை 'ஜீவஸித்தி சொல்லும் விதம் நடந்துகொள்' என்று எனக்கு உத்தரவிட்டதன் பிரகாரமே நான் நடந்துகொண்டேனெனினும், அந்தோ! ராஜஹத்திதோஷம் என்னைச் சூழ்ந்துகொண்டு விட்டதே! என்ன செய்வேன்! எவ்வாறு உயிர்தரிப்பேன்! 'மலைமீதேறி விழுந்தாவது உயிர்விடுவோம்' என்றால், அதுவும் தீதாகவன்றே முடியும்?: விழுந்த

தாற் சிதறுண்ட என் உடற்பகுதிகளை நாய் நரிகள் முதலியன தின்னு மாயின் அவைகளும் நாசமுறுமே? இவ்வளவேயோ? எனது பிணக்காற்று வீசுதலால் எண்ணிறந்த பிரஜைகள் இறந்தொழிவார்களே! இப் பாப மெல்லாம் என்னையன்றோ வந்தடையும்? ஆதலால் எவ்வுயிரும் துன்ப மற யான் அக்கினிப் பிரவேசம் செய்தலே நலம். இதுவே எனது பழி பாவங்களை நிவிர்த்தித்துக் கொள்ளும் மார்க்கமும்." என்று உரைத்துச் சயனக் கிருகத்தினின்றும் வெளியே வந்தாள். இவளைப் போன்றே பர்வ தேசனது சயனக் கிருகம் புகுந்த ஸ்திரீகள் பலர், அருணோதயத்திற்கு முன்பே வெளிச்செல்வது வழக்கமாதலின், 'இவளும அங்ஙனமே செல் பவள்' என்று எண்ணி அவளைத் தடுக்காமலும், எதும் அவளை விசாரி யாமலும் விட்டு விட்டார்கள்.

வெளிக்கிளம்பிய விஷகன்னிகை 'ஜீவஸித்தி! ஜீவஸித்தி!' என்று கூவிக்கொண்டே சென்றாள். அப்பொழுது அங்குக் காத்திருந்த பாகு ராயணன் 'கூவும் இவளே விஷகன்னிகை போலும்! எதற்கும் இவளை விசாரிப்போம். அப்பொழுது விஷயம் தானாகவே தெரியவரும்' என்று செல்பவளைக் குறுக்கிட்டு நின்று "பாவாய்! நீ யார்? "ஜீவஸித்தி!" என்று கூவிக்கொண்டு அருணோதயத்திற்கு முன்பாக எங்குச் செல்லு கிறாய்? உன் ஆத்திர அவசரங்களையும் பதட்டத்தையும் பார்த்தால் யாரையோ ஏமாற்றிவிட்டு ஓடித் தப்புவள்போல் தோன்றுகிறது. நீ ராக்ஷஸனால் வளர்க்கப்பட்டவ ளல்லவா? உனக்குப் பர்வதேசனது விடுதி யில் யாது காரியம்? ராக்ஷஸனுக்குத் துரோகம் செய்து எங்கு ஓடி ஒளிக்கப் போகிறாய்? உள்ளது உள்ளபடியே உரை. இல்லையேல் உனக் குறுவது சித்திரவதையே. நான் சேநாபதியான் பாகுராயணன் என்று அறிவாயாக. என்ன சொல்லுகிறாய்?" என்று உறுக்கிக் கேட்டான்.

கேட்கவும், விஷகன்னிகை மெய்ந்நடுங்கி, "ஐய, பாகுராயண! இறைவன்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்: எனது இறைவரும் என்னை அன்பாதரவுடன் வளர்த்தவருமான ராக்ஷஸரை நான் வஞ்சிக்கவே இல்லை. அவரது கட்டளைப் பிரகாரம் நான் நடந்துகொண்டதாலேயே பர்வதேசன் மரணமுற்றான். இதுவே உண்மை. யான் சொல்வதை நம்ப விரும்பினீ ராயின் உண்மையை விசாரித்தறியும். பர்வதேசன் சம்பந்தமாக எனக் குற்ற மகத்தான பாபத்தை நிவிர்த்தித்துக் கொள்ளும் பொருட்டே

இப்பொழுது யான் அரண்யம் செல்லப் புகுந்தேன். நான் ஒரு அபலை. என்னைக் கொல்லற்க. இருந்து பர்வதேசனுக்கு எமனாகிவிட்ட என்னைக் கொல்லின், யான், இறந்து பலர்க்கு எமனாகவேண்டி வரும். நான் உரைப்பதெல்லாம் ஸத்தியம்" என்றாள்.

விஷகன்னிகை விளம்பிய யாவும் கேட்ட பாகுராயணன், "நல்லது. ஜீவஸித்தி, முன்னால் அதோ ஓடிக்கொண்டிருக்கிறான். போகலாம் நீ" என்று அவளைச் செல்ல விடுத்துப் 'பர்வதேசன் இறந்தது நிச்சயந் தானோ?' என்பதை ஐயந்திரிபற அறிய எண்ணிப் புகுந்து அங்கு அவனது சயனக் கிருகவாயிலில் மறைவாய் நின்றான். அங்குக் கஞ்சுகிகள் 'கசு கசு' என்று பேசிக்கொண்ட வார்த்தைகளை உற்றுக் கவனித்த போது, 'பர்வதேசன் மரணமுற்ற விஷயம் உண்மையே' என்று அவனுக்குத் தெரியவந்தது. உடனே அவன் அங்கிருந்து புறப்பட்டுத் தன் குதிரை மீதேறி அதிவேகமாக மலயகேதுவின் கூடாரவாயிலில் நின்று, வாயில் காப்போரை விளித்து, "அவசரச் செய்தி ஒன்று நான் அறிவிக்கவேண்டும்; உங்கள் இளவரசரைச்சீக்கிரம் எழுப்புங்கள். உடனே அவரை அழைத்து வாருங்கள். நான் வந்துளேன் என்று தெரிவியுங்கள்" என்று பதறிக் கூறினான்.

## இருபத்திரண்டாவது அத்தியாயம்

## மலயகேதுவை ஓட்டுதல்.

பாகுராயணனது பரபரப்பைக்கண்ட வாயில்காப்போர், விரைந்து சென்று, அரசனை எழுப்பி, "ஸ்வாமி! பாகுராயணன் சேணமற்ற ஒரு குதிரைமீ தேறி, ஆபரணமேதும் அணிந்திலனாய், யாவையும் பறிகொடுத்த தீனனேபோல் ஓடோடியும் வந்து, நம் வாயிலில் நின்று, இந்த நிமிஷமே தங்களைக் காணவேண்டும் என்று ஆத்திரப்படுகிறான்" என்றனர்.

மலயகேது, 'விசேஷம் யாதோ?' என்று திடுக்கிட்டுப் படுக்கைவிட்டெழுந்து விரைந்துசென்று, பாகுராயணனை நோக்கி, "ஐய, பாகுராயண!

சங்கதி என்ன? இதென்ன அலங்கோலம்? பெருஞ் சங்கடத்திற்குள்ளானவன்போற் காணப்படுகின்றாய். இவ்வித பரிதாப நிலைக்கும் பயத்துக்கும் காரணம் என்னையோ? என்றான்.

அதற்குப் பாகுராயணன் "ராஜகுமார! நின் பொருட்டே எனக்கு இக்கதி நேரிட்டது" என்ன, "இதென்ன? எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே. நன்றாய்ச் சொல்" என்று வற்புறுத்திக் கேட்டான் மலயகேது.

"எல்லாம் பிறகு அறிவிக்கிறேன். நீ அரை விநாடியும் இங்கு இனித் தாமதியாதே. தாமதிப்பாயாகில் வந்தது உன் உயிருக்கு அபாயம். நான் இப்பொழுது இங்கு வந்தது உன்னைக் காக்கும் பொருட்டே. ஏதும் பேச நேரமில்லை. சேணமிட்ட குதிரை ஒன்று எவரும் அறியா வண்ணம் உனக்காக அதோ சித்தமாக வைத்திருக்கிறேன். புறப்படு இப்பொழுதே—நாம் இங்கிருந்து இரண்டொரு காத வழி தூரமேனும் தாண்டி அப்பாற் சென்று விட்டால், அதற்குப் பிறகு சாணக்யன் உன் உயிர்க்கு உலை வைத்திருக்கும் விஷயத்தை விவரமாகத் தெரிவிப்பேன். புறப்படு, புறப்படு, சமுத்திரத்தின் அலைகளிற் பிரதிபலுக்கும் சூரியப் பிரபைபோல், மின்னும் ஆயுதங்களை உருவிய வண்ணமாய் உன்னைச் சங்கரிக்கும் நிமித்தம் வந்துகொண்டிருக்கும் அபரிமிதமான சைன்யங்களை அதோ பார்! யுத்தத்திற்குச் சித்தமாக அவை எவ்வாறு நிற்கின்றன!" என்று அஞ்சிப்பதறிக் கூறினான்.

திரும்பிப் பார்த்தான் மலயகேது. அளவிட்டுக் கூறவொண்ணா வண்ணம் கவிந்து கொண்டு செய்வதின்னதென்று தெரியாது திகைத்து "என் தந்தையாரது செய்தி என்ன? என்று கேட்டுக்கொண்டே சேணமிட்டுநின்ற குதிரை மீதேறினான். ஏறியதும், பாகுராயணன், "உன் தந்தை விஷயம் பிறகு அறிவிப்பேன். கணப்பொழுதும் தாமதியாதே. ஓட்டு குதிரையை. பிறகு யாவும் அறிவாய். முந்தி உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்" என்றான்.

மலயகேது அதி துக்க முற்றவனாய்ப் பாகுராயணன் சென்ற வழியே தன் குதிரையை வேகமாகத் தூண்டினான். இது கண்ட அவனது மெய் காவலரும் அவனைத் தொடர்ந்தோடலாயினர். அதி வேகத்

டன் அரை யோஜனை தூரம் சென்றனர். சென்றவர்கள் ஒரு திட்டின் மீதிருந்து களைப்பாறினர். பிறகு, பாகுராயணன் "ஐய, ஈசன் உனக்கு அதி பாலியத்திலேயே இவ்வித மகத்தான சங்கடத்தை உண்டுபண்ணி விட்டாரே நிர்விசாரமாக இருந்த உனக்கு, நிகழ்ந்த விஷயங்களை என்னென்று அறிவிப்பேன்! உன் தந்தை இறந்த இச்சமயம்—" என்று சொல்லி வாய் மூடுமுன், மலயகேது, ஆ! ஆ!! என்ன? இறந்தனரா என் தந்தை? ஐயோ! ஐயோ!!" என்று பிரலாபிக்கலானான்.

பாகுராயணன் அவனைத் தேற்றி, "நான் சொல்வன யாவும் நீ பொறுமையாயிருந்து கேட்டாலொழிய முழு விஷயமும் நீ யாங்ஙனம் அறிவாய்? அவர் இறந்த இச்சமயம் உனக்கு அபாயம் சம்பவிக்க இருந்ததை நான் அறிய நேர்ந்தது உன் அதிர்ஷ்டமே. நந்தர்களின் ஐசுவரியம், அரசுரிமைக்கே அருகனல்லாத சந்திரகுப்தனது வசமானதுபோல, தொன்மை மிக்க பர்வதேசர்களின் சம்பத்து, கிராதர் வசப்பட இருந்ததே! அங்ஙனம் வசப்பட்டுவிடின் ஜனங்கள் எய்தும் தீமைக்களவுண்டோ? இவையாவும் நினைந்திரக்கியே உன்னிடம் ஓடி வந்தேன். நான் கண்டும் கேட்டுமுள்ள சகல சமாசாரங்களையும் அறிவிக்கத் தீர்மானித்து விட்டேன். எனக்கு நீ அறிமுக மில்லானாயினும், எனது சிரமத்தைப் பாராதும் உயிரை வெறுத்தும் ஓடி வந்ததன் காரணம் உன் பரிதாப நிலையைப்பற்றிய எனதெண்ணமே. நீயாவது மீந்திருந்தால் 'செய்யாமற் செய்த' தும், 'காலத்திற் செய்தது'மான எனது உதவியை என்றேனும் நினைத்துக்கொள்வா யன்றோ? விஷயத்தை இனி விவரமாகக் கூறுவேன். கேள்:

"இன்றிரவு சுமார் இருபது நாழிகை இருக்கும். சந்திரகுப்தனது ஆட்கள் இருவர் ஓடிவந்து, "உத்தரவாயிருக்கிறது. உங்கள் சேனைகளை இந்த க்ஷணமே மலயகேதுவின் கூடாரத்தின் மேற்றிசையில் யுத்தத்திற்குச் சித்தமாக நிறுத்திக் கொண்டிருந்து, மறு உத்திரவை எதிர்பார்த்து, அதன்படி நடந்துகொள்ள வேண்டியது. புறப்படுங்கள். இப்பொழுதே" என்று எனக்கும், டிங்கிராதனுக்கும், பலகுப்தனுக்கும், புருஷதத்தனுக்கும் அறிவித்துச் சென்றார்கள். அரசனது ஆணையின்படி, என்னை ஒழிந்த ஏனைய மூவரும் தத்தம் அதிகாரத்துக் குட்பட்ட சேனைகளுடன் சென்றார்கள். எனக்குமட்டும் அங்ஙனம் செய்ய மனம்

வரவில்லை. பலவிதமாக ஆலோசித்துக் கொண்டே அதிகாலையில் சூரியன் உதிக்குமுன் பூந்தோட்டத்தின வழியே சென்று, ஆங்கு புஷ்பித்திருந்த பூங்கொடிகளைக் கவனித்துக்கொண்டே வந்தேன. அங்ஙனம் வரும் போது, சகல ஆபரண பூஷிதையும் சௌந்திரியசாலினியுமான ஒரு பாலை, அவிழ்ந்து கலைந்து புரளும் கேசபாரத்துடன் சென்றுகொண் டிருக்கக் கண்டேன். கண்களினின்று பெருகும் நீரால் நனைந்திருந்த அவளது மேல் வஸ்திரம் சரிந்து விழுந்தது. அதனை இடது கையால் தாங்கிப் பிடித்துக்கொண்டும், அடிக்கடி திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டும் அவள் ஓடி வந்துகொண் டிருந்தனள். நான் திடுக்கிட்டு, அவளை நிறுத்தி, "மோஹனாங்கி! மோஹினியேபோல் நீ தோன்றுகின் றாய். இச்சமயத்தில் எவரை ஏமாற்றிவிட்டு இவ் வைகறையில் ஓடு கின்றாய்?. கூறுக உண்மையை." என்று அதட்டினேன். அவள் நடு ங்கி "ஐயா! நான் ராக்ஷஸரால் வளர்க்கப்பட்ட விஷகன்னிகை. அவர் இவ்வூரைவிட்டுச் சென்றபொழுது என்னை ஜீவஸித்தி வசம ஒப்பிவித்து அவன் சொற்படி நடந்துகொள்ளுமாறு எனக்குக் கட்டளையிட்டுச் சென் றார். அக்ஷபணகன், வலியர் பகைக்கு அஞ்சியும், பிரபலாதிகாரியின் சொல்லை மீற மாட்டாமலும், என்னைப் பர்வதேசனிடம் ஒப்பிவித்தான. அவ்வரசன் என்னைக்கண்டு, காமபரவசமெய்தி, என்னுடன் சேர்ந்து, அது காரணமாக இறந்தான். உடனே நான் சயனக்கிருகத்தினின்றும் தப்பி வெளிவந்து உயிர் பிழைக்குமாறு ஓடுகின்றேன். நான் மகாபாவி" என்று புலம்பினள். அது கேட்ட நான், எனக்குள், "சரிதான. யாவும் சாணக்யனது சூழ்ச்சியே. 'சந்திரகுப்தனுக்கே நந்த ராஜ்யாபிஷேகம்' என உறுதி கூறிய சாணக்யன், பின்னர், பர்வதேசனது உதவிபெற்றே தீரவேண்டி வந்த நெருக்கடியான சமயத்தில், அவனுக்கும் பாதி ராஜ்யம் தருவதாக ஏற்பாடு செய்யவேண்டி வந்தது. முழு ராஜ்யமும சந்திர குப்தனது ஆய்விடின் பின்னைய ஏற்பாட்டின்படி பர்வதேசனுக்குத் தரப் பாதி ராஜ்யம் எங்குள்ளது? பர்வதேசன் இறந்தாலன்றி நிபந்தனைப் பிரகாரம் அவனுக்குப் பாதி ராஜ்யம் கொடுத்தே தீரவேண்டும். அவன் பாதி ராஜ்யம் பெற்றால் சந்திரகுப்தன் முழுராஜ்யம் பெறமுடியாது. இச் சங்கடத்தினின்றும் தப்ப, சாணக்யனுக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு: பர்வதேசனை ஒழித்தால் இச சங்கடம் ஒழிந்து போகுமன்றோ? இதற்காக, அவன் ஒரு யுக்தி செய்யவேண்டி வந்தது: ராக்ஷஸர் எக் காரியத்திற்காகவோ வளர்த்து வந்த விஷகன்னிகையைப் பர்வதேசனிடம்

அழைத்துப் போம்படி ஜீவஸித்தியை நயத்தாலோ பயத்தாலோ கட்டுப் படுத்தி, அவளைக்கொண்டே அவனைக்கொன்றிருக்கிறான். நான் செய்ய எண்ணியவற்றை யெல்லாம் நன்காய்ந்தே, இதற்குமுன், சாணக்யன், நய மொழிகளால் பர்வதேசனது சேனைகளை ஊருக்கு அனுப்பினதோடு நில்லாது, மிதமான பரிவாரத்துட னிருந்த மலயகேதுவையும் கொன் றிட சேனைகளுக்கு இன்று உத்தர விட்டிருக்கிறான்." என்று எண்ணி னேன். பின்னர் நான் அங்கு அரைக்கணமும் நிற்கவில்லை. மேலே செய்யவேண்டிய காரியங்களை நினைத்து, விஷகன்னிகையை, "சரி. நீ போ" என்று அனுப்பிவிட்டேன்.

"உன் தந்தையாரது மரணம் ராஜ்ரீயமானதால் அதனை நான் நன்றாய் விசாரிக்கக் கருதி அவர் இருந்த கூடாரத் தருகே வந்தேன். அப்பொழுது, கஞ்சுகி ஒருவன், தன் எஜமானனை யெழுப்பி, "ஐய, ஹம்ஸக! என் படுத்திருக்கின்றாய்? எழுக! எழுக!! விரைவினில் எழுக!!! விசேஷம் ஒன்று நடந்திருக்கின்றது: தினம்போல் நமது அரசர் அருணோ தயத்தில் எழுந்து வெளிவரவில்லை: எவளோ ஒருத்தி, சயனக் கிருகத்தி னின்று ஓடுகிறாள். சயன அறையின் முன்பக்கம் கட்டியிருக்கும் கிளி முதலிய பக்ஷிகள் இன்று வழக்கம்போல் சப்திக்க இல்லை. எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. உள்ளே சென்றேன். அரசனுடைய பாதங் களை வருடுவதுபோல தொட்டுப் பார்த்தேன். அவை வாழைத்தண்டு போல் குளிர்ந்தும், பசுமைகண்டும் இருந்தன. அரசரது முகமூடியைத் திறந்து பார்க்க அஞ்சி வெளியே வந்துவிட்டேன். நீ எழுந்து விசா ரிககவேண்டும்" என்றான். ஹம்ஸகன் எழுந்து நிகழ்ந்ததை மற் றொருமுறை கூறச் சொல்லி, உதயகால வாத்தியங்களைக் கோஷிக்கச் செய்து அரசனிருந்த சயனக் கிருகம் நோக்கிச் சென்றான். சென்றவன் வழியில் பக்ஷிகளின் கூண்டுகளைக் கவனிக்கும்போது அவை வெறுமையா யிருக்கக் கண்டான். பிறகு, அவன் பள்ளியறைக்குட் புகுந்து, அரச னது தேகத்தைப் புரட்டிப் பார்த்தான். ஆயினும், பயன் பெறானாய், "ஐயோ அரசர் இறந்து போனாரே! இனி என்ன செய்கிறது!" என்று தனக்குள் புலம்பினான். இதனை நான் என் காதாலே கேட்டேன். அந்த க்ஷணமே திரும்பினேன். உன் கூடாரத்திற் சூழ்ந்திருக்கும் சேனைகளைக் கண்டதும், உன்னை விடுவிக்கும் பொருட்டே ஓட்டமாய் ஓடி வந்தேன். இனி நீ எங்கும் தாமதிக்கக் கூடாது. சீக்கிரமாக நகரம் போய்ச் சேர்" என்று பதறிக் கூறினான்.

---

## இருபத்து மூன்றாவது அத்தியாயம்.

## பாகுராயணன் மலயகேதுவைத் தேற்றுதல்.

பாகுராயணன் கூறிய யாவையும் கவனித்துக் கேட்டு வந்த மலயகேது அவன் பேசி முடிந்தவுடன், விசனம் அடைந்து, வாய்விட்டு அலறி, "ஐயோ! பாகுராயண! என் தந்தை இறந்து விட்டது நிஜம் தானா? ஆ! தெய்வமே! எந்தைக் கிவ்வித ஆபத்தையா உண்டாக்கினாய்?—ஆ? ராஜாதிராஜராகிய தந்தையே! தூர தேசத்திற்கு எங்களை அழைத்து வந்து, சத்துருக்களின் வஞ்சனைக்குட்பட்டு, எந்த உலகம் சென்று இருக்கிறீர்? ஐயோ! ஆபத்துக்குதவாப் பாவியானேன்! அந்திய காலத்தில் தமது சிரத்தை என் துடை மீதிருத்தி, "அப்பா! உங்களுக் கென்ன செய்கிறது? என்ன வேண்டும்? எங்களுக்கு என்ன புத்திமதி யுரைக்கிறீர்?" என்று கேட்கவும் எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே! சிலேட்டுமத்தினால் உலர்ந்திருக்கும் நெஞ்சில் குளிர்ந்த நீர் விட்டு உபசரிக்கவும் உதவாமற் போனேனே! ஐயோ! அப்பா! தாங்கள் நகருக்குத் திரும்பி வருகிறீர்களென்று நினைத்து, என்னைக் கண்டதும் காணுததும் ஆத்திர அவசரத்துடன் அலங்கரித்துக் கொண்டு, கையில் ஆலத்தித்தட்டை யேந்தி "அப்பா எங்கு வந்து கொண்டிருக்கிறீர்?" என்று கேட்கும் என் தங்கை காந்திமாலினிக்கு என்ன உரைப்பேன்? குதூகலத்துடன் சயனக் கிருகத்தை அலங்கரித்துப் புதிய வஸ்திராபரணங்கள் தரித்துத் தமது வரவை விரும்பி எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் அந்தப்புர ஸ்திரீகளுக்கும், எனது அருமைத் தாய்க்கும் என்ன கூறுவேன்! என் முகத்தை எவ்விதம் காட்டுவேன்? என்னைக் கண்டதும், "மஹா ராஜா எங்கே? பின்னால் வருகிறாரா?" என்று பிரஜைகள் சூழ்ந்து கொள்ளுவார்களே! அவர்களுக்கு யாது கூறுவேன?" என்று பல வாறாகப் பிரலாபிக்கலானான்.

இங்ஙனம் புலம்புவோனைப் பாகுராயணன் சமாதானம் செய்து, "ஐயா ராஜபுத்திர! தெய்வ சங்கற்பத்தினால் ஏற்பட்ட ஆபத்திற்கு நாம் என்ன செய்யக்கூடும்? துக்கமடைவதாற் பயனுண்டோ? ராஜ்யத்தை வகிக்கக்கூடிய நீ விசனப்படுவாயாகில் பிரஜைகளும் வர்த்தமடைவார்களே! இதனால் ராஜகாரியம் கெட்டு விடுமே! சத்துருக்கள் உன்னை

உபேக்ஷிக்க இடமுண்டாகுமே! இப்பொழுது உன் சிற்றப்பனாகிய விரோசனன் அவர்கள் கையில் அகப்பட்டு இருப்பான. சூரனாகிய உன்னிடம் சாணக்யனுக்குத் துவேஷமிருப்பதுபோல் அவனிடத்து மிருக்க நியாயமில்லை. ஆகையால் அவனாலேயே உன் தந்தைக்கு நடக்கவேண்டிய ஈமக்கிரியைகள் நடந்துவிடும். இனி ராஜ்யத்தை நிர்வகிக்க வேண்டியவன் நீயே. உனக்கெவ்வளவோ தெரிந்திருக்கும். இருந்தாலும் சிறிது சொல்லுகிறேன் கேள்:—

குடிகள்,

"பகுத்துள முறையினிற் பற்றுவைத்துத், தன்
ஆணையின் வரம்பை அறமதித்(து), அதனுளே
திருப்திகொள் மனத்தனச் செங்கோல் செலுத்திடும்
அரச னிடமே அன்புபா ராட்டுவார்.
தமக்குச் சுதந்தரம் தந் தளித்திடுநற்
றரணி பனுக்கே தம்மன தாரவும்
உவகையுடனும் ஊழியம் செய்வர்."

ஆதலால், "நீ அரசாட்சிபுரியுங்கால் தேச மரியாதைகளை உன் தேகத்தினும் மேலாகப்பேண். உலக நிந்தைக்குப் பயந்து நட. எக்காரியத்தையும் தீர விசாரித்து முடிவு செய். அபராதிகளாயிருப்போர்க்கும், அவர்கள் யோக்யதை யறிந்து தண்டனை விதி. நீயே செய்து தீரவேண்டியவற்றை அதிகாரிகள் செய்யுமாறு விட்டுவிடாதே. அதிகாரிகள் நடத்தவேண்டியவற்றை நீ நடத்த முற்படாதே. இகபர தத்துவங்களை யறிந்து, பாபத்தைக் கண்டஞ்சி விலகும் வித்வான்களின் வாக்கை யனுசரித்து நட. வருபொருளுரைக்கும் வன்மையாளரும் ஸ்வாமி பக்தரும் காரியநிர்வாகிகளு மானவர்களையே மந்திரிகளாக ஏற்படுத்திக்கொள். உசிதமறிந்து காரியம் நடத்தும் அதிகாரிகளுக்கு உற்சாக முண்டாமாறு நிர்வாக மறிந்து சன்மானம் செய்து கொண்டிரு. யோக்கியதைக்குத் தக்க சம்பளம் யாவருக்கும் அளித்து வா. சேனைகளைக் கூடியவரைப் பலப்படுத்து: அரசர்களுக்கு நியாய பலமே பலம். அதற்கடுத்தது ஐசுவரிய பலம் பலமன்று. இதை ஊன்றி நினை. என்றிவ்விதம் அநேக நீதி வழிகளை உபதேசிக்கும் போது, மலயகேது யாவையும் கவனித்துக் கேட்டு, "மந்திரியான சுபரவர்மன் யுத்

தத்தில் மடிந்து விட்டதால், நாம் இனி பாகுராயணனையே மந்திரியாக்கிக் கொள்ளவேண்டும்." என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

இஃதிங்ஙனமிருக்க, பாடலிபுரத்தில் மலயகேதுவின் கூடாரத்தி லிருந்த கஞ்சுகிகள், மலயகேது ஓடியதைப் பர்வதேசனிடம் அறிவிக்கச் சென்றனர். சென்றவர்கள், பர்வதேசனிறந்து கிடப்பதைக் கண்டு, ஒன்றுந் தோன்றாது திகைத்து நின்றனர். அப்பொழுது, ஆயுதங் களை வீசிக்கொண்டு வரும் சந்திரகுப்த சேனையைக் கண்டு "இங்கிருந் தால் நாம் பிழைக்கமாட்டோம்" என்று எல்லோரும் மலயகேது நாடிய பாதையை நோக்கி ஓடலாயினர். பர்வதேசன் தம்பியான விரோசன னும் மற்றொரு திசையில் ஓடினான். சேகரன் முதலிய சேனாதிபதி களும், தம்மிடம் இருக்கும் சொற்ப சைனியத்தால் ஒன்றும் முடியா தென்று உணர்ந்து கொண்டதாலும் "பர்வதேசன் இறந்து மலயகேது ஓடியபின் நமக்கு என்ன காரியம்" என்று எண்ணியதாலும், தாமும் ஓட்டம் பிடித்தனர். ஓடிபோர் மலயகேது விருந்த திட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். அப்பொழுது, தம்முள் எழுந்த வெட்க துக்கங்களை வெளிக்காட்டாதடக்கி, அவர்கள் மலயகேதுவைச் சமயோசித வார்த்தை களால் சமாதானப் படுத்தினர்.

பாகுராயணனும் மலயகேதுவை நோக்கி, "ஐய, ராஜபுத்திர! நல்ல வேளையாய் உன் சேனைகளும் சேனாதிபதிகளும் தக்க சமயத்தில் வந்து சேர்ந்தார்கள். நீ இங்கு தாமதியாமல் உன் தேசம் சென்று, மேல் நடக்கவேண்டிய காரியங்களை நடத்து. நான் இப்பொழுது ஒருவர் கண்ணிலும் படாமல் செல்லவேண்டியிருக்கிறது. ராஜகாரியம் ஏதா வது ஏற்படும் சமயத்தில், உன்னை இன்னொரு சமயத்திற் கண்டு கொள்ளுகிறேன். உனக்கு க்ஷேமமுண்டாகுக. போய் வருகிறேன்." என்றான்.

அதற்கு மலயகேது "ஐய, பாகுராயண! மகத்தான ஆபத்து வேளையில் என்னுயிரைக் காப்பாற்றிச் சத்துரு மத்தியிலிருந்து என்னை மீட்டு வந்துள்ள உன்னினும் எனக்குப் பிராணசிநேகன் வேறுண்டோ?. மகா புத்திமானும் நீதி யறிந்தவனுமாகிய நீ, என்னுட னிருந்து எனக் குச் சமயோசித புத்திகளைப் போதித்துக்கொண்டு மந்திரியாக இருந்து தீரவேண்டும். விடைப்பெற்றுச் செல்ல எண்ணுகிறாயே. இனி சந்திர

குப்தனை அடுத்திருப்பது உனக்குக் கண்ணியமில்லை. நான் க்ஷத்திரியனாதலால் மீண்டும் படைகளைக் கூட்டிச் சென்று, பாடலி புரத்தை முற்றுகையிட்டு, சந்திரகுப்த சாணக்யர்களைச் சங்கரிக்க வேண்டாமோ? அதுவரை என் தந்தைக்குச் செய்யவேண்டிய கிருத்தியங்களைச் செய்யப் போகிறதில்லை" என்றான்.

இவ்வாறு சொல்லிவரும்போதே, முன் நிகழ்ந்த சமாசாரங்களெல்லாம் அவன் நினைவிற்கு ஒன்று பின் ஒன்றாய் வந்தன. வரவும் "நன்றி கொன்றோரும் சிநேகத் துரோகிகளுமான சாணக்ய சந்திரகுப்தர்களின் தலையை இடறிவிட்டே மறுகாரியம் பார்ப்பேன்" என்று கத்தியை யுருவிக் கொண்டு குதிரை மீது தாவினான்.

பாகுராயணன் இது கண்டு தனக்குள், "ஓகோ, சாணக்யாது சாகஸம் வீணாய்விடும்போ லிருக்கிறதே! நமக்கு ஆகவேண்டிய விஷயங்களை அவர் தெளிவாய்த் தெரிவித்தும், நாம் அவ்விதம் செய்யாது போவோமாகில் ஸ்வாமித் துரோகியாய் விடுவோமே" என்று எழுந்து, குதிரைக்குக் குறுக்காகவந்து நின்று, "ஐய, இளவரசே! ஏனோ இவ்வளவு ஆத்திரம்? சுத்தவீரன் ஆபத்துக் காலத்திலும் சம்பத்துக் காலத்திலும் தீர்க்காலோசனை செய்து எக்காரியமும் செய்யவேண்டியிருக்க, புத்திசாலியாகிய நீ இவ்விதம் காலதேச வர்த்தமானங்களொன்றையும் அறியாதும், காரியா காரியத்தை விசாரியாதும் அவசரப்படலாமோ? மந்திரியை அபேக்ஷியாது தானே அதிகாரம் செய்யவெண்ணும் அரசனுடைய அரசாட்சிபோல் அல்லவோ, உன் முயற்சிகள் வீணாய்விடும்? இதனால் அநேக காலமிருந்து கிரமமாக நடந்துவரும் பர்வதேயர்களின் ஐசுவரியத்திற்கு இடையூறு வந்துவிடுமே! இச்சமயத்தில் நீ இவ்விதமாக ஆத்திரப்படல் சரியல்ல. அளவற்ற சைனியத்துடனும் அகங்காரத்துடனுமிருக்கும் சத்துருவை நீ யொருவனாக எதிர்த்துச் சென்றால் வெல்லுவ தெங்ஙனம்? அரசனாயிருப்பவன் எதிரி பலங்குன்றியிருக்கும்போது படையெடுக்க வேண்டுமல்லாது, நினைத்த சமயம் செல்லக்கூடுமோ?

"காலம் அறிந்தாங்(கு) இடம் அறிந்து செய்வினையின்
மூலம் அறிந்து வினை(வு) அறிந்து—மேலும் தான்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்(து)
ஆள்வினை ஆளப் படும்"

என்பதை மனத் திருத்துவாயாக. நீ இப்பொழுது உன் தேசம் சென்று, உனது அரசாட்சியைக் கைக்கொண்டு, உன் தகப்பனிலும் பிரஜைகளையும் சிற்றரசர்களையும் பிரியமாய் நடத்திவந்து, யுத்தத்தில் மடிந்த சேனைகளுக்குச் சரியாக வேறு படைகளைச் சேர்த்துக்கொண்டு, தக்க சமயம் அறிந்து சண்டைக்குப் புறப்படுவாயாகில் உன் காரியம் கை கூடிவிடும். நானே உன் மந்திரியாக இருந்து எல்லாம் நடத்துகிறேன்" என்றான்.

மலயகேது, 'இதுவே சரி' என்று ஒப்புக்கொண்டு, தனது சேனாதிபதிகளுடனும் பிறகாலாட் படைகளுடனும் சேனையுடனும் பாகுராயணனுடன்வரத் தனது ராஜ்யத்தை நோக்கிச் சென்றான்.

---

## இருபத்து நான்காவது அத்தியாயம்.

## சாணக்யனது போலிப் பரிவு.

பாகுராயணனது சூழ்ச்சியால் மலயகேது ஊரினின்று அகன்றதும், சந்திரகுப்தனது வேலைபாட்கள், பர்வதேசன் விடுதியில் நடந்த விசேஷங்களை யறிந்து, அதனைச் சாணக்யனுக் கறிவிக்கச் சென்றனர். சென்றவர்கள், அன்று காலையில் சபையி லுட்கார்ந்திருந்த அவனை நோக்கி, "ஸ்வாமி! நேற்றிரவு நம் பர்வதேச மகாராஜன், முன்பின் அறியாத ஒரு கன்னிகையுடன் சயனக்கிருகம் சென்றார். அருணோதய காலத்தில் எழுந்து வரவில்லை. வழக்கம்போல் அங்கிருந்த கஞ்சுகிகள் காலை வாத்யம் முழங்கினர். அப்பொழுதும் அவர் வெளிவரவில்லை. அவர்கள் பிறகு உள்ளே சென்று பார்த்தனர். அப்பொழுது அவரது உடம்பெல்லாம் நீலநிறம் அடைந்திருந்தது. அக் கன்னிகை காரணமாகவோ, அல்லது வேறு எதனாலோ, அவர் உயிரிழந்து, படுக்கையிற் கிடக்கக்கண்டு, அவர்கள் வியப்பும் விசனமும் அடைந்தனர். இச் சமயம், நமது சேனையைக் கண்டு, தனக் கேதோ ஆபத்து வந்து விட்டதென்று, மலயகேது ஓடிவிட்டான். அவன் பக்கத்திய சேனைகளும் அவனைத் தொடர்ந்து ஓடிவிட்டன. விரோசனனும் மற்றொரு பக்கமாய் ஓடினான். பர்வதேசனிடம் இப்பொழுது எட்டுக் கஞ்சுகிகளும் மெய்காவலர்களான எட்டு ராஜபுத்திரர்களும் மட்டுமே இருக்கின்றார்கள். மற்றவர்கள் எல்லாரும் போட்ட போட்டபடியே போட்டுவிட்டு ஓடியிருக்கின்றனர். எல்லாம் மர்மமாகவே இருக்கின்றன" என்றார்கள்.

இது கேட்டுச் சாணக்யன் தனக்குள், "நான் தர்மஸ்தாபனம் செய்யவேண்டுமென்ற சங்கற்பத்துடனேயே ஆசிரமத்திலிருந்து பாடலிபுரம் வந்தவன். பரம அயோக்கியர்களான நவநந்தர்களின் சம்ஹாரம் என்னால் நிறைவேறிவிட்டது. பர்வதேசனும் மரணம் அடைந்து விட்டான். இதனால் தர்ம மார்க்கத்திற்கு விரோதிகளான நாஸ்திக மதஸ்தர்களின் கொட்டம் அநேகமாய் அடங்கிவிட்டதென்றே எண்ணலாம். அன்றியும், இவர்கள் இருவரது மரணத்தாலும் சந்திரகுப்தனுடைய ராஜ்யாபிஷேகத்திற்கு ஏற்பட்டிருந்த இடையூறுகளில் முக்காற் பங்கு நிவர்த்தியாய்விட்டது." என்று எண்ணி, வந்த ஆட்களை நோக்கி, ஒன்றும் அறியாதவன் போல், "என்ன? திடீரென்று ஏதோதோ உளறுகிறீர்கள்? இன்னமொருமுறை கூறுங்கள்: கன்னிகையாவது? வரவாவது? பர்வதேசன் சாகவாவது? உடம்பெல்லாம் நீலிக்கவாவது? ஒன்றும் விளங்க வில்லையே! இதென்ன ஆச்சரியம்! ஆ! பர்வதேசனா மரணமடைந்தான்? இதென்ன அகால மரணமா யிருக்கிறதே! அவனுக்கு எமன் ஒரு ஸ்திரீ ரூபமாக வந்தானா? பாவம்! பாவம்!!" என்று மூக்கின் மேல் விரலை வைத்து, ஆச்சரியம் கொண்டவன் போல் அபிநயித்துத் திகைத்தவன் எனத் தோன்றினான். அப்புறம், சிறிது ஆலோசிப்பவன் போல் மௌனமாயிருந்து, பிறகு தலையை அசைத்துக் கொண்டு, "ஆ! ஆ!! தெரிந்தது! தெரிந்தது. நேற்று ராக்ஷஸனுக்குச் சிநேகனான க்ஷபணகன் ஒரு அழகியை யழைத்து வந்து, சந்திரகுப்தனுக்கு அளிக்க முயன்றான். நானும் அவளுடைய வடிவழகைக் கண்டு 'இவள் அரசர்களுக்குரியவள்' என்றே மதித்து, சந்திரகுப்தனை நோக்கினேன். அவன், தனக்குத் 'தர்ம பத்தினியே போதும்; போக ஸ்திரீகள் அவசியமில்லை' என்பதைத் தன் நோக்கினால் அறிவித்து விட்டான். ஆதலால், நான் க்ஷபணகனைப் பார்த்து, "இவள் தனக்கு வேண்டியதில்லை என்கிறான் சந்திரகுப்தன். ஆதலால் இவளை நமது மித்திரனை பர்வதேசன் இடமாவது ஒப்புவித்துவிடு" என்றேன். அதன்மேல் க்ஷபணகன், அந்த ஸ்திரீயுடன் வெளியே சென்று விட்டான். பிறகு, இதுவரை நடந்த சமாசாரமொன்றுமே நமக்குத் தெரியவராது. இப்படியா நடந்துவிட்டது? நடந்த யாவையும் யோசித்தால், 'ராக்ஷஸன் விஷகன்னிகையை க்ஷபணகனிடம் ஒப்புவித்து, அவளைக்கொண்டு, சந்திரகுப்தனையோ, பர்வதேசனையோ கொன்றுவிட ஏற்பாடு செய்திருப்பான்'

என்று தெரிகிறது. க்ஷபணகன் ராக்ஷஸனுடைய மித்திரனென்று அறிந்தும், நாம் அவனை நம்பிவிட்டது, நம் புத்திப் பிசகே. நாமும் எவ்வளவோ ஜாக்கிரதையாகத் தான் இருந்தோம். இருந்தும் நம் யோசனைக்கும் தவறுதல் உண்டாகி, அதனால் ராக்ஷஸனுடைய எண்ணம் நிறைவேறிவிட்டதே! சந்திரகுப்த பர்வதேச ரிருவரும் நமக்கு இரு கண்கள். ஆகவே, இப்பொழுது நம் ஒரு கண் ஊனமடைந்து, ராக்ஷஸனுக்குச் சந்தோஷத்தை விளைவித்து விட்டதே!—ஹூம் இனி மீறிப்போன விஷயத்தைக் குறித்துக் கவலைப்படுவதில் என்ன பிரயோசனம்? மலயகேதுவுக்குக் கூட ஏன் புத்தி இப்படிப் போய் விட்டது? கணக்கிட்டுப் பார்க்கும் நிமித்தம் வந்திருந்த சைனியங்களைக் கண்டு பயந்து, சிறு பிள்ளைத்தனமாக வன்றோ ஓடி விட்டான்? அவன் தான் ஓடினன்; விரோசனனுமன்றோ சிறிதும் யோசியாமலும், நம்மைக் கண்டு விஷயமுணர்ந்து கொள்ளாமலும் அறிவழிந்து ஓடி விட்டான்." என்று சபையி லுள்ளவர்களை நோக்கிக் கூறினன்.

பிறகு, சிறிது நேரத்துக்கெல்லாம் அவன் எழுந்து, "எல்லாவற்றிற்கும் நேரிற் சென்று யாவையும் பார்ப்போம்" என்று சந்திரகுப்தனை அழைத்துக்கொண்டு பர்வதேசனது கூடாரம் வந்து சேர்ந்தான். அங்கு, தன் அறையில் அரியேற்றால் அடிபட்டு விழுந்துள்ள மதயானைபோல் உயிரிழந்து விழுந்து கிடக்கும் பர்வதேசனைக் கண்டு, "ஐய, மன்ன! உனக்கிவ்வித அவஸ்தை நேரிடலாமா? நீ எங்களுக்குச செய்த உதவியை மறக்க முடியுமோ? ஏதோ சிறிதேனும் பிரதி யுபகாரம் பெற்றுக்கொள்ளாமல், அகால மரணத்திற் குள்ளானயே! இது எங்கள் துரதிர்ஷ்டமே" என்று ஜனங்கள் முன்னிலையில் கண்ணீர் விட்டுப் புலம்பி, அங்கிருந்த ராஜ புத்திரர்களைக் கொண்டு பர்வதேசனுக்கு மதாசாரப்படி ஈமக்கிரியைகளைச் செய்வித்தான். பர்வதேசன் தரித்திருந்த உயர்ந்த ரத்னாபரணங்களைப் பொக்கிஷத்தில் பத்திரப்படுத்துமாறு கட்டளையிட்டான். பிறகு சாணக்யன் அவ்வரசனுக்கு நற்கதியுண்டாகும் படி யதேஷ்டமாய் ஸ்வர்ண, வஸ்திர, வாகனம் முதலியவற்றை அந்தணர்களுக்கும், பிறர்க்கும் தானமாக அளித்துச் சந்திரகுப்தனுடன் கங்கையில் ஸ்நானம் செய்து, தனது இருப்பிடம் வந்து சேர்ந்தான்.

மறுநாள், சாணக்யன் சபைக்கு வந்து தனது பக்கத்தில் நின்ற ஒருவனை யுற்று நோக்கி, "அடா! நேற்றுக் கணக்கெடுக்கும் பொருட்டு

வரவழைக்கப்பட்டிருந்த சேனைகளைக் கணக்கிட் டாயிற்று?" என்று கேட்டான். சாணக்யனது மனோபாவ மறிந்த அவன், "ஸ்வாமி நேற்றுப் பர்வதேசருடைய தண்டில் நடந்த விசேஷத்தினால் படைகளைக் கணக்கிட முடியவில்லை. உத்தரவானால் இன்று முதல் கணக்கிடலாம்." என்றான். அதற்குச் சாணக்யன், "நல்லது. கணக்கிடும்போது எல்லோருக்கும் சம்பளம் அளித்து, சேனையாட்களில் வந்தவர்கள் வாராதவர்களைக் குறித்து வருக" என்று கட்டளையிட்டு அவனை அனுப்பினான்.

---

## இருபத்தைந்தாவது அத்தியாயம்.

## சாணக்யனது சந்தேகங்கள்.

யாவரையும் அனுப்பியபின், சாணக்யன், தனக்குள், "ராக்ஷஸன் சந்திரகுப்தனைக் கொல்லுமாறு 'விஷகன்னிகை' யை யனுப்பி யிருந்தான். அதை எவ்விதமோ அறிந்து அவனைக் காத்து அவளைப் பர்வதேசன் அடையுமாறு செய்தேன். ஆயினு மென்ன? ராக்ஷஸன் சந்திரகுப்தன் மீது தீர்க்க துவேஷங் கொண்டவனாகையால் எவ்விதத்திலும் அவனைக் கொல்லவே வழி தேடுவான். இன்னும் என்னென்ன சூழ்ச்சிகள் செய்துளானோ? இதற்கென்ன செய்யலாம்?" என்று யோசித்தான். பிறகு, அவன், சத்துருக்களின் சூழ்ச்சியாலும் கொடுமையாலும் பொதுவாய் அரசர்க்கு நேரக்கூடிய ஆபத்துக்களைக் குறித்து நெடுநேரம் சிந்தித்து, ஒரு முடிவுக்கு வந்தான்.

கடைசியில், அவன் சில ஆட்களை யழைத்து, "இந்தச் சுக்ல பக்ஷ தசமியாகிய புதன்கிழமையன்று, சந்திரகுப்த மஹாராஜாவுக்குப் பட்டாபிஷேக மஹோத்ஸவம் நடக்கிறது. ஆகையால் பட்டணத்தை அலங்கரித்திடுக. தெருக்களில் மகர தோரணங்கள் கட்டுக. அரமனை வாயில்களை நன்றாய்ச் சித்திரிக்க. அரசரது விடுதியை ஒப்பனை செய்க. அபிஷேக சாமான்களைத் தயாரித்து வைத்துக் கொள்க' என்று நகர் முழுதும் பறையறைக" என ஆக்ஞாபித்தான். அவர்கள் அங்ஙனமே செய்தனர்: எங்கும் பனி நீர் தெளிக்கப்பட்டது. சித்திர விசித்திர தோரணங்களிடப்பட்டன. வாழை கமுகுகளாலும் தென்னங் குலைகளாலும் புஷ்ப மாலைகளாலுங் குஸுமபுரம் அலங்கரிக்கப்பட்டு 'அமராவதியோ' 'அளகாபுரியோ,' வென, கண்டோர் பிரமிக்கும்படி விளங்கிக் கொண்டிருந்தது.

இச்சமயம் முன் ராக்ஷஸனால் நியமிக்கப்பட்டிருந்த சிற்பியான தாருவர்மன் அரமனை வாயிலில் தேவவிமானம் போல் மேற்கட்டியை யலங்கரித்து, அதனிடையில் யந்திரம் ஒன்று வைத்து, வேலை செய்தான். இது ஜனங்கள் கண்ணில் படாமலிருக்கும்படி விசித்திர தோரணங்களையும் பூங்கொத்துகளையும் தொங்கவிட்டு, முத்துச் சரங்களை இசைத்திருந்தான். அதில் பார்ப்பவர் பிரமிக்கும் வண்ணம் நாட்டிய மாடும் சூஸ்திர பொம்மைகளைக் கட்டி, நேத்திரானந்த முறச் செய்தான். இவை யாவும் செய்து முடித்ததும், அவன் சாணக்யனைக் கண்டு நமஸ்கரித்து, "ஸ்வாமி! ராஜத் துவாரம் அலங்கரிக்கப்பட்டுச் சித்தமாயிருக்கிறது" என்றான்.

சாணக்யன் ஆச்சரியமுற்று, "நல்லது தாருவர்ம! எவ்வளவோ நாள் பிடிக்குமே இவ் வேலை? பணச் செலவும் பிரமாதமாகுமே? இவ்வளவு சீக்கிரமாய், நான் அறிவிப்பதற்கும் முன்னம் நீ எவ்வாறு செய்து முடித்தாய்?" என்று கேட்க, அச் சிற்பி, "ஸ்வாமி! தங்கள் உத்தரவாகு முன்னதாகவே தங்கள் கடாக்ஷத்திற்குப் பாத்திரனாக வெண்ணி நான் கற்ற சிற்பவித்தை சாமர்த்தியம் முழுமையும் உபயோகித்து, நன்கு அலங்கரித்திருக்கிறேன். மகா ஸ்வாமிகள் கடாக்ஷித்து என்னை யனுக்ரஹிக்க வேண்டும்" என்றான்.

சாணக்யன், தன் மனதில், "ஓகோ! நாம் சொல்லும் முன்னமே இவன் தானாகவே பெரும் பொருள் செலவழித்து அரமனை வாயிலை அலங்கரிக்கக் காரணம் என்ன? இது 'ராக்ஷஸனுடைய மோசம்' என்றே தோன்றுகிறது. நான் ஊகித்தபடியே தலை வாயிலில் ஏதோ கிருத்திரமம் செய்யப்பட்டிருக்கவேண்டும். இருக்கட்டும். எது வரினும் வருக. பழி எல்லாவற்றையும் ராக்ஷஸன் தலையிற் சுமத்தி விடுகிறேன். அவன் செய்யும் ஒவ்வொன்றாலும் நான் காரியானுகூலம் பெற்றுச் சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கிறேன். எனக்கு அனுகூலமாகவே ராக்ஷஸன் செய்யும் ஒவ்வொரு வேலையு முளது: அரும்பாடுபட்டு விஷகன்னிகையை அவன் வளர்த்ததினால் பர்வதேசனது தொல்லை ஒழிந்தது. இனி என்றேனும் 'பர்வதேசனைச் சாணக்யன் வஞ்சனையாற் கொன்று மலயகேதுவையும் வெருட்டித் துரத்திவிட்டான்' என்று எவரும் சொல்லாமலிருக்கும் வழியைத் தேடிக் கொள்ள எனக்கு இதுவே

தக்க சமயம்" என்று தீர்மானித்து, "ஐய, சிற்பியே! நாம் சொல்லும் முன்பாகவே நமது அபிப்பிராயத்தை அறிந்து நீ காரியத்தை ஒழுங்கு பெறச் செய்து முடித்தது பற்றி மிகவும் சந்தோஷம். சந்திரகுப்த னுக்குப் பட்டாபிஷேக மானபின், உனது சமார்த்தியத்திற்குத் தக்க பலனை நீ அவசியம் அடைவாய்" என்றுரைத்துத் தாம்பூலமளித்து, அவனை அனுப்பினன்.

---

## இருபத்தாறுவது அத்தியாயம்.

## விரோசனனது மரணம்.

தாருவர்மனை அனுப்பியபின், சாணக்யன், பாகுராயணன் தம்பி யான வத்ஸலாயனனை வரவழைத்து, அவனிடம் சில ரகஸ்யமான செய்திகளைச் சொல்லி அனுப்பினன். அவன், உடனே குதிரையேறிச் சென்று, தன் தேசம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பர்வதேசன் தம்பி யான விரோசனனைக் கண்டு, மரியாதை செய்து, ஓர் இடத்தில் உட்காரச் செய்து, "ஐய, விரோசன! நான் சொல்லும் விஷயங்களை உண்மையாகவும் பிரியமாயும் நீ நம்பவேண்டும்: சாணக்யர் உன்னை இந்த க்ஷணமே அழைத்து வரும்படி என்னை யனுப்பினுர். உன் தமையனுக்குப் பாதி ராஜ்யம் கொடுப்பதற்குமுன் அவர் ராக்ஷஸன் செய்த மோசமறியாது, விஷகன்னிகையால் மாண்டுவிட்டார். மலயகேதுவும் விஷயமின்ன தென்று விசாரிக்காமலே சிறுபிள்ளைத் தனமாய் ஓடிவிட்டான். நீயாவது அங்கிருக்கக்கூடாதா? பூமாலையைக் கண்டு பயந்து பாம்பென நினைத்து ஓடுவோரைப்போல் ஓடிவிட்டாயே! 'பர்வதேசனைச் சங்கரித்தால் மட்டுமே சந்திரகுப்தனுக்குப் பக்கபலம் குறையும்' என்று அமாத்திய ராக்ஷஸன் செய்த சூழ்ச்சியால் உன் தமயனுர் இறந்தனர்' என்ற உண்மையை நீ யறி யாமல் சாணக்ய சந்திரகுப்தர்களுக்கு லோகாபவாதத்தை யுண்டாக்கி விட்டு, இவ்விதம் வரலாமோ? உனது தமையனுர்க்குரிய ராஜ்யத்தை உனக்காவது கொடுத்த பின்புதான், சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷேகம் நடத்த வேண்டியிருக்கிறது. ஆகையால், சீக்கிரமாக நீ எங்கிருந்தாலும் அழைத்து வருமாறு சாணக்யர் என்னை அனுப்பியிருக்கிறுர். நீ இந்த க்ஷணமே என்னுடன் வரவேண்டும். காலந்தாழ்ப்பின் முகூர்த்தம் தவறி விடும். ஆகையால் தயைசெய்து உடனே வருக" என்றுன்.

இது கேட்டு விரோசனன், 'வத்ஸலாயனன் மொழிந்தவை யாவும் உண்மை' யென்றே எண்ணி, அவனுடன் பாடலிபுரம் வந்து, சாணக்ய னைக் கண்டு நமஸ்கரித்தான். சாணக்யன் அவனை ஆசீர்வதித்து, உட் காரச்சொல்லி, "ஏன், ஐய, விரோசன! லோகாபவாதத்திற்கு என்னை ஆளாக்கி, மலயகேதுவைப்போல் சொல்லிக்கொள்ளாமல் நீயும் ஓடலாமா? இந்த மட்டாவது நீ திரும்பி வந்து என் காரியத்தையும் சபதத்தையும் ஸ்திரப்படுத்தியது பற்றி நான் மிகவும் நன்றியுள்ளவனாக யிருக்கின்றேன். புதன்கிழமை சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டியிருப் பதால், முந்தி நான் வாக்களித்த பிரகாரம் பாதி ராஜ்யாபிஷேகம் உனக் குச் செய்துவிடுகிறேன். பிறகு நீ யதை மலயகேதுவிற்குக் கொடுத் தாலும் சரி. நீயே வைத்துக்கொண்டாலும் சரி. நான் என் வாக்கை நிறைவேற்ற வேண்டியது முக்கியம்" என்றான். விரோசனன் அது கேட்டு, அங்கம் பூரித்து அகமகிழ்ந்தான்.

இவ்விதம் சாணக்யன் ரகஸ்யத்தில் விரோசனனைக்கண்டு பேசி, அவனது பட்டாபிஷேகத்துக்குப் புதன்கிழமை லக்னம் வைத்து, அவனை அவன் விடுதிக்கு அனுப்பினான். ஆயினும், அவன் 'சந்திர குப்தனுக்குப் பட்டாபிஷேகம்' என்றே பிரஸ்தாபிக்க வேண்டுமென்று நம்பிக்கையுள்ள பலர்க்கும் கட்டளையிட்டான். தான் குறித்த வேளைக் குச் சின்னாழிகைக்குமுன் விரோசனனுடனும் பரிவாரங்களுடனும் அவன் சந்திரகுப்தனை அழைத்துக்கொண்டு, நகருக்குள் சென்றான்.

சந்திரகுப்தனுக்குச் சமவயதுள்ளவன் விரோசனன். அழகிலும் அவனை நிகர்ப்போன். கம்பீர தோற்றமுடையான். அவனைச் சந்திர குப்தனது வஸ்திராபரணங்களால் அலங்கரித்தான் சாணக்யன். நவ ரத்ந கசிதமான கவசம் தரிக்கச் செய்தனன். உயர்ந்த பாட்டாடை சுற்றினான் அவனுக்கு. சந்திரகுப்தனது பரிவாரங்களை அவனைச் சூழ்ந்துவரச் செய்தான். பிறகு அவனைச் சிம்மாதனத்தி லுட்கார்த்தி, கங்கா தீர்த்தத்தாலும், புஷ்பங்களாலும் அபிஷேகம் செய்வித்தான். செய்திருந்த ஏற்பாட்டின்படி, வந்தியர் மாகதர் 'ஜய! ஜய!' வென்று ஸ்துதி கூறினர். பிறகு சாணக்யன், "நந்தர்கள் ஏறும் பட்டத்து யானையை அலங்கரித்து, அதன்மேல் விரோசனனை யுட்கார்த்திப் பரி வாரங்களையும் ராஜ மரியாதையையும் அவன்பின் அனுப்பித் தான் சந்

திரகுப்தனுடன் கால் நடையாகவே பின்னால் வந்து கொண்டிருக்கலானான். இவ்வித வைபவத்துடன் விரோசனன் பவனி வரும்போது, சகல ஜனங்களும் சந்திரகுப்தனே யானைமீது வருகிறான்' என்று எண்ணி இருந்தார்கள்.

பட்டத்து யானை தலைவாயில் அருகில் வரும்போது, சாணக்யன் தன்னுடன் வரும் சந்திரகுப்தனைப் பார்த்து, "குழந்தாய்! இங்கு ஒரு விசேஷம் நடக்கப் போகிறது. அதை இங்கேயே நின்று பார்த்துக் கொண்டிரு" வென்று உரைத்தான். அதற்குள் யானை ராஜ துவார மத்தியில் மெள்ளச் சென்றது. அப்பொழுது, கையிலுள்ள வாத்யங்களை மீட்டிக்கொண்டு சில பதுமைகள் நாட்டியமாடின. சில விசிறி வீசின. சில புஷ்பம் சொரிந்தன. சில பனிநீர் தெளித்தன. இவை இங்ஙனம் உபசரிக்க, யானை, அங்கு சிறிது நேரம் நின்றது. ஜனங்களெல்லாரும் மேற்கட்டியிலிருந்த விசித்திரப் பதுமைகளை நோக்கியவண்ணமாய் நின்றார்கள்.

அச் சமயம் ராக்ஷஸனால் ஏவப்பட்டு, அங்கு ஒளிந்திருந்த சிற்பியான தாருவர்மன், 'இதுவே தக்க சமயம்' என்று தன் கையிலுள்ள ஆயுதத்தினால் மேல் யந்திரத்தை ஓங்கி யடித்தான். அதே சமயத்தில், முன் ராக்ஷஸன் சொல்லியிருந்த பிரகாரம் 'பர்பரகன்' என்ற மாவுத்தன், 'சந்திரகுப்தனைக் குத்திக் கொல்ல இதுவே சமயம்' என்று, கைக்கடியில் சொருகி மறைத்து வைத்திருந்த கத்தியை உருவினான். இச் சத்தம் கேட்டுப் பட்டத்துயானை தன்னை 'அங்குசத்தினால் பாகன் குத்தப் போகிறான்' என்று பயந்து, இரண்டடி பின்னே சென்றது. செல்லவே, தாருவர்மனால் உயரவிருந்து தள்ளப்பட்ட இரும்பு குண்டானது, யானைப் பாகனான பர்பரகன் தலையில் படீரென்று விழுந்தது. விழுந்த அந் நிமிஷமே, அவன் மண்டை யுடைந்து, உயிரிழந்து, யானைமீதிருந்து கீழே விழுந்துவிட்டான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சிற்பி, "ஆ! என் பிரயத்தினமும் ராக்ஷஸனது எண்ணமும் வீணாயினவே. இனி நான் பேசாதிருந்தாலும் உயிருடனிருக்க முடியாது. எப்படியும் சாணக்யன் என் செய்கையை அறிந்து கொள்வான். எனக்குச் சாவு நிச்சயம். சாகும்போது எனது எஜமானராம், ஓகப்புரிந்து வருபவரும், இனியும் புரியக்கூடியவருமான ராக்ஷஸருக்குச் சத்துருவாகிய

சந்திரகுப்தனைக் கொன்றுவிட்டு, நான் ஏன் சாக லாகாது? அங்ஙனம் சாவதே மேன்மை. நான் 'சத்துருவைக் கொன்று உயிர்விட்டேன்' என்பதை ராக்ஷஸர் அறிவாராகில், நன்றியறிவு மிக்க அவர், என் பெண்டு பிள்ளைகளை அவசியம் காப்பாற்றுவார். நான் வீணில் உயிர் விடுவதால் யாது பயன்?" என்று நிச்சயித்துத் தன் கையிலிருந்த இருப்புச் சம்மட்டியால் சந்திரகுப்தனென்று தான் நினைத்திருந்த விரோசனன தலையில் ஓங்கி யடித்தான். அடித்ததும், பாவம்! விரோசனன் உதிரம் கக்கி உயிரிழந்தான்.

கண்மூடிக் கண் திறப்பதற்குள் நடந்த இக் கொடுங் காட்சியைக் கண்டு பயந்து, ஜனங்கள் சிதறி ஓடினர். நிகழ்ந்தவற்றால் நேர்ந்த பேரிரைச்சல்களைக் கேட்டு, மதயானை மறுகி, நாலுபக்கங்களிலும் சுற்றிச் சுழன்றது. இக் கலவரையில் விரோசனனது மெய் காவலரான ஈட்டி வீரர்கள், தமது ஈட்டியால் தாருவர்மனைக் குத்தி வீழ்த்தினர்.

அப்பொழுது சாணக்யன், சந்திரகுப்தனைப் பார்த்து, "ஆ! ஆ!! இந்த விரோசனனும் ராக்ஷஸனுடைய கபடத்திற் குட்பட்டு விட்டான் பார்! இனி நாம் செய்வது என்ன?" எனத் திகைத் தேங்கினவன் போற் கூறினான். அப்பொழுது, பலர், மாண்டவன் விரோசனன் என்றும், தமக்கு ஏற்பட்டிருந்த ஒப்பந்தப்படி பர்வதேசனுக்குப் பதிலாக அவ் விரோசனன் பாதி ராஜ்யாபிஷேகம் பெறவும், உரிமைப் பிரகாரம் மூந்தி பவனி வரவும், உத்தமனான சாணக்யன் ஏற்பாடு செய்திருந்தானென்றும், சந்திரகுப்தன், தானே அரசுரிமை பெற்றவனாயினும், மூந்தி முடி சூடாமல், பர்வதேசனது கடனைத் தீர்க்கவே, அவனுக்குரிய பாதியை அளிக்க எண்ணிக் கால்நடையாக விரோசனனுக்குப் பின்னால் வந்து கொண்டிருக்கிறானென்றும் பேசிக் கொண்டனர். வேறு சிலர் நிகழ்ந்தவற்றைப் பற்றிப் பல்வேறு விதம் பேசிக்கொண்டு தத்தம் இருப்பிடம் சென்றனர்.

---

## இருபத்தேழாவது அத்தியாயம்.

## கட்டிட சோதனை.

சாணக்யன், இரத்தமயமான அவ்விடத்தைச் சுத்தம் செய்யும்படி வேலையாட்களை நியமித்துச் சந்திரகுப்தனுடன் சென்று, 'அவனுக்கு' என்று ஏற்படுத்தப் பட்டிருந்த கட்டிடங்களைச் சோதிக்கலானான். அப்பொழுது ஒரு ஆளுயரத்தில் படம் ஒன்று மாட்டியிருப்பது கண்டு, சந்தேகித்துப் பக்கத்திலுள்ளவர்களை நோக்கி, "விடியற்காலையில் தரிசிக்குமாறு கட்டப்பட்ட இந்த ஸ்வாமி படத்தை இடது பக்கம் வைத்தவன் யாவன்? அதனை யெடுத்துக் கட்டிலின் வலப்புறம் கட்டுங்கள்" என்றான். அவனிட்ட கட்டளைப்படி அச் சித்திரப்படத்தை அவர்கள் கழற்றியதும், அதற்குப் பின்னால் ஒரு ஆள் நிற்கும்படியான பிறை ஒன்றும் சாணைபிடித்த புதிய கத்தி ஒன்றும் காணப்பட்டன. அக் கத்தியைக் கையி லெடுத்துக்கொண்டு, சாணக்யன் சுற்றிப்பார்த்து வரும் போது, நிலைக்கண்ணாடியின் கீழிருந்து, எறும்புகள் வரிசை வரிசையாகச் சோற்றுப் பருக்கைகளைக் கவ்விக்கொண்டு ஊர்ந்துவரக் கண்டான். இதனால் "கண்ணாடியின் பின்னால் எவனோ யிருக்கிறான். கண்ணாடியைக் கழற்றுங்கள் பார்ப்போம்" என்றான் சாணக்யன்.

அங்கு கன்னவாச லொன்று இருந்தது. அதை ஆட்கள் சோதிக்கும்போது, ராக்ஷஸன கட்டளைப்படி பாவன பாலகனால் நியமிக்கப்பட்டு அங்கு ஒளிந்திருந்த ஆயுதபாணிகளான வீரர்கள், உட்சுரங்க வழியாக இறங்கிச் செல்ல ஆரம்பித்தார்கள். அது கண்டு சாணக்யன் அப்பொழுது நிறைய வைக்கோலையும் விறகுத் தூள்களையும் நிரப்பி, நெருப்பு மூட்டச் செய்து அச் 'சுரங்க வெளிவாயிலில் என்ன விருக்கிறது' என்று விசாரித்து வரக் கட்டளை யிட்டான். அங்கிருப்பது 'ராக்ஷஸனுடைய குதிரை லாயம்' என அறிந்து, அக் கட்டிடத்திற்கும் நெருப்பை மூட்டச் செய்தான். இருபக்கமும் நெருப்பிடப்பட்டு வெளி வர முடியாமல் புகையினால் திணறி அங்கிருந்த ஆட்கள் அனைவரும் மாண்டனர். "இவையாவும் சோதித்துச் சுத்தம் செய்யுங்கள்" என்று அங்கிருந்தோருக்குச் சாணக்யன் கட்டளையிட்டான்.

பிறகு அவன் அங்கு அகப்பட்ட கத்தியை எடுத்துக்கொண்டு எஞ்சிய இடங்களைப் பரிசோதித்துத் திரும்பும்போது, சூரியோதய மாகவே, காலைக் கடனை முடித்துக்கொண்டு சந்திரகுப்தனைக் 'குமார பவன' த்திலேயே இருக்கும்மாறு கட்டளை யிட்டுத் தனக்கு ஆப்தர் களான ஜனங்களை அவனுக்கு மெய்காவலராக நியமித்து, அக்கட்டிடத் திற்கு அருகிலிருந்த பூந்தோட்டத்தில் தனக்குப் பர்ணசாலை அமை க்குமாறு ஏவினன். பிறகு அவன் தனது ஆட்களை நோக்கி, "விசு வாசத்துடன் வேலை பார்ப்போரே! இங்கு வேடிக்கை பார்க்க வரும் ஜனங் கள் ஒவ்வொருவரிடமும் இக் கத்தியைக் காண்பியுங்கள். இதனைக் கண்டவுடன் முகம் மாறுவோரை அழைத்து வாருங்கள்" என்று உத் தரவிட்டான். அவ்விதமே அவர்கள் உண்மை யறிய முயன்றனர். அப்பொழுது, விலையுயர்ந்த உடை தரித்த ஒருவனைக் கண்டு சந்தேகி த்து, அவனைப் பிடித்துச் சாணக்யன் முன் நிறுத்தினர். சாணக்யன் அவனுடைய நிலைமையைக் கண்டு, "இது உன்னுடையது தானா?" என்று கத்தியைக் காட்டிக் கேட்க, அவன், "என்னுடையதன்று" என்று நடுங்கிக் கூறினன். "சரி நீ யார்? உனக்கு என்ன தொழில்?" என்று மறுபடி சாணக்யன் அவனை வினவ, அதற்குள்ளே, அவனது சமீபத்திலிருந்தவர்கள் "ஸ்வாமி! இவனுக்கு அரமனையில் ஐந்து வரா கன் சம்பளம். இது வரையில் இவன் சாப்பாட்டுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவன். இப்பொழுதோ இவன் வீட்டில் நாற்பது ஜனங் கள் இருக்கிறார்கள். இருபது சேவர்களும் இருக்கிறார்கள். நடவிடர் களுக்கும் தாசிகளுக்குமாக இவன் நூறு வராகன்போல் பிரதி தின மும் செலவழிக்கிறான்" என்றார்கள்.

சாணக்யன் அது கேட்டு, "உனக்கு இவ்வளவு செலவிற்கும் பண மேது?" எனப் "பிரபுவின் கடாக்ஷத்திற்குப் பாத்திரமாயிருப்பவர்களுக் குச் செலவு செய்யப் பணம் கிடைப்பதரிதோ?" என்றான் அவன். பின்னர், சாணக்யன், சாணை பிடிக்கும் தொழிலாளிகள் அனைவரையும் வரவழைத்துக் கத்தியைக் காட்டி, "இது யாருடையது? யார் வேலை செய்து கொடுக்கச் சொன்னது?" என்று விசாரித்தான். அவர்களில் ஒருவன், "மகா ஸ்வாமி! இந்தா நிற்கிறாரே இவர்க்கு நான்கு தினங்களு க்கு முன் இதைச் சாணை பிடித்துக் கூராக்கிக் கொடுத்தேன். எனக்கு

இரண்டு வராகன் கூலி கொடுத்தார்" என்று அங்கு நின்ற கற்கடனை யே காண்பித்தான்.

சாணக்யனுக்கு வந்து விட்டது கோபம். அவன் கற்கடனை நோக்கி, "அடா துஷ்டா! இப்பொழுதாவது உண்மையை விளம்பு. இல்லையேல்,——" என்று அதட்டிக் கேட்டதும், அவன் பதறி நடுங்கிக் கொண்டு, "ஸ்வாமி! நான் ராக்ஷஸரது வேலையாள்; ராக்ஷஸர் எனக்கு அளவற்ற திரவியம் அளித்துச் சயனக் கிரகத்திலிருந்த அப் பிறையில் ஒளிந்திருந்து, சந்திரகுப்தர் தூங்கும் சமயத்தில், அவரைக் கொன்று விடு" என்று இந்த ஆயுதத்தையும் எனக்குக் கொடுத்திருந்தார். நான் அதை அங்கேயே வைத்து விட்டுத் தக்க சமயத்தை எதிர் பார்த்திருந்தேன்" என்று உண்மையைக் கூறினான். சாணக்யன் அவனுக்குத் தக்க சிக்ஷை விதித்து, "இக் கட்டிடங்களுக்கு அதிகாரியான பவனபாலகனை யழைத்து வாருங்கள்" என்று சிலர்களுக் கட்டளை யிட்டான்! அவர்கள் அவனை எங்கும் தேடியும் காணமுடிய வில்லை. இச் செய்தியை அவர்கள் சாணக்யனிடம் அறிவித்தனர்.

---

## இருபத்தெட்டாவது அத்தியாயம்.

## செய்தவினை செய்தவனைச் சார்தல்.

சாணக்யன் ஜாக்கிரதையுடனும் தக்க சூழ்ச்சிகளுடனுமிருந்து சந்திரகுப்தனைக் காத்து, ராஜ்ய விஷயங்களை நடத்திவரும்போது, ஒரு நாள் ராஜ வைத்திய னொருவன், சாணக்யனைக் கண்டு நமஸ்கரித்து, "மஹா ஸ்வாமி! நான் அரமனையில் நெடுநாளாக வைத்தியத் தொழிலிலிருந்து கொண்டிருப்பவன். தங்களிடமும் ஊழியம் செய்து கீர்த்தி பெறும்பொருட்டு வந்தேன்" என்று சொல்லி, எப்போதும் சாணக்ய சந்திரகுப்தர்களை விட்டு அசையாமல், அவர்களுக்கு அதி நம்பிக்கைக் குரியவனாக நடந்து வந்தான்.

இவனது அளவுக்கு மிஞ்சிய வணக்கத்தைக் கண்டு, சாணக்யன், தனக்குள், "ராஜவைத்தியர் பலரிருக்கும்போது, இவனொருவன் மட்டும், அறுபது நாழிகையும் சந்திரகுப்தனை விட்டசையாமல் காத்துக்

கொண்டிருக்கக் காரண மென்ன? இவனைப் பரீக்ஷித்துப் பார்த்தல் அவசியம்" என்று எண்ணி, ஒரு நாள் அவனை நோக்கி, "ஐய, வைத்தியரே! பதினைந்து நாளாகச் சந்திரகுப்தனுக்குச் சரியான சாப்பாடு நித்திரை இல்லை. தேகத்தில உஷ்ணம் அதிகரித்துக் காங்கை ஏற்பட்டிருக்கிறது. அவன் கை நாடியைப் பார்த்துத் தக்க மருந்து அளித்துச் சீக்கிரம் குணப்படுத்தும்" என்று கூறிச், சந்திரகுப்தனை நோக்கி, "அரசே! இவர் சம்பிரதாய மறிந்த வைத்தியர். நெடுநாளாக இவ்வரபனை யிலிருந்து வருகிறார். இவரிடம் கைகாண்பித்தால் உள்ளது உள்ளபடி அறிந்து உனக்கு மருந்தளிப்பார். நீ அதைச் சாப்பிடு. குணம் காண்பாய்" என்றான்.

வைத்தியன் சந்தோஷித்து, அரசனது நாடியைப் பார்த்து, "பித்தம் அதிகரித்துள்ளது. அக்கினிதீபனம் குறைந்துள்ளது. அது காரணம் பற்றி ஆகாரத்தில் துவேஷ முண்டாயிருக்கிறது. இதற்குக் கடுமையான மருந்து கொடுக்கக் கூடாது. ஒரே வேளை சாமானிய மருந்து கொடுத்தே குணப்படுத்தி விடுகிறேன்" என்று தான் தயாரித்து வைத்திருந்த 'யோக சூரண'த்தை எடுத்தான்.

அது ஒரு விஷசூரணம். அதனை எடுக்கவும், அவனிடம் நம்பிக்கையற்ற சாணக்யன், தனது சிஷ்யனொருவனை யழைத்து, "நமது மடிஸஞ்சிகையிலிருக்கும் கிண்ணத்தை யெடுத்துவா" என்றான். சிஷ்யன் அதனை உடனே எடுத்துச் சாணக்யனிடம் கொண்டுவந்து வைத்தான். அது 'விஷதர்சினி' என்ற ஒருவித கல்விசேஷத்தால் செய்யப்பட்ட கிண்ணம். அதன் விசேஷமறியாத வைத்தியன் அக்கிண்ணத்தில் தனது சூரணத்தைப்போட்டுத் தண்ணீர் விட்டுக் கரைத்தான். உடனே அக் கற்கிண்ணம் கறுத்தது. நீர் நுரைத்துச் சிற்சில பொடிக் கட்டிகளுடன் கொதித்துச் சுழன்று கொண்டிருந்தது. விஷப்பரீக்ஷை நன்கறிந்த சாணக்யன், அக்கிண்ணத்தைத் தலைகீழாய்க் கவிழ்த்தான். அப்பொழுது அதிலிருந்து ஒரு திவிலையும் கீழ் விழாது நின்றது. இது கண்டு, அவன் வைத்தியனைப் பார்த்து, "ஐய, வைத்தியரே! இம்மருந்து கூடிய சீக்கிரம் குணப்படுத்தக் கூடியதென்றே தோன்றுகின்றது. எப்படி யிருந்தாலும், சமயற்காரர்களையும் வைத்தியரையும் முன் பரிசோதியாது அரசர்கள் எதையும் உட்கொள்ளக் கூடாது. ஆகையால் இம்

மருந்தை நீர் இப்பொழுது சாப்பிடும். நாளை அரசனுக்குக் கொடுக்கலாம். இச் சூரண மிகுதியை என்னிடம் தாரும்" என்றான். அரசனது முன் னிலையில் மந்திரி வார்த்தையை மீறமுடியாமல், அவன் அம் மருந்தின் மிகுதியைச் சாணக்யனிடம் தந்து, கிண்ணத்திலிருந்ததைத் தான் உட் கொண்டான்.

சாணக்யன் உடனே அவனைத் தன் வீடுசெல்ல உத்தரவிட்டனுப்பி விட்டு, அவன் வீட்டில் நடக்கும் விசேஷத்தை, அவனை அறியாமல் அறிந்து வரும்படி, அவனுக்குப் பின்னால் ஒரு ஆளை அனுப்பினான். சென்ற ஆள், சற்றுநேரங் கழித்துவந்து, 'வைத்தியன், வீடு சென்றதும் தலைசுற்றிக் கீழ் விழுந்து மரணமடைந்தான்' என்ற செய்தியை ஓடி வந்து சாணக்யனுக்கு அறிவித்தான். இவ் விஷயங்களைச் சாணக்யன் சந்திரகுப்தனுக்குத் தெரிவித்து, ராக்ஷஸனது கபடச் செய்கைகளைக் குறித்துப்பேசி, மேல் நடக்கவேண்டிய விஷயங்களைப் பற்றி ஆலோசித் துக் கொண்டிருந்தான். ஜனங்களெல்லோரும், ராக்ஷஸனது கிருத்திர மங்களைக் கண்டுபிடித்துச் சந்திரகுப்தனை மகத்தான விபத்துக்களி லிருந்து தப்பச் செய்ததுபற்றிச் சாணக்யனுடைய ஸாஹஸத்தையும் சாதுரியத்தையும் வியந்து கொண்டாடலானார்கள்.

---

## இருபத்தோன்பதாவது அத்தியாயம்.

## சந்திரகுப்தன் ஸர்வார்த்தஸித்தியைக் காணல்.

சாணக்யன் தான் இனி செய்யவேண்டிய வேலைகளைக் குறித்துத் தீர்க்காலோசனை செய்து, தனக்கு ஆப்தர்களான சில கூடசாரர்களை நோக்கி, "நீங்கள் சமயோசிதமான வேஷ பாஷைகளுடன் திரிந்து, "இந் நகரில் ராக்ஷஸனை அனுசரிப்பவர்கள் யாவர்? ராக்ஷஸன் எங்கு இருக் கிறான்? என்ன செய்துகொண்டிருக்கிறான்? அவனை அடிக்கடி யார் யார் கண்டு பேசுகிறார்கள்? சந்திரகுப்தனிடம் விரோதமுள்ளவர்கள் யாவர்? இவ் விஷயங்களை நன்றாய் அறிந்து வந்து தெரியப்படுத்துங்கள்" என்று அனுப்பிச் சந்திரகுப்தனை அழைத்து, "குழந்தாய்! நீ இவ்விதம் பேசாமலிருக்க கூடாது. உடனே சென்று கிழவரான நின் பாட்ட

ளுரைக் கண்டு வா" என்றான். சந்திரகுப்தன் "அவ்விதமே ஆகட்டும்" என்று விருத்த தம்பதிகளிருக்கும் அரமனை சென்று, தான் வந்திருப் பதைக் கஞ்சுகிகள் மூலமாக ஸர்வார்த்தஸித்திக்குத் தெரிவித்து, அவனைக்கண்டு நமஸ்கரித்துத், தலைகுனிந்து நின்றான்.

கிழவரசன் சந்திரகுப்தனைக் கண்டதும், கண்ணீர் வடித்துக் "குழந்தாய்! நீயாவது சிரஞ்சீவியாக விருந்து எனது கீர்த்திக்குக் குறை வின்றி இந்த ராஜ்யபாரத்தை வகிப்பாயாக. உன்னைக் கண்டதும், என் அருமை மகன் மௌரியனைக் கண்டதுபோன்றே யிருக்கின்றது. உனக் குத் துரோகம் நினைத்தவர்கள், அதற்குரிய பலனை அடைந்து விட்டார் கள். அவற்றையெல்லாம் நான் கனவாக எண்ணி மறந்துவிட்டேன். உனக்கு நான் ஒரு சமயமும் துரோகம் நினைத்தவனல்லன். அவர்க ளுடைய கபடச் செய்கைகட் குட்பட்டவனும் அல்லன். அந்தப்புரத் தில் அநேக யுவதிக ளிருக்கின்றார்கள். அவர்களை உன்னுடன் பிறந்த சகோதரிகளாகவே பாவித்து மரியாதையுடன் காப்பாற்றி வருவாயாக. நான் மனம் பிடித்தால் இங்கு இருப்பேன். இல்லையாகில் தபோவனம் செல்வேன். நீ ஜாக்கிரதையாய் அரசாட்சி புரிந்து வா" என்று பல புத்திமதி யுரைத்தான்.

இது கேட்ட சந்திரகுப்தன், "ஐய! இன்று தங்களுடைய பாத தரிசனத்தினால் பிதா சகோதரர்கள் இவர்களின் அநியாய மரணத்தால் என் மனதிற் கொழுந்து விட் டெரிந்துகொண் டிருந்த சோகாக்கினி தணிந்து விட்டது. நான் எல்லாவற்றையும் மறந்து விட்டேன். இப் பொழுது என்னை நிர்வகிக்கக் கட்டளை யிட்ட ராஜ்ய பாரமெல்லாம் தங் களுடைய தன்றோ? இதில் தங்கள் சரீரமுள்ளவரையில் பிறர்க்கு ஏது பாத்தியம்? தங்கள் உத்தரவுப் பிரகாரம் நான் நடந்துகொள்ளப் பாத்திர னல்லனோ? தாங்கள் என்னுடைய க்ஷேமத்தை விரும்பிப் புத்திமதி கூறிக்கொண்டிருத்தலை விட்டு, எனக்கு அபகீர்த்திக் கிடமாகத் தபோ வனம் செல்லல் முறையோ? தாங்கள் சென்றால், நான் இங்கிருந்து அடையும் பிரயோஜன மென்ன? நான் கூடவே வந்து விடுவேன். தங் களைப் பிரிந்து அரைக்கணமும் இருப்பேனோ? என்று கண்ணீர் விட் டான். இவ்வாறு கிழவரசனைச் சமாதானப்படுத்தித் தனது இருப்பி டம் வந்து சேர்ந்தான் சந்திரகுப்தன்.

## முப்பதாவது அத்தியாயம்.

## பவனபாலகனைக் கண்டுபிடித்தல்.

சந்திரகுப்தனது செய்தி இவ்வாறிருக்க; தன் தேசம் நோக்கிச் சென்று கொண்டிருந்த மலயகேதுவை, அவனது தூத னொருவன் கண்டு, விரோசனன் மாண்ட செய்தியைத் தெரிவித்தான். மலயகேது மிகுந்த துக்கமடைந்து, கூட வந்த பாகுராயணனை நோக்கி, "ஐய, மித்திரனே! ஆ! ஆ!! கத்தி வெட்டுப் பட்ட இடத்தில் பாணமும் பாய்ந் ததுபோல், நமக்கு வந்திருக்கும் அதி துக்க சம்பவங்களைப் பார்த்தா யா? போலிக் காசிராஜனைக் காரணமாகக் கொண்டு, நந்தர்களைக் கொன்றது போல், போலி ஸ்திரீயாகிய விஷகன்னிகையைக் கொண்டு பர்வதேசனை யும் சாணக்யன் கொன்றதறிந்து பதறி வந்த எனது அருமைச் சிற் றப்பன், தான் உயிர் தப்புமாறு ஓடியும், விதி வசத்தால், மீண்டும், வலை யில் அகப்படும் வேங்கை போல், கபடத்திலகப்பட்டு உயிரிழந்தானே! ஐயோ!

> "நல்லவை செய்யத் தொடங்கினும் நோனுமே
> அல்லன அல்லவற்றிற் கொண்டுய்க்கும்—எல்லி
> வியனெறிச் செல்வாரை ஆறலைத் துண்பார்
> செலவு பிழைத்துய்ப்ப போல்."

என்றது பொய்யே இல்லை. இவ்வாறு எனது அன்பிற்குரிய பந்து ஜனங்கள் மாண்டபின், ராஜ்ய லாபத்தினால் எனக்கு சந்தோஷமுண் டாகுமோ? எனக்கு வந்துள்ள விபத்துக்கள் சாமானியமானவையா? ஆப்த மந்திரியான சபரவர்மனும் யுத்தத்தில் முன்பு நந்தனால் மடிந் தான். அந்தப்புரத்தி லுள்ளவர்களை நான் என்னவென்று சமாதானம் செய்வேன்?" என்று கண்ணீர் விட்டுக் கரைந்தழுதான். பாகுராயணன் சமயோசித வாக்கியங்களால் அவனைச் சமாதானப்படுத்திப் பர்வத ராஜ்யத்திற்கு அழைத்துச் சென்றான். நிற்க.

பாடலிபுரத்தில் சாணக்யனால் நியமிக்கப்பட்டிருந்த கூடசாரன் ஒருவன், சாணக்யனைக் கண்டு கும்பிட்டு, "ஸ்வாமி! சயனக்கிருகத்தில் கிருத்திரமம் செய்து வைத்தவன் பவனபாலகனே. அவன் தோட்டக்கார

வேஷம் பூண்டு உத்யான வனத்தில் செடிகளுக்குத் தண்ணீர் இறைத்துக்கொண் டிருக்கின்றான்" என்றான். சாணக்யன் அக்கணமே சில ஆட்களை அனுப்பி அவனைப் பின்கட்டு முறையாகக் கட்டி வரச் செய்து, அவனை நோக்கி, "ராஜத்துரோகி! உண்மை உரைப்பாயாகில் உயிருடன் தப்புவாய். இல்லையேல் ராஜாக்கினைக்குட்பட நேரும்" என்று உறுக்கினன்.

பவனபாலகன் பயந்து நடுங்கி, "மகா ஸ்வாமி! எனக்கு மகாராஜா விடம் துவேஷமிருக்க நியாயமுண்டோ? இதுவரை அன்னவஸ்திர மளித்துக் காப்பாற்றிவந்த ராக்ஷஸருடைய ஏவுதலால் சயனக் கிருகத் தில் நான் சில சூழ்ச்சி செய்தது உண்டு. என்னை ரக்ஷித்தாலும் சரி. தண்டித்தாலும் சரி. உண்மை இதுதான்" என்றான்.

சாணக்யன் அவனை நோக்கி, "நல்லது உனக்கு ராஜக்கிருகத்தி லுள்ள இரகசியங்க ளெல்லாம் தெரிந்திருக்கலாமே? ராக்ஷஸன் எவ் வழி யாய் வெளியிற் சென்றான்? இதை மட்டும் நீ சொன்னால் உன்னை மன் னிக்கத் தடையேயில்லை. இல்லையேல்—" என்று கறுவ, அவன், "ஸ்வாமி! அந்தப்புரத்திற்கருகில் இன்னவிடத்தில் சுரங்கவாயில் ஒன்று இருக் கிறது. அதுவழியாக ஊர் வெளியிலுள்ள உத்தியான வனத்திற்கும் காட்டுப் பாதைக்கும் செல்ல வழியுண்டு. அவ் வழியாகவே ராக்ஷஸர் சென்றனர்" என்றான். சாணக்யன் அவனை இவ் வுண்மை சொன்னதன் நிமித்தம் விடுவித்து, "இனி ராஜத்துரோகமான காரியம் செய்யாதே" என்று கண்டித்து அனுப்பினன். பிறகு அவன், தனக்குள், யோசித்து முடித்து, ரகஸ்யத்தில் சில வேவுகாரர்களை அழைத்து, "நீங்கள் அந்தப் புர சுரங்க வாயிலின் அருகிற் பதுங்கியிருந்து, உள்ளிருந்து வெளியே யாராவது செல்வார்களாகில் உடனே நமக்குத் தெரிவியுங்கள்" என்று கட்டளையிட்டு அனுப்பினன்.

## முப்பத்தோன்றாவது அத்தியாயம்.

## விருத்த தம்பதிகள் வெளிக்கிளம்பல்.

இது கழிந்து இரண்டு நாட்கள் சென்றதும், சாணக்யன் ராஜ சபையில் அரசனைப் புகழும் ஸ்துதி பாடகர்களைத் தனியாக அழைப்பித்து, "இன்று சந்திரகுப்தனுடைய சௌந்தரியத்தையே மிகவும் விஸ்தரித்துப் புகழுங்கள்" என்று சொல்லி அனுப்பினான். அவர்கள் ராஜக்கிருக சமீபத்திலிருக்கும் கூடத்தி லுட்கார்ந்து சிற்றரசர்க ளனுப்பிய பகுதிப் பொருள்களைப் பற்றி விசாரித்துக்கொண் டிருந்த சந்திரகுப்தன் அருகிற் சென்றனர். அவர்களில் ஒருவன், "ஜய! சந்திரகுப்த மஹாராஜனே! ஜய! ராஜ சூடாமணியே! ஜய! ராஜ சேகரனே! ஜய! ராஜாதிராஜனே! ஜய! ராஜ கம்பீரனே!" என்றான். "ஜய! குருவம்ச சமுத்திர சந்திரனே! ஜய! நந்தகஜ கண்டீரவனே! ஜய! மௌரியகுல திலகனே! ஜய! நந்தகுல வனதாவானலனே!" என்றனன் பின்னொருவன். "ஜய! நவநந்த சர்வாபஹரனே! ஜய! நந்த கர்வ நாசகனே! ஜய! நவநந்த வம்ச விநாசகனே!" என்றான் மற்றொருவன்.

இவ்விதம் பலவாறு புகழ்ந்து கூவுமொலி அடுத்த கட்டடத்திலிருந்த கிழவரசன் காதில் விழுந்தது. விழவும், அவன் மனங்கொதித்து, துக்கம் சகிக்கமாட்டாமல் தனது ராணியைக் கூவி யழைத்து, 'ஸுநந்தா! ராஜாஜர்கள் அனைவரினும் மேம்பாடு வாய்ந்த அதி சூரர்களான பிள்ளைகளைப் பறிகொடுத்து இங்கு இவ்விதம் கர்ணகடூரமான மொழிகளைக் கேட்டுக்கொண்டு காலங்கழிக்க என்மனம் சகிக்கவில்லை. ஆகையால், உடனே தபோவனம் சென்று மஹாமுனிவர்களைத் தரிசித்துக் 'கனியேனும் வறிய செங் காயேனும் உதிர்சருகு கந்த மூலங்களேனும், கனல் வாயை வந்தெய்தின் அள்ளிப் புசித்துப் பசிநீங்கித் திவ்விய நதிகளில் நீராடிப் புண்ணிய கதைகளைக்கேட்டு, எனது மீதிக் காலத்தைக் கழிப்பதே யோக்கியம்" என்று தீர்மானித்து விட்டேன். நீ இவ்விடம் சந்திரகுப்தனிடமிருந்து கொண்டிரு. காட்டிலுள்ள வெயில், பனி, இவைகளை உன்னால் தாங்கமுடியாது" என்று கூறினான்.

இது கேட்டு, ஸுநந்தாதேவி, "ராஜாதிராஜ ஸ்ரீமானாகிய தங்களுக்கே வனவாச துக்கம் ஒத்துக்கொள்ளும்போது, மகா பாபத்திற்கிடமான பெண் ஜன்மம் படைத்துப் பெற்ற பிள்ளைகளைப் பறி கொடுத்த மகத்தான சோகத்தைச் சகித்துவரும் எனக்கு, அது சகிப்பது பாரமோ? சந்திரனுடனிருக்கும் சந்திரிகையைப் போல் நான் தங்களுடனேயே இருப்பேன். இருந்து, என்னுற் கூடிய பணிவிடைகளைச் செய்துகொண்டும், ரிஷபத்னிகளிடம் திவ்விய கதைகளைக் கேட்டுக் கொண்டும், கிலேசம் மறந்து காலங் கழிப்பேன். இவ்வாறின்றி, இந்த தங்களைப் பிரிந்து இருப்பேனே?" என்று கண்ணீர் விட்டாள். அரசன் அவள் வார்த்தையை மீறமாட்டாமல் 'சரி. உன்னிஷ்டம் போற் செய்க' என்றான்.

இவை யாவையும் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்த விசுவாச மிக்க வேலைக்காரி யொருத்தி அங்கு வந்து, ராணியை நமஸ்கரித்து நின்று, "தாயே! பாலிய முதல் தங்கள் பாத சேவையிலேயே காலங்கழித்து வந்திருக்கும் நான், இனியும் தங்களுடனேயே இருந்து, காய் கிழங்குகளைப் புசித்துத் தங்கள் பாத தரிசனத்தினால் சந்தோஷமடைந்து, காலங் கழிக்க உத்தரவு ஆகவேண்டும், அம்மணீ!" என்று கண்ணீர் சொரிந்தாள். ராணி அவளது அன்பை வியந்து, "நல்லது ஆகட்டும்" என்றாள். அதற்குள், அரசனுக்குப் பணிமாறும் வேலையா ளொருவன், அரசனிடம் வந்து,காலில் விழுந்து கைகட்டி வாய் பொத்தித் தூரத்தில் நின்று கொண்டு, "மகாப் பிரபுவே! பிறந்ததும் மாதாவை இழந்து விட்ட என்னை இளமை முதல் இதுவரை காப்பாற்றிப் பாதசேவைக்குப் பாத்திரனாக்கக் கிருபைசெய்த தாங்கள், இப்பொழுது என்னை அநாதை யாக்கித் தபோவனம் செல்வதாயின், நான் இங்கு தங்களைச் சேவித்த இச் சரீரத்தால் மற்றவர்களுக்குக் குற்றேவல் செய்து காலங்கழிக்கச் சம்மதிப்பேனா? மகா ஸ்வாமிகளுடன் கூடவிருந்து வேளாவேளைக்குக் கந்தமூலங்களை உதவியும், துஷ்டமிருகங்களால் இடையூறு நேராமல் ஜாக்கிரதையாகக் காவல் புரிந்தும், பர்ணசாலைகளை திருத்தியும், தங்களிடமே காலங்கழிப்பேன். வேறேதும் செய்யேன்" என்று மன்றாடினான். அரசன், "ஆம். நமக்கும் ஒரு ஆள் வேண்டியதுதான்" என்று அவனையும் உடன் அழைத்துச் செல்ல ஒப்புக்கொண்டான். பிறகு, அவன்

அவ் வேலையாட்களிருவரையும் நோக்கி, "அருணோதயத்திற் புறப்படப் போகிறோம். ஆகையால் நீங்களிருவரும் தயாராக இருங்கள்" என்று அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

அருணோதயமாயிற்று. ஸுநந்தாதேவி, தான் பூஜித்து வரும் கௌரி விக்கிரகத்தை யெடுத்துக்கொண்டாள். புதிய வஸ்திரம் உடுத்தாள். தலைமுதல் கால்வரையில் மூடி முக்கா டிட்டுக்கொண்டாள். தனது வேலைக்காரியுடன் பிரயாணத்திற்கு இவ்வாறு சித்தமாய் வந்து நின்றாள் அவள். கிழவரசனும் தனது வில்முதலிய ஆயுதங்களை ஊழியனிடம் கொடுத்தான். தனது சிவபூஜைப் பெட்டியை எடுத்துக்கொண்டான். மனக்கவலையை ஒழித்தான். இருவரும் தம் வேலைக்காருடன் அந்தப்புரத்திலிருந்து வெளிப்பட்டுச் சுரங்க வாயிலிற் பிரவேசித்து, ராஜமார்க்கம் நீங்கிக் கரடுமுரடும் கல்லும் முள்ளும் நிரம்பிய காட்டுப் பாதையிற் சென்றார்கள். நிற்க.

---

## முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

## அரசனைக் கொல்ல ஆட்களை விடுத்தல்.

—:0:—

சாணக்யனிட்ட கட்டளையை மேற்கொண்டு பதுங்கியிருந்த வேவுகாரர்கள், அரச தம்பதிகள் புறப்பட்டுச் சென்ற உடனே, சாணக்யனிடம் வந்து, கும்பிட்டு, "ஸ்வாமி! இன்று, அருணோதய சமயத்தில், சுரங்கவாயில் வழியாக, ஒரு கிழவனும் கிழவியும் பணிவிடை செய்யும் ஒரு ஸ்திரீயும் ஆயுதபாணியான வேலை ஆளுடன் வெளிப்பட்டு, ராஜமார்க்கம் விட்டு, காட்டுப் பாதையாக நைமிசாரண்யம் நோக்கிச் சென்றார்கள்" என்று தெரியப்படுத்தினர். சாணக்யன், தனக்குள், "சரி. நாம் உத்தேசித்தபடியே நடந்துவிட்டது. காடு செல்பவன் பத்தினி சகிதம் செல்லும் ஸர்வார்த்தஸித்தியே. இவர்கள் தபோவனம் சென்றதை ராக்ஷஸன் அறிந்தனனாகில் உடனே கிழவனைக் கண்டு, கண்டபடி போதித்து அவன் புத்தியைப் பேதிப்பன். ராஜ வம்சத்திலுள்ள ஒரு குழந்தையையும் கிழவனுக்கு ஸ்வீகாரம் செய்து வைப்பான். பிறகு எவனையாவது ஒரு அரசனை நம்மைப்போல் துணை சேர்த்து வந்து தண்டெடு

த்துச் சந்திரகுப்தனை ஒழித்து நந்த வம்சம் விளங்க அந்த ஸ்வீகாரப் பையனுக்கே பட்டங் கட்டுவான். ராக்ஷஸனை சும்மா இருக்கமாட்டான். நாம் இப்பொழுது தக்க முயற்சி செய்யாவிடில், இதுவரை சாதித்து வந்த காரியம் விபரீதமாக வன்றோ முடிந்து விடும்? சந்திரகுப்தனுக்கு ராஜ்யம் நிலைக்கவேண்டுமானால், கிழவரசனை இப்போதே சங்கரிக்கவேண்டும்" என்று நிச்சயித்தான். "இருந்தாலும் நன்றாய் விசாரித்தறிவோம்" என்று அவன் ஒரு தூதனை அழைத்துச் "சந்திரகுப்தன் விருத்த ராஜ தம்பதிகளது தரிசனத்திற்குச் செல்லத் தயாராயிருக்கிறபடியால், அவர்களது சமயமென்ன வென்று அங்குள்ள கஞ்சுகிகளை விசாரித்துவா" என்றான. அத் தூதன் சென்று அவ்விதமே விசாரிக்க, கஞ்சுகி, விஷயம் தெரிந்து கூறச் சென்றவன், அரமனை முழுதும் தேடியும், ராஜ தம்பதிகளைக் காணாது திரும்பினன். "இவ்விஷயத்தை நானே நேரில் வந்து தெரிவிக்கிறேன்" என்று அவன் சாணக்யனிடம் திகைத்தோடி வந்து, கைகட்டி நின்று "ஸ்வாமி! உத்தரவுப்படி சமயமறியச் சென்றேன். அந்தப்புரம் முழுதும் தேடியும் ராஜ தம்பதிகளை அங்குக் காணேன். அன்றியும் ஒரு வேலைக்காரியும் விசிறியாளும் கூட அங் கில்லை. அவர்கள் யாவரும் வாயிற் பக்கம் வெளியே வரவில்லை. இது விஷயத்தை யறிந்து அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீ ஜனங்கள் துக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ விந்தையாகவே எல்லாம் இருக்கின்றன. உண்மையைக் கடவுளே அறிவர்" என்றான்.

சாணக்யன், தனக்குள், "சரி. ஸர்வார்த்தஸித்தி காட்டிற்குச் சென்றது உண்மையே" என அறிந்து, அக் கஞ்சுகியை நோக்கி, "நீ என்றும்போற் காத்திரு. நாம் விசாரிக்கிறோம்" என்று சொல்லி யனுப்பி விட்டு, நான்கு கொலையாளிகளை வரவழைத்து, "இரகசியத்தில், ஸர்வார்த்தஸித்தி தனித்திருக்கும் சமயம் பார்த்து அவனைக் கொன்று வாருங்கள்" என்று கட்டளையிட்டு அவர்களை அனுப்பினான். அக் கொலையாளிகள் சாணக்யனது கட்டளையைத் தலையிற் றாங்கி நைமிசாரண்யப் பாதையைப் பிடித்துச் சென்று, கிழவரசனைத் தேடி வந்து கொண் டிருந்தார்கள்.

## முப்பத்து மூன்றாவது அத்தியாயம்.

# அரச தம்பதிகள் அருந்தவமேற்கொளல்.

தபோவனம் புகுந்த அரசன், பல புனித வனங்களைத் தாண்டிச் செல்லும்போது, மனோகரமான சில ரிஷி ஆசிரமங்களைக் கண்டான். அவை சுர நதி சூழ்ந்தவை. பெரும்பாலும் பகலவனொளி கீழிறங்கா வண்ணம் இடை வெளியற் றடர்ந்து நின்ற மரக்கிளைகள் தரும் குளிர் நிழல் கொண்டவை. இவ் ஆசிரமங்களைக் கண்டதும், அரசன் மனம் பூரித்து, தன்பின் வரும் ஸுநந்தையை நோக்கி, "பிரியே! இதோ பார் மகா முனிவர்களது ஆசிரமங்கள்!—திரும்பிப் பார்: நடமாடும் ஜனங் களைக் கண்டு அஞ்சாது நெடுநாள் பழகி வளர்ந்தன போல் இம் மான் கூட்டங்கள் ஓடி விளையாடுகின்றன. அதோ ஸ்நானத்திற்கு ஆசிரமத் திலிருந்து சென்று திரும்பிய முனிவர்களது இடுப்பிற் சுற்றிய மரவுரி களிலிருந்து விழும் நீரால் நனைந்துள பாதை, நதி தீரத்தையும் அவர் களது ஆசிரமங்களையும் அறிவிக்கின்றன பார். தென்னை, மா, பலா, மாதுளை முதலிய விருக்ஷ விசேஷங்களிலுள்ள பழங்களைத் தின்று கூவி விளையாடும் கிளிகளைப் பார். இதோ தர்ப்பை, பழம், புஷ்பம் இவற்றைச் சேகரித்து வரும் ரிஷிகுமாரர் தோள்மீது தாவிக் குதி த்து விளையாடி வரும் மான் குட்டிகளைப் பார்! ஆ! ஆ!! அதோ ரிஷி பத்தினிகளால் மரக்கிளைகளில் உயரக் கட்டப்பட்டுள்ள மரவுரிகளைப் பிடித் திழுத்து விளையாடும் யானைக் குட்டிகள் நிற்கின்றன. இந்த அதிசயத்தைப் பார்த்தாயா? தம் கொம்புகளால் தரையைக் கல்லிக் கிழ ங்குகளை ரிஷி குமாரர்கள் எடுத்துக் கொள்ளும்படி உதவி செய்கின் றன அம் மான்கன்றுகள். ரிஷி புத்திரர்களி னுத்தரவுப்படி தமது துதிக்கையில் ஆற்று நீரை நிரப்பி வந்து பூங் கொடிகட்குத் தண்ணீர் வார்க்கும் யானைகள் அதோ நிற்கின்றன பார்! ரிஷி குமாரர்களது கட் டளைக்குக் கீழ் படிந்து செடிகளுக்குப் பாத்தி கட்டுமாறு பூமியைப் பறித்துத் தரும் பன்றிகளைப் பார். வேத மூர்த்திகளாகிய ரிஷி குமா ரர்களது குரலோசையால் மயங்கி, இரை யெடுக்காமல் ஆநந்தத்துடன் தோகை விரித்தாடும் மயிலினங்களை இதோ காண். ஹோமாக்கினியிற் செய்யப்படும் ஆஜ்யாஹுதியாற் பரிமளிக்கும் பர்ண சாலைகள் நேத்தி

ரணந்தமாக விளங்குவதைப் பார். மகா முனிவர்களது முன்னிலையில் மயில்களின் சிறகுகளைப் பிடித்திழுக்கும் மகா சர்ப்பங்களையும், புலிக் குட்டிகளுடன் விளையாடும் ஆனிளங்கன்றுகளையும், சிங்கங்களின் பிடரி மயிர்களைப் பற்றி யிழுக்கும் யானைக்கன்றுகளையும் இதோ பார். இளங் கொடிகளை இசைத்து ஊசலாடும் ரிஷி குமாரிகளையும், அவர்களது இனிய கீதங்களைக் கேட்டு, பசும்புற்றரையில் விளையாடிக்கொண்டிருக்கும் இளங் குழந்தைகளையும் இங்கே பார். இதோ வரிசையாக ஆசிரமங்களை நோக்கிச் செல்லும் அதிதிகளைப் பார். பனிநீர் என்னத் தெளிந்திருக்கும் நீர் நிலைகளில் இறங்கித் தாமரைகளைக் கசக்கி விளையாடும் மகா கஜங் களைப் பார். ரிஷி புத்திரர்களை முதுகிற் சுமந்து திரியும் சிங்கங்களைப் பார். அதிதி பூஜையின் பொருட்டும், ஹோமாதிகளுக்கு உபயோக மாகவும் பாலைக் கறந்து கொடுக்கும் பசுக்களுடன் கூடி விளையாடும் வேங்கைப் புலிகளைப் பார். மனோஹரமாக கானம் செய்யும் குயிற் கூட் டங்களைப் பார்! ரிஷி பத்தினிகள் பூஜிக்கும் காராம்பசுக்களைப் பார்.

“காம குரோதாதிகளை வென்றவர்களும் தர்ம ஸ்தாபனத்திற்கு ஆதார பூதர்களாக இருப்பவர்களுமான இம் மகா முனிவர்கள் வசிக்கும் ஆசிரமங்களில் கலிகாலக் கொடுமைகள் பிரவேசிக்க இடமே இல்லை பார். அன்பே! இதோ இவர்கள் படிக்கும் உபநிஷதங்களையும் கோஷிக்கும் சத ருத்ரீயங்களையும், ஜபிக்கும் மஹா மந்திரங்களையும், உச்சரிக்கும் சாம கானங்களையும், சொல்லும் திவ்ய கதைகளையும், துதிக்கும் ஹரி ஹர ஸ்தோத்திரங்களையும் உற்றுக் கேள். இங்கு உபதேசிக்கப்படும் வேதா ந்த ரகஸ்யங்களையும், பிரகடனம் செய்யப்படும் யோக சாதனைகளையும் விவரிக்கப்படும் சாஸ்திர விசாரங்களையும், நிஷேதிக்கப்படும் பாஷண்ட மதக் கிரியைகளையும், சித்தாந்தம் செய்யப்படும் வேத மார்க்கங்களையும் நன்கு கவனி.

“மேற்கூறிய விதங்களால் தர்மஸ்தாபனம் செய்யும் மாமுனிவர் உறையும் இத் தபோவனத்தில் ஜனங்கள் போய் வசிப்பதால் அடையக் கூடிய இகபர சாதகமான சுகத்திற்கு நாம் நமது சக்கரவர்த்தி ஸ்தானத் தால் அடைந்துள்ள சுகம் ஒருபோதும் இணையாக மாட்டாது. நமக்கிப் பொழுது புத்திர சோகம் ஏற்பட்டது நம் ஜன்மாந்தர புண்ணிய விசே ஷமே என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஏனெனில் இச் சோகம்

ஒன்றிலையேல், இங்கு வந்து இம் மகாமுனிவர்களைத் தரிசிக்க முடியுமா?" என்று கூறி, ஆசிரமந் தோறும் நமஸ்கரித்துக்கொண்டே சென்று விதேக முத்தி உற்றவன்போல் பரமானந்த பரவசனானன்.

இவ்வாறு தனது பத்தினியுடன் வந்துகொண்டிருந்த அரசனைப் பார்த்து, அங்கிருந்த மகாமுனி ஒருவர் "யாரோ ஒரு ராஜோத்தமன் விரக்தியினால் வானப் பிரஸ்தனாக வந்துளான்" என்று அறிந்து, தம் சிஷ்யருள் ஒருவனைக்கொண்டு அவனைத் தன்பால் அழைத்துவரச் செய்தான். அசோக விருக்ஷத்தின் அடியில் சிஷ்ய சமேதனாக உட்கார்ந்து தத்வ விசாரம் செய்து கொண்டிருந்த அந்த மகாமுனிவரை ராஜ தம்பதிகள் நமஸ்கரித்துக் கைகட்டி வாய் புதைத்து நின்றனர். அம் முனிவரர், இருவரையும் ஒரு மரநிழலில் அமரச்செய்து, அவர்களது யோக க்ஷேமங்களை விசாரிக்க, ஸர்வார்த்தஸித்தி, தங்கள் முழு விருத்தாந்தத்தையும் விளம்பி, "எங்கட்கு இனி முத்தி மார்க்கத்தை உபதேசித்தருள வேண்டும்" என்று வேண்டினன். முனிவரர் அவனது வேண்டுகோட்கிணங்கி முத்தியைத் தருவதான ஞான யோக ரகஸ்யத்தை அவனுக்கு உபதேசித்து, சீக்கிரம் அதனாலாய பலனை அடையும்படி அருளினர். பிறகு அவர் கந்த மூல பலங்களை அவர்களுக்கு வரவழைத்துக் கொடுத்துப் பர்ணசாலை கட்டிக்கொள்ளவேண்டிய சௌகரியமான ஓர் இடத்தையும் சொல்லி யருளினர்.

ஸர்வார்த்தஸித்தி தனக்குக் காட்டப்பட்ட நதி தீரத்தில் மனோகரமான ஓர் இடத்தில், தனது வேலையாளால் கட்டப்பட்ட பர்ணசாலையில் தனது பத்தினியுடன் வசித்து வரலானன். இங்கேயே இருந்து, அவன், பிரதிதினமும் முக்காலத்தும் நீராடி சிவார்ச்சனை முடித்து, யோகாப்பியாசம் செய்து, கந்த மூலங்களைப் புசித்து, குருவுபதேசத்தை மனத்திலிருத்திப் பரமானந்த பரிதனாகக் காலங் கழித்து வந்தான்.

ஸுநந்தா தேவியும் ரிஷீசுவரர்களைத் தரிசித்தும், ரிஷி பத்தினிகள் சொல்லும் புண்ணிய கதைகளைக் கேட்டும், கௌரீபூஜை செய்து கொண்டும், நாயகன் செய்யும் தேவதார்ச்சனைக்குப் பூக்கள் பறித்து வந்தும், அவன் கூறும் ஞான ரகஸ்யங்களை மனத்துட் கொண்டும், (இவை காரணமாக) கவலை தெளிந்தும், மனமகிழ்வுடன் நாயகற்குத் தொண்டு பூண்டொழுகி ரிஷி பத்தினிகள்பா லிருந்து வந்தனள். நிற்க

## முப்பத்துநான்காவது அத்தியாயம்.

## விருத்த தம்பதிகளின் மரணம்.

சாணக்யன் ஏவிய கொலையாளிகள் ஸர்வார்த்தஸித்தியைப் பல விடங்களிலும் தேடிக் கடைசியில் அவன் இருந்தவிடம் வந்து சேர்ந்தனர். அவர்கள் கிழவரசனை நன்கறிந்தும், 'விசிறியாள்' ஆயுதபாணியாக நின்று எப்பொழுதும் காத்துவரும் காரணத்தால் அவனை ஏதும் செய்ய முடியாமல் தக்க சமயம் எதிர்பார்த்தவர்களாய் மறைந்தொளிந்து திரிந்துகொண் டிருந்தனர்.

ஒரு நாள் ஸர்வார்த்தஸித்தி மன்னன் கங்கை நீராடிச் சூரிய தரிசனம் செய்யும் சமயத்தில், ஆகாயத்தில் சோபான பந்தியும், ஸ்வர்ண விருக்ஷங்களும் அவன் கண்ணுக்குப் புலப்பட்டன. இவற்றைக் கண்டு அரசன், "ஓகோ! நமது ஆயுள் முடியும் சமயம் நெருங்கிவிட்டது போலும்!" என்று அறிந்து, அதி சீக்கிரத்தில் நித்ய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நதிக்கரையிலிருந்த ஓர் பர்ணசாலைக்கு விரைந்து சென்றான். சென்றவன், ஆங்குத் தர்ப்பாசனம் விரித்து, அதில் உட்கார்ந்து, விபூதி யணிந்து, ருத்திராக்ஷ மாலைகளைத் தரித்துத் தன்னருகிலிருந்த விசிறி காவலனை அழைத்து, "க்ஷேமக! இந்தத் தபோவனத்திலும் நீ அதிசிரமத்துடன் எனக்குப் பணிவிடைகள் செய்து வருகிறாய். உனது ஸ்வாமி பக்தியைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இனி என் சரீரம் நெடுநாழிகை நில்லாது. பெற்றுக்கொள் இவ் விரத்தின மோதிரத்தை. இங்கிருந்து நீ சென்று, வழக்கம்போல் ஸ்நானத்தைக்குக் கந்த மூலங்கள் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிரு" என்று கூறி, துயரக்காகந் தூக்கிக்கும் அவனைப் பலவாறு தேற்றி அனுப்பினான். பிறகு அவன் சுத்த ஆசமனம் செய்து, தனது குருநாதனால் உபதேசிக்கப்பட்ட யோக ரகஸ்யத்தை நினைத்து, ஆசாரியனை மனத்தில் தியானித்து, ஸ்திரமாக பத்மாசனம் வகித்து, நிச்சல சித்தத்துடன் யோகாரூடனாக சுவாஸ நிரோதம் செய்து, நிர்விகற்பப் பிரம சமாதியில் மனத்தை ஒருவழிப்படுத்தி நின்றான். அக்கணமே பிராண வாயுவானது தனதிடம் விட்டுப் பெயர்ந்து, நெற்றியைப் பேதித்துக்கொண்டு வெளிவரத் பிர

மத்தில் லயம் அடைந்தது. அடையவே, ஸர்வார்த்தஸித்தி பிறப்பிறப்பற்றதும், துக்க சுகங்களால் பாதிக்கப் படாததும், யோகீசுவரர்களும் பிரம நிஷ்டர்களும் ஏக தியானமாகத் தியானித் தடைவதுமான முக்தியை அடைந்தனன். யோக வேஷ்டிகொண்டு இழுத்துக் கட்டி அவன் உட்கார்ந்திருந்ததினால் அவனது சரீரம் மட்டும், உட்கார்ந்த வண்ணமாகவே இருந்தது.

இச் சமயத்தில் தக்க தருணம் எதிர் பார்த்து நின்ற கொலையாளிகள் அங்கு வந்து, 'அரசன் தனித் துட்கார்ந்திருக்கிறான்' என எண்ணி, தங்கள் கத்தி நுனியால் அவனது சரீரத்தைத் தீண்டினர். தீண்டியதும், அவனது தேகம் உருண்டு கீழே விழுந்து விட்டது. விழவே, அவர்கள், "ஓகோ! கிழவன் நாம் சொல்லு முன்னமே மரணமடைந்துவிட்டான். நல்ல வேளை நம் காரியம் பழிக்கிடமின்றியும் எளிதிலும் முடிந்தது." எனச் சந்தோஷித்து, அவன் தரித்திருந்த ஜப மாலையைத் தாம் அவனைக் கொன்றதற்கு அடையாளமாகக் காட்டும் வண்ணம் எடுத்துக் கொண்டு சாணக்யனிடம் சென்றனர். நிற்க.

அரசனது உத்தரவு பெற்றுச் சென்ற க்ஷௌமகன், ஸுநந்தைக்குக் கந்தமூலபலங்களைக் கொண்டு வந்து கொடுத்த பின், அரசனது பிரிவாற்றானாய், அவன் நிஷ்டையிலிருந்த இடத்திற்கு ஓடி வந்தான். யோக பந்தத்துடன் உருண்டு விழுந்து மாண்டு கிடந்த பூபதியைக் கண்டதும், அவன் கீழே விழுந்து புரண்டழுது, ஸுநந்தா தேவியிருந்த இடத்திற்கு ஓடோடியும் வந்து, தான் கண்டதைத் தெரிவித்தான். அக்ஷணமே ஸுநந்தை மூர்ச்சித்து, அடியற்ற பனைபோல் விழுந்து, சிறிது நேரங்கழித்துத் தானாகவே தெளிந்தெழுந்து, அழுது கொண்டே பதி விழுந்து கிடந்த இடம் வந்து வெகு நேரம் வாய்விட்டலறினாள். பிறகு, அவள் விவேகத்தினால் தெளிந்து "இனி புலம்பியழுது பயனென்ன? இவருடன் எனது எல்லா துக்கமும் நிவர்த்தியே" என்று மனதைத் திடப் படுத்திக் கொண்டு, அக் கங்கைக் கரையிலேயே விஸ்தாரமாகச் சிதையடுக்குமாறு க்ஷௌமனுக்குக் கட்டளையிட்டாள். பிறகு அவள் பாகீரதியில் நீராடி, கௌரி பூஜை செய்து, நவரத்தினப் பெட்டியுடன் அக் கௌரி விக்ரகத்தை ஒரு ரிஷி பத்தினிக்குக் கொடுத்தனள். சாதித்திருந்த நகைகளை ஒரு பத்தினிக்குச் சமர்ப்பித்தாள்.

கழுத்திலிருந்த விலை மதிக்க முடியாத முத்தாரங்களை "நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று ரிஷி பத்தினிகளுக்கு அளித்தாள். பர்த்தாவின் சரீரத்தைக் கங்கா ஜலத்தினுற் கழுவினுள். பிறகு அதைச் சிதைமீது கிடத்தி, ரிஷியின் அனுமதி பெற்றுப் பதியின் ஔபாசன அக்கினியாலேயே நெருப்பு மூட்டிச் சகல ரிஷி தம்பதிகளையும் நமஸ்கரித்து, ஹரி ஹர பிரமாதி தேவர்களைத் துதித்து, சுடர் விட்டெரியும் சிதையிற் பிரவேசித்து, மேகத்திடை மறையும் மினனல் போல் அக்கினிப் புகையில் மறைந்து புண்ணிய லோக மடைந்தாள்

எங்கோ அகஸ்மாத்தாக சில தினங்கட்கு முன் மழை பொழிந்தமையின், ஸுநந்தை பிரிந்த மறுதினமே கங்காநதி பெருகி வந்து அச் சிதை பஸ்மத்தைக் கரைத்துச் சென்றது. அதனைக் கண்டு "ஆ! ஆ!! ராஜ தம்பதிகள் மகா சுகிருதம் பெற்றவர்கள்: ராஜ யோகத்தினுல் அரசன் முக்தியடைந்தான். ஸுநந்தையும் ஸக கமனத்தினுல் கௌரீ தேவியின் ஸந்நிதானத்தை அடைந்து விட்டாள்' என்று அங்குள்ள ரிஷி ஜனங்கள் யாவரும் கொண்டாடினுர்கள்.

நிகழ்ந்த யாவையும் கண்ட ஊழியக்கார சௌளமகன், "நமக்கு இனி இவ்விடத்தில் என்ன காரியம்? எங்கே பார்த்தாலும் அரசன் நீராடுவது போன்றும், யோகாப்பியாசம் செய்வது போன்றும், ஜபம் செய்வது போன்றுமே தோன்றுகிறதால் விசனம் சகிக்க முடியவில்லை. பட்டணமாவது சென்றுல் மனம் தெளியும்" என்று திரும்பினுன். திரும்புவோன், எஜமானியின் பிரிவாற்ருது கதறி யழுது கொண் டிருந்த தாதியைத் தேற்றி அவளை நோக்கி, "குஸுமரேகாய்! நான் நகரம் செல்கிறேன. நீயும வருகிறது தானே? இனி இங்கிருந்து யாது பிரயோசனம்?" என்றுன்.

அதற்கவள், "அப்பா, சௌளமக! நீ பெண்டு பிள்ளைகளை விட்டுப் பிரிந்து வந்தவன். ஆதலின் இனிச் சிறிதும் தாமதியாது நீ ஊர் செல்ல வேண்டியது நியாயம். நானே தனியள். யார் பொருட்டு நான் ஊர் வருகிறது? எனக்கு அந்த வேலை யென்ன? நான் இவ்விடமே யிருந்து மகா முனிவர்கள் நடமாடும் இடங்களைக் கூட்டிக் கொண்டும், தேவதார்ச்சனைக் குரிய பூஞ் செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டும், ரிஷி பத்தினிகள் இடும் வேலைகளைச் செய்து கொண்டும், காலங்

கழிக்கப் போகிறேன். நீ இனி விரைவில், வெகுகாலமாக விட்டுப் பிரிந்து வந்த உனது பெண்டு பிள்ளைகளிடம் செல்" என்றாள். க்ஷௌளமகன் ஏதும் பேச முடியாமல் கண்ணும் கண்ணீருமாக ராஜ தம்பதிகளைச் சிந்தித்துக் கொண்டே நைமிசாரண்யம் தாண்டிக் குஸுமபுரம் வந்து கொண்டிருந்தான்.

---

## முப்பத்தைந்தாவது அத்தியாயம்.

## ராக்ஷஸன் பர்வத ராஜ்யம் செல்லல்.

க்ஷௌளமகன் அரச தம்பதிகளின் பிரிவாற்றாது வந்துகொண்டிருக்கையில், வாஸகன் என்னும் வேவுகாரனை வழியிற் கண்டான். இவ்வாஸகன், ராக்ஷஸனது ஒற்றன். பர்வதேசனது தண்டில் நிகழ்ந்த விசேஷ வர்த்தமானங்களை யறிந்து அவற்றை அவனுக் கறிவித்திடுமாறு வந்துகொண் டிருந்தவன். அவன் இவனை நோக்கி "க்ஷௌளமக! ராஜ சந்நிதானத்தில் விசிறி வீசிக்கொண் டிருந்த நீ, எங்குச் செல்கிறாய்? நீ கண்ணீர் பெருக்கிக் கொண்டிருக்கும் காரணம் என்ன?" என்றான். அதற்கு அவன், "ஐயோ! எனது எஜமானர் தபோ வனத்தில் முத்தி யடைந்து விட்டார். ஆதலால் அநாதையாகத் திரும்பி வந்துகொண் டிருக்கிறேன்" என்றான்.

வாஸகன் அவன் வாய்மொழி கேட்டு, இரங்கிக் கண்ணீர் வடித்து, "இதோ இவ் வனத்தில் அமாத்யர் இருக்கின்றார். அவரிடம் இவ் விஷயங்களை அறிவித்தால் அவர் உன்னை உன் நிலைக்கிரங்கிக் காப்பர்" என்று அவனை அழைத்துச் சென்று ராக்ஷஸன் முன் நிறுத்தி, "ஸ்வாமி! இவன் க்ஷௌளமகன். ஏதோ சில விசேஷ சமாசாரங்கள் இவன் சொல்லுகிறான்" என்றான்.

ராக்ஷஸன் க்ஷௌளமகனைப் பார்த்து, "அடா! நீ எங்கிருந்து வருகின்றாய்? விருத்த ராஜ தம்பதிகள் க்ஷேமமா யிருக்கிறார்களா? சந்திரகுப்தன் அவர்களைப் பக்தியுடன் போற்றி வருகிறானா? அரசர் ஏதாவது சமாசாரம் என்னிடம் தெரிவிக்கச் சொன்னாரா? அவர் யாது கூறி உன்னை என்பால் அனுப்பினர்?" என்று அதிஆவலுடன் விசாரித்தான்.

சௌஷளமகன் வாய்விட்டழுது, "ஸ்வாமி! விருத்த ராஜ தம்பதிகளின் க்ஷேமத்தை இனி என் கேட்கிறீர்கள்?" என்று, அவர்கள் சுரங்க வழியால் வெளிப்பட்டது முதல், முத்தியடைந்தது வரை, சகல சமாசாரங்களையும் நிகழ்ந்தவாறு தெரிவித்தான். இதுகேட்டு ராக்ஷஸன் மிக்க துக்கமடைந்து, "ஆ! ஸர்வார்த்தஸித்தி மன்னனே! ஆ! ஸுநந்தா தேவியே! நீங்களும் காலஞ்சென்று விட்டீர்களே! ஐயோ! இன்றுடன் நான் செய்திருந்த பிரயத்தினம் எல்லாம் வீணாய்விட்டன! இனி நந்த வம்சம் என்ற சொல்லுக்கிடமே இல்லாது போய்விட்டதே! ஆ! விதியே! ஆ! நந்த பூபதிகளே! ஆ!—" வென்று பிரலாபித்து நீராடிவந்து சௌஷளமகனை அனுப்பிவிட்டுக் கூடசாரனான வாஸகனை நோக்கி, "வாஸக! விருத்த ராஜ தம்பதிகளின் விஷய மிப்படி முடிந்தது. பாடலிபுரத்தி லிறங்கியிருந்த பர்வதேசன் தன்டின் விஷயம் என்னவாயிற்று?" என்று கேட்டான்.

அதற்கவன், "ஸ்வாமி! தாங்கள் பட்டணம்விட்டு வந்தபின் 'ஜீவஸித்தி' என்ற பௌத்த சந்நியாசியொருவன், ஒரு பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து, சந்திரகுப்தனுக்கு அளிக்குமாறு வந்தான். இதனைக் கண்ட சாணக்யன் தனக்குள் ஏதோ யோசித்துக்கொண்டு, "ஜீவஸித்தியே! இவள் பர்வதராஜனுக்கேற்றவள். ஆதலின் இத் தக்காளைத் தக்காரிடம் ஒப்புவி" என்றான். அதன்மேல் க்ஷபணகன் அவன் கட்டளையை மீறமாட்டாது, அக் கன்னிகையைப் பர்வதேசனிடம் ஒப்புவித்தான். ஸ்திரீலோலனாகிய அவ்வரசன், முன்பின் விசாரியாமல் காம பரவசமடைந்து, அவள் சம்பந்தத்தால் விஷம் தலைக்கேறி மாண்டே போயினான். அதே சமயத்தில் ஆயுத்தமாகத் தன்முன், வந்துகொண்டிருந்த சந்திரகுப்தனது சைனியங்களைக் கண்டு பயந்து, மலயகேதுவும் ஓடிவிட்டான். சாணக்யன் நியாயப்படி பர்வதேசனுக்குப் பாதி ராஜ்யம் அளிக்க மனமிசையாது அவனைக்கொன்றும், அப்பழி தன்னை யடையாவாறு அதனை அதிசாதுரியமாகத் தேவரீர் தலைமீது சுமத்தி, அதற்கேற்பப் பேசியும் வருகிறான்" என்றான்.

ராக்ஷஸன் மனம் சிதைந்து, நிகழ்ந்த யாவையும் ஆதியோடந்தமாகக் கூறுமாறு வாஸகனுக்கு கட்டளையிட்டு, விஷயம் யாவும் முற்றும் நன்கறிந்து, "ஓகோ! நாம் அதிசாமர்த்தியமாகச் செய்த மகாப் பிரயத்

தினம் யாவும் வீணாய்விட்டனவே! இவற்றினின்றுமே சந்திரகுப்தனைக் காத்த சாணக்யன் அவனுக்கு உதவியாக அங்கிருக்கும்போது, நாம் செய்திருக்கும் பிற அற்ப முயற்சிகள் பலிக்குமோ? கர்ணன் அர்ச்சுன ஸம்ஹாரத்தின் பொருட்டு இந்திரனிடமிருந்து பெற்றிருந்த சக்தி ஆயுதத்திற்கு, கடோத்கசனைக் கிருஷ்ணன் இரையாக்கி, அர்ச்சுனனைக் காத்ததுபோல், நான் சந்திரகுப்தன் சாவுக்கு அனுப்பிய விஷகன்னிகையைக் கொண்டு, பர்வதேசனையன்றோ சாணக்யன் கொன்று சந்திரகுப்தனைக் காப்பாற்றிவிட்டான்!—சாணக்யனே! ஆ! நல்லது. எனது பிரபுக்களான நந்தர்கள் காலஞ்சென்றுவிடினும் எனது புத்தி சக்தி சாஹஸம் பௌருஷம் இவைகள் உறுதியாயிருக்கும் வரை, பேசாதிரேன். தகப்பனிறந்ததால் மனம் வருந்திக் கொண்டிருக்கும் மலயகேதுவை அடைந்து, அவனை உற்சாகப்படுத்தித் தண்டெடுக்கச் செய்து பாடலிபுரத்தை முற்றுகையிட்டுச் சந்திரகுப்தனை வென்று, நந்தராஜ்யத்தை மலயகேதுவிற்குத் தருகிறேன். இவ்விதமேனும் மேலுலகிலிருக்கும் என் பிரபுக்களின் ஆத்மாவைத் திருப்தி செய்விப்பேன். சந்திரகுப்தனுடைய முன்னேற்றத்தையும் ராஜ்யபாரத்தையும் காணப் பொறேன்" என்று எண்ணி, வாஸகனைப்பார்த்து, "பர்வதேசன் மரணமடைந்து எத்தனை நாளாயின? மலயகேது இப்போது பட்டணம் போய்ச் சேர்ந்திருப்பானோ?" என்று கேட்டான்.

அவன், "ஸ்வாமி! பர்வதேசன் காலமாகி இரண்டு மாதங்களாயின. மலயகேதுவும் தன் நகரை அடைந்திருக்கலாம். இவ் விசேஷ சம்பவத்தை அறிவிக்கவே எண்ணித் தங்களை நான் தேடி வந்தேன். வரும் வழியில் தங்கள் உத்தரவுப்படி பாடலிபுரம் சென்றுகொண்டிருந்த விராதகுப்தன் மூலம் தாங்களிருக்குமிடமறிந்தேன்" என்றான்.

"நல்லது. நீ என்னுடன் இரு" என்று ராக்ஷஸன் வாஸகனுக்குத்தரவிட்டுப் பர்வத ராஜ்யம் நோக்கிச் செல்லலானான். அப்பொழுது அவன் முன் உத்தரவிட்டிருந்தபடியே அவனது பரிவாரங்களிற் சில அவனிடம் வந்து சேர்ந்தன. அவர்களுடன் அமாத்தியன் பர்வத ராஜ்யமடைந்து, சாஹரி நகரத்தின் வெளிப் புறத்திலுள்ள உத்யான வனத்தில் தங்கியிருந்தான்.

## முப்பத்தாறாவது அத்தியாயம்.

## சாணக்யன் சந்திரகுப்தனைத் தேற்றல்.

ராக்ஷஸன் செய்தி இவ்வாறாக, 'பாடலிபுர அரமனையில் அந்தப்புரத்திலிருந்த விருத்த ராஜ தம்பதிகள் காணப்படவில்லை' என்ற சமாசாரம் அறிந்த சந்திரகுப்தன், தானே நேரில் சென்று, அவர்களை அரமனை முழுதும் தேடினான். எங்கும் அவர்களை அவன் காணாது, அவ்விடமிருந்த வேலிபண்டை திறந்து கிடந்த ஒரு சுரங்க வாயிலைக் கண்டான். கண்டதும், "சரி. விருத்த ராஜ தம்பதிகள் புத்திரசோகம் தாங்காது வனமே சென்றுவிட்டார்கள். ஈச்வர சாக்ஷியாய் நான் எவ்வகையிலும் அவர்களுக்கு அபராதம் செய்தறியேன். இது உலகறிந்த விஷயம். மதித் தளர்வெய்தியும் புத்திரவாஞ்சை மேலிட்டும் சென்ற இவர்களைத் தபோவனத்திலிருந்து அழைத்து வருவதற்குரிய வழியை இனி நான் தேடவேணுமென்றுச் சும்மா யிரேன்" என்று தீர்மானித்தான். பிறகு அவன் துக்கம் பொறுக்கமாட்டாமல், வக்ரநாசன் என்ற விருத்த மந்திரியை வரவழைத்து, ராஜ தம்பதிகள் ஆரண்யம் சென்றிருக்கும் விஷயத்தைக் கூறி, அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளுக்கு ஒருவித குறைவுமில்லாது அவர்கள் வேண்டியவற்றை உலோபமின்றிக் கொடுத்துப் போற்றி வருமாறு அவனை நியமித்தான். அதன் பின்னர், அவன் சுரங்க வாசலை மூடிக் கட்டும்படி வேலையாட்களுக்கு உத்தரவிட்டு, அதிவேகமாகச் செல்லத்தக்க சிலர்களை, நைமிசாரண்யத்தில் விருத்த தம்பதிகள் வசிக்குமிடத்தை யறிந்து வந்து சொல்லும்படி கட்டளையிட்டு அனுப்பித் தன திருப்பட்டணம் வந்து சேர்ந்தான்.

இச்சமயம் கூடச் சாணக்கியனால் அனுப்பப்பட்டிருந்த கொலையாளிகள், சாணக்யனை அந்தரங்கமாக ஓரிடத்திற் கண்டு, "ஸ்வாமி! உத்தரவுப்பிரகாரமே விருத்த மன்னரைக் கொன்றுவிட்டோம். இதோ அவர் கையிலிருந்த ஜபமாலை, என்று அதனைக் காண்பித்தார்கள். சாணக்யன் அவர்களுக்கு அளவற்ற திரவியம் அளித்து அனுப்பிவிட்டு, 'சரி. இனி, சந்திரகுப்தனுடைய அரசாட்சிக்கு அணுவளவும் சத்துருவால் உபத்திரவம் கிடையாது!" என்று மன மகிழ்ச்சியுடனிருந்தான். நிற்க,

சந்திரகுப்தனால் ராஜ தம்பதிகளை அழைத்துவருமாறு அனுப்பப் பட்டிருந்த தூதர்கள், நைமிசாரண்யத்தி லுள்ள தபோ வனங்களில் அவர்களைத் தேடினர். தேடியோர், எங்கும் அவர்களைக் காணாது திரும்பு கையில், அங்கு, தாம் கண்ட குஸுமரேகை மூலமாக விருத்த தம்பதி கள் இருவரும் முத்தியடைந்த விஷயம் அறிந்து வந்து, அதனை அரச னிடம் அறிவித்தனர். சந்திரகுப்தன் இச் செய்தியைக் கேட்டு, மிக விசனித்து, "ஐயோ! நான் என் பாட்டனார்க்கேனும் பணிவிடைகள் செய்துகொண் டிருந்து சுகிருதமுற எண்ணி யிருந்தேனே! தெய்வ சங் கற்பம் இவ்வித மாயிற்றே!" என்று புலம்பினான். அப்போது சாணக்யன் அவனைச் சமயோசித மொழிகளால் தேற்றி, அவனைக் கொண்டே ராஜ தம்பதிகளுக்கு நடக்கவேண்டிய கிரியைகளை நடத்தி, பல்வித தானங் களை மரித்தோரது ஆத்ம திருப்தியின் பொருட்டு மறையோர்க்கும் மற்றையோர்க்கும் கொடுக்கச் செய்தான்.

---

## முப்பத்தேழாவது அத்தியாயம்.

## மலயகேதுவிடம் ராக்ஷஸனை அழைத்துவரல்.

---

பர்வத ராஜ்யத்தில் சாஹாரீ நகரத்தின் வெளிப் புறத்திலுள்ள உபவனத்தில் அமாத்ய ராக்ஷஸன் இறங்கி யிருந்ததை அறிந்த பாகு ராயணன், தனக்குள், "ஸித்தார்த்தகனிடம் சாணக்யர் அனுப்பி யிருந்த கடிதக் கருத்தின்படியே இதுவரை யாவும் நடந்து வந்துள்ளன. இப் பொழுது அதிற் கண்டுள்ளபடி அவரது ஊக்கத்திற் கேற்ப, 'ராக்ஷஸன் மலயகேதுவை அனுசரித்துச் சந்திரகுப்தன் மீது தண்டெடுக்க முயலு மாறே வந்துளான்' எனத் தோன்றுகிறது. சாணக்யர் நமக்கிட்ட உத் தரவின்படியே, இவனை, வேற்றிடம் செல்லவொட்டாது மலயகேது விடமே இருத்த வேண்டும். பிறகு, தக்க சமயத்தில், தோஷாரோபணம் ஏதேனும் செய்து, அவன்மீது மலயகேதுவிற்கு வெறுப்புண்டாக்கி, அவனை இங்கிருந்து ஓட்டி, மலயகேதுவைச் சிறை செய்யவேண்டும். —ஆம் இதுவே அவர் நமக்கிட்ட கட்டளை. இப்பொழுது மலயகேது வை ராக்ஷஸனுக்கு அறிமுகம் செய்து வைப்போம். இஃதறிந்து, மேல் நடக்கவேண்டிய விஷயங்களுக்குத் தக்கபடி, ஆட்களையும், பதாயடன்

முதலிய சேனுபதிகளையும், பெரும் படைகளுடன் தந்திரசாலியான சாணக்யர் தக்க சமயத்தில் விரைந்தனுப்புவர்" என்று ஆலோசித்து, ஒரு முடிவு செய்துகொண்டு, மலயகேதுவின் கொலுமண்டபம் நோக்கி வந்தான்.

அப்பொழுது, ராக்ஷஸன் அனுப்பிய தூதர்கள், மலயகேதுவைக் கண்டு கும்பிட்டு, மகாப் பிரபுவே! பாடலிபுரத்திலிருந்து அமாத்திய ராக்ஷஸர் இங்கு வந்து உத்தியான வனத்திலிறங்கி யிருக்கிறுர். தங்களைத் தரிசிக்கத் தக்க சமயமறிந்து வரச் சொன்னுர்" என்று விண்ணபித்தார்கள்.

இவ் வார்த்தையைக் கேட்டு; மலயகேது, தனக்குள், "நந்தர்களுக்கு மந்திரியா யிருந்த ராக்ஷஸன் இப்பொழுது இங்கு வந்த காரணம் என்னவா யிருக்கலாம்? சந்திரகுப்தனிட முள்ள விரோதத்தினுலா? அல்லது நமக்கும் சந்திரகுப்தனுக்கும் இப்பொழுது உண்டாயிருக்கும் மனஸ்தாபம் அறிந்து நம்மைத் துணையாக்கிக் கொண்டு சந்திரகுப்தனை வெல்லும் நிமித்தமா? இதை நாம் அறிய வேண்டும். ராக்ஷஸன் நந்தர்களிடம் மந்திரி பதவி யிலிருந்து சர்வாதிகாரங்களையும் நடத்தி வந்தவன். ஆதலின், ராஜ ராஜர்களும் சிற்றரசர்களும் அவனை மதித்தும் அடுத்தும் வந்தார்கள். நமது பிதாவும் இவ் அமாத்தியனைப் பற்றி அடிக்கடிச் சிலாகித்து பேசியதையும் கேட்டிருக்கிறேம். காரிய நிர்வாகியும் புத்திசாலியும் சத்தியசீலனும் பிரஜைகளுக் கனுகூலனும் ஆகிய ராக்ஷஸன் சந்திரகுப்தனிட மிருப்பானுகில் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. நல்ல காலத்திற் கடையாளமாக அவன் சந்திரகுப்தனை வெறுத்து வெளிப்பட் டிருக்கிறுன். இது நம் அதிர்ஷ்டமே. ராக்ஷஸன் சந்திரகுப்தனை ஜயிப்பது தனக்கும் முக்யமென்று வலிந்து கூறுவனுயின், அதனினும் நன்மை தரத்தக்கது மற்றென்றில்லை. அவனையே சர்வாதிகாரியாக நியமித்து விடுவோம். அவனைக் கொண்டே சாணக்ய சந்திரகுப்தர்களை நிக்ரகிப்போம்" என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே, தனது சமீபம் பாகுராயணன் வருவதை நோக்கினுன்.

அவனை நோக்கி, மலயகேது, "ஐய, பாகுராயண! நந்தர்களின் மந்திரியான ராக்ஷஸன் நமது உபவனத்தி லிறங்கிக்கொண்டு நம்மைக் காண வருவதாகத் தெரிவித்திருக்கிறுன். அவன் சந்திரகுப்தனைக்

கண்டு பயந்து வந்திருப்பான் என்று தோன்றுகிறது. ஆயினும் ஸ்வாமி பக்தனான அவனுக்கு நமக்குள்ளது போல் சந்திரகுப்தனிடம் பகைமையும் உள்ளது. இதில் ஆக்ஷேபமில்லை. ஆகையால் இவன் நமக்கு மித்திரனே ஆவான். இவனது உதவிகொண்டு சந்திரகுப்தனை வெல்லுவது எளிதா யிருக்கும். ராக்ஷஸன் தானாகவே வலிய வந்திருப்பது நமக்கு நற்கால மன்றோ?" என்றான்.

"ஐய, ராஜகுமார! ராக்ஷஸனைப் பற்றி எண்ணுவதெல்லாம் சரியானதே யாகும். தூரதர்சியும் மேதாவியுமான ராக்ஷஸன் சந்திரகுப்தனிடம் வைரங்கொண்டு வந்திருப்பானாகில், உன் மனோரதமெல்லாம் ஈடேறிவிட்டதாகவே நீ நினைக்கவேண்டும்" என்று பாகுராயணன் கூற, மலயகேது, "ஐய, மித்திர! ராக்ஷஸன், எடுத்த கருமம் முடிப்பவனென்றும் வெற்றி விளைவிக்கத் தக்கவனென்றும் சொல்லுகிறாயே. முன்பு சாணக்யனிடம் அவனுடைய சாஹஸ மொன்றும் செல்லவில்லையே" என்றான்.

பாகுராயணன், "நல்லது. நீ சொல்வது சரியே. ஆயினும் சாணக்யன் எப்பொழுதும் துர் அகங்காரி. மகா கடின சித்தம் வாய்ந்தவன். சொற் பிழை பாராட்டும் தன்மையுள்ளவன். ஆனது பற்றியே ராஜநீதி அறிந்தவனும் அரசனும் பரிசுத்த மனம் வாய்ந்தவனுமான சந்திரகுப்தனிடம் இதுவரை ஒற்றுமையா யிருந்தது போல் இனி இருக்கமாட்டான். அரசனா யிருப்பவன் ராஜ காரியம் தவிர்த்து மற்ற விஷயங்களில் ஸ்வாதீனமுள்ளவனா யிருப்பான். ஆகையால் தனக்கு ராஜ்யம் கிடைப்பதை எண்ணியே தாஸானுதாஸனாக அவன் சாணக்யனிடம் நடந்து வந்தான். சந்திரகுப்தனிடம் இனி சாணக்யனுடைய முழு அதிகாரமும் செல்லாது. அதுபற்றி அவர்கள் இருவர்க்குள் விரைவில் மனஸ்தாப மேற்படவும் கூடும். அச்சமயம் ராக்ஷஸனுடைய உதவியைக் கொண்டு உன் காரியம் கை கூடி விடும்" என, மலயகேது, "நீ சொல்வது முற்றும் பொருத்தமானதே" என்று ஒப்புக்கொண்டு, "பரிவாரங்களுடன் நீயே நேரிற் சென்று ராக்ஷஸனை மரியாதையுடன் அழைத்து வா" என்றான்.

---

## முப்பத்தேட்டாவது அத்தியாயம்.

## ராக்ஷஸன் மலயகேதுவைக் காணல்.

பாகுராயணன் மலயகேது விரும்பிய வண்ணமே மந்திரி முதலிய பரிவாரங்களுடன் சென்று, ராக்ஷஸனைக்கண்டு நமஸ்கரித்து, தனக்குப் போடப்பட்டிருந்த ஓர் ஆசனத்தில் உட்கார்ந்தான். பிறகு இருவரும் பரஸ்பரம் யோக க்ஷேமம் விசாரித்துக் கொண்டனர். சிறிது நேரம் கழித்து, ராக்ஷஸன் பாகுராயணனை நோக்கி, "ஏன் ஐய! சேனாபதியே! நீயும் மலயகேதுவினிடம் வந்து சேர்ந்த காரணம் என்ன"? என்று கேட்க, அவன், "ஸ்வாமி! நந்தர்கள் காலஞ்சென்றதன்பின், 'சந்திர குப்தன் ராஜ்யத்திற்கு அருகன் அல்லன்' என்று என் மனச்சாக்ஷிக்குத் தோன்றியது. ஆதலின் நந்த ராஜ்யத்தின் பாதிக்கு நியாயப்படி அரசாகக்கூடிய பர்வதேசனை அடுத்துக் காலம் கழிக்கத் தீர்மானித்தே நான் சந்திரகுப்தனைக் கண்டுகொள்ளாம லிருந்தேன். இஃது அறிந்த சாணக்யன் என்னை ராஜசபையில் அவமதிக்க எண்ணினான். இதனை எனது ஆட்கள் மூலம் அறிந்தேன். மறுநாள் இரவு சந்திரகுப்தனது ஆட்கள் மலயகேதுவின் விடுதியைச் சூழ்ந்துகொண்டு யுத்தத்திற்குச் சித்தமாகத் தம் சைனியங்களுடன் விரைந்து வந்தனர். நான் இதைக் கண்ணுற் கண்டு, "ஓகோ! கபட எண்ணமுள்ள சாணக்யன் புத்திரனுடன் கூடிய பர்வதேசனுக்கு ஏதோ தீங்கு செய்ய எண்ணிவிட்டான்" என்று அறிந்து, பர்வதேசனது கூடாரத்தருகே வந்தேன். அங்கு சாணக்யனால் அனுப்பப்பட்ட விஷகன்னிகையால் பர்வதேசன் இறந்து கிடக்கவும் சந்திரகுப்தன் சேனை மலயகேதுவைச் சூழ்ந்திருக்கவும் கண்டு, மனம்பொறுது, மலயகேதுவைச் சத்துருக்களினின்றும் தப்புவித்து அழைத்து வந்தேன். நான் செய்த உபகாரத்தை நினைத்து என்னைத் தன்னுடனே இருக்கும்படி அரசிளங்குமரனை மலயகேது பெரிதும் கேட்டுக்கொண்டான். இரக்க மேலீட்டால் நான் அதற்கிசையவே, அவன் இங்கு என்னை அழைத்து வந்தான். தாங்கள் நல்லவேளையாய் வந்து விட்டீர்கள். மலயகேதுவிடம் கருணைவாய்ந்த தங்கள் நன் முயற்சியால் அவனது கோரிக்கைகள் இனி ஈடேறத் தடையே இல்லை. அரச குமாரன் தங்களை எதிர்பார்த்த வண்ணமாய் இருக்கிறான். புறப்படத் தயை செய்யவேண்டும்" என்று உரைத்தான்.

ராக்ஷஸன் அவன் வேண்டுகோட் கிணங்கி எழுந்து, தனது பரிவாரத்துடன் ராஜசபை வந்தான். வரவும், மலயகேது தனது ஆசனம் விட்டெழுந்து, ராக்ஷஸனை நமஸ்கரித்தான். அமாத்தியன் ராஜகுமாரனைக் கைகொண்டு நிறுத்தி, "வெற்றி பெறுக" என ஆசிர்வதித்தனன். பிறகு அவ்விருவரும் உசிதமான பீடங்களில் உட்கார்ந்தனர். உட்கார்ந்ததும், "அமாத்திய சிரேஷ்டரே! தாங்கள் சுகமோ?" என்று மலயகேது க்ஷேமம் விசாரித்தான். அமாத்தியன், "ஐய, குமார! நீ கீர்த்தியுடன் இருப்பது கேட்டு, நாமும் க்ஷேமத்துடனிருக்கிறோம். பிரஜைகள் மந்திரி சேனாதிபதி முதலிய பரிவாரங்களுடன் உனக்கு மேன்மேலும் க்ஷேமமுண்டாகுக. நான் உன் தந்தையின் சிநேகன். அது காரணம்பற்றியே உன்னை 'குமாரன்' என்று அழைக்கும் சுதந்தரம் எனக்கு உண்டு. எங்கள் இருவருக்குள் இருந்த சிநேகத் தன்மையைப்பற்றி உன்னிடத்திலுள்ள விருத்த மந்திரிகளைக் கேள். அவர்கள் சொல்லுவார்கள். இருக்கட்டும். வஞ்சகனான சாணக்யனது சூழ்ச்சிகளை நிசமென நம்பிய பர்வதேசன், தானே மகத்தான ஆபத்திற் குட்பட்டுவிட்டான். நீ உன் தந்தையின் அநியாய மரணத்தினால் மனமிக வருந்திப் பிரஜைகளின் க்ஷேமத்திற் காதாரமாகிய பர்வதராஜ்யத்தின் அரசாட்சி முறையில் பொறுப்பில்லாது வெறுப்புடன் இருக்கிறாய் என்று அறிந்து உன்னைக் காண வந்தேன்" என்றான்.

"ஐய அமாத்திய சிரேஷ்டரே! கெடுக்க எண்ணும் விதிவசமானது, வஞ்சகரை மித்திரர் என எண்ணச்செய்து அவர்களைக்கொண்டே கெடுத்துவிடுமன்றி அது நேரில் தானே வந்து கெடுப்பது உண்டோ? முன்பு இருந்த அன்பு காரணமாக வின்றி இப்பொழுது வைத்துள்ள புத்திர வாஞ்சையால் தாங்கள் எல்லாவிதத்திலும் உதவிபுரிய வேண்டும். பெருந்தயையுடனும் அபிமானத்துடனும் புத்திரனாகிய என்னைப் பார்க்க எண்ணித் தாங்களே வந்ததால் எனது மனவருத்தமும், ஈன்ற தந்தையை இழந்த விசனமும், ஆறி விட்டன. தாங்கள் இனி சிரம பரிகாரம் செய்து கொள்ளவேண்டும்' என்று உரைத்துச் சகல வசதிகளும் வாய்ந்த ராஜயோக்யமான விடுதி ஒன்று அமைக்கச் செய்து ராக்ஷஸனை அங்கு அழைத்துப்போம்படி ஏற்பாடு செய்தான். ராக்ஷஸன் அங்கு சென்றதும் மலயகேது நீராடச் சென்றான்.

---

## முப்பத்தோன்பதாவது அத்தியாயம்.

## மலயகேதுவுடன் ராக்ஷஸன் ஆலோசித்தல்.

ராக்ஷஸன் தன்னிடம் வந்த மறுநாள், மலயகேது தன் ஆட்களுள் ஒருவனை அனுப்பி, 'ராக்ஷஸருடைய சமயமெப்படி?' என்று விசாரித்து வர அனுப்பினான். அவ் ஆள் போய்ச் சேருமுன், ராக்ஷஸன், தானே மலயகேது இருக்குமிடம் வந்து விட்டான். மலயகேது அவனுக்கேற்ற மரியாதை செய்து உட்கார வைத்துத் தானும் உட்கார்ந்து "அமாத்ய சிரேஷ்டரே! பாடலிபுரம் விட்டு வந்த பிறகு இது வரை தாங்கள் எங்கு வசித்தீர்கள்? இனி ஆக வேண்டிய காரியங்களுக்குத் தாங்கள் செய்துள்ள யோசனை என்ன? அவசிய காரியங்கள் இருக்கும் பொழுது கால தாமதம் கூடாதென்று சொல்லும் பெரியோர்கள் சொல்லை யான் கேட்டிருக்கிறேன்" என்றான்.

"ஐய, குமார" என்று தொடங்கி, ராக்ஷஸன், நான்கு பக்கங்களையும் ஒரு முறை சுற்றிப் பார்த்ததும் அவன் குறிப்பறிந்து யாவரும் வெளியிற் சென்றார்கள். பிறகு, அவன் "ஐய, மலயகேது! எனக்கு அவசியமாயும் கடமைப் பட்டதாயுமுள்ள விஷயங்கள் உனது உதவியின்றி நிறைவேற மாட்டா. விளங்கக் கூறுகின்றேன்: சாணக்யன் என்ற பிராமணன் உன் தந்தையை வசப்படுத்தி அழைத்துப் போய் நந்தர்களைக் கபடமாக கொன்று தனது உடன்படிக்கைப்படி பாதி ராஜ்யம் அளிக்க மனமின்றி விஷகன்னிகையை அனுப்பி அவனைக் கொன்றான். உன்னையும் அவன் லட்சியம் செய்தானில்லை. துரோக புத்தி யுடையவர்களைத் தண்டிக்க வேண்டியது அவசியமன்றோ? பிரபுவா யிருக்கும் நீ பேசாதிருக்கலாமா? அந்தச் சாணக்ய சந்திரகுப்தர்கள் உங்களுக்குச் செய்துள்ள வஞ்சனைகளுக்கு எவ்விதம் பழிவாங்கினும் போதாது. நந்த ராஜ்ய முழுதும் நான் சொல்லுகிறபடி ஆடும். அதிலுள்ள பிரஜைகள் அனைவரும் எனக்கு உட்பட்டவர்கள். ஆகையால் சில பிரமுகர்கள் தக்க சமயம் பார்த்துச் சந்திரகுப்தனைக் கொன்றுவிடத் தயாரா யிருக்கிறார்கள். இச் சமயம் நீ தைரியத்துடன் என்மொழிப்படி படையெடுத்துவரின் உனது உதவி கொண்டு எவ்விதத்திலும் சந்திரகுப்தனைக்

...நூல் நிலைய ... ஆவணக் காப்பக

கொன்று நந்தராஜ்ய முழுமையும் உனக்கு அளிப்பேன். இவ்விதம் பரலோக மடைந்த எனது பிரபுக்களுக்குத் திருப்தி செய்யவிக்க எண்ணியே நான் இங்கு வந்தேனன்றிப் போக போக்கியங்களை இச்சித்தாவது, உன் ராஜ்யம் பெறக் கருதியாவது வரவில்லை. ஸ்வாமி பக்தியை நிறைவேற்றி உனக்கு நந்த ராஜ்ய பட்டாபிஷேகம் செய்து வைத்துப் புகழ்பெற விரும்புகிறேன். உள்ளபடி வேறு விருப்பு எனக்கில்லை" என்றான்.

மலயகேது, "ஐய, அமாத்யரே! நான் கோரி இருந்ததைத் தாங்களே தீர்மானித்து விட்டீர்கள். தாங்கள் துணிந்து முயன்றால் சந்திரகுப்தனுக்குத் துணையாயுள்ள சாணக்யன் எம்மாத்திரம்? 'சந்திரகுப்தனைக் கொன்றல்லாது பிதிர்க் காரியத்தை நிறைவேற்றிக் கந்த புஷ்ப தாம்பூலங்கள் தரிப்பதில்லை' என்று நான் செய்திருக்கும் வீர விரதம் நிறைவேறு நிமித்தமே தாங்கள் இங்கு வந்தீர்கள். நந்தராஜ்யம் எனக்குக் கிடைத்தாலும் அதன் அதிகாரங்களைத் தங்களைக் கொண்டே நடத்தி வருவேன். இன்று முதல் தாங்கள் சொல்லும் சொல்லை நான் மீறாது நடந்து வருவேன். முன் போலவே மறுமுறையும் சைனியங்களைச் சித்தப்படுத்துகிறேன். எனது சத்துருக்களை ஜயித்துத் தந்து, என்னைச் சகல ராஜ்யாதிபதி ஆக்குங்கள். எனது பிரஜைகளுக்கும் பரிவாரங்களுக்கும் எனது தந்தையினும் அதிக சுக சந்தோஷங்களை விளைவியுங்கள். தாங்களும் பெருங் கீர்த்தியுடன் இருங்கள்" என்று உரைத்துத் தாம்பூலம் அளித்து மந்திரிகளுடன் ராக்ஷஸனை விடுதிக்கு அனுப்பித் தானும் அந்தப்புரம் சென்றான்.

## நாற்பதாவது அத்தியாயம்.

## ராக்ஷஸனைச் சர்வாதிகாரியாக்கல்.

இரண்டொரு நாட்கழித்து, மலயகேது, சித்திரவர்மன் முதலிய மன்னவர்களையும் சிற்றரசர்களையும் சேனாபதிகளையும் அரசாங்க உத்தியோகத்திலுள்ள அதிகாரிகளையும் மந்திரி பிரதானிகளையும் வரவழைத்துச் சபைகூட்டி, ராக்ஷஸனை அதிமரியாதையுடன் அழைத்து வந்து

உட்காரச்செய்து, யாவரையும் பார்த்து, "அதிகாரம் வகிக்கும் ஐயன்மீர்! எண்ணியவற்றை முடிப்போரும் புத்திமானும் சத்தியசீலரும் நமது தந்தைக்குப் பரம மித்தருமான இவ் வமாத்திய ராக்ஷஸர் நமது க்ஷேம லாபங்களுக்கு மிகவும் அநுகூலமா யிருப்பவர். ஆதலின் நமது பக்கத்திய சர்வாதிகாரத்தையும் விசாரித்துக் கொள்ளுமாறு நாம் அவரை வேண்டிக் கொண்டிருக்கிறோம். ஆதலின் இவர் சொல்லும் விதமே எந்தக் காரியமும் நடைபெற வேண்டியது. ராஜ காரியங்களையும் இன்று முதல் அவர் கட்டளைக் கிணங்கி நிறைவேற்றி வர வேண்டியது" என்று உத்தரவு செய்தான். பிறகு, அவன் சித்திரவர்மன் முதலிய அரசர்களை நோக்கி, "நமக்கு மித்திரர்களான அரசர்களே! மறுபடியும் இப்பொழுது நாம் பாடலிபுரத்தின்மீது தண்டெடுத்துச் செல்லவேண்டி யிருக்கிறது. நீங்கள் அமாத்ய ராக்ஷஸர் சொற்படி உங்கள் சேனைகளை அணிவகுத்துப் புறப்படும் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருங்கள்" என்று சொல்லி, பொக்கிஷத்திலிருந்து விலை மதிக்கமுடியாத வஸ்திராபரணங்களை வரவழைத்து, ராக்ஷஸன் ஏற்றுக்கொள்ளுமாறு அவற்றை அவன் முன் வைத்தான்.

அமாத்யன் அது கண்டு, "ஐய, குமாரனே! எனக்கு இவையெல்லாம் என்?" என்று வினவ, மலயகேது, "ஐய! என்னை வேண்டி இவற்றை அங்கீகரிக்க வேண்டும்" என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டான்.

"குமார! நான் பூஷணங்களணிவதற்குரிய சமயம் இதுவா? நீ யளிக்கும் ஆபரணங்களை நான் அணியவேண்டிய சமயம் ஒன்றுள்ளது. உனது சத்துருவான சந்திரகுப்தனை உன்னைக்கொண்டே சங்கரித்து உன்னை நந்த சிம்மாசனத்தில் உட்காரவைத்து, சகல ராஜ்யாபிஷேகம் செய்து, ராஜ ராஜர்களுடைய கிரீடங்களிலுள்ள நவ ரத்தின காந்தியால் உனது பாதங்களை அலங்கரித்து, வந்தியர் மாகதர் 'ஜய! ஜய!' வென்று புகழவும், சகல மன்னர்களும் கப்பங்கள் கட்டவும் என் கண்ணால் கண்டு களிக்கும் சமயமே இவ் வாபரணங்களை உவந்து அங்கீகரிக்கும் சமயமாகும். பிரபுக்களான நந்தர்களை யிழந்து சத்துருவை வெல்லாது அடைந்துள்ள மன வருத்தத்தாலேயே நான் விளக்கியுள்ள இவ் ஆபரணங்களை இப்பொழுது அணியச் சொல்லுகிறாயே. யாது சந்தோஷ நிமித்தம் அதனை நான் அணிந்துகொள்வது?" என்றான் ராக்ஷஸன்.

மலயகேது ராக்ஷஸனுடைய வார்த்தையை மீறிப்பேச முடியாத வனுய், சமீபத்திலிருக்கும் விருத்த மந்திரியான உலூகனுடைய முகத்தைப் பார்த்தான். தனது யஜமானனது மனதையறிந்த அம்மந்திரி, "ஸ்வாமி அமாத்யரே! நீங்கள் மலயகேதுவின் ஆஸ்தானத்திற் பிரவேசித்த போதே, 'சத்ரு நாசமடைந்து நந்தராஜ்யம் பர்வத ராஜகுமாரன் வசமாயிற்று' என்பதில் தடையுண்டோ? நான் சொல்வது சத்தியம் என்பதை இங்குள்ளோர் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள். நினைத்ததை முடிக்கும் தாங்கள் பிரயத்தனப்பட்ட காரியம் வேறய் விடுவதுமுண்டோ? தாங்கள் ஆபரணமின்றி இருப்பது பிரபுவின் மனதிற்குச் சமாதானம் அளிக்கவில்லை. அவற்றைத் தாங்கள் அணிந்தால் சபையும் அதி அலங்காரமாக விளங்கும். நமது பிரபுவின் மனதிற்கும் சந்தோஷமுண்டாகும். நற்குறியாக முதல் முதல் தாங்கள் அவரால் ஆர்வத்துடன் அளிக்கப்பட்ட ஆபரணங்களைத் தரிக்கவேண்டியது அவசியம். உங்களைக் காட்டிலும் சமயோசித மறிந்தவர்களுண்டோ?" என்று மரியாதையாகச் சொன்னன்.

ராக்ஷஸன் உலூகன் கூறியது உசிதமென் றறிந்து அரசனையும் மந்திரியையும் நோக்கி "உங்களிடம் வந்த பிறகு உங்களுக்கு நான் வசப்பட்டவனேயன்றி வேறல்லன். உங்கள் இஷ்டம் நிறைவேறுக" என்றான்.

உடனே சேகரன் எழுந்து ராக்ஷஸனுக்குத் திவ்ய பரிமள கந்தம் பூசி, அவனைப் புஷ்பமாலைகளால் அலங்கரித்து நவரத்தின மயமான துராயினல் விளங்கும் தலைப்பாகை சூட்டி, முத்து ஹாரங்களைக் கழுத்தில் விட்டு, ரத்னகடகங்களைக் கையிலிட்டு, வைடூரியங்களிழைத்த மோதிரங்களால் விரல்களை அலங்கரித்து, உயர்ந்த பீதாம்பரமணியச் செய்து கற்பூர தாம்பூலம் கொண்டுவந்து அவன் முன் வைத்தான். ராக்ஷஸன் தனக்களித்த தாம்பூலாதி பெற்று மலயகேதுவினிடம் வந்து 'ஜயசீலனுகுக' என்று அவனை வாழ்த்தி உட்கார்ந்தனன்.

ராக்ஷஸனை நோக்கி ராஜகுமாரன் மிகவும் சந்தோஷமடைந்து, "ஐய, அமாத்ய சிரேஷ்டரே! இனி அதிகாரிகளுக்குத் தாங்களே உத்தரவளித்து அனுப்புங்கள்" என்றான். ராக்ஷஸன் அவனது விருப்பிற் கிணங்க உத்தியோகஸ்தர்க ளெல்லோரையும் கிரமப்படி தனதருகில் வரவழைத்து அவரவர்களுக் கேற்ற காரியங்களை நியமித்து அவர்

ளுக்குக் கந்த புஷ்ப தாம்பூலங்களை யளித்து உபசரித்தான். அப்போது மத்தியான காலத்தை அறிவிக்கும் சங்கபேரீ வாத்தியங்கள் முழங்க வாரம்பித்தன. உடனே மலயகேது ஆஸ்தானம் விட்டெழுந்து தன் சிநேகர்களான ராஜகுமாரர்களுடன் பேசிக்கொண்டே ராஜக்கிருகம் பிரவேசித்தான். ராக்ஷஸன் முதலியவர்களும் தத்தம்மிடம் சென்றார்கள்.

சேகரனாதி சேனாதிபதிகளும் முக்யாதிகாரிகளும் அன்று முதல் ராக்ஷஸனுடைய உத்தரவை யனுசரித்துச் சகல காரியங்களையும் நடத்தி வந்தார்கள். ராக்ஷஸன் இது வரை நடந்து வந்த ராஜ்ய பார விஷயங்களை மாற்றி, நந்தர்களிடம் மந்திரியா யிருக்கும்போது செய்து வந்த முறைகளை யனுசரித்து ராஜ தந்திரங்களை நடத்தி, பொக்கிஷங்களில் திரவியம் சேர்த்துச் சைனியங்களைப் பெருக்கலானான். அவன் நடத்தி வரும் விமரிசையையும் அவனுடைய ஆக்ஞா சக்தியையும் கண்டு, சகல ஜனங்களும் அவனைப் புகழ்ந்தார்கள். மந்திரிகளும் அவனைக் கொண்டாடினார்கள்.

---

## நாற்பத்தோன்றாவது அத்தியாயம்.

## அஷ்ட சேனாதிபதிகளையும் அப்புறப்படுத்தல்.

பாடலிபுரம் விட்டுச் சென்ற ராக்ஷஸனது செய்தி அறிந்து வரும்படி சாணக்யனால் நியமிக்கப்பட்டிருந்த கூடாசரனாகிய ஸமித்தகன் என்பவன், ராக்ஷஸன் பாடலிபுரமிருந்து புறப்பட்டுச் சென்றது முதல், பர்வத ராஜ்யத்தில் மலயகேதுவிடம் சர்வாதிகாரம் பெற்றுப் பாடலிபுரத்தின் மீது மறுபடி தண்டெடுத்து வருவதற்குரிய சகல ஏற்பாடுகளையும் செய்து வரும்வரை செய்துள்ள சகல சமாசாரங்களையும் அறிந்து கொண்டு குஸுமபுரம் வந்தான். வந்தவன், சாணக்யனைத் தனிமையிற் கண்டு, தான் அறிந்த விஷயங்களைத் தெரிவித்தான்.

சாணக்யன் அது கேட்டுத் தனக்குள், ராக்ஷஸன் சந்திரகுப்தன் விஷயத்தில் இது வரை செய்து வந்திருக்கும் சூழ்ச்சிகள் சற்றும் பலியாதிருந்தும் பின்னும் ஆவேஷம் சாதிக்க எண்ணி மலயகேதுவை

யடித்து இருக்கிறன். ஆகாயத்தி லெறிந்த கல், மறுபடியும் பூமியில் வந்து விழவேண்டியது போல, நம்மினின்றும் ஓடிய அவன், நம்மை மீற முடியுமோ? ராக்ஷஸன் செய்கிறதெல்லாம் செய்து பார்க்கட்டும். என்னுடைய உபாயத்தினல் ராக்ஷஸனைத் தானுகவே இங்கு வந்து சேரும்படி செய்கிறேன்" என்று தீர்மானித்து, அவ்வொற்றனை நோக்கி, "ஸமித்தக! நீ மறுபடியும் சென்று ராக்ஷஸன் செய்யும் காரியங்களை யறிந்து கொண்டிரு. அறிந்தவற்றை அப்போதைக் கப்போது நீயே நேராக வந்தோ, அல்லது வேறு மனிதர்களைக் கொண்டோ, நமக்குத் தெரிவித்துக் கொண்டிரு" என்று கட்டளை யிட்டு, அவனை அனுப்பி விட்டு ஆஸ்தானத்திற்கு வந்தான்.

அச்சமயம், சில தூதர்கள் வந்து, சாணக்யனைக் கும்பிட்டு "ஸ்வாமி! முன்பு நாங்கள் உத்தர விட்டபடி சேனைகளெல்லாம் கணக்கிடப்பட்டன. அவரவர்க்குரிய சம்பளமும் கொடுபட்டு விட்டது. பாகுராயணன் முதலிய சேனாபதிகள் மட்டும் தங்கள் பரிவாரங்களுக்குச் செல்லவேண்டிய சம்பளப் பணத்தை வாங்கிப் போகவில்லை. பணம் பொக்கிஷத்தில் கட்டி வைக்கப் பட்டிருக்கிறது" என்று விக்ஞாபித்தனர்.

அது கேட்டுச் சாணக்யன் பெருங்கோபம் கொண்டவன்போல் நடித்து, சபையிலிருக்கும் அதிகாரிகளைப் பார்த்து, "அதிகாரிகளே! இத்தூதர்கள் உரைத்ததைக் கேட்டீர்களல்லவா? இப் பட்டணம் சந்திரகுப்தனுக்கு ஸ்வாதீனமானது முதல், இதுவரை, பாகுராயணன் பத்ரபடன் முதலிய சேனாதிபதிகள் ஸம்பிரதாயப்படி ராஜ தரிசனம் செய்ய வரவில்லை. அவர்க ளெல்லோரும் எதையோ மனதிற்கொண்டு நம்மை அலட்சியம் செய்து வருவதை நோக்கின், 'சந்திரகுப்தனுடைய ராஜ்பலாபம் இவர்களுக்குச் சம்மதமில்லை' என்று தோன்றுகிறது. மகா கர்விகளான இவர்களால் ஆகக்கூடிய காரியம் எதுவிருந்தாலும் இனி நாமே நடத்திக் கொள்ளுகிறோம். இச் சேனாபதிகளின் பெயர்களையும் அவர்கள் நடத்தும் சேனையிற் சேவகஞ்செய்வோர் பெயர்களையும் அதிகாரக் குறிப்பேட்டிலிருந்து எடுத்துவிடவேண்டியது" என்று கணக்கர்களுக்குக் கட்டளையிட்டான். பிறகு, அவன் அத் தூதர்களைப் பார்த்து, "தூதர்களே! நீங்கள் பாகுராயணன் முதலிய சேனாபதிகளைக் கண்டு, 'இந்த க்ஷணமே நீங்கள் இத தேசம்விட்டுச் செல்லாவிடில் ராஜ கோபத்திற்குப் பாத்திர

ராவீர்கள்' என்று நாம் உரைத்ததாகச் சொல்லுங்கள்" என்றனுப்பினான். பிறகு சாணக்யன் தனியான ஓரிடத்திற்கு ஸித்தார்த்தகனை அழைத்துச் சென்று, அதிரகஸ்யத்தில் நடத்தவேண்டிய சில விஷயங்களை அவனுக்குத் தெரிவித்தனுப்பினான்.

ஸித்தார்த்தகன் முதலில் பொக்கிஷாதிகாரியான ருக்மனைக் கண்டு, அவனுக்குச் சாணக்யனது உத்தரவைத் தெரிவித்து, அயல் தேசத்திலுள்ள வர்த்தகர்கள் நினைத்த சமயம் கொடுக்கும்படி பன்னிரண்டு லக்ஷம் பவுனுக்குப் பத்ரபடன் முதலிய சேனாபதிகள் பேரால் உண்டியல் தரச் சொல்லிப் பெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டுப் பத்ரபடனிருக்குமிடம் சென்று, உண்டியலை அவனிடம் கொடுத்து, "பாகுராயணன் தெரிவித்திருந்தபடி நீங்கள் ஏழு பெயர்களும் பர்வதராஜ்யமடைந்து, மேல் ஆகவேண்டியவற்றை நடத்தும்படி சந்திரகுப்த சாணக்யர் உத்தரவிட்டிருக்கிறார்" என்று தெரிவித்தான். அவர்கள், "ஐய! சொல்லியவிதமே அரசாஞையை ஏற்று அதன்படி செய்கிறோம்" என்று கடிதம் எழுதிக் கொடுத்தனர். அக் கடிதத்தைச் சாணக்யனிடம் கொண்டுவந்து கொடுத்தான் ஸித்தார்த்தகன். நிற்க.

ஆஸ்தானத்தில் முன்பு சாணக்யன் உத்தரவிட்டபடியே, தூதர் சென்று, பத்ரபடன் முதலிய சேனாதிபதிகளின் வீட்டு வாயலில் வந்து நின்று, "உங்களைத் தேசப்ரஷ்டம் செய்திருக்கிறது. ஆதலால் நீங்கள் இந்த க்ஷணமே அயல் தேசம் செல்லவேண்டியது. தாமதம் செய்வீர்களானால் ராஜாக்கினைக் குட்பட வேண்டிவரும்" என்று கூறினர். இங்கிதம் அறிந்த அவர்கள், ஏதோ ராஜத் துரோகம் செய்து விட்டவர்கள் போல் பயந்து, தங்களுக்கு வேண்டிய சாமான்களுடனும் தம் சைனியங்களை அழைத்துக்கொண்டும் பாடலிபுரம் விட்டுச் சென்றார்கள்.

---

## நாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

## பத்ரபடனாதியோர் பர்வத ராஜ்யம் செல்லல்.

---

இவ்விதம் சென்றவர்கள், சிலநாள் கழித்துப் பருவத ராஜ்யமடைந்து தாங்கள் வந்திருப்பதைப் பாகுராயணன் சேகரனிவர்கள் மூலமாக மலயகேதுவிற்குத் தெரிவித்து, உத்தரவானதும் ஆஸ்தானம்

சென்று சிம்மாசனத்திலிருந்த மலயகேதுவைக் கும்பிட்டுக் காணிக்கைகளை யொப்புவித்துக் கைகட்டிக்கொண்டு நின்றார்கள். மலயகேது இவர்களை யுட்காரச் சொல்லி, நீங்கள் இங்கு வந்த காரணம் என்ன?" வென்று கேட்டான்.

"மகா ஸ்வாமி! நவநந்த சேனாதிபதிகளான பத்ரபடன் முதலியோர் நாங்கள். பாடலிபுரமானது சந்திரகுப்தன் வசப்பட்டதும், எங்களுக்கு நேர்ந்த பல வித தொந்தரவுகளாலும் நந்தர்களை இழந்த வருத்தத்தாலும் ராஜ தரிசனத்திற்குச் செல்லாமலிருந்துவிட்டோம். சில நாள் கழித்து மந்திரியான சாணக்யன், "பாகுராயணன் முதலியோரை அழைத்து வாருங்கள்" என்று உத்தரவிட்டான். 'பாகுராயணன் அப்பொழுதே மலயகேதுவுடன் பர்வத ராஜ்யத்திற்குச் சென்றுவிட்டான்' என்று தூதர்கள் சொல்ல, அவன், 'பத்ரபடனை அழைத்து வருக' என்றான். தூதர்கள் விசாரித்து வந்து "பத்ரபடனுக்குத் தங்கையொருத்தி தூர தேசத்திலிருக்கிறாள். அத் தங்கை புருடன் முரடன். ஆதலின் அநேக நாட்களாகத் தங்கையை அவன் பார்க்கவும் முடியாமலிருந்தது. 'பாராதவரைப் பன்னிரண்டு வருஷத்திற்குள் ஒருமுறையேனும் பார்ப்பது அவசியம்' என்று பெரியோர்கள் சொன்னதால், தங்கை புருஷனைச் சமாதானம் செய்து, தங்கையைப் பார்த்து வரச் சென்றிருக்கிறான். திரும்பி வர ஏழெட்டு நாள் செல்லும்" என்றார்கள். அதன் மேல் 'டிங்கிராதனை யழைத்து வா' என்றான் சாணக்யன். 'சமீபத்தில் யுத்தம் நடந்ததால், தீவர்த்திக் கள்ளர்கள் டிங்கிராதனுடைய கிராமத்தைக் கொள்ளையிட்டுச் சென்றார்கள். தனது கிராமங்கள் விவசாயமின்றித் தரிசாகக் கிடப்பதறிந்து, அவன் அதனைக் கவனித்து வரச்சென்றுளான்' என்றார்கள். 'ஆனால் பலகுப்தன் எங்கே?' என்றான் சாணக்யன். "ஸ்வாமி! நமது சேனைக்கும் பர்வதேசன் சேனைகளுக்கும் முன்பு யுத்தம் நிகழ்ந்த போது, அவனது ஏக புத்திரன் எங்கேயோ சென்று விட்டான். தனது ஏக பிள்ளையைக் காணாமல் ஏங்கி அப் பிள்ளையைத் தேடிப்பிடிக்கச் சென்றிருக்கிறான்" என்றார்கள். 'விஜயவர்மனும் இல்லையோ?' என்று சாணக்யன் கேட்க, 'அவனுக்கு உடம்பு சரியாயிருக்கவில்லை. தலைக்கு ஜலம் விட்டுக் கொண்டு, சரீரம் சுக மடைந்ததும், வருகிறதாகச் சொல்லுகிறான்' என்றார்கள். கோபங் கொண்ட சாணக்யன், 'புருஷதத்தனெங்கடா?' என்று அதட்டிக் கேட்க, 'அவன் க்ஷய

ஸூதகம் கழிந்து, ஸ்நானமானதும் ராஜ சேவைக்கு வருவான்' என, 'லோஹிதாக்ஷனை யழை' என, "அவன் தாயார் இறக்கும் சமயமாகையால் சாவப் பிராயச்சித்தம் செய்து கொண்டிருக்கிறான். இதைச் சனனி தானத்தில் தெரியப்படுத்தச் சொன்னான்" என்றார்கள். "சிம்மபலனும் ஊரிலில்லையோ" வென, அவனுக்கு நான்கு நாளாகத் தலைவலி" என்றார்கள். இது கேட்ட சாணக்யன், "ஊரை விட்டோடி யிருக்கும் ராக்ஷஸனுடைய துர்ப்போதனையால் இவர்கள் ஏதோ சாக்குப் போக்குகள் கூறித் திரிகிறார்கள். நல்ல திருக்கட்டும். இந்தச சேனாபதிகள் கீழிருக்கும உதவச் சேனாபதிகளை யழைத்து வாருங்கள்" என்று கூற, தூதர்கள் அவ்விதமே எங்கள் கீழிருக்கும் லக்ஷம லக்ஷம் சேனைகளுக்கு அதிபர்களாயும் எங்களுத்தரவையே எதிர்பார்ப்பவர்களாயு மிருக்கும் லக்ஷ்மணஜீ, விஜயஸிங்கு, புருஷோத்தமலாலா, முகுந்தகோசாயி, யசவந்தராவ், லிங்கதுகாகர், ஹிம்மத்கான், ராமாஜிவாக்யார், தூலஜாகண்ட், பத்தேஹதர் என்ற சர்தார்களையும், ஷம்ஷேரனபாப், அல்லினபாப் என்ற அக்ஷௌஹிணீ பதிகளையும் அழைத்து வந்தார்கள். வரலும், சாணக்யன் இவர்களைக் கண்டு, "சேனாபதிகளே! நீங்கள் எல்லோரும் பத்ரபடாதிகளை விட்டு வேறாகப் பிரிந்து தனிமையாக நம்மிடம் உத்தியோகம் வகித்தால், உங்களுக்கு வெகுமதி யளிப்பதுடன் மிக்க சம்பளமும் தருகிறோம். பத்ரபடாதிகள் கீழ இராமல் உங்கள் சேனைகளுடன் வந்து சேருங்கள்" என, அவர்கள், "மஹா ஸ்வாமி! இளமை முதல் எங்களைக் காப்பாற்ற யுத்தத்திற் பயிற்றி அளவற்ற சம்பளங் கொடுத்து எங்களுடைய பலத்தை நம்பியே ஆயுதம் பிடித்திருக்கும் பத்ரபடாதிகளுக் குட்பட்டு நாங்கள் காலங் கழிப்போ மல்லாது, அவர்களை விட்டு விலக முடியாது" என்றார்கள்.

சாணக்யன், "ராஜத்துரோகிகளே! நீங்கள் எல்லோரும் ராஜகாரியத்தைக் கெடுக்கும் பொருட்டு ஒத்துப் பேசிக் கொண்டீர்கள் போலும்! 'நாமில்லாவிட்டால் ராஜ்யம் தலை கீழாய் விடும்' என்று அகம்பாவம் அடைந்து வீண் எண்ணங்கொண்டு இவ்விதம நடக்கிறீர்கள். இதற்குப் பரிகாரம் செய்கிறேன்" என்று கர்ச்சித்து, கணக்கர்களை அழைத்து, எங்கள் பெயர்களைப் பதிவிலிருந்து எடுக்கச் செய்ததுடன் நில்லாது, "பத்ரபடாதிகள் ராஜத் துரோகிகளாய் விட்டமையின் அவர்களைத் தேசப் பிரஷ்டம் செய்து இருக்கிறோம். அவர்கள் ஒரு மணி நேரத்தில் இவ்

லூரை விட்டுச் செல்லாவிடில் ராஜ தண்டனை கடுமையா யிருக்கும்" என்று நகர் முழுதும் பறையறைவிச் செய்தான். தக்க அந்தஸ்துள்ள எங்களை இவ்விதம் பகிரங்கமாக அவமானப் படுத்தியதை நாங்கள் சகிக்காமல், எங்கள் சைனியங்களுடன் வெளிப்பட்டு விட்டோம். நாங்கள் கோபம் தாங்காமல் எதிர்ப்போமாகில் சகல சைனியங்களும் எங்களுக்கு உதவியாகச் சேர்ந்து குஸுமபுரத்தையே தலை கீழாக்கி விடக்கூடும். ஆயினும் சேனுபதியா யிருந்தவர்கள் தாங்களே நேரில் எதிர்த்தார்கள் என்ற லோகாபவாதம் உண்டாகு மென்று விலகிவிட்டோம். இவ்வளவு சைனியங்களுக்கும் நாளொன்றுக்கு ஐம்பதினுயிரம் ரூபாய் செலவாகக் கூடியதா யிருப்பதால், உத்தியோக மில்லாது அரை க்ஷணமும் இருக்க முடியாது. தாங்கள் புதிதாகச் சேனைகள் சேர்ப்பதாகக் கேள்விப்பட்டு இங்கு வந்தோம். தங்களுக்கு அவசியமில்லையாகில் வேற்றிடம் செல்லத் தயாரா யிருக்கிறோம். உத்தரவு எப்படியோ?" என்றார்கள்.

---

## நாற்பத்து மூன்றாவது அத்தியாயம்.

## எழுவரும் வேலையிலமர்தல்.

பத்ர படனுதியோர் கூறியவற்றைக் கேட்ட மலயகேது, பாகுராயணனை நோக்க, அவன் சமீபத்தில் வந்து, "இவர்கள் இதுகாறும் சொல்லிய யாவும் நன்கு விளங்கியதல்லவா? 'இவர்களை அவமானப்படுத்தி அதிகாரத்தினின்று நீக்கித் தேசப் பிரஷ்டம் செய்தபோதே, சந்திரகுப்தன் உன் கையிலகப்பட்டு விட்டான்' என்று நீ அறிதல் வேண்டும். முக்ய சேனுபதிகளுக்கும் அரசனுக்கும் பேதங்கற்பித்து, அவர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொள்வது ராஜ தந்திரம் அன்றோ? இவ்வித முயற்சி நீ செய்யுமுன், சந்திரகுப்தன் தானுகவே இவர்களை அவமதித்துத் துரத்தியது உனது காரியத்திற்கு மிக்க அனுகூலமாயிற்று. பிரமுகனுன பத்ரபடனும், சூரனுகிய புருஷதத்தனும், காரியவாகியான டிங்கிராதனும், ஸாஹஸியான பலகுப்தனும், சேனைகளுக்கு உற்சாகமுண்டாக்கி, முன் நின்று போர்புரியச செய்யவல்ல லோஹிதாக்ஷனும், யுத்தத்தில் முன்வைத்த காலைப் பின் வைபாது போர்புரியும் சிம்மபலனும், சத்துருக்களைத் திரணமாக மதிக்கும் விஜயவர்மனும், தமது சைனியங்களுள்படப்

பாடலிபுரம் விட்டு வந்தபின்பு, சந்திரகுப்தனுக்குக் காரியவாகிகளான சேனபதிகளோ தக்க சைனியங்களோ இல்லை. ஆகையால் நமக்கு இனி நடக்கவேண்டிய காரியம் அதி சுலபாக வெற்றியுடன் முடியும் என்பதில் தடையில்லை" என்றான்.

மலயகேது தனக்குள் சற்று யோசித்து, முன் நடந்த விஷயத்தை நினைத்து, சாணக்யனால் தனது தந்தைக்குக் கொடுக்கப் பட்டிருந்த கடிதத்தை வரவழைத்து, அதனைப் பாகுராயணன் கையில் கொடுத்து, "ஐய, மித்திர! இக்கடிதத்தில் சந்திரகுப்தனுக்குச் சம்மதமான காரியத்தில் எங்களுக்குச் சம்மதமே" என்று நீங்கள் எட்டு சேனபதிகளும் கையெழுத்து இட்டிருப்பதை யறிந்தே என் தந்தை பாடலிபுரத்தின் மீது படையெடுக்கத் துணிந்தார். நீ என்னை ஆபத்திலிருந்து காப்பாற்றி யழைத்து வந்ததா லுன்னைப் பரம மித்திரனாகப் பாவித்திருக்கிறேனானாலும், அதே சேனபதிகள் இப்பொழுது சந்திரகுப்தனை வெறுத்து வந்திருப்பதை யாலோசிக்கும்போது, எனக்கு அளவற்ற ஆச்சரியத்தை விளைவிக்கிறது" என்றான்.

அக் கடிதத்தைப் படித்தறிந்த பாகுராயணன், "ஐய, ராஜகுமார! இக் கையெழுத்துக்கள் எங்கள் கையெழுத்துக்களே. ஆயினும் நாங்கள் இவ்விதம் நினைத்துக் கையெழுத்திடவில்லை. சந்திரகுப்தன் அன்ன சத்திரம் விட்டு வரும்போது எங்களிடம் வந்தான். காசியில் அவன் தகப்பனால் அரைகுறையாக விட்டிருந்த சிவாலய திருப்பணிவேலையை முடித்துவிடும்படி (அதனை அவர் கட்டளைக்கிணங்க நடத்திவந்த) கேசவதாஸனுக்குக் கடிதம் எழுதினானாம். அதற்கு அவன், எங்கள் உடைப்பட, தனக்குக் கடிதம் வந்தாலன்றிப் பணச்செலவு மிக்க அக் காரியத்தைச் செய்யமுடியாதென்று எழுதிவிட்டானாம். அதன்மேல் அவன் எங்களிடம் வந்து, 'இறந்த எந்தையாரின் ஆத்ம திருப்திக்கான இப் புண்ணிய காரியம் உங்களாலேயே முடியவேண்டும்' என்று இரந்தான். 'சரி. நீ அவனுக்குக் கடிதமெழுது. நாங்கள் அதை ஆதரித்துக் கையெழுத்து இடுகிறோம்' என்றோம். சந்திரகுப்தன், அக்கணமே கேசவதாஸனுக்கு ஓர் கடிதம் எழுதி அதன்கீழ்க் கையெழுத்திட்டிருந்தான். அவன் சொன்னபடி ஆதரித்து நாங்களும் எழுதி, எங்கள் கையொப்பங்களை வைத்தோம். நடந்த விஷயம் இவ்வளவே. அதன்

பிறகு அச் சந்திரகுப்தனை நீங்கள் தண்டெடுத்து வந்தபோது கண்டோமேயின்றி, நடுவில் நாங்கள் கண்டதில்லை. இக் கடிதத்தில், அவனுக்கு வேண்டியவரையில் நிறுத்திக்கொண்டு மீந்ததைக் கிழித்தெறிந்திருப்பது சாணக்யனுடைய தந்திரம் அன்றி வேறில்லை. நான் சொல்வது நிஜம் அல்லது பொய்யென்பது ஆலோசித்துப் பார்க்கின், உனக்கே விளங்கும்" என்றான்.

சாணக்யனது கபடங்களை கண்கறிந்துள்ள மலயகேது, பாகுராயணனை நோக்கி, "ஐய, நீ கூறுவது உண்மையே. நின் மொழியைத் தவறாக எண்ணுவேனோ? பத்ரபடன் முதலியோர் நம்மிடமிருக்கட்டும். அவர்களுடைய சைனியங்களுக்கும் தக்க சம்பளம் கொடுத்து நியமித்துக் கொள்வோம்" என்றான்.

இச் சமயத்தில் தூரத்தில் வந்து கொண்டிருந்த ராக்ஷஸன், பத்ரபடனாதியோர் கைகட்டிக்கொண்டு நிற்பதையும், மலயகேதுவின் உத்தரவையும் கவனித்துத் தனக்குள், "நான் பாடலிபுரம் விட்டு இங்கு வந்து சர்வாதிகாரமும் செய்து வருபவன். இவர்கள் என் கீழிருந்து முன்பு வேலை செய்தவர்கள். ஆதலின் அவர்கள் என்னையே முதலில் கண்டுகொள்ள வேண்டியவர்கள். அங்ஙனம் செய்யாது, பாகுராயணன் சேகரன் இவர்களை முன்னிட்டு, மலயகேதுவைக்கண்டு, தாங்கள் சேனாபதிகளாக இருக்க முயற்சி செய்கின்றார்கள். இதற்குக் காரணம் என்ன? சந்திரகுப்தனை வெறுத்து வந்திருக்கக்கூடுமா? அல்லது சாணக்யனுடைய தந்திரமோ? தெரியவில்லையே. எப்படியிருந்தாலும் சரி. இவர்கள் பாடலிபுரம் விட்டகன்று வந்திருப்பது, நமக்கு அனுகூலமேயாகும். இவர்களைச் சேர்த்துக் கொள்ளாமல் நீக்கிவிடுவோமாகில், மறுபடியும் இவர்கள் வெட்கம் கெட்டுப் (பெண்பிள்ளை வீடு வாசலிவைகளுள்ளவர்கள் ஆகையால்) சந்திரகுப்தனையே சேர்ந்துவிடுவார்கள். இங்ஙனம் அவர்கள் செய்யின், நமக்குச் சிரமம் மிகுதியும் உண்டாகும். ஜயமுண்டாகவே மாட்டாது. சந்திரகுப்தன்பால் செல்லாது, இவர்கள் வேறு அரசர்களிடம் வேலைக்கமர்ந்து விடுவார்களாயின், அப்பொழுதும் நமக்குச் சங்கடமே. இச் சேனைகளின் பலத்தைக்கொண்டு அவ்வரசர்கள் நம்மையே எதிர்க்கக் கூடும். ஆகையால் இவர்களைப் பாடலிபுரம் திரும்பிச் செல்லவிடுதல் தவறு. பொறுப்பான காரியங்களில் இவர்களை நாம் நம்பி நியமித்தலும் தவறு. என்ன செய்யலாம்?" என்று யோசித்துக்கொண்டே ராஜசபை வந்து மரியாதை பெற்று உட்கார்ந்தான்.

உட்காரவும், மலயகேது, ராக்ஷஸனை நோக்கி, "ஐய, அமாத்யரே! நந்த சேனாபதிகளான பத்ரபடன் முதலியோர் சந்திரகுப்தனை வெறுத்து நம்மிடமிருக்க வெண்ணி வந்திருக்கிறார்கள். இவர்கள் தக்க குலத்துதித்தவர்களென்றும் தலைமுறை தத்துவமாகப் பெரிய மனிதர்களென்றும் தெரியவருகிறது. மௌரிய புத்திரன் இவர்களை அவமதித்தானும். தாங்கள் விசாரித்து இவர்களுடைய நிர்வாகத்திற்கேற்ற காரியங்களை ஏற்படுத்தித் தக்க சம்பளங்களையும், சன்மானங்களையும் அளிக்க" என்றான்.

ராக்ஷஸன் "ஐய, ராஜகுமாரனே! இவர்கள் பெரிய மனிதர்களென்பதில் ஐயமில்லை. பாடலிபுரத்தை விட்டு இங்கு இவர்கள் வந்திருப்பது, நமது காரியத்திற்கு மிக்க அனுகூலமான காரியமே யாகும். உன் விருப்பின்படியே இவர்களுக் கேற்ற உத்தியோகங்கள் ஏற்படுத்துகிறேன்" என்றான். அப்பொழுது மாலைப் பொழுதைக் குறிக்கும் வாத்யங்கள் முழங்குவதறிந்து சபையிலுள்ளவர்களனைவரும் தத்தம் இருப்பிடம் அடைந்தார்கள். பத்ரபடன் முதலியோரும் தமக்குக் குறிக்கப் பட்டிருந்த விடுதியை அடைந்தனர்.

மறுநாள் ராக்ஷஸன் கொலுவிலிருந்த சமயம், பத்ர படாதிகள் வந்து, அவனைக் கண்டு கொண்டார்கள். ராக்ஷஸன் அவர்களை யுட்காரச் சொல்லி ஒவ்வொருவருக்கும் தனித்தனியே பினவருமாறு கட்டளையிட்டான்:

"பத்ரபட டிங்கிராதர்களே! நீங்களிருவரும் மலயகேதுவின் சேனைகளுக்கு ஆதாரமாக வரும் தனதானியங்கள் கொள்ளைபோகா வண்ணம் உங்கள் சேனைகளுடன் காத்து வரவேண்டியது."

"பலகுப்த! நதிகளைத் தாண்டும் நமது ஓடங்களைச் சத்துருக்கள் பிடியாதபடி உனது சேனைகளுடன் நீ பாதுகாத்து வருக"

"புருஷதத்த! மலயகேதுவின் பெயருக்குக் குறைவராமல், நமது சேனைகளுடன் வரும் அநாதைகளுக்கும் காயமடைந்தவர்களுக்கும் அன்னபானங்க ளுதவிக் கவனித்து வருக."

"விஜயவர்ம! நீ பாடலிபுரத்தை முற்றுகை யிடுவதற்குச் செல்லும் சைனியங்கள் சுலபமாகப் பிரயாணம் செய்யுமாறு வழியிலுள்ள மேடு பள்ளங்களைச் சமப்படுத்தி வழியில் சத்துரு உபத்திரவ மில்லாதபடி காத்து வருக."

"லோஹிதாக்ஷ! நீ நமது படைகளில் எதிரிகளின் வேவுகாரர்கள் கலந்து ரகஸியமறியாதபடி கவனித்து வருக."

"சிம்மபல! நீ சைனியங்களின் ஆயுதங்கள் ஏற்றப்பட்டிருக்கும் வண்டிகளையும் அவை இறக்கப்பட் டிருக்கும் விடுதிகளையும் காத்து வருக"

இவ்வாறு உத்தரவிட்டதைக் கேட்ட பத்ரபடன் முதலியோர், இது தமது தன்மைக்குரிய வேலைகளில்லை என்றறிந்தும், வந்த காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் சமயம் வரும்வரை காலங் கழித்தற்பொருட்டு, அதி திருப்தி அடைந்தவர்கள் போல அபிநயித்து, அவற்றை ஒப்புக்கொண்டதற்கு அடையாளமாக, சர்வாதிகாரியான ராக்ஷஸனைக் கும்பிட்டு நின்றார்கள். ராக்ஷஸன் அவர்கள் யாவர்க்கும் கற்பூர தாம்பூலாதியளித்து, அவர்களை விடுதி செல்லுமாறு விடுத்துத் தனது கிருகம் சென்றான்.

## நாற்பத்து நான்காவது அத்தியாயம்.

## ராக்ஷஸனது மனைவி மக்களின் மறைவிடம் அறிதல்.

சாணக்யனால் நியமிக்கப்பட்டிருந்த கூடசாரனை ஸமித்தகன் இச் சமாசாரம் முழுதும் அறிந்து, பாடலிபுரம் வந்து, சாணக்யனைத் தனியே கண்டு, தான் அறிந்த யாவையும் அறிவித்தான். சாணக்யன் ராக்ஷஸன் ஆலோசனையையும் பக்தி விசேஷத்தையும் விவேகத்தையும் மிக வியந்து, தனது சிஷ்யனான சாரங்கரவனை யழைத்து, "ஐய, பிரிய சிஷ்ய! நான் செய்த சபதப்படி நந்தர்களை வேரூடன் களைந்து சந்திரகுப்தனிடம் ராஜ்ய லக்ஷ்மியை நிலைநிறுத்தி விட்டேன். இப்போது நான் மந்திரி பதவியை வகித்துள்ளேனாயினும் சீக்கிரம் தபோவனம் நான் செல்லும் போது, அப் பதவிக்கு ராக்ஷஸனே தக்கவனாவோன். அவனது குணங்

களும் ஸ்வாமி பக்தியும் புத்தி தீக்ஷண்யமும் காரிய நிர்வாகமும் ஸத்ய சீலமும் வீரமும் ஒன்றைவிட ஒன்று உயர்ந்தும் உவமையற்றும் விளங்கு வதை யறியாதார் யார்? உலகில் ஜனங்கள் திரவிய லாபத்தை யுத்தே சித்துப் பிரபுக்களை யனுசரித்து இருப்பார்கள். விதிவசத்தால் அப் பிரபுக்களுக்குக் கஷ்டம் நேர்ந்துவிட்டால் வேண்டா வெறுப்பாய் அவர் களுடன் இருப்பார்கள். ராக்ஷஸனைப் பார்த்தாயா? தன் பிரபுக்கள் காலஞ்சென்று ஸர்வார்த்தஸித்தி இறந்துபோன பின்னரும், ஸ்வாமி பக்தி மேலீட்டால் பரலோகத்தி லுள்ளவர்களுக்கேனும் திருப்தியாமாறு, மலயகேதுவை யடுத்து, நம்மீது தண்டெடுத்து வரத் தயாராகவிருக் கிறான். ஆனால், இவனுடைய புத்தி சாமர்த்தியங்களை யறியக் கூடிய நான் அதற்கு வேண்டிய காரியங்களை முன்னதாகவே ஆலோசிக்காம லிருப்பேனோ? இதற்காகவே பத்ரபடன் முதலியோரை அங்கு அனுப்பி யிருக்கிறேன். ராக்ஷஸன் அவர்களை நம்பித் தக்க அதிகாரங்களில் அமர்த்தாமலும் அவர்களை வெளியிற் செல்ல விடாமலும் அவர்களுக் குரிய சம்பளங்களைக் கொடாமலும் ஆசை வார்த்தைகளைச் சொல்லி அவர்கள் கைச்செலவிலேயே அவர்கள் காலக்ஷேபம் செய்யும் விதமாக நடத்திவருகிறானாம்! இவன் எவ்வளவு சாமர்த்தியமாகக் காரியங்களை நடத்தினாலும் சாணக்யனுடைய சாஹஸத்திற்கு முன், அவன சாகஸம் நிற்குமோ? எனது உபாய சாதுரியங்களால் ராக்ஷஸன் தக்க சமயத்தில் மலயகேதுவைவிட்டு இவ்விடமே வந்து என்னை நேரிற் காணும்படி செய்கின்றேன். சந்திரகுப்தனோ நான் செய்துவரும் காரியங்களைப் பார்த்துக்கொண்டு தான் ஒன்றுமறியாதவனபோ லிருந்து வருகிறான். அரசர்களென்றால் அளவற்ற திரவியங்களைச் செலவழித்துச் சேனை களைச் சேர்த்து பொக்கிஷப்பொருள் குறையாது பாதுகாத்துச் சத்துருக்களை வென்று, வெகு சிரமத்துடனும் கவலையுடனும் ராஜ்யத்தை ஆண்டு வருவது வழக்கம். நமது மௌரிய புத்திரனுக்கோ, ராஜ்யம் அநா யாசமாகக் கிடைத்துள்ளது. இங்ஙனம் அவன் சுகமடைந்ததற் கேற்ப, ராக்ஷஸனும் அவன் கைவசப்படுவானாகில், அவன அதிர்ஷ்டத்திற்கு இணை யுண்டோ?" என்று சந்தோஷித்தான்.

இச் சமயம் இவனால் நியமிக்கப்பட்டிருந்த மராளன் என்ற மற் றொரு கூடசாரன், சாணக்யன் இருக்குமிடம் வரலாயினன். இவன் சித் திரப் படங்கள் பல வெடுத்துக் கொண்டும், தான்கொண்ட தொழிலுக்

கான மேள தாளங்களுடன் பாடிக்கொண்டும் போனவன். நான விடமும் சென்று அவ்வவ் விடங்களுக் குரிய படங்களைக் காட்டி விஷயங்களை அறிந்து வரும் இவன், சந்தனதாசன் வீட்டிற்குச் சென்று, நவநந்தர் கள், அமாத்திய ராக்ஷஸன் ஆகிய இப்பதின்மருடைய சித்திரப் படங் களையும் அங்குள்ளோர்க்குக் காண்பித்தான். அங்ஙனம் காண்பிக்கும் போதே, அவ்வீட்டில் ராக்ஷஸனுடைய பெண்டு பிள்ளைக ளிருப்பதை யறிந்து கொண்டான். பிறகு, கவனிப்பனவற்றை நன்கு கவனித்து, தனது திருப்திக்கான சில காரியங்களைச் செய்து முடித்து, ஏதோ ஒரு முடிவு செய்து கொண்டு, தான்சென்ற வேஷத்துடன் சாணக்யனுடைய பர்ணசாலைக் கருகில் வந்து நின்றான். நின்ற வண்ணமே, அவன், "இதோ ஸ்வர்க்க படம். இது சுகிர்த முள்ளவர்களுக் குரிய விடம். இதற் கெஜமானனாக விருக்கும் தர்மராஜன் பாபிகளைத் தண்டிப்பதான நரகம் இது; பாபிகளைத் தண்டிக்கும் படர்க ளிருவர்கள். ஆகையால் நீங்களெல்லோரும் பாப புண்ணிய மறிந்து நடக்க வேண்டியது." என்று இவைபோற் பல கூறிக் கொண்டு, அங்கிருந்த சாணக்ய சிஷ்யன் ஒரு வனைக் கண்டு, "என்னிடம் பிரமலோக படமிருக்கிறது. அதன் கரு த்தை யறிந்து சொல்லக் கூடிய வித்வான்க ளுண்டா?" வென்று வினவினன்.

அச் சிஷ்யன் உடனே உள்ளே சென்று, சாணக்யனிட மிதைத் தெரிவித்தான். சாணக்யன் இவனை மராளனே என்றறிந்து அவனை உள்ளே அழைத்து வரச் சொல்லி, தனிமையான ஓரிடத்தி லுட்கார்ந்து கொண்டு "மராள! நீ சென்ற நிலமறிந்த விசேஷம் யாது? சந்திரகுப்தனுக் குச் சத்துருமித்துருக்கள் யாவர்" என்றான்.

"ஸ்வாமி! இந்நகரில் மூவர் தவிர்த்து மற்றப் பிரஜைகளெல்லாரும் சந்திரகுப்தனிடம் அனுராகத் துடனேயே இருந்து வருகிறார்கள்" என்றான் அவன். "அம் மூவர் யாவர்?" என்று சாணக்யன் வினவ, மராளன், "சந்திரகுப்தனுடைய அபிவிருத்தியைக் கண்டு சகிக்காமல் கண்ட விடத்திலொரு விதமும் காணவிடத்தி லொரு விதமுமாகப் பேசி

வருபவன் ராக்ஷஸனுக்கு மித்திரனாகிய ஜீவஸித்தி என்ற க்ஷபணகன் முதலாவன்; அமாத்யனுடைய ராயஸக்காரனாகிய சகடதாஸன் இரண்டாவன்; ராக்ஷஸனுக்கு ஆப்தனாகிய புத்த மதத்தினன் சந்தான தாஸன் என்ற வர்த்தகன், மூன்றாவன். இம்மூவருள் சந்தானதாஸன் என்பவனது வீட்டிற்றான் ராக்ஷஸனுடைய பெண்டுபிள்ளைகள் இருக்கிறார்கள்" என்றான் மராளன்.

சாணக்யன், "இது நீ விவரமாய் அறிந்த விஷயமா? அல்லது ஜாடையால் அறிந்து கொண்டதோ?" என்றான். அவன், "ஸ்வாமி! நான் சித்திரப் படங்களுடன் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு வரும்போது, சந்தனதாஸன் வீட்டு நடையில் சற்றுத் தாமதித்தேன். நான் பாடுவதைக் கேட்டு, ஐந்தச்சும் பாவனையும் அமாத்தியன் போன்றே இருந்த ஐந்து வயதுள்ள சிறுவனொருவன் உள்ளிருந்து ஓடி வந்தான். நான் அக் குழந்தையைக் கவனித்த சமயம், "ஐயோ! குழந்தை வெளியிற் சென்று விட்டானே" என்று உள்ளே ஸ்திரீகள் பேசும் சப்தம் காதில் விழுந்தது. அதைக்கேட்டதும், எனக்குச் சந்தேகம் உண்டாகிவிட்டது. உடனே நவநந்தர்கள், அமாத்ய ராக்ஷஸர் ஆகிய இவர்களுடைய படங்களை அவர்கள் முன் விரித்துப் பாடினேன். அப்பொழுது, ஒரு ஸ்திரீ, மறைவில் நின்று கொண்டு, பையனை உள்ளே வரும்படி பலவித சமிக்ஞைகள் செய்தும், அவன் வாராதது கண்டு, அதிகப் பரபரப்புடனும் பயத்துடனும் வந்து, அந்தப் பாலகன் கையைப் பிடித்து இழுத்தனள். அப்போது அச் சிறுவன் அப்படத்தை விட்டு வர மனமின்றி அழுது கொண்டும் பிடிவாதத்துடன் இருந்த விடம் விட்டசையாமலும் நின்றான். நின்றவளது பார்வை அங்கு விரிக்கப்பட்டிருந்த பதின்மருடைய சித்திரப் படங்கள்மீதும் சென்றது. செல்லவும், அவள் தன்னை யறியாது கண்ணீர் பெருக்கலானாள். பின்பு, அவள் அக் கண்ணீரைத் தன் முன்றானையால் துடைத்துக்கொண்டு, குழந்தையைக் கரகரவென்று இழுத்துக் சென்றாள். அப்பொழுது அவள் கைவிரலில் ஆண்மக்கள் தரிக்கக் கூடியதும் அக்ஷரங்கள் வெட்டப்பட்டதுமான அஷ்டகோண மோதிரமொன்றிருக்கக் கண்டேன். அவள் பூர்ண கர்ப்பிணியாயிருந்ததால் மெள்ள மெள்ள நடந்து சென்றாள். அப்பொழுது நான் உற்று நோக்கியபோது, அவள் ராக்ஷஸனது மனைவியே என்றும், ஏதோ காரணத்தினால் ரகஸ்யமாக அவளும் பிறரும் வசிக்கிறார்களென்றும் அறிந்தேன்" என்றான்.

சாணக்யன் யாவையும் கவனித்துக் கேட்டு, "இவன் சொல்வ தெல்லாம் சரி. அவள் கையிலிருப்பது ராக்ஷஸனுடைய மோதிரமன்றி வேறன்று. அது மட்டும் நமக்குக் கிடைக்குமாகில், அநேக காரியங்களுக்கு அனுகூலமாக இருக்கும்" என்று தீர்மானித்து, "அவளைக் கவனித்துப் பிற விசேஷங்களிருப்பின், அவற்றையும் அறிந்து வருக" வென்று மாராளனைச் சந்தனதாஸன் வீட்டுக்கு அனுப்பினன்.

---

## நாற்பத் தைந்தாவது அத்தியாயம்.

## கணையாழிக் களவு.

மாராளன் சென்றதும், சாணக்யன் ஸித்தார்த்தகனை வரவழைத்து, "சிஷ்யப் பிள்ளாய்! சந்தனதாஸன் என்ற வர்த்தகன் வீட்டில், ராக்ஷஸன் மனைவி பூர்ண கர்ப்பத்துடன் வசிக்கிறாளாம். இக் காரணத்தினலேயே அவன் அவளை இங்கு விட்டுப்போயிருக்கிறான். அவள் கையிலிருக்கும் முத்திரை மோதிரத்தை 'இவ்விதமாய்' வரவழைக்கவேண்டும்" என்று அதற்கான விஷயங்களைச் சொல்லி, ராக்ஷஸனது முத்திரைகொண்ட ஒரு கடிதத்தைப் பழங் கணக்கிலிருந்து எடுத்து அவனிடம் கொடுத்தான். ஸித்தார்த்தகன், "மஹாப்ரஸாதம்" என்று சென்று, அக் கடிதத்திலுள்ள உருவப்படி ஒரு முத்திரை மோதிரம் ஒன்று தட்டானைக்கொண்டு ரகஸ்யத்திற் செய்யச் சொல்லி, அதனைப் பெற்றுக்கொண்டு, காரியத்தை முடிப்பதில் அதிசாதுரியம் வாய்ந்த ஒரு மருத்துவச்சியை அழைத்து வந்தான். பிறகு, அவளிடம் கொஞ்சம் திரவிய மளித்து, அவளிடம் தான் செய்த மோதிரத்தைத் தந்து, "நீ சந்தனதாஸன் வீட்டிலுள்ள அமாத்ய ராக்ஷஸன் மனைவி கையில் அணிந்திருக்கும் இது போன்ற முத்திரை மோதிரத்தைக் கிரகித்து வரவேண்டியது" என்று கட்டளையிட்டு அனுப்பினன். இதன் பின்னர், அவன் நகரிலுள்ள விசேஷங்களை ராஜ சபையில மந்திரியிடம் அறிவிக்கும் அதிகாரியை வரவழைத்து, "நாளைய தினம் ராஜ சபையில் இவ்விதமாகச் சொல்" என்று ஆக்ஞாபித்து அவனிடம் சில கூறினன்.

அவ் வதிகாரி மறுநாள் ஆஸ்தானத்தி லிருந்த சாணக்யனைக் கண்டு கும்பிட்டு, "ஸ்வாமி! இன்று ஒரு பிராமண ஸ்திரீ பிரசவித்த குழந்தையை, அங்கிருந்த மருத்துவச்சி ஒருத்தி, கொன்றுவிட்டோடி ஒளிந்து விட்டாள். இதுவரை அவள் அகப்படவில்லை" என்றான்.

இது கேட்டுச் சாணக்யன் வெருண்டவன்போல் நடித்து, "ஆ! ஆ!! இந்த நகரில் இவ்வித அநியாயம் நடக்குமாகில், நாமிருந்து என்ன பிரயோஜனம்? உடனே ராஜ வீதிகளிற் பறையறைந்து இந் நகரிலுள்ள மருந்துவப் பெண்கள் யாவரும் ராஜ சபை வரும்படி ஆக்ஞாபித்துத் தீர விசாரித்துத் தண்டிக்க வேண்டியதுதான்" எனக் கூறி அங்ஙனமே பறையறைய உத்தரவிட்டான். உடனே "மருத்துவச்சிகள் யாவரும் ராஜஸ்தானம் வந்து விசாரணை முடியும் வரை, காவலில் இருக்கவேண்டியது" என்று ஊரெங்கும் பறை யறைவிக்கப்பட்டது. இச் சமயம், சித்தார்த்தகனால் ஏவப்பட்ட மருத்துவச்சி, மிகப் பயந்தவள்போல் நடித்து, ஓடோடியும் வந்து, சந்தனதாஸன் வீட்டுக்குள் புகுந்து கதவு மூலையில் 'கிடு கிடு' வென்று நடுங்கிக்கொண் டொளிந்து நின்றாள்.

வீட்டிலுள்ளோர், "நீ யார்? ஏன் இங்கு நடுங்கி நிற்கின்றாய்?" என அவளைக் கேட்க, அவள், "தாய்மார்களே! எவளோ துஷ்டை ஒருத்தி, யார்க்கோ பிறந்த குழந்தையைக் கொன்று ஓடிவிட்டாளாம். அதன் நிமித்தம், அதிகாரிகள், நகரிலுள்ள எல்லா மருத்துவச்சிகளையும் விசாரணைக் கழைத்துச் செல்கின்றனர். நான் நாலைந்து குழந்தைகளுள்ளவள். இப்பொழுது விசாரணையில் அகப்பட்டுக் கொண்டால், என் பிழைப்பு வீணாகிவிடுவதுடன், குழந்தைகளும் வயிற்றுக் கின்றியன்றோ தவிக்கும்? ஆதலின், இவ் வமளி அடங்கும் வரை எங்காவது ஒளிந்திருந்தால், பிறகு வீடுபோய்ச் சேரலாம் என்றெண்ணித் தவிக்கிறேன்" என்று, சந்தனதாஸன் பனைவி காலில் வீழ்ந்தாள். மருத்துவச்சி கூறிய மொழிகளுக்கிரங்கி, அவள், "சரி. எங்கள் வீட்டில் ஒருத்தி பிரசவிக்கும் சமயத்தி லிருக்கிறாள். ஆதலின், ஒரு மருத்துவச்சியின் உதவி நமக்கு அவசியமாகவே இருக்கிறது. நீ எங்கள் வீட்டிலேயே இருந்துகொண்டு உன் குழந்தைகளை, இராக் காலங்களிற் சென்று, கவனித்து வரலாம். அஞ்சல் வேண்டா" என்றாள். மருத்துவச்சி, "நல்லகாலம். என் தாயே! நான் பிழைத்தேன்" என மனமகிழ்ந் துரைத்து, அவ் வீட்டி லிருந்து வந்தாள்.

இரண்டொரு தினங்கட் கெல்லாம், ராக்ஷஸன் மனைவிக்குப் பிரசவ வேதனை உண்டாயிற்று. பிரசவ அறையில் மருத்துவச்சி மட்டும் இருந்து அதிஅபிமானத்துடன் ராக்ஷஸன் மனைவியை ஆசுவாசுப் படுத்தலானாள். சிசு ஜனனமாகும் சமயம் சமீபத்த வுடனே, வழக்கப்படி அவள் ராக்ஷஸன் மனைவியின் தேகத்திலிருந்த சகல ஆபரணங்களையும் கழற்றி ஒரு தட்டில் வைக்கலானாள். வைக்கும்போதே, அவள் அவளது முத்திரை மோதிரத்தை எடுத்துக்கொண்டு, தன்னிடமிருந்த போலி மோதிரத்தை அதற்குப் பதிலாக வைத்துவிட்டு ஒன்றுமே அறியாதவள்போல் கர்ப்பிணியை உபசரிக்கலானாள். சின்னாழிகைக் கெல்லாம் சுகப் பிரசவமானதும், அவள் அங்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்துச் சந்தனதாஸன் பத்தினியினிடம் ராக்ஷஸன் மனைவியின் ஆபரணங்களை எண்ணி ஒப்புவித்தாள். பிறகு அவள் சந்தோஷத்துடன் அளித்த வெகுமதிகளையும் தாம்பூலாதிகளையும் பெற்றுக்கொண்டு வெளியில் வந்து அம் மோதிரத்தை அதற் கென்று காத்துக் கொண்டிருந்த ஸித்தார்த்தகனிடம் தந்து, அவன் அளித்த பரிசுகளையும் பெற்றுக்கொண்டு தன்வீடு வந்து சேர்ந்தாள்.

---

## நாற்பத்தாறுவது அத்தியாயம்.

## ஆமாத்ய ராக்ஷஸனை அடைதற்கான முயற்சி.

சாணக்யன், ஸித்தார்த்தகன் அளித்த மோதிரத்தைக் கண்டு, "இதுவே ராக்ஷஸனது முத்திரைக் கணையாழி" என்றுணர்ந்து, மேல் நடக்கவேண்டிய காரியங்களைக் குறித்து யோசனை செய்பலானான். கடைசியில் அவன் 'இன்னார், இன்னாருக்கு எழுதியது என விளங்கா வண்ணம் ஒரு கடிதம் எழுதி, அதை ஸித்தார்த்தகன் கையிற் கொடுத்து "உன்னை மித்திரனாக எண்ணியுள்ள சகடதாஸனிடம் சென்று அவன் கைப்பட இதனை எழுதி வா" என்றான்.

ஸித்தார்த்தகன் அக் கடிதம் பெற்று, "ஓ! ஓ!! இஃதொரு பெரிய காரியத்தில் நிமித்தமே இருத்தல் வேண்டும்" என்று தனக்குள் எண்ணிச் சகடதாஸனிடம் சென்று, சிறிது நேரம் வேறு பேச்சுக்கள் பேசி,

பிறகு, தன்னிடமிருந்த கடிதத்தைக் கொடுத்து, "ஐய! சகடதாஸ! இக் கடிதம் பிராகிருத பாஷையில் எழுதப்பட்டுள்ளது. இதிற் காணப் படுவன சித்திர கவிகள். இவைகளை உரிய 'பந்தங்க' ளிலிட்டு எழுதினால் விநோத கிரந்த ஸ்லோகங்களாக மாறும். கிறுக்கிக் கிறுக்கி எழுதி யிருக்கும் இதனைச் சுத்தமாக எனக்கு எழுதித் தரவேண்டும்" என்றான்.

சகடதாஸன் இதன் மர்மம் அறியாமல், "இஃதென்ன பிரமாதம்?" என்று தன் சொந்தக் கையெழுத்தினால் அதனைச் சுத்தமாக எழுதிக் கொடுத்து, ஸித்தார்த்தகனை நோக்கி "எழுதி விட்டேன். இப்பொழுது, எங்கே, சித்திர பந்தம் எழுது பார்ப்போம்?" என்றான்.

ஸித்தார்த்தகன் ஏதோ எழுதிப் பார்ப்பவன் போன்றும், யோசித்துப் பார்ப்பவன் போன்றும், நினைத்துக்கொள்பவன் போன்றும், மறந்து விட்டவன் போன்றும் அபிநயித்து, "ஐய, மித்திர! கவி சொல்லிய வாக்கு வரமாட்டேன் என்கிறது. நன்றாக நினைத்துப் பார்த்து இன்னொரு சமயம் வந்து சொல்லுகிறேன்" என்று அவ்விடம்விட் டெழுந்து சாணக்யனிடம் வந்து அக் கடிதத்தை அளித்தான்.

சாணக்யன் அக் கடிதத்தை மடித்து ராக்ஷஸனது மோதிரத்தால் அதற்கு முத்திரையிட்டு, அதனை ஸித்தார்த்தகன் கையிற் கொடுத்து, "ஐய, நமக்குப் பரம பிரியனாகிய சிஷ்ய! உன்னாலேயே இதுவரை சந்திர குப்தனுடைய காரியங்கள் வெற்றி பெற்று வந்திருக்கின்றன. ஆயினும் எவ்வளவு நாள் நாம் இங்கிருந்துகொண் டிருக்கிறது? நமது தவம் கெடுகிறதே. நாம் இது வரையில் செய்த காரியங்கள் நிலைக்க வேண்டுமாயின் ஒரு காரியம் அவசியம் செய்து தீரவேண்டியவர்களாகிறோம். ராக்ஷஸனை இங்கு வரச் செய்து அவனையே சந்திரகுப்தனுக்கு மந்திரியாக ஏற்படுத்தாவிடில் பிரயோசனம் இல்லை. ஆகையால் காரியங்களை நிர்வகிப்பதில் சாமர்த்தியசாலியான நீ 'இவ்விதம்" செய்யவேண்டும்' என்று சில விஷயங்களை அவன் காதில் உரைத்து, முன் முத்திரை யிட்ட அக் கடிதத்தையும் அவன் கையிற் கொடுத் தனுப்பினான். ஸித்தார்த்தகன் சென்றதும், சாணக்யன் 'அநேகமாய் ரசக்ஷஸன் அகப்பட்டுவிட்டான். பர்வதேசனது ஆபரணங்கள் ராக்ஷஸன் கைக்குப் போய்ச் சேர வேண்

டியது தான் பாக்கி—பர்வதேசனது கிரியைகள் முடிவானால் அவ்விஷயத்தைச் சந்திரகுப்தன் தெரிவிப்பான்" என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது, சோணகன் என்னும் கஞ்சுகி ஒருவன் வந்து கும்பிட்டு, "ஸ்வாமி! இன்றுடன் பர்வதேசனது அந்திய கிரியை யாவும் முடிந்தன. "அவரது ஆபரணங்கள் பொக்கிஷத்தில் இருக்கின்றனவே. அவற்றை என்ன செய்கிறது?" என்று மகாராஜா அவர்கள் கேட்டு வரச் சொன்னார்கள்" என்றான்.

சாணக்யன், "சரி. நாம் யோசித்ததையே சந்திரகுப்தனும் தெரிவித்திருக்கிறான்" என்று சந்தோஷித்து, தன் சீடர்கள் மூவரை அழைத்து, கஞ்சுகியை நோக்கி, "சோணக! இம் மூவர்க்கும் அவ் வாபரணங்களைத் தானமாக அளிக்கச் சொல்" என்று சொல்லி, அவ்வேதியர்களை நோக்கி, "அந்தணோத்தமர்களே! நாம் முன் சொல்லியவிதம், சந்திரகுப்தனால் அளிக்கப்படும் ஆபரணங்களை அணிந்து வாருங்கள்" என்று கூறி அவர்களை அனுப்பினான். பினனர் அவன் ஏதோ யோசித்துக் கஞ்சுகியை நோக்கி, "இனி உள் நாட்டு விஷயங்களையெல்லாம் நீயே வகித்து விமரிசையுடன் ஆட்சி புரிந்து வருக. அயல் நாட்டு விஷயங்களை மட்டும் நமக்கு அறிவித்து வந்தாற் போதும்" என்று நாம் உரைத்ததாக உங்கள் அரசரிடம் சென்று தெரிவிக்க" எனச் சொல்லி அனுப்பினான்.

சோணகன், "உத்தரவு" என்று சாணக்யனைக் கும்பிட்டு, அம்மூன்று வேதியருடனும் ஆஸ்தானம் வந்து, சந்திரகுப்தனைக் கும்பிட்டு, "மஹாப்பிரபு! பர்வதேசனுடைய பூஷண தானக்கிரமச் சற்பாத்திரராக இவர்களை எஜமானரான சாணக்யர் அனுப்பியிருக்கிறார். அன்றியும், அவர் 'பிர[illegible]க்கம் தாங்களே ஸ்வராஜ்ய விஷயங்களைக் கவனித்து வரவேண்டு'மென்றும், 'பர ராஜ்ய விஷயங்களை மட்டும் தமக்கு அறிவித்து வந்தாற் போது'மென்றும், சொல்லச் சொன்னார்கள்" என்றான்

இதைக் கேட்ட சந்திரகுப்தன், பொக்கிஷத்திலிருந்த பர்வதேசனது ஆபரணங்களை வரவழைத்து, அம் மூவர்க்கும் தானமளித்து அனுப்பிவிட்டு, "ஏதோ ஒரு விசேஷ காரியத்தைப் பற்றியே எனது எஜமானரான சாணக்யர் எனக்கு இவ்விதம் சொல்லி அனுப்பியிருக்க வேண்டும்" என்று தீர்மானித்து, அன்று முதல் ராஜாங்க விஷயங்களைத் தானே நேரிற் கவனித்து வரலானான். நிற்க.

தானம் பெற்ற அந்தணர்கள், அது பெற்றதும், சாணக்யனை வந்து கண்டு கொண்டனர். சாணக்யன் அவர்களை நோக்கி, "ஆப்தர்களே! 'நானொரு காரணம் பற்றி உங்களுக்கு இந்த ஆபரணங்களைத் தானமாக அளிக்கச் சொன்னேன்' என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா? நீங்கள் வர்த்தக வேஷம் பூண்டு, பர்வதராஜ்யம் சென்று, அங்கிருக்கும் அமாத்ய ராக்ஷஸனே இவைகளை வாங்கும்படி செய்யுங்கள். அவற்றை விற்ற தொகையை நீங்களே பெற்றுக்கொள்ளுங்கள். அவற்றிற்கு உயர்ந்த விலையும் கூறுதீர்கள். அதிக நஷ்டத்திற்கும் கொடாதீர்கள். மூன்று லக்ஷம் பவுனுக்கு அவற்றை விற்று அது விஷயத்தை என்னிடம் வந்து தெரிவியுங்கள்" என்றான். சாணக்யன் கட்டளையிட்டவாறே அவர்கள் வர்த்தக வேஷத்துடன் பர்வத ராஜ்யம் சென்றனர்.

பிறகு, சாணக்யன், தன் அருகிலிருந்த குசபர்ஹி என்பவனை அழைத்து, "சிஷ்ய! நீ ஊர்க் காவலனான தண்டகனிடம் சென்று, "ராக்ஷஸனுடைய துர்ப்போதனைக் குட்பட்டு விஷகன்னிகை மூலம் பர்வதேசனைக் கொன்ற துரோகியான ஜீவஸித்தியைச் சந்திரகுப்த மகாராஜாவின் உத்தரவுப்படி தேசப் பிரஷ்டம செய்திருக்கிறது" என்று பறை யறைந்து அக்ஷபணகனைத் துரத்தி விடும்படி நாய சொன்னதாகச் சொல்" என்றனுப்ப, அவன் சென்று, திரும்பி வந்து "உத்தரவுப் படியே செய்து விட்டோம்" என்றான். அதன் பின்னர், அவன் பசுலோமன் என்பவனை அழைத்து, "சிஷ்ய! நீ தண்டகனிடம் சென்று, "அமாத்யனது சிநேகனும் கணக்கனுமான சகடதாஸன் என்பவன், ராஜத் துரோகிகளான தாருவர்மன் முதலியோர்க்குச் சகாயமாயிருந்து வந்ததால், அவன் கழுவேற்றப் படுகிறான்" என்று பறை யறைந்து அவனை 'இவ்விதம்' செய்யச் சொல்" என்று அதி ரகஸ்யமாகச் சில தெரிவித்தனுப்பினான்.

சற்று நேரங் கழித்து, அவன் மற்றொரு சிஷ்யனை அழைத்து, "நீ ராஜ வீதியிலுள்ள பிரபல வியாபாரியான சந்தனதாஸன் என்னும் வர்த்தகனை உடனே அழைத்து வா" என்றான். அவன அவ்விதமே சென்று, சந்தனதாஸனைக் கண்டு, "ஐய, வர்த்தக! எஜமானர் சாணக்யரது உத்தரவா யிருக்கிறது. உடனே புறப்படுக" என்றான். இது கேட்ட சந்தனதாஸன் திடுக்கிட்டுத் தனக்குள், "ஓகோ! மோசம் வந்து

விட்டது. மகா கபடியான சாணக்யன் உண்மையை அறிந்தே விட்டான் போலும்! அவனால் எனக்கு ஆபத்து உண்டாதல் நிச்சயம். என்றாலும் ஸ்நேகன் பொருட்டு எதையும் சகிக்கத் தயாராயிருக்கிறேன். எதற்கும் அஞ்சேன். வருவது வரட்டும். கால தாமத மின்றி ராக்ஷஸனுடைய மனைவி மக்களை முன்னுக்கு முன்னே பத்திரப்படுத்தி விடுகிறேன்" எனத் தீர்மானித்து, வந்த சாணக்ய சிஷ்யனைப் பார்த்து, "இப்பொழுது யான உடுத்துள்ள உடைகள் ராஜஸ்தானம் செல்வதற்குத் தகுதியற்றவை. வேறு வஸ்திரம் உடுத்து வருகிறேன். இங்கேயே இரும்" என்று கூறி உள்ளே சென்று தனது உறவினனான தனசேனனை அழைத்து, அவனிடம், மேல் நடக்க வேண்டிய சமாசாரங்களை அறிவித்து, ராக்ஷஸனது குடும்பத்தினரை வேறு ரகஸ்யமான ஓர் இடத்தில் வைத்துக் காத்து வருமாறு ஏற்பாடு செய்து, செலவிற்கு வேண்டும் பொருளிருக்கு மிடத்தையும் அவனுக்கு அறிவித்தனன். பிறகு அவன் நல்லுடை உடுத்துச் சாணக்ய சிஷ்யனுடன் புறப்பட்டு அரமனை வந்து சாணக்யனைக் கண்டு கை கூப்பிக் கும்பிட்டு நின்றான்.

---

## நாற்பத் தேழாவது அத்தியாயம்.

## சந்தனதாஸனது மன வுறுதி.

கும்பிட்டு நின்ற சந்தனதாஸனைச் சாணக்யன் கண்டு, "ஐய, சந்தனதாஸ! க்ஷேமமா? வியாபாரங்கள் தடையின்றி நடக்கின்றனவா? உட்காருக" என்றான். சந்தனதாஸன், "ஸ்வாமி! தங்கள் கிருபையால் க்ஷேமமே. எல்லாம் சரிவர நடந்து வருகின்றன" என்றுரைத்து நமஸ்கரித்து உட்கார்ந்துகொண்டான்.

சாணக்யன் அவனை நோக்கி, "சந்தனதாஸ! பிரஜைகள் சந்திரகுப்தனை நல்லவன் என்று சொல்லுகிறார்களா? அல்லது நந்தர்களைப் புகழ்கிறார்களா?" என, அவன், "சரத்கால சந்திரனைக் கண்ட ஆம்பல்போல் மகிழ்ந்து சந்திரகுப்த மஹாராஜரையே யாவரும் விரும்பிப் புகழ்கின்றனர்" என்றான்.

சாணக்யன், "சந்துஷ்டர்களான பிரஜைகளிடமிருந்து அரசன் பிரதி உபகாரத்தை விரும்புவது பழைய வழக்கங்களில் ஒன்றல்லவா?" என, அவன், "ஸ்வாமிகள் உத்தரவானால் எல்லோரும் தங்கள் சக்திக்கு அதிகமாகத்தரத் தக்கவண்ணம் நடந்துகொள்வார்கள்" என்றான்.

சாணக்யன் "ஐய! நிரபராதிகளான பிரஜைகளிடமிருந்து தண்டம் வாங்குவதற்கு இது நந்தர்கள் அரசாட்சியன்றே? நீங்கள் எல்லோரும் க்ஷேமத்துடனிருப்பதே சந்திரகுப்தனுக்கு லாபம்" என, அவன், "ஸ்வாமி! உங்கள் கருணை எங்கட்குப் பரிபூரணமாயிருப்பின் எங்களி லும் பாக்கியசாலிகள் எவரும் இல்லை" என்றான்.

சாணக்யன், "அரசனுக்கு விரோதம் செய்யாது இருக்கும்வரை எவரும் காப்பாற்றப் படுவார்கள்" என, சந்தனதாஸன், "ஸ்வாமி! தனது அரசனுக்கு விரோதம் செய்பவன் துராத்மாவே ஆவான்" என்றான். சாணக்யன், "வர்த்தக! ராஜத் துரோகிகளில் முதன்மையாக நிற்பவன் நீயேயல்லவா?" என, சந்தனதாஸன், "புத்தேச! புத்தேச!" என்று தனது தெய்வத்தின் பெயரை யுச்சரித்து, "ஸ்வாமி! யானையுடன் பூனைக்கு வாதுண்டோ?" என்றான்.

"அடா செட்டி! ராஜாபராதியான ராக்ஷஸனுடைய பெண்டு பிள்ளை களை உன்னிடம் வைத்துக் காப்பாற்றியதுடன் அச் செய்தியை இது வரை பிரபுவிடம் தெரிவிக்காம லிருந்தாயே. அது எவ்வளவு பெரிய குற்றம்!" என்று சாணக்யன் அதட்ட, அவன் "ஸ்வாமி! இப்படி யாரோ வேண்டுமென்று கட்டி விட்டிருக்க வேண்டும். முழுப் பொய். முழுப் பொய்" என்றான்.

"இது உண்மையானால் உனது சொத்துக்களைப் பறிமுதல் செய்து உனக்குக் கடுமையான தண்டனை விதிக்கலாமன்றோ?" எனச் சாணக்யன் உறுக்கிக் கேட்க, சந்தனதாஸன், "ராக்ஷஸன், செல்லும் போது பெண்டு பிள்ளைகளை என் வீட்டில் வைத்துச் சென்றதுண்டு. எனக்கறிவிக்காமல் அவர்கள் எங்கோ பிறகு சென்று விட்டார்கள்' என்றான்.

"அடா வியாபாரி! நீ முன்னால் 'தெரியவே தெரியாது' என்றாய். பிறகு 'தெரியும்' என்றாய். அதன் பிறகு 'எங்கோ சென்றார்கள்' என்றாய். இதென்ன மோச வார்த்தை?" என, அவன், "ஸ்வாமி! வாய் உளறிச் சொன்னது பயத்தினாலன்றி வேறில்லை" என்று சாதித்தான்.

சாணக்யன் இது கேட்டுச் சிரித்து, "சந்திரகுப்தன் அரசாட்சியில் வாயும் தவறக் கூடாது. செய்கையும் தவறக்கூடாது. ஏன் யோசிக்கின்றாய்? வாய் திறவாது ராக்ஷஸனுடைய பெண்டு பிள்ளைகளைக் கொண்டு வந்து ஒப்புவித்து விட்டுச சுகமாயிரு" என்றான்.

சந்தனதாஸன் இது கேட்டு, "இதென்ன பிரமாதமாயிருக்கிறது? என்ன வந்தாலும் சரி" என்று தனக்குள் துணிந்து, மௌனமாயிருக்கும்போது, வெளியில் ஒரு பேரிரைச்சல் கேட்டது. சாணக்யன், 'என்ன விசேஷம்?' எனச் சிஷ்யன் ஒருவனை விசாரித்தான். அவன் வெளியே சென்று வந்து, "ஸ்வாமி, உபாத்தியாயரே! 'விஷகன்னிகையைக் கொண்டு பாவதேசனைக் கொன்ற பாவி இவன். இவனைச் சந்திரகுப்த மகாராஜாவின் உத்தரவுப் பிரகாரம் தேசப் பிரஷ்டம் செய்கிறோம்' என்று ராஜபடர்கள் கூவிக்கொண்டு ஜீவஸித்தியை ஓட்டிச் செல்கின்றனர்" என்றான்.

"சரி. தான் செய்த காரியத்திற்குற்ற பலனை அவன் அநுபவிக்க வேண்டியவனே" என்று சாணக்யன் கூறிச் சந்தனதாஸனை நோக்கி, "அரசனை வஞ்சித்துத் திரிவோர்க்கு இத்தகைய தண்டனை ஏற்படுவது சகஜம். உன் ஏமாற்றம் பலியாது. மரியாதையாய் ராக்ஷஸனது குடும்பத்தாரை அழைத்து வந்து ஒப்புவித்து விடு" என்ன, அப்போதும் சந்தனதாஸன், "நான் அவ்விஷயம் சிறிதும் அறிகிலேன்" என்றே சாதித்தான்.

இதற்குள் மறுபடியும் தெருவில் மற்றொரு பேரிரைச்சல் கேட்டது. விஷயம் என்னவென அறிந்துவரச் சாணக்யன் ஒருவனை விடுக்க, அவன் திரும்பிவந்து, "ராஜத் துரோகியான சகடதாஸனைக் கழுவில் விடும்படி இழுத்துச் செல்லுகின்றனர்" என்று தெரிவித்தான்.

"அப்படியா?" என்றுரைந்துச் சாணக்யன் சந்தனதாஸனை நோக்கிச் "செட்டி! அரசர்க்கு அபராதம் செய்தவர்களுக் கிவ்விதம் கடுந் தண்டனை ஏற்படுவதறிந்தும் நீ உண்மையை ஒளித்துப் பேசுகிறாயே? உன் பெண்டு பிள்ளைகளின் க்ஷேமத்தை நீ கருதினால் ராக்ஷஸனது குடும்பத்தினரை இனியேனும் காலந் தாழாது ஒப்புவித்துவிடு" என்றான்.

"ஸ்வாமி! ஏன் இவ்விதம் பயமுறுத்தவேண்டும்? அமாத்ய குடும்பத்தினர் என்னிடத் திருப்பினும் அவர்களை வெளிப்படுத்தேனே. இல்லாதிருப்பவர்களை எவ்விதம் ஒப்புவிப்பது?" என்றான் சந்தனதாஸன்.

"செட்டி! இது நிச்சயமா? உறுதிதானா?" என்று சாணக்யன் வெகுண்டு கேட்க, சந்தனதாஸன், "ஆம். உறுதிதான். வேண்டுவன செய்க. எதற்கும் அஞ்சேன். வருவது வருக" எனத் தைரியமாகக் கூறினான்.

சாணக்யன், தனக்குள், "ஆ! ஆ!! இவனே சத்தியசீலன். இவன் தன் சிநேகனுக்காகத் தன் உயிரைக் கொடுக்கவும் தயாராக இருக்கிறான். இதுவே நம் காரியத்திற்கு அநுகூலமாக நிற்பதாகும்: இவன் ராக்ஷஸன் பொருட்டு உயிர் துறக்கவும் சித்தமாய் நிற்றல் போல், ராக்ஷஸனும் (இவனைப் பற்றிய இச்செய்தி கேள்விப்படின்) இவனைக் காத்தற் பொருட்டுக் கன்றைத் தேடிவரும் பசுவேபோல், கதறிக்கொண்டு, தன் உயிரையும் மானத்தையுங் பொருட்படுத்தாது, தானாகவே இங்கு ஓடி வந்து விடுவான். பிறகு உசிதப் பிரகாரம் செய்துகொள்ளுவோம்" எனத் தீர்மானித்து, வெகுண்டான் போல் நடித்து, புருவத்தை நெறித்துக் கொண்டு, "அடா, அயோக்கிய வணிக! உன் ஹாநிக்குரிய தொழிலை என்னிடமும் காட்டத் துணிந்தனை! சரி. நீ செய்த துரோகத்திற்குச் சரியான பலனை அனுபவிப்பாயாக" என்று கர்ச்சித்தான்.

சந்தனதாஸன், "ஸ்வாமி! ஏன் இவ்வளவு ஆத்திரம்? செய்வனதச் செய்யுங்கள். நான் எதற்குஞ் சித்தமாக இருக்கிறேன்" என்று சிறிதும் கலங்காது கூறினன்.

சாணக்யன் அதி கோபத்துடன் தனது சிஷ்யனொருவனை நோக்கி, "'இப் பரம துஷ்டனாகிய வர்த்தகனது சொத்துக்களைப் பறிமுதல் செய்து ராஜ பொக்கிஷத்தில் உடனே சேர்ப்பிக்க வேண்டு' மென்றும்,

'குடும்ப சகிதமாக இவனைக் காவலில் வைக்கவேண்டு' மென்றும், தர்க்க பாலனுக்குத் தெரிவிப்பாயாக. சந்திரகுப்த மகாராஜர்க்கும் இங்கு நடந்த விஷயங்களை அறிவித்திடுக" என்று உத்தரவிட்டான். சாணக்ய னது கட்டளைப்படியே சிஷ்யன் சந்தனதாஸனை அழைத்துச் சென்றான்.

---

## நாற்பத்தெட்டாவது அத்தியாயம்.

## சாணக்யன் ஜனாபிப்பிராயம் அறிதல்.

சாணக்யனது உத்தரவுப்படி, கொலையாளிகள் சகடதாஸனைக் கழுவிலேற்றுமா றிட்டுச் செல்லும்போது, ஆங்கு ஒளிந்துகொண்டிருந்த ஸித்தார்த்தகன், கத்தியை வீசிக்கொண் டோடிவந்து, கொலையாளிகளை வெட்டி வீழ்த்துபவன்போல அபிநயித்துக் கண்ணால் அவர்களுக்குச் சில ஜாடைகள் காட்டினன். அக்கணமே அவர்கள் கத்தி வீச்சிற்குப் பயந்தோரேபோல் சகடதாஸனை விட்டுவிட்டு ஓடிப்போனார்கள். அப் பொழுது ஸித்தார்த்தகன் சாணக்ய சந்திரகுப்தர்களை வாய்க்கு வந்த வாறு திட்டிக்கொண்டு, சகட தாஸ னருகில் வந்து, "ஐய, நண்ப! இனி நீ அஞ்சேல். உனக்குத் துணையாக நான் நிற்கின்றேன். இவ்விடம் விட் டிப்பொழுதே எங்காவது ஓடுவோம். வா" என்று அவனை அழைத் துக்கொண்டு பர்வத ராஜ்யம் நோக்கிச் செல்லலானான். இச் செய்தி யறிந்த ஒரு சிஷ்யன் சாணக்யனிடம் வந்து, "ஸ்வாமி! உபாத்யாயரே! சகடதாஸனைக் கழுவிலேற்றும் சமயம் ஸித்தார்த்தகன் என்பவன் ஆயுத பாணியாகத் தோன்றிக் கொலையாளிகளை ஓட்டியடித்துச் சகடதாஸனை அழைத்துக் கொண்டு எங்கோ ஓடிவிட்டான்" என்றான்.

சிஷ்யனது மொழிகேட்ட சாணக்யன், "பலே! ஸித்தார்த்தக! குறித்ததை நிறைவேற்றுவதில் நீ அதி சமர்த்தனே." என்று தனக்குள் அவனை மனமாரப் புகழ்ந்து, ஜனங்களின் அபிப்பிராயம் எவ்விதமிருக் கிறதென் றறிய எண்ணி, "அடடா! காரியம் கெட்டுவிட்டதே. சிஷ்யப் பிள்ளாய்! பாகுராயணனிடம் நீ உடனே சென்று ஸித்தார்த்தகனையும் சகடதாஸனையும் பிடித்து வரும்படி நாம் உத்தரவிட்டதாகச் சொல்" என்றான்.

சிஷ்யன் வெளியிற் சென்று, சிறிதுநேரத்திற் செல்லாம் திரும்பி வந்து, "உபாத்தியாயரே! பாகுராயணன் அன்றே ஓடி விட்டானாம்' என்றான். "வஞ்சகனாகிய பாகுராயணன் எங்கிருந்தாலும் பிடித்து வரும்படி பத்ரபடன் முதலிய சேனாபதிகளுக்குச் சொல்" என்று சாணக்யன் உரைக்க, அவன், "ஸ்வாமி! முன்பு தாங்கள் ஆஸ்தானத்தில் கோபித்து கூறியதைச் சகியாது அவர்கள் உங்கள் மீது தண்டெடுத்து வர அயல தேசத் தரசர்களிடம் சென்று உத்யோகங்களில் அமர்ந்து விட்டதாகத் தெரிகிறது; இதை அறிவிக்க அஞ்சியே ஜனங்கள் தமக்குள் இதனைப் பற்றி ரகஸ்யமாகப் பேசிக் கொள்ளுகின்றனர். தாங்களா எவ்விதமேனும் சத்துருக்கள் கையில் அகப்படாமல் தப்பித்துக்கொண்டு விடுவீர்கள் அநாதைகளான எங்களைப் பிடித்து அடித்து "உங்கள் குரு எங்கே?" என்று சத்துருக்கள் கேட்டால் நாங்கள் என்ன சொல்லுகிறது? 'பிராமணர் பொய் சொல்லக் கூடாது' என்று தாங்களே உபதேசித் திருக்கிற படியால், தாங்கள் ஒளியப் போகும் இடத்தை இப்பொழுதே என்னிடம் சொல்லிவைப்பது நலம்" என்றான்.

சாணக்யன் தனக்குள் நகைத்துத் திடுக்கிட்டவன் போல் அபிநயித்து, "அடா, பிரமசாரி! ஏது? நம்மைச் சத்துருக்களிடம் ஒப்புவித்தே விடுவை யெனத் தோன்றுகிறதே! நாம் ராமேசுவரத்தில் ஒளிந்து கொள்ள உத்தேசிக்கிறோம்" என்றான்.

"ஸ்வாமி! ராமேசுவரம் எங்குள்ளது? எனச் சிஷ்யன் வினவ, "அது ராமஸேது விருக்கு மிடத்திலுள்ளது" என்றான் சாணக்யன்.

"ஸ்வாமி! ஸ்ரீராமன் யமுனையில் ஸேதுவைக் கட்டினானோ, ஸரயூ நதியிற் கட்டினானோ" வென்று சிஷ்யன் கேட்க, 'லவண சமுத்திரத்தில்' என்று பதில் அளித்தான் சாணக்யன்.

"ஸ்வாமி! லவண சமுத்திரமா யிருப்பதால் நடப்போர் காலில் உப்பு அரிக்கா வண்ணம் ராமன் ஸேதுவைக் கட்டினான் போலும்" என்றான். இதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த சாரங்கரவன, "என்னடா உளறுகிறாய்?" சத்துருக்கள் வந்தால் உன்னைக் கைவிடாது காப்பாற்றி விடுகிறோம். இப்போது சென்று கந்த மூலங்களைச் சுத்தப் படுத்தி வை. இந் நகரை விட்டுச் சென்றவர்கள் போக மீந்திருப்

போரும் இஷ்டப்படி செல்லட்டும். நீ கவலைப் படாதே. நம் குருவின் முயற்சியுள்ள வரை ஆகக் கூடாத காரியம் ஏதுமில்லை." என்று கூறிச் சாணக்யனுடன் தானும் கங்கைக்கு நீராடச் சென்றான்.

---

## நாற்பத் தோன்பதாவது அத்தியாயம்.

## கௌமதி மஹோத்ஸவ நிறுத்தம்.

சாணக்யனுடைய உத்தரவின்படி ஸ்வதந்திரமாக அரசாட்சி செய்து வரும் சந்திரகுப்தன், ஒரு சமயம், சரத் காலத்தின் பிரகாசத்தை நோக்கி, "இக் காலம் ஜனங்களுக்கு உத்ஸாகத்தைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. இப் பருவத்தில், இரவுகளில் கௌமதி மகோத்ஸவம் நடத்தினால் அதி ரமணீயமாக இருக்கும். நமது ஆதிபத்தியத்திற் குட்பட்ட பின் இந்நகரில் விசேஷ உத்ஸவம் ஒன்றும் கொண்டாடப் படவில்லை. இப்பொழுது வரும் பௌர்ணமி நமது பிறந்த நாளாகும். நான் பௌர்ணமி யன்று சந்திரோதய சமயத்தில் ஜனித்ததால் எனக்குச் சந்திரகுப்தனென்று பெயரிட்டதாக எனது தந்தையார் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறேன். நந்த நாசத்தால் துக்கித்துக் கொண்டிருக்கும் நகர வாசிகளுக்கு உத்ஸாக முண்டாகுமாறு இவ் வுத்ஸவம் கொண்டாடப் படவேண்டிய தவசியம்" என்றெண்ணி, தூதர்களை நோக்கி "தூதர்காள்! இன்று முதல், சுக்கில பக்ஷப் பஞ்சமி வரை இப் பட்டணத்தில் கௌமதி மகோத்ஸவம் கொண்டாடப் படட்டும். நகர முழுதும் அலங்கரிக்கப் படட்டும். 'ஸுகாங்கம்' என்னும் உப்பரிகை, கெம்பு, முத்து சரங்களால் மேற்கட்டியிற் நன்கு சிங்காரிக்கப் படட்டும். இந் நகர வாசிக ளனைவரும் தத்தம் ஸ்திரீ ஜனங்களுடன் வஸ்திர பூஷண கந்த புஷ்பங்களால் அலங்காரம் செய்து கொண்டு சந்தோஷமாக இருக்கட்டும். தேவாலயங்களில் உத்ஸவ ஆராதனைகள் நடக்கட்டும். ஆஸ்தான வித்வன்மணிகட்கும் அதிகாரிகட்கும் நம் பொக்கிஷத் திருந்து வஸ்திர பூஷணங்கள் அனுப்பப் படட்டும். ராஜ வீதிகள் தோறும் மணி மஞ்சீரங்கள் முதலிய பூஷணங்களால் மனோகரமாக அலங்கரிக்கப்பட்டிருக்கும், நாட்டியப் பெண்களின் சங்கீதங்கள் நடை பெறட்டும். பிராமணர்க்குப் போஜனமும் பூரி தக்ஷிணைகளும்

அளிக்கப் படட்டும். தீனர்களுக்கும் அநாதையர்கட்கும் யதேஷ்டமாக அன்ன வஸ்திரங்கள் அளிக்கப் படட்டும்" என்று ஆக்ஞாபித்தான். இவ் ஆக்ஞையைத் தூதர்கள் தம் சிரமீதேற்று உத்ஸவத்தை ஒழுங்கு பெற நடத்துமாறு தெருக்கள் தோறும் முரசறைவிக்க லாயினர்.

பர்ணசாலையி லிருந்த சாணக்யன் செவியில் பேரிகைச் சத்தம் பட்டதும், தன் அந்தரங்க சிஷ்யனை நோக்கி "சாரங்கரவ! 'ராஜ வீதிகளில் முரசறையப்படும் விசேஷ மென்ன?' வென்று அறிந்து வா" என்ன, அவன் சென்று திரும்பி வந்து, "ஸ்வாமி, உபாத்தியாயரே! 'கௌமதி மஹோத்ஸவம் நடத்துமாறு மகாராஜாவின் உத்தரவா யிருக்கிறது' என்று பறையறைகின்றனர்" என்றான். "இவ் உத்ஸவம் நடத்தவேண்டுவ தில்லை என்று நாம் கட்டளை யிட்டதாக முரச தூதகர்ட் கறிவித்து வா" என்று சாணக்யன் கூறச் சிஷ்யன் சென்று, "ராஜ தூதர்காள்! எஜமானர் சாணக்யரது உத்தரவா யிருக்கிறது. இப்பொழுது இந் நகரில் கௌமதி மஹோத்ஸவம் கொண்டாட வேண்டிய தில்லை. நீங்கள் திரும்பிச் செல்லலாம்" என, அவர்கள் 'மந்திரியாரான சாணக்யரது ஆணையை மீறின் அபராதிகளாகி விடுவோம்' என்றஞ்சிப் பறையறைவதை நிறுத்தித் தாம் வந்த வழியே திரும்பிச் சென்றனர்.

இவ் விசேஷங்களை யறிந்த நகரவாசிகள், "இஃதென்ன? ராஜாக்ஞைக் கெதிராக மந்திரி உத்தரவிட் டிருக்கின்றார். சாணக்ய சந்திரகுப்தர்களுக்குள் ஏதோ மனஸ்தாப முண்டா யிருக்கிறது போலும்" என்று தமக்குள் ரகஸ்யமாகப் பேசிக் கொண்டனர். அச்சமயம், நிகழ்ந்தனயாவையும் கவனித்துக் கேட்டுக் கொண்டிருந்தவனும் பாம்பாட்டி வேஷத்துட னிருந்தவனுமான ராக்ஷஸனது கூடசாரன் ஒருவன், தான் அறிந்த விஷயங்களைத் தனது எஜமானனான அமாத்யனிடம் அறிவித்திடுமாறு குஸுமபுரத்தினின்றும் நீங்கிப் பர்வத ராஜ்யம் நோக்கிச் செல்லலானான்.

## ஐம்பதாவது அத்தியாயம்.

### உத்ஸவ நிறுத்தத்தின் உண்மைக் காரணம்.

சாரங்கரவன் சாணக்யனிடம் வந்து, ரகஸ்யத்தில் "ஸ்வாமி, உபாத்தியாயரே! உங்கள் உத்தரவினாலேயே சுயமாக அரசாட்சி செய்து வரும் சந்திரகுப்தனது ஆணைக்கு விரோதமாகத் தாங்கள் கௌமதி மஹோத்ஸவத்தை இப்பொழுது நிறுத்தி விட்டீர்களே!. இதனால் சந்திரகுப்தனுக்கு அரசாட்சியில் வெறுப்பேனும் தங்களிடம் அபிமானக் குறைவேனும் ஏற்படாதா? அங்ஙனம் ஏற்பட்டுவிடின் ஜனங்கள் உங்களிடம் காட்டிவரும் கௌரவத்தை விட்டு விடார்களோ? இதுகாறும் நீங்கள் பட்ட சிரமமனைத்தும் வீணாகி விடுமே. உங்கள் இருவர்க்குள்ளும் விரோத மிருப்பதாகச் சத்துருக்கள் அறிந்து கொள்வார்களாயின் இருவரையும் எதிர்ப்பதற் குரிய வழிகளை நாடுவார்களே. இவை யாவும் ஜனங்களுக்குக் கேலியாக வன்றோ முடியும்? ஆனால் தங்களுக்குத் தெரியாத தொன்றில்லை. ஏதோ விசேஷம் இருக்கும் போலிருக்கிறது. அதனை அறிவிப்பதில் தவறில்லையாயின் அடியேற்குத் தயை செய்து அறிவித்தருள வேண்டுகின்றேன்." என்றான்.

சாணக்யன், "ஐய, சாரங்கரவ! நான் இது வரை செய்து வந்ததும், இனிச் செய்யப்போவதும் சந்திரகுப்தனது க்ஷேம லாபங்களை உத்தேசித்தே யென்றறிக: இப்பொழுது ராக்ஷஸன் மலயகேதுவை அடுத்து அவனது உதவி பெற்றுச் சந்திரகுப்தன் மீது தண்டெடுத்து வர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறான். கொல்லைப் புறத்திற் சிதறிக் கிடக்கும் தீயை அற்பமென அலட்சியஞ் செய்து வாளா இருப்பின் அத் தீ, வாயுவின் உதவியால் வளர்ந்து உள்ள சப்பை களங்களிற் பற்றி, [illegible] தொடங்கி விட [illegible] ஆரம்பித்து விடுமன்றோ? [illegible] அவன் [illegible] தொல்லையிலிருக்கும் போதே ஒடுக்காமல் பேசா [illegible] பிற மகத்தான நஷ்ட நஷ்டங்களுக்குள்ளாக வேண்டி [illegible] பதில் ஐய [illegible] விக்கார்த்தகனிடம் ஒரு கடிதம் அனு [illegible] முத்திரையோடு கூடியது ஆகி அக் [illegible] ஒரு சமயத்தில் சுங்கச் சாவடியில் அகப்பட்டு, மலயகேது கையில் [illegible] மலயகேது அதனைப் படிப்பானாகில், தன்னிடம் மந்திரி

ஸ்தானம் பெற விரும்பிச் சந்திரகுப்தன் எழுதிய கடிதத்திற்கு ராக்ஷஸன் இணங்கிப் பதிலெழுதியதாக அவனுக்குப் படும். 'ராக்ஷஸன் கபடமாகத் தன்னைத் தக்க சமயத்தில் தன்னைச் சந்திரகுப்தனிடம் பிடித்துக் கொடுத்து, அதற்குப் பிரதி பலனாக மந்திரி பதம் பெற விரும்பி விட்டான்' என்றே மலயகேது எண்ணி ராக்ஷஸனிடம் வெறுப்பும் கோபமும் கொள்வன். இதற்குள் நமக்கும் சந்திரகுப்தனுக்கும் மனஸ்தாபமேற்பட்டு நாம் மந்திரி பதவியிலிருந்து நீங்கி விட்டதாகச் செய்தி எங்கும் பரவி விட்டால், கூட சாரர்கள் மூலம் இவ்விஷயம் அறியும் ராக்ஷஸன், இதே சமயம் தண்டெடுக்க வேண்டுமென்று துரிதப்படுவான். அப்பொழுது மலயகேது சந்தேகித்துத் தனக்குச் சமயோசிதமாகப் போதித்து வரும் பாகுராயணனுடைய சொற்களால் மருண்டு, அவனே (பாகுராயணனே) தனது ஆப்தனென்றெண்ணி, அவன் சொற்படி ராக்ஷஸனை ஓட்டி விடுவான். அச் சமயம் ராக்ஷஸன் இங்கு வந்து சேர்வதற்கான ஏற்பாடு செய்தே சந்தனதாஸனை விலங்கிட்டிருக்கிறேன். கடைசியில் ராக்ஷஸன் என்னிடம், தானே நேரில் வந்து, "சொன்னவற்றைக் கேட்பேன்" என்று மன்றாடுங் காலை, "சந்திரகுப்தனிடம் நீ மந்திரி பதவி வகித்தாலன்றி உன்னை விடேன்" என்று அவனைக் கட்டுப்படுத்திப் பிறகு அவனிடம் சொல்லவேண்டிய விஷயங்களைச் சொல்வேன். சத்திய சீலனாகிய ராக்ஷஸன் பிறகு சந்திரகுப்தனுக்கு ஒரு போதும் துரோகம் செய்ய மாட்டான். மந்திரி பதத்திலிருந்து, என் போன்றே சந்திரகுப்தனைக் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்ற வல்லவன் அவன் ஒருவனேயாதலின் அவனை வரவழைக்கிடவே இவ்வளவு பெரு முயற்சியும் சிரமமும் நான் கொண்டதென அறிக. ஆதலின் ஸித்தார்த்தக னிடமிருக்கும் கடிதம் மலயகேதுவின் கைக்குப் போய்ச் சேருவதன் முன்பே, எனக்கும் சந்திரகுப்தனுக்கும் பொருந்த மனஸ்தாப முண்டாகி யிருப்பதாக உலகப் பிரசித்தமாக வேண்டியது அவசிய மன்றோ? அதன் பொருட்டே அரசனது ஆணையை மீறிக் கௌமுதி மஹோத்ஸவத்தை நிறுத்தி விடுமாறு கட்டளை யிட்டேன்" என்றான்.

---

## ஐம்பத்தோராவது அத்தியாயம்.

### சாணக்யன் தன் கர்மத்தைச் சாரங்கரவனுக்குக் கூறுதல்.

சாணக்யனது மொழிகளைக் கவனித்துக் கேட்டுவந்த சாரங்கரவன், "ஸ்வாமி! நந்தர்களிடம் மந்திரி பதவியிலிருந்து சர்வாதிகாரமும் செலுத்தி வந்ததால், காலஞ்சென்ற நந்தர்களது ஆன்மாவிற்கேனும் திருப்தி விளைவிக்கவெண்ணி, ராக்ஷஸன், இவ்விதமாகப் பலவிதத்தும் பெருமுயற்சிகள் புரிந்து வருவது நியாயம். அவனது செய்கை ஸ்வாமி பக்திக் குரியதேயாம். அரண்ய வாசியும் தபோதனரும் ஆத்ம ஞானியுமான தங்களுக்கு, சந்திரகுப்தனிடம் இவ்வளவு அபிமானமும், அவனுக்கு இவ் விராஜ்யம் நிலைப்பதிற் பெருமுயற்சியும், ராக்ஷஸனை வசீகரிப்பதில் இவ்வளவு சூழ்ச்சியும் இருக்கக் காரணம் யாது? இந்த லௌகிக விவகாரத்தால் தங்கட் காகவேண்டிய தொன்று மில்லையே." என்று வினவினான்.

சாணக்யன், "சாரங்கரவ! நீ இன்றே எனது முக்கிய சிஷ்யனாயினை. ஏதோ கேட்டுவிட்டோமே யென்று தியங்கேல். உனக்கு மட்டுமன்று. எல்லாருக்கும் இத்தகைய எண்ணம் உண்டு. சூத்திர ஸ்திரீயின் பௌத்திரனான சந்திரகுப்தனை ஆதரித்து, இவ்வளவு சாகஸம் செய்து நந்தர்களைக் கொன்று, பர்வதகனையும் சங்கரித்து, இப்பொழுது மந்திரி பதவியை நான் வகித்திருப்பதுபற்றி நம்மைச் சேர்ந்தோர் யாவரும் ஆச்சரியமே யடைகின்றார்கள். எனது செய்கைகட்குக் காரணம் கூறுகின்றேன் கேள்:— சென்ற யுகங்களில் அசுர வர்க்கத்தினர் கடுந்தவம் புரிந்து, பெறற்கரிய வரங்கள் பெற்று உலகை ஆண்டுவரும்போது, தர்மத்திற் காதாரமான வேதமார்க்கங்களை அழித்து, வேத பாரங்கதர்களான விப்ர சிரேஷ்டர்களைக்கொன்று, யாகாதி யக்ஞங்களை நிறுத்திப் பலவிதத்தும் அக்கிரமஞ் செய்யலாயினர். அப்பொழுது பகவான் ஸ்ரீமந் நாராயணன், பல அவதாரங்க ளெடுத்து அசுரர்களை அழித்துத் தர்ம ஸ்தாபனம் செய்தனர். அழிந்த அசுரர்களிற் சிலர் காலத்தை அநுசரித்து இக் கலியுகத்தில் மானிடராகப் பிறந்து நாஸ்திக மதத்தை அநுஷ்டித்துப் "'பரலோகம்' என்பது இல்லை. 'கடவுள்' என்பது பொய். 'தருமம்' என்பது வீண் வார்த்தை." என்று சாதித்துத் தங்கள்

சொல்வன்மையால் சில அரசர்களை இயன்றவாறு வசப்படுத்தி, அவர்களது உதவியால் ஆங்காங்கு நாஸ்திகமதத்தைப் பரப்பிவருவாராயினர். அதுகண்டு எனது நல்லாசிரியர், எனது வித்தியாப்பியாச முடிவில், "இத் துஷ்டர்களை நிக்ரஹித்துத் தர்ம ஸ்தாபனம் செய்வதே நீ எனக்களிக்கத் தகும் குருதக்ஷிணை" என்று கட்டளையிட்டனர். நான் "உத்தரவு. அவ்விதமே செய்வேன்." என்று கூறிக் குருவின் அநுக்கிரகம் பெற்று ஆசிரமத்தினின்றும் நீங்கினேன். அங்கிருந்து புறப்பட்டு வரும்போது 'நாஸ்திகமதம் பரவுவதற்கு மூல புருஷர்கள் யாவர்?' என்று விசாரிக்கலானேன். பாடலிபுரத்தரசர்களும் பர்வதேயர்களுமே அதற்குக் கொழு கொம்பாயிருப்போரென்றும், பௌத்தர்களின் துர்ப்போதனையினாலேயே குஸுமபுரத்தரசன், 'ஸர்வார்த்தஸித்தி' எனப் பெயர் வைத்துக்கொண்டனன் என்றும் அறிந்தேன். நான் பாடலிபுரம் வந்த சமயம் தெய்வ வசத்தால் இச் சந்திரகுப்தன் என் காரியத்திற்கநுகூலமாமாறு என்னைச் சரண் அடைந்தான். ராக்ஷஸன் ஒருவனைத் தவிர உண்மையில் ஆஸ்திக புத்தியுள்ள அதிகாரிகள் அங்கில்லையெனத் தெரியவந்தது. இந் நாஸ்திகர்களை வசப்படுத்தும் நிமித்தமே நமது இந்துசர்மனை க்ஷபணக (பௌத்த சந்யாஸி) வேஷம் தரிக்கச்சொல்லி, மற்றைய சிஷ்யர்களையும் புத்த மதத்தினராக நடிக்கச் செய்து, பாடலிபுர ராஜவம்சத்தை வேருடன் களைந்து, பர்வதேசனையும் விஷ கன்னிகையைகொண்டு சங்கரித்து, ஜீவஸித்தியின் வாக்கிற் கிணங்கி மலயகேதுவை மன்னித்து, அவனை இங்கு நின் றோட்டினேன். இதுவரை நாஸ்திகத்தில் மூன்றுபங்கு நாசமடைந்து விட்டது. ராக்ஷஸனைச் சந்திரகுப்தனிடம் மந்திரியாக ஏற்படுத்திவிட்டால், அவன் நாஸ்திக மதம் முழுமையும் நாசப்படுத்தி விடுவான். அவர்களில் முக்கியமானவர்கள் சமுத்திரக் கரைகளில ஒளிந்து கொண்டு விடுவார்கள். எஞ்சியோர் அத் துர்மதத்தைவிட்டு ஆஸ்திக மதத்திற் சேர்ந்து விடுவார்கள். மீறி நடந்தவர்களைத் தண்டிக்கச் சந்திரகுப்தன் இருக்கிறான். சிஷ்யர்கள் குரு தக்ஷிணையின் பொருட்டு மேலெழுந்த பார்வைக்குப் பொருந்தாத அகார்யங்களைச் செய்வதாகக் காணப்படினும் பாபத்திற் கொருபோதும் உள்ளாகார்கள். இத்தகைய காரியங்கள் ஆரம்பத்திற் கொடுமையாகவே இருப்பினும், முடிவில தர்ம மார்க்கத்தை நிலை நிறுத்துவதால், அவற்றால் கீர்த்தியும் நற்கதியுமே உண்டாகும்.

இதிற் சிறிதும் ஐயமின்று. இவ் வுண்மையறியாத மூட ஜனங்கள் தமக்குத் தோன்றியவா றெல்லாம் பேசித்திரிவதும், அவர்கள் வார்த்தையைப் பொருட்படுத்தாது யகான்கள் தம் செய்கையில் மகிழ்ச்சி யுறுவதும் சகஜம். ஆசாரிய புருஷரின ஆக்ஞையினாலேயே நான் இந்த லௌகிக விவகாரத்தில் தலையிட்டேன். தண்ட நீதியை நான் அப்யஸித்ததும் அதன் பொருட்டே. எனது பரமாசாரியராக ஸ்ரீமத் சுக்கிராசாரியாரே மாறு ரூபத்துடன் பூலோகத்தில் எழுந்தருளின ரன்றி வேறு சாமானிய புருஷர் எவருமல்லர். நான் செய்யவேண்டியவற்றைச் செய்து முடித்துவிட்டுச் சின்னாட்களில் என் குரு சந்நிதான முறுவேன். இக் கலியுகத்தில் ஜனங்கள் எவ்வளவு கல்மிஷச் சித்தர்களாக இருப்பினும் நான் ஸ்தாபிக்கும் ஆஸ்திகமதம் நெடுநாள் நிலைத்திருக்கத் தடையில்லை. இது ஒன்றே யான அடையக்கூடிய நற்பயன்" என்றான்.

இவற்றை எல்லாம் பக்தி சிரத்தையுடன் கேட்டுக்கொண்டிருந்த சாரங்கரவன், குருவை சாஷ்டாங்கமாக நமஸ்கரித் தெழுந்து, "மகாநுபாவராகிய ஆசாரியரே! நினைத்ததை நினைத்தவாறே முடித்துத் தர்ம ஸ்தாபனம் செய்யும் வன்மை தங்கட் கிருப்பதால் தாங்கள் தேவாம்சம் பொருந்திய மகா புருஷரே ஆவீர்கள். தங்களது செயற்கருஞ் செய்கையினால் சகல தேவ பிராமணர்களும் சந்தோஷிப்பார்கள். தங்கள் புகழ் இரவிமதி உள்ளளவும் இலகி நிலைத்திருக்கும். கார்காலத்திற் கூடும் மேகங்கள் சரத்காலத்தில் சிதறி ஓடுவதுபோல இப்பொழுதே நாஸ்திக சங்கம் அழிந்து விட்டதாகவே தோன்றுகிறது. தங்கள் மகிமைகளையும், சாகஸத்தையும் தர்ம புத்தியையும் புகழ ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனாலும முடியாதென்றால், கேவலம் அற்பனேயான என்னால் முடியுமோ?" எனப் பலவாறு கூறி புகழ்ந்தான்.

---

## ஐம்பத் திரண்டாவது அத்தியாயம்.

## விராதகுப்தன் விளம்பத் தொடங்கல்.

ராக்ஷஸனிடம் குஸுமபுர வர்த்தமானங்களை அறிவிக்குமாறு பாம்பாட்டி வேஷத்துடன் சென்ற கூடசாரன், சாஹசரி நகரை யடைந்து, பாடலிபுரத்தின் மீது படையெடுக்கத் தயாராகவிருந்த மலயகேது

வின் சைனியங்களைக் கண்டு, ஆ! ஆ!! ராக்ஷஸருடைய உபாயங்களைப் பார்த்தால் சந்திரகுப்தனை எளிதில் ஜயித்து விடலாம் போல் தோன்றுகிறது! சாணக்யனது தந்திரங்களை நோக்கினாலோ, ராக்ஷஸரது பிரயத்தினங்கள் யாவும் வீணாகி விடும்போலன்றோ காணப்படுகிறது. பெண்யானை நிமித்தம் போர்புரியும் மத கஜங்கள் போல் இவர்கள் ராஜ்ய லக்ஷ்மியைக் குறித்துப் போர் புரிகின்றனர். ஒவ்வொருவரும் தாமே ஜயம் பெறக் கருதி யிருக்கின்றனர். ராஜ்ய லக்ஷ்மியோ புருஷனிடமும் தெய்வத்தினிடமும் ஒரேவித பக்தி மிக்க பதிவிரதை போன்றும், குருவின் உபதேசத்தையும் குல தர்மத்தையும் சமமாக அநுசரிக்கும் உத்தம புருஷன் போன்றும், சொற்சுவை பொருட்சுவை இரண்டும் பொருந்திய காவியங்கள் போன்றும், கீர்த்தியையும் லாபத்தையும் எதிர் பார்க்கும் க்ஷத்திரியன் போன்றும், இவ் விருவரிடத்தும் உறுதியும் பொறுப்பும் உற்றவளாயும் சமதிருஷ்டி யுடையவளாகவும் இருந்துகொண் டிருக்கிறாள். இனி எவ்விதம் விஷயம் முடியுமோ? தெரியவில்லை" என்று ஆலோசித்த வண்ணமாய், நாக ஸ்வரத்தின் ஒலி கேட்டுத் தலை தூக்கி யாடும் சர்ப்பங்களுடன், அமாத்ய ராக்ஷஸன் வீட்டு வாயிலில் வந்து நின்றான்.

நின்றவன், ஆங்கிருந்த துவார பாலகனை நோக்கி, "இது யாருடைய கிருகம்?" என்ன, அவன், "அமாத்தியரது கிருகம்" என்றான். "ஆ! அப்படியா? அமாத்ய ராக்ஷஸர் மந்திராலோசனையினால் சத்துருக்களை வசப்படுத்துவதுபோல, எனது மந்திரத்தால் இம் மகா ஸர்ப்பங்கள் என் ஸ்வாதீனப்பட்டு ஆடுகின்றன" என்றான் பாம்பாட்டி. "அடா மூடா! கேவலம் சர்ப்பங்களை வசப்படுத்தியதால் மட்டும் நீ அமாத்தியர்க்கு நிகராவாயோ?" எனத் துவார பாலகன் கேட்க, பாம்பாட்டி, "ஐய, என்னைக் கோபியேல். நான் பாடல் இயற்றவல்ல கவியும் ஆவேன். இப் பாடலை அவசியம் ராக்ஷஸர்க்குக் காண்பித்து வருக" என்றான்.

துவாரபாலகன் உள்ளே செல்லும் சமயத்தில், ராக்ஷஸன், தனக்குள், "பாடலிபுரத்திலிருந்து நான் வரும்போது செய்து வந்த சூழ்ச்சிகளில் ஒன்றேனும் நிறைவேறி யிருப்பின் சந்திரகுப்தன் மாண்டே யிருப்பன். இதில் தடையில்லை. ஆயினும், அங்கு இன்னது நடந்

திருக்கிறதென அறிவிக்க வாஸகனுக்குப் பின் எவனும் வரவில்லையே!" என்று யோசித்துக்கொண்டு நின்றான். நின்றவன், தன்னைக் கும்பிட்டு நின்ற துவாரபாலகனை நோக்கி, "என்ன விசேஷம்?" என்ன, அவன், "ஸ்வாமி! இக் கடிதத்தைப் பாம்பாட்டி ஒருவன் தங்களிடம் சேர்ப்பிக்கச் சொன்னான்" என்றான். ராக்ஷஸன் அதைப் பிரித்துப் படித்து, "சரி. இவன் நமது கூடசாரனே. என்ன எனது இடதுகண் துடிக்கின்றது?. இருக்கட்டும்" என்று நினைத்துச் சேவகனை நோக்கி, "சேவக! பாம்புப் பெட்டியை வெளியே வைத்துவிட்டு, பாம்பாட்டியை மட்டும் இங்கு வரச் சொல்" என்றான்.

துவார பாலகன் சென்று பாம்பாட்டியை உள்ளே போகும்படி விடுத்தனன். வந்த விராதகுப்தனை ராக்ஷஸன் ஓர் ஏகாந்த இடத்தில் அழைத்துச் சென்று, 'தூத! குஸுமபுர விசேஷம் என்ன? நீ இதே மாறு வேஷத்துடனா சென்றுவந்தாய்?" என்றான்.

"ஸ்வாமி! சாணக்யன், மலயகேதுவின் சிற்றப்பனாகிய விரோசனனை அழைத்து வந்து, அர்த்தராத்திரி வேளையில் பட்டாபிஷேகம் செய்வித்து, பட்டத்தானையில் உட்காரச் செய்து பவனி வரலானான். இச் சமாசாரம் அறியாத தாருவர்மனும், மாவுத்தனும் அவனைச் சந்திரகுப்தன் என்றே எண்ணித் தங்கள் ஆயுதங்களை அவன்மீது பிரயோகித்தனர். பாவம்! விரோசனன் மாண்டுவிட்டான். அதன் பிறகு, பின்னேடுவந்த சாணக்யன், அரமனைச் சயனக் கிருகத்திலுள்ள தந்திரங்களையும் அறிந்து அங்கிருந்து நமதாட்களைக் கொன்றுவிட்டான். இம்மட்டோ? ராஜவைத்தியனையும், அவனது கைமருந்தைக்கொண்டே மாளச் செய்தனன். எல்லா ஆபத்துக்களும் சந்திரகுப்தனை அணுகாது நம்மவர்களையே சார்ந்துவிட்டது" என்றான்.

ராக்ஷஸன் மிக்க விசனமும் ஆச்சரியமும் அடைந்து, "ஆ! ஆ!! சந்திரகுப்தனுக்குத் தெய்வபலமும் சேராவிடில் எனது பிரயத்தினங்கள் வீண்போமோ? நந்தர்களுக்கு நான் ஊழியனாக இருந்து இதுவரை ஸ்வாமி காரிய மொன்றையும் நிறைவேற்றினேன் இல்லையே" என்று கண்ணீர் வடித்தனன்.

"ஸ்வாமி! காரிய நிர்வாகியான தாங்கள் இவ்விதம் விசனம் அடையலாமா? தங்களைப் போன்றவர்கள் எவ்வளவு கஷ்டம் நேர்ந்தா

லும் எடுத்த காரியத்தை விடாது முடிக்கவேண்டியது முக்கியமல்லவா? ஆரம்பத்தில் இடையூறுற்றாலும், முடிவில் ஜயமுறாதிருக்குமோ ?" என்றான் விராதகுப்தன்.

அதற்கு ராக்ஷஸன், "விமரிசையாக ஆரம்பித்த காரியத்திற்குத் தெய்வசகாயம் ஏற்படாமல் விக்கினமே உண்டாகுமாகில், அதனை மேல் நடத்துவதற்குரிய உற்சாகம் எவ்விதம் உண்டாகும்? அஃதிருக்கட்டும். சாணக்யன் எப்பொழுதும்போல் அபிமானத்துடனிருந்து ராஜ்ய விசாரணைகளைச் செய்து வருகின்றானா? சத்துருக்கள் விஷயத்தில் எப்படியிருக்கின்றான்?" என, அவன், "ஸ்வாமி! சாணக்யன் சந்திரகுப்தனுக்குத் துரோகம் நினைத்தவர்களைத் தேடிப் பிடித்துத் தண்டித்தான். 'விஷ கன்னிகையால் பர்வதேசனைக் கொன்றான்' என்ற அபவாதத்தை ஜீவஸித்திமீது சுமத்தி அவனை அவமானப்படுத்தி ஊரைவிட்டுத் துரத்திவிட்டான்" என்றுரைத்தான்.

ராக்ஷஸன், "ஆ! ஆ!! புத்திமானாகிய சாணக்யன் தனது காரியங்களை நிர்வகித்துக்கொண்டு, பாதிராஜ்யம் பெற உரிமை பூண்ட பர்வதேசனைக் கொன்று, தான் அவனுக்கு மித்திரன்போல் நடித்து, ஜீவஸித்தியைத் துரத்தி நமக்கு அபகீர்த்தி யுண்டாகும்படி செய்துவிட்டானாதலின், அவன் செய்யும் ஒவ்வொரு காரியமும் அவனுக்குப் பலவிதத்திலும் பயன்தருவதா யிருக்கிறது." என்று சாணக்யனுடைய சாமர்த்தியத்தை வியந்தவனாய், "சரி. இன்னும் என்ன விசேஷம்?" என்றான்.

"ஸ்வாமி! 'சந்திர குப்தனுக்கு அபாய முண்டாக்க வெண்ணிய தாருவர்மன் முதலியோர்க்குச் சகடதாஸன் சகாயமாக இருந்தான்' என்று பறையறைவித்து அவனைக் கழுவிலேற்றும்படி சாணக்யன் உத்தரவிட்டான். அவ் வுத்தரவுப் பிரகாரம் கொலைஞர் இழுத்துச் சென்றதைக் கண்ணாற் கண்டேன்." என்றான் விராதகுப்தன்.

ராக்ஷஸன் மிக்க விசனம் அடைந்து, "ஆ! நண்ப! சகடதாஸ! உனக்கு இவ்வித துர்த்திசை வரலாமோ?—நான் தாருவர்மன் முதலியோர்களுக்குச் சகாயம் செய்யும்படி அவனுக்குக் கட்டளையிட்டதனாலன்றோ, இவ்வித ஆபத்து அவனுக்கு நேர்ந்துவிட்டது? நான் நந்தர்களைப்பிரிந்து உயிர் தரித்திருப்பதற்கு வருந்தவேண்டுமேயன்றி, ஸ்வாமி

காரியத்தின் பொருட்டுப் பிராணனை விட்டவர்களைப் பற்றி வருத்தப் படுவானேன்?" என்றுரைத்துப், "பின்னும் என்ன விசேஷம்?" என்றான்.

"சகடதாஸனுக்குத் தண்டனை விதித்தபின் சாணக்யன் சந்தன தாஸனை வரவழைத்து, "உன் வீட்டிலிருக்கும் அமாத்திய ராக்ஷஸனது பெண்டு பிள்ளைகளை எங்களிடம் ஒப்புவிக்கவேண்டும்" என்று நயபயம் காட்டிப் பலவாறாகக் கூறினான். வர்த்தகன் தனக்கொன்றும் தெரியா தெனச் சாதித்து விட்டபடியால், சாணக்யன் கடுங்கோபம் அடைந்து, அவனது ஆஸ்தியை முற்றும் பறிமுதல் செய்து, அவனையும் குடும்பத் துடன் சிறையிலிட்டிருக்கிறான்" என்றான் விராதகுப்தன்.

ராக்ஷஸன் மிக்க விசனமுற்று "நம் குடும்பம் சந்தனதாஸன் வீட்டிலிருப்பது, விளையாட்டுத்தனமுள்ள நமது குழந்தையால் சாணக் யன் அறிந்திருக்கலாம். சந்தனதாஸன் சிறைப்பட்டது, நானே சாணக்யனின் வசப்பட்டதற்குச் சமானமாயிற்று. என்ன மனவுறுதி! இச் சங்கடத்திற்குள்ளாகவும் கூடும் என்றறிந்தன்றோ அவன் தான் எவ்வித இடையூறுறினும், அதனைப் பாராட்டாது நம் குடும்பத்தை வெளிக்காட்டாது வேறொரு சாவதானமான இடத்தில் மறைத்துவைத் திருக்கின்றான்?" என்று அவனது விசுவாசத்தையும் மனவுறுதியையும் தன்னல வெறுப்பையும் பற்றிப் பலவாறு சிந்தித்துக்கொண் டிருந்தான்.

---

## ஐம்பத்து மூன்றாவது அத்தியாயம்.

## சகடதாஸனும் ஸித்தார்த்தகனும் ராக்ஷஸன்பால் வரல்.

ராக்ஷஸன் சந்தனதாஸனது பரிதாப நிலையைப் பற்றிப் பலவாறு எண்ண மிட்டுக்கொண் டிருக்கையில், ஒருவன் ஓடி வந்து, "ஸ்வாமி! சகடதாஸன் என்பவன் தங்களைக் காண வந்திருக்கிறான்" என்றான். அது கேட்ட ராக்ஷஸன் விராதகுப்தனை நோக்கி, "இஃதென்ன ஆச்சரி யமா யிருக்கிறது!" என்று கூறி அவனை அழைத்து வருமாறு, செய்தி சொல்லவந்த தூதனுக்குக் கட்டளை யிட்டான்.

சிறிது நேரத்திற் கெல்லாம் சகடதாஸன் உள்ளே வந்து ராக்ஷ ஸனை நமஸ்கரித்து நின்றான். அமாத்யன் அவனை நோக்கி, "ஐய சகடதாஸ! நீ சாணக்ய னென்ற வேங்கை வாயில் அகப்பட்டும்

உயிர் தப்பி வந்த தெங்ஙனம்? உட்கார்ந்து பதறுமற் சொல்" என, சகடதாஸன், உட்கார்ந்து கொண்டு, "ஸ்வாமி! நந்த ராஜ்யத்திற் சாணக்யனுல் நிலைநிறுத்தப் பட்டுள்ள சந்திரகுப்தன் போன்று கொலைக் களத்தில் நிலைநாட்டப் பட்டுள்ள கழு மரத்தினருகில் என்னைக் கொலையாளிகள் இழுத்துச்சென்றதும், எனது பிராண சிநேகனுகிய ஸித்தார்த்தகன், அச் சமயம் கத்தியும் கையுமாக ஓடிவந்து கொலையாளிகளைத் துரத்தியடித்து என்னைக் காப்பாற்றி இங்கு அழைத்து வந்தனன்" என்றான்.

"ஆ! ஆ!! அப்படியா நினது உயிரளித்த உத்தமனுகிய ஸித்தார்த்தகன் எங்கே?" என்ன, சகடதாஸன், "அவன் வாயிலில் நின்று கொண்டிருக்கிறுன்" என்றான். ராக்ஷஸன் அதி ஆனந்த முற்றவனுய் உடனே ஸித்தார்த்தகனை வரவழைத்து, "ஐய ஆப்தனே! சகடதாஸனை விடுவித்து அவனை என்னிடம் அழைத்து வந்தமைக்கு உனக்கென்ன வெகுமதி அளிக்கப் போகிறேன்!" என்று கூறி, மலயகேதுவால் தனக்கு அளிக்கப்பட்ட ஆபரணங்களை அவனுக்குப் பரிசாக அளித்தான். ஸித்தார்த்தகன் ராஜயோக்யமான அவ் வாபரணங்களை மிக்க சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டு, ராக்ஷஸனை நமஸ்கரித்து, "ஸ்வாமி! இங்கு எனக்கு ஆப்தர்கள் இல்லை. ஆகையால் இவ் வாபரணங்களைத் தங்கள் பொக்கிஷத்தில் வைத்திருந்து, நான் கேட்கும்போது என்னிடம் அளிக்குமாறு சகடதாஸனுக்கு உத்தரவு அளிக்க வேண்டும்" என, அவனும் அவ்வாறே செய்தான். சகடதாஸன் ஓர் பெட்டியை வரவழைத்து அந்த ஆபரணங்களை வைத்து முத்திரையிடத் தொடங்குகையில், ஸித்தார்த்தகன், "ஸ்வாமி! இதனுல் முத்திரையிடுங்கள்" என்று தன்னிடமிருந்த ராக்ஷஸனது முத்திரை மோதிரத்தைக் கொடுத்தான். சகடதாஸன் அதை வாங்கி, ராக்ஷஸனை நோக்கி, "இது தங்களுடையது போல் இருக்கிறதே" என, ராக்ஷஸன் அதைப் பார்த்து, "ஆம். நம்மதே. ஞாபகார்த்தமாக நாம் நம் மனைவியிடம் கொடுத்து வந்த தன்றோ இம் மோதிரம்? இது இவன் கையில் எவ்வாறு கிடைத்தது?" என்று சிறிது நேரம் ஆலோசித்து, ஸித்தார்த்தகனைப் பார்த்து, "ஐய, ஸித்தார்த்தக! இம்மோதிரம் உனக்கு எங்கே கிடைத்தது?" என்று கேட்டான்.

"ஸ்வாமி! நான் ஒரு நாள் பாடலிபுரத்தில் ராஜ வீதியிற் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது சந்தனதாஸன் என்ற வர்த்தகன் வீட்டு வாயிற்படியிற் கிடந்தது அது. அதனை எடுத்து வந்தேன்" என்றான். ராக்ஷஸன், "ஸரி. ஆமாம். அவன் பெரிய வர்த்தகனாகையால் அவனிடம் இது போன்றவை அநேகம் இருக்கக் கூடும்" என்று உரைத்து, தனக்குள், "நல்ல வேளையாய் இது வேறெவரிடமும் அகப்படாமல் இவனிடம் அகப்பட்டதே. இம் மோதிரம் மட்டும் சத்துருக்கள் கையில் அகப்பட்டிருந்தால் பெருத்த மோசத்திற் கன்றோ இடமாக இருந்திருக்கும்? நமது குழந்தையே, அதனைத் தன் தாயிடமிருந்து பிடுங்கி விளையாடிக் கொண்டிருக்கும் போது வாசலிற் போட்டிருப்பன்" என்று எண்ணிச் சகடதாஸனை நோக்கினான். இங்கிதம் அறிந்த அந்த ராயஸக்காரன் ஸித்தார்த்தகனைப் பார்த்து, "ஐய, மித்திர! இம் மோதிரத்தில் அமாத்யர் பெயரிட்டு அவ் வர்த்தகன் வேலை செய்திருப்பதால் இதனை அமாத்யருக்கே காணிக்கையாக ஒப்புவித்து விடு" என்றான்.

ஸித்தார்த்தகன் பயபக்தி அபிநயித்து, சகடதாஸன் கூறியதற்கிணங்கி ராக்ஷஸனிடம் அதை அளித்தனன். ராக்ஷஸன் அதனைச் சகடதாஸனிடம் அளித்து, "இன்று முதல் நமது கடிதங்களுக்கு இதனைக் கொண்டே முத்திரையிடுக. ஸித்தார்த்தகற் களித்த இவ்வாபரணப் பெட்டிக்கும் இதனைக்கொண்டே முத்திரையிட்டு வைத்திருந்து, அதனை அவன் வேண்டும்போது கொடுத்துவிடுக" என்றான். சகடதாஸன் உடனே அப்பெட்டியை முத்திரையிட்டு உள்ளே வைத்ததும், ஸித்தார்த்தகன் எழுந்து நின்று ராக்ஷஸனை நோக்கி, "மகா ஸ்வாமி! நான் சந்திரகுப்தனுக்குத் துரோகஞ்செய்து இங்கு ஓடிவந்திருப்பது தாங்கள் அறிந்த விஷயமே. உத்தரவானால் ராஜகாரியங்கள் முற்றமுடியும் வரை தங்களிடமே இருந்துகொண்டிருப்பேன்" என்றான்.

ராக்ஷஸன் சகடதாஸனை நோக்கி, "நாம் நினைத்தபடியே இவனும் கேட்டுக்கொண்டு விட்டான். ஆதலால் இவன் உன்னோடு நம்மிடமே இருக்கட்டும்" என்று கூறி, ஸித்தார்த்தகனைப் பார்த்து, "ஐய, ஸித்தார்த்தக! நீயும் சகடதாஸனைப்போல் நமக்கு மித்திரனாகிவிட்டபடியால் நம்மிடமே இருந்துகொண்டிருக்க ஒரு ஆக்ஷேபமும் இல்லை"

என்றான். பிறகு அவன் அவ் விருவர்களையும் நோக்கி, "உங்களுக்குப் பிரயாண சிரமம் மிகுதி. முதலில் சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள்." என்று உபசார வார்த்தைகள்கூறி, அவர்களை அவர்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த விடுதிகளுக்குச் செல்ல விடுத்தான்.

---

## ஐம்பத்து நான்காவது அத்தியாயம்.

## விராதகுப்தன் தன் விஷயத்தை முடித்தல்.

சகடதாஸனையும் ஸித்தார்த்தகனையும் அனுப்பிய பிறகு, ராக்ஷஸன் விராதகுப்தனைப் பார்த்து, "பாடலிபுரத்தில் மற்றும் ஏதேனும் விசேஷம் உண்டோ?" என்று விசாரிக்க, அவன், "ஸ்வாமி! ஆம் உண்டு. அஃதென்னவெனில், "விரோசனன் மாண்டபின்னர், பத்ரபடன் முதலியோரைச் சாணக்யன் அவமானப்படுத்தி ஓட்டி விட்டதாலோ, வேறு யாது காரணத்தாலோ, சாணக்யனிடம் சந்திரகுப்தனுக்கு விரோதம் உண்டாகியிருக்கிறது" என்று அங்குள்ள ஜனங்கள் பேசிக்கொண்டனர். உண்மை அறியும் பொருட்டு நான் அங்கு மாறுவேஷத்துடனிருந்து நானா இடங்களிலும் திரியலானேன். அப்பொழுது நடந்த ஓர் விசேஷத்தைக் கூறுகின்றேன். "கௌமதி மஹோத்ஸவம்" நடக்கும்படி சந்திரகுப்த மகாராஜாவின் உத்தரவாயிருக்கிறது" என்று ராஜ தூதர்கள் வீதிகளில் பறை யறைந்தனர். அதனைச் செவியுற்ற சாணக்யன், மனம் பொறாமல் 'உத்ஸவம் நடக்க வேண்டியதில்லை' என்று அதட்டிப் பறை யறைந்தோரைத் திரும்பிச் செல்லுமாறு உத்தர விட்டான். இதனைக் கண்ட ஜனங்கள், "சாணக்யன் 'தனதிஷ்டமின்றி அணுவும் அசையக் கூடாது' என்ற அகம்பாவ புத்தி படைத்தவனாதலின், சந்திரகுப்தன் தன்னிஷ்டப்படி செய்யும் விஷயங்களிற் கோபங்கொண்டு கௌமதி மஹோத்ஸவத்தை நிறுத்திவிட்டான். தானிட்ட கட்டளை யாவரும் அறியத் தடைப்பட்டது பற்றிச் சந்திரகுப்தன் சாணக்யனிடம் வெறுப்புற் றிருக்கிறான். இனி இவ் விருவர்க்கும் விரைவில் மனஸ்தாபம் அதிகரிக்கும் என்பதில் ஐயமே யின்று." என சொல்லிக் கொண்டனர். இது சத்தியம்" என்றான்.

இது கேட்ட ராக்ஷஸன், "நாம் இச் சமயத்தில் இவ் விருவர்களின் விரோதத்தையும் மேன்மேலும் மிகச் செய்வோமாயின, சந்திரகுப்தன்

சாணக்யனது உதவியை இழந்தே விடுவன். அப்பொழுது சந்திரகுப்தனை வெல்வது மிகவும் எளிதாய் விடும்'' என்று எண்ணி, விராதகுப்தனைப் பார்த்து; ''நீ இதே வேஷத்துடன் மீண்டும் குஸுமபுரம் சென்று, மேல் நடக்கும் விஷயங்களை அறிந்து வருக. மற்றும், அங்குள்ள கரபகன் என்பவனை உடனே இங்கு அனுப்புக'' என்றான்.

ராக்ஷஸன் கட்டளையை யேற்று, விராதகுப்தன் அதிவேகத்துடன் பாடலிபுரம் சென்று, கரபகனை ராக்ஷஸனிடம் அனுப்பினான். அவன் வந்து சேர்ந்ததும் ராக்ஷஸன், ''கரபக! சந்திரகுப்தனுடைய ஆஸ்தானத்தில் ஸ்துதி பாடகர்களாகவுள்ள கலசகன், விஜயன் என்ற இருவரும் நமக்கு வேண்டியவர்கள். அவர்களிடம் ''சந்திரகுப்தனுக்கும் சாணக்யனுக்கும் வாக்குவாதம் உண்டாகும் சமயங்களில், சந்திரகுப்தனுக்குச் சாணக்யனிடம் விரோதம் உண்டாகுமாறு, சமயத்திற் கேற்ற ஸ்துதி பத்தியங்கள் சொல்லிச் சந்திரகுப்தனைப் புகழ்ந்து வரவேண்டியது'' என்றும், ''அங்ஙனம் செய்வதிற் காரியம் கைகூடுமாயின் அளவற்ற பொருள்கள் வெகுமதியாக நீங்கள் பெறுவீர்கள்'' என்றும், நாம் சொல்லச் சொன்னதாகச் சொல். பிறகு அங்கு நடக்கும் விசேஷங்களை அறிந்து வந்து நமக்குத் தெரிவித்திடுதி. ராஜ காரியம் சமீபித்திருப்பதால் நாழிகைக்கு நாழிகை நமது கூடசாரர்கள் ''ஆங்காங்கு அப்போதைக் கப்போது அறியும் விசேஷங்களை அதிசீக்கிரத்தில் நமக்கு அறிவிக்கும் பொருட்டுத் தக்க குதிரைகளைத் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டியது'' என்று அவர்களுக்குச் சொல்.'' என்று கூறிக் கரபகனைப் பாடலிபுரத்திற் கனுப்பினான். அவன் ஊர் போய்ச் சேர்ந்ததும் கலசகன் விஜயன் என்ற இருவரையும் தனிமையிற் கண்டு அமாத்யனது உத்தரவை அவர்களுக்கு அறிவித்தான்.

---

## ஐம்பத்தைந்தாவது அத்தியாயம்.

## ராக்ஷஸனது நகை வியாபாரமும் மனோராஜ்யமும்.

முன்பு சாணக்யனால் அனுப்பப்பட்டிருந்த அந்தணர் மூவரும், வர்த்தகர் வேஷம் தரித்து, சாஹஸாரி நகரம் வந்து, ராக்ஷஸன் வீட்டு வாயிலில் நின்று, அங்கிருந்த தூதரைநோக்கி 'ரத்ன வியாபாரிகள் நாங்

கள் ராக்ஷஸரைக் காண விரும்புகிறோம்" என்றனர். அவர்கள் அச் செய்தியை ராக்ஷஸனுக் கறிவிக்க, அவன் அவ் வியாபாரிகளை உள்ளே அழைத்து வருமாறு கட்டளையிட்டான். வியாபாரிகள் உள்ளேசென்று அவனைக் கும்பிட்டுத் தம்மிடத்திருந்த ஆபரணங்களை எடுத்துக் காண்பித்தனர். ராக்ஷஸன் அவைகள் அதி சிலாக்கியமானவை எனக்கண்டு, தனக்குள், "நாம் அணிந்திருந்த ஆபரணங்களைச் சந்தோஷ மேலீட்டால் ஸித்தார்த்தகனுக்குப் பரிசாக அளித்து விட்டோம். ராஜஸபை செல்லும்போது தரித்துக்கொள்ளத் தக்கவைகளாக இவை இருக்கின்றன," என எண்ணி, அவற்றிற்குரிய விலையளித்துப் பெற்று, அவற்றைப் பொக்கிஷத்தில் வைத்திடுமாறு சகடதாஸனுக் குத்தரவிட, அவனும் அவ்வாறே செய்தான். பிறகு போலிவர்த்தகர்கள் மூவரும் ராக்ஷஸனிடம் விடைபெற்றுத் தாம் வந்தவழியே திரும்பினர்.

அவர்கள் சென்றதும், ராக்ஷஸன், தனக்குள், "நாம் நமது கூட சாரணிய கரபகன் மூலம் ஸ்துதி பாடர்களுக் குத்தரவிட்டுள்ளபடியே அவர்கள் செய்து வருவார்களாயின், ஏற்கனவே சாணக்ய சந்திரகுப்தர்களுக் குள்ள பரஸ்பர மனஸ்தாபம் விருத்தி யடைந்திருக்கத் தடையே இல்லை. "கௌமதி மஹோத்ஸவத்தைப் பற்றிய தனது கட்டளை நிறைவேற்றுமற் போனதன் நிமித்தம், சாணக்யனிடம் சந்திரகுப்தனுக்கு அளவற்ற வெறுப்பு உண்டா யிருக்கும்" என்பது நம்பத் தக்கதே. மற்றும், அவன், தான் அரசனுகி விட்டபடியால், "இனி யாரால் என்ன ஆகவேண்டும்? யார் என்ன தான் தன்னைச் செய்யக் கூடும்?" என்ற அலட்சிய புத்தியுடன் நடந்து கொள்ளக்கூடும். அன்றியும் தனது சபதம் நிறைவேறி விட்டதால், சாணக்யனுக்கும், 'எது எக்கேடு கெட்டால் என்ன?' என்று சந்திரகுப்தனிடம் உபேட்சை யுண்டா யிருக்கலாம். எவ்விதத்திலேனும், அவ் விருவர்களுக்குள்ளு மிருந்துவந்த விசுவாசமும் அபிமானமும் போய், மனஸ்தாபம் மிகுதியும் உண்டா யிருக்கும். இச் சமயத்தில், நான் சந்திரகுப்தனுக்கு விரோதமாக மலயகேதுவுடன் தண்டெடுத்துச் சென்றால் நான் கருதியுள்ள காரியம் கைகூடத் தடையே யில்லை." என எண்ணிப் பலவாறு மனக்கோட்டைக் கட்ட ஆரம்பித்தான்,

## ஐம்பத்தாறுவது அத்தியாயம்.

## சந்திரகுப்தனது யோசனை.

ராக்ஷஸன் செய்தி இவ்வாறாக, சந்திரகுப்தன் செய்தியைச் சிறிது கவனிப்பாம்: அவன் தான் அலங்கரித்திடுமாறு உத்தரவிட் டிருந்த நகர வைபவத்தைக் கண்டு களிக்க எண்ணி, மிதபரிவாரத்துடன், 'ஸுகாங்கம்' என்ற உப்பரிகை மீதேறி, அங்கிருந்த ஓர் சிறந்த ஆசனத் தமர்ந்து நான்கு திக்குக்களையும், உற்று நோக்கினன். அப்பொழுது, நகர வீதிகளும் மாட மாளிகை கூட கோபுரங்களும் அலங்கரிக்கப்படாமல், என்றும் போல் அதி சாதரணமாக இருந்ததைக் கண்டு, சமீபத்திருந்த ஒரு தூதனை நோக்கி, "இந்நகரில் கௌமதி மஹோத்ஸவம் நடத்தும் படி நாம் உத்தரவிட்டிருந்தோமே. அதனை ஜனங்கள் அநுசரித்து நடவாத காரணம் என்ன?" என்று வினவினன். அவன் கை கூப்பி, "மகாப் பிரபு! சந்நிதானம் இட்ட கட்டளையை மீறி நடக்கக் கூடியவர்கள் எவருமில்லையேனும், விஷயத்தை உள்ளவாறு அறிவிக்க மனம் தியங்குகின்றது. அச்சமும் உண்டாகிறது" என்றான்.

"சரி தெரிந்தது. உத்ஸவம் 'நடக்க வேண்டியதில்லை' என்று சாணக்யர் உத்தர விட்டனரோ?" எனச் சந்திரகுப்தன் கேட்க, "ஸ்வாமி! ஆம்!" என்று தூதன் அதி வணக்கத்துடன் அறிவித்தனன். சந்திரகுப்தன் சிறிது நேரம் மௌனமாக விருந்து, பிறகு, "இவ் விராஜ்யாதிகாரம் எவ்வித இடையூறு மின்றி நிலைக்க வேண்டுமென எனக்காக ஆயிரம் பாடு அரும்பாடு படுபவர் சாணக்யர். அந் நோக்கத்துடனேயே அவர் சாகஸம் மிகுத்த எனது சத்துருக்களைக் கொன்று இப் பெரிய ராஜ்யத்திற்கு என்னை அதிபதி யாக்கியுள்ளார். 'உனது ராஜ்ய விஷயங்களை நீயே நேரில், உன் இஷ்டப் பிரகாரம் நடத்திக் கொள்க' என்று உத்தரவிட்ட அவரே இப்பொழுது என் உத்தரவை மறுத்துரைத் திருக்கிற படியால், அவர் அங்ஙனம் செய்ததில் ஏதேனும் விசேஷம் இருத்தல் வேண்டும். சகல பாசத்தையும் விலக்கிய விரக்தரும், மகா தபஸ்வியுமான சாணக்யர்க்கு எனது ஆட்சி முறையால் மட்டிலா மகிழ்ச்சி யுண்டா யிருக்குமே யின்றி அருவை உண்டா யிருக்க மாட்டாது. ஒரு வேளை என்னிடம் எக் குற்றமேனும் இருப்பின், அரசனும், தனது

அபிமானத்திற்குப் பாத்திரனுமான என்னைத் தனிமையில் அழைத்துப் புத்தி புகட்டுவாரே யல்லாது, இவ்விதம் பலரறிய எனதாணைக்கு விரோதமாக ஓர் உத்தரவைப் பிறப்பித்து என்னை அவமதிக்க மாட்டார். மலயகேதுவை யடுத்து ராக்ஷஸன் இப்பொழுது நம்மீது தண்டெடுத்து வர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறான். இச் சமயத்தில் எங்களுக்குள் மனஸ்தாபம் இருப்பதாக, ஓர் உலக வதந்தி ஏற்படுத்தினால், அதனை ராக்ஷஸனும் மலயகேதுவும் மெய்யென நம்பி, மோசம் போய்ப் பாடலிபுரத்தின் மீது படை யெடுக்கத் தொடங்குவார்கள். அங்ஙனம் செய்யும் அவர்களை உபாயத்தினால் ஜயிக்க வெண்ணியே சாணக்யர் இவ்விதம் செய்திருக்கின்றனர் என எண்ணுகிறேன். எல்லாவற்றிற்கும் அவரையே நேரில் வரவழைத்து அவரது உள்ளக் குறிப்பை உணர்வோம். அறிந்து எங்கள் இருவருக்கும் உள்ள (போலி) மனஸ்தாபத்தைச் சகல ஜனங்களும் அறியும்படி ராஜ சபையில் பகிரங்கமாக வாக்குவாத மூலம் தெரியப்படுத்துவோம்" என்று தனக்குள் தீர்மானித்து, குமுதகன் என்பவனை நோக்கி, "நீ எஜமானரிடம் சென்று 'நமஸ்கரித்தேன்' என்று கூறி, 'நான் அவரைப் பார்க்க விரும்புகிறேன்' என்று விக்ஞாபித்து, அவர்க்குச் சாவகாசப்பட்ட பொழுது இங்கு அவரை அழைத்து வருக" என்று கட்டளை யிட்டான்.

குமுதகன், 'மகாப் பிரஸாதம்' என்று சென்று, தர்ப்பாசனங்களாலும், சமித்துக்களாலும், மான்தோல் முதலியவற்றாலும், கந்த மூல பலங்களாலும் ரிஷியாசிரமம்போல் விளங்கிக்கொண்டிருந்த சாணக்யனுடைய பர்ணசாலையைக் கண்டு வியந்து, "ஆ! ஆ!! இச் சாணக்யர் ஆசாபாச விமுக்தராக இருப்பதுபற்றியே பிரபுவான சந்திரகுப்தனையும் லட்சியம் செய்யாமல், ஏகவசனமாகத் தன் குழந்தையிடம் பேசுவது போல் அவனிடம் பேசுகிறார். விரக்தரா யிருப்போர்க்கு ஏது தான் லக்ஷ்யம்?" என்று பலவாறு சிந்தித்துக்கொண்டே, தர்ப்பாசனத்தில் உட்கார்ந்து சிஷ்யர்களுக்குத் தருமோபதேசம் செய்துகொண்டும், சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அக்கினிபோல் திவ்ய தேஜஸுடன் விளங்கிக்கொண்டும் இருந்த சாணக்யனைக் கைகூப்பிக் கும்பிட்டு "மகாஸ்வாமி!" என்று தூரத்தில் நின்றான்.

சாணக்யன், "விஷயம் என்ன?" என்று கேட்க, அவன், "மஹாநு பாவரே! சமஸ்த தேவராலும் அசுரராலும் வணங்கப்பட்டவராயும், திரிலோக குருவாயும், இஷ்டதெய்வமாயும் இருக்கும் பரமேச்வரர்க்குத் தலைவணங்கி நமஸ்கரிப்பதுபோல், ராஜாதிராஜ ராஜகம்பீரரான சந்திரகுப்த மகாராஜா அவர்கள், தங்கள் சரணாரவிந்தங்களில் நமஸ்கரித்துத் தங்கட்கு விசேஷ காரியமில்லாவிடில் தங்களைத் தரிசிக்க விரும்புகின்றார். அவர் இப்பொழுது 'ஸுகாங்கம்' என்னும் உப்பரிகையில் எழுந்தருளியிருக்கிறார்" என்றான்.

சாணக்யன் அது கேட்டு, "அவனது நமஸ்காரம் ஈசுவரனை யடைந்து அவனுக்கு க்ஷேம லாபங்களை அளிக்கட்டும். அரசன் நம்மை அழைத்துவரவா சொன்னான்? எதற்காக? கௌமதி உத்ஸவத்தை நாம் நிறுத்தியதாக எவரேனும் அவனுக் கறிவித்தனரோ?" என, குமுதகன், "ஸ்வாமி! ஒருத்தரும் சென்று தெரியப்படுத்தவில்லை. பிரபுவானவர் 'ஸுகாங்கம்' என்ற உப்பரிகைமீதேறிப் பார்த்தபோது நகரம் உத்ஸவமின்றி யிருப்பதைத் தாமாகவே கண்டறிந்து கொண்டனர் போலும்." என்றான்.

சாணக்யன், "நீங்கள் எல்லோரும் அரசனுக்கு என்னிடமுள்ள பிரியம் குறையும்படி செய்திருக்கிறீர்களென எண்ணுகிறேன். நல்லது நடக்கிறதெல்லாம் நடந்து தீரட்டும்" என, தூதன் பதில்சொல்லத்தெரியாமல் தலைகுனிந்து நின்றான். அப்பொழுது சாணக்யன், "இருக்கட்டும். ராஜபரிவாரங்கட்குக்கூட என்னிடம் த்வேஷமுண்டாயிருக்கிறது. எப்படியிருந்தாலும் நான் நேரிற் சென்று அரசனைக் கண்டு வருகிறேன்" என்று புறப்பட்டு "ஸுகாங்கம்" போய்ச்சேர்ந்து, அங்கு அரசர்களாலும் ராஜவம்சத்தினாலும் சூழப்பட்டுப் பத்ரபீடத்திலுட்கார்ந்திருந்த சந்திரகுப்தனைத் தூரத்திலிருந்தே கண்டு மனதில் அடங்கா மகிழ்ச்சியுற்றான்.

## ஐம்பத் தேழாவது அத்தியாயம்.

## போலி மனஸ்தாபங்கள்.

சாணக்யன் வருவதை அறிந்த சந்திரகுப்தன், உடனே எழுந்து நமஸ்கரிக்க, சாணக்யன், "ஐய, அரசே! சர்வோத்கிருஷ்டனாகவும் ஆயுஷ்மானாகவும் இரு" என்று ஆசீர்வதித்தான். "ஸ்வாமி! வேதத்திற் கொப்பான தங்கள் ஆசீர்வாத வசனம் பலித்துக்கொண்டே யிருக்கிறது. தேவரீர் இங்கு எழுந்தருளவேண்டும்" என்று சந்திரகுப்தன் சாணக்யனை ஓர் பொற்பீடத்தில் உட்காரச்செய்தான்.

பிறகு யாவரும் தத்தம் ஆசனத்தமர்ந்ததும், சாணக்யன் சந்திர குப்தனை நோக்கி, "ஐய, குமார! யாது காரணம் பற்றி நம்மை வர வழைத்தாய்?" என்ன, சந்திரகுப்தன், ஸ்வாமிகளின் தரிசனத்தாற் புனித முறலாமென வெண்ணி அவ்வாறு செய்தேன்" என்றான்.

"ஐய! அரசனே! அதிவிநயம் இருக்கட்டும். காரியமில்லாமல் வர வழைக்க மாட்டாயே. தியங்கவேண்டுவதில்லை. தைரியமாக உண்மையை ஒளிக்காம லுரை" எனச் சாணக்யன் கூற, சந்திரகுப்தன், "மகா ஸ்வாமி! கௌமுதி மஹோத்ஸவம் நின்றமைக்குக் காரணம் அறிந்து கொள்ளவே" என்றான்.

"ஓஹோ! நான் செய்த காரியத்தை ஆக்ஷேபிக்கவோ நம்மை வர வழைத்தனை?—அப்புறம்?" என்று சாணக்யன் முகம் மாறினவன்போல் கேட்க, சந்திரகுப்தன், "ஸ்வாமி! அதற்காக அன்று. அது சம்பந்த மாகச் சில விஷயங்களை விக்ஞாபித்துக் கொள்ளும் நிமித்தமே" என்றான்.

"சாணக்யன் பயனிலாக் காரியங்களைக் கனவிலும் கருதித் தொடங் கான் என்பது நீ அறிந்த விஷயமன்றோ?" எனச் சாணக்யன் கேட்க, அவனது முகக்குறிப்பால் உள்ளக்குறிப்பையு முணர்ந்த சந்திரகுப்தன், "இச்சமயம் வம்பு வளர்ப்பது அவசியமே ஆகும்" என்று கண்டு, "ஆம். தாங்கள் கூறுவ துண்மையே. இருந்தாலும், நான் கேட்டதற்குத் தாங் கள் முதலில் தயை செய்து விடை தருக" என்றான்.

அதனைச் செவியுற்ற சாணக்யன், "ஐய, 'தனக்குள் அடங்கிய அரசாட்சி', 'மந்திரிக் குட்பட்ட அரசாட்சி' 'அரசன் மந்திரி ஆகிய இருவருடைய ஆலோசனையும் கலந்து நடைபெறும் அரசாட்சி' என அரசாட்சியானது தண்டநீதி சாஸ்திரப் பிரகாரம் மூன்று வகைப்படும். இவற்றுள், 'மந்திரிக் குட்பட்ட ஆட்சி'யை உடைய உனக்கு, என் செய்கையை விசாரித்து ஆகவேண்டியது ஒன்றுமே இல்லையே." என, சந்திரகுப்தன், கோபித்தவன்போல் தன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

கொள்ளலும், இது தான் சமயம்" என்று, ராக்ஷஸனது கட்டளைக்கும் போதனைக்கும் உள்ளாகிய ஸ்துதி பாடகர்கள், "வஸ்திராபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்கள் எல்லாரும் அரசராகார். எச்சமயத்தும் எவராலும் தம் ஆக்ஞை தடைபடாத அதிகார சக்தி பெற்ற சந்திரகுப்த மகாராஜாவே 'பிரபு' எனச் சகலராலும் மதிக்கப் படுகின்றார்." என்றும், "மானசாலிகளான பூபதிகளாகும் நக்ஷத்திரங்களின் நடுவில் சந்திரமண்டலம்போல் விளங்கும் சந்திரகுப்த சார்வ பௌமா! ஜய! ஜய!" என்றும் புகழ்ந்தார்கள்.

இதனைக் கவனித்த சாணக்யன், "ஓகோ! நாம் எண்ணிய விதமே, துஷ்ட ராக்ஷஸன், நமக்கும் சந்திரகுப்தனுக்கும் மனஸ்தாப முண்டாக்கச் செய்த கிருத்திரமங்களில் இஃதொன்றாகும். இங்ஙனம் மனஸ்தாபம் ஏற்படும் சமயமே தனக்கு ஜயகாலமென எண்ணி ராக்ஷஸன் காரியங்களை நடத்தி வருகிறான். அந்த ராக்ஷஸனை நான் அறிகிறேனேயல்லாது, அவன் என்னை அறியவில்லை. அவன் என்வசம் அகப்படாமல் எங்கே தான் ஒளிந்து கொள்வான்? பார்க்கிறேன்" என்றெண்ணிச் சந்திரகுப்தனை ஒரு பார்வை பார்த்தான்.

சாணக்யனது உட்கருத்தை அறிந்த சந்திரகுப்தன், "குமுதக! 'அதி புத்திசாலிகளான இந்த ஸ்துதி பாடகர்களுக்குத் தலைக்கு ஆயிரம் மோகராக்கள் வெகுமதியாக அளித்திட நாம் உத்தரவிட் டிருக்கிறோம்' என்று பொக்கிஷாதிகாரியான ருக்மனுக்குத் தெரிவித்திடுக" என்றான். சந்திரகுப்தன் இங்ஙனம் கூறியதைக் கேட்டுச் சாணக்யன் புருவத்தை நெறித்துக்கொண்டு "அரசே! இவ்வாறெல்லாம் நீ வீண்செலவு செய்யக் கூடாது. செய்தல் பெருந்தவறேயாம்." என்று கண்டித்துரைத்து,

'தான் தேடாப் பொன்னுக்கு மாற்றும் இல்லை, உரையுமில்லை.' திரவியத்தைத் தேடும் சிரமம் அதைத் தேடியவன் அறிவானேயன்றி, இவ்வரசன் அறிவானோ?" என்று சபையோரை நோக்கிக் கூறிக் குமுதகனைப் பார்த்து, "நீ 'அரசனுத்தரவுப் பிரகாரம் இந்த ஸ்துதி பாடகர்களுக்கு வெகுமதி எதுவும் தரவேண்டுவதில்லை' என்று நாம் கட்டளையிட்டனுப்பியதாக ருக்மனுக்குத் தெரிவித்து வா" என்றான்.

சந்திரகுப்தன் ஏக்கமும், விசனமும், வெட்கமும் கோபமும் மாறி மாறித் தோன்ற நடித்து, "இஃதென்ன வேடிக்கை? என்னுடைய வார்த்தை ஒன்றுவது ஏறாதபடி தாங்கள் தடைசெய்து வருகின்றீர்கள். ஸ்வாதீனம் இல்லா என் வாழ்க்கை என்ன வாழ்க்கை? நான் வசிப்பது அரமனையன்று. சிறைக்கூடமே. நான் வகிப்பது அரசாட்சியன்று. நானும் அரசனல்லன். நான் சொல்வது உண்மையில்லையாயின், இவ்வாறு தாங்கள் பலர்க்குமுன், என்னை மதிப்புக் குறைவாகப் பேசி எனதாணையைத் தடுப்பீர்களோ?" என்றான்.

சாணக்யன், "ஐய! ஏனோ வீண்கோபம்? நீ இவ் வாட்சியை உன் தோள்வலியாலோ கொண்டனை? இல்லையே. ஆகையால் உனக்கேது சுதந்தரம்? நீ சொல்லுகிறபடி 'இவ் வரமனை உனது சிறைக் கூடமே' என்பதில் என்ன தவறு? என் வார்த்தைகளும் மறுப்புரைகளும் உனக்குக் கண்ணியக்குறைவை உண்டாக்குவனவாகத் தோன்றும்பக்ஷத்தில், இனி என் சம்பந்தம் உனக்கு வேண்டுவதில்லை. தாராளமாக நீயே உன் ராஜ்யபாரத்தை நடத்திக்கொள்ளலாம்" என்று அழுத்தமாகக் கூறினான்.

சந்திரகுப்தன், "சரி. அதிகப் பேச்சு வேண்டாம். எனது ராஜ்ய விசாரணையை இனி நானே, நடத்திக்கொள்ளுகிறேன்" என, சாணக்யன், "நன்று. என் பொறுப்பு இன்றுடன் நீங்கியது. மகாராஜனாக இனி நீயே உன் காரியத்தைப் பார்த்து வருக. என் காரியத்தை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்" என்றான்.

"வீணில் மனஸ்தாபங்கொள்வது அழகன்று. 'உத்ஸவத்தை நிறுத்திய காரணம் என்ன? என்று தானே கேட்டேன். அதுகூடக் கேட்கக்கூடாதா? அவ்வாறு கேட்பது பெருந்தவறாகுமா?" என்று சந்திரகுப்தன் கேட்க, சாணக்யன், "நாம் என்ன சொல்லிவிட்டோம்." இவ் வுத்ஸவம் நடவாவிடில் என்ன குடிமுழுகிப் போயிற்றென்று நாம் நினைத்தது மட்டும் தவறோ?' என்றான்.

"ஆம் எனது கட்டளை ஈடேறுமற்செய்தது பிழையன்ருே? அகங்காரத்தை விட்டுச் சொல்லுங்கள்" எனச் சந்திரகுப்தன் கூற, சாணக்யன், "அரசே! உனது ஆணை ஈடேறுவண்ணம் நடைசெய்வதே நமக்கு அதி பிரயோஜனத்தைத் தருவதாக இருக்கிறது. ஒன்று சொல்லுகிறேன் கேள்: நான்கு கடல்களுக்குமிடையில் உள்ள நிலப்பகுதியை ஆண்டுகொண்டிருக்கும் மன்னர்கள், நறுமென் மலர்மாலையெனத் தம் சிரமேற்ருங்கிப் போற்றிவரும் நினது ஆக்ஞை, என்னிடம் செல்லாமல் இருப்பதாலேயே, இவ் வரசாட்சி, விநயத்தால் அலங்கரிக்கப்பட்டு, உன்னிடம் வேரூன்றி அளவற்ற கீர்த்தியையும் விளக்கத்தக்கதா யிருக்கிறதென்பதை ஞாபகத் திருத்துவாயாக. நான் மட்டும்——"

சாணக்யன் தன்கூற்றை முற்ற முடிக்குமுன், அவனது கருத்தை நன்கறிந்த சந்திரகுப்தன், "ஐய! தங்கள் பெருமையை உலகறியும். அது ஒருபக்கம் நிற்க. இங்கிருந்த பத்ரபடன் முதலியோர், மனம் வெறுத்து இவ் வூரினின்றும் அகலக் காரணம் என்ன?" என்று வினவ, சாணக்யன், தனக்குள், "சந்திரகுப்தன் நம்மை முழுதும் அறிந்தும், ஒன்றுமே அறியாதவன்போல் அபிநயித்து இவ்விதமெல்லாம் நம்மைக் கேட்கிருன். அவன் இங்ஙனம் கேட்பதால் இச்சமயம் விளைவது நன்மையே யாகும். இச்சபையில் சத்துருபக்ஷத்திய ஜனங்களும் கூடியுள்ளார்கள். அவர்கள் நம்பிக்கைகொள்ளுமாறு வார்த்தையாடிக் கோபம் அபிநயித்துச் செல்லவேண்டும்" என்று தீர்மானித்துச் சந்திரகுப்தனை நோக்கி, "ஐய, என்னகேட்டாய்? பத்திரபடன் முதலியோரா? யானைத்தலைவனை பத்ரபடனும், குதிரைத்தலைவனை புருஷதத்தனும் ஸ்திரிலோலர்களாயும் அறுபது நாழிகையும் கள்ளாட்டயர்ந்து காலங் கழித்து வந்தனர். சைனியங்களைக் கவனியாதவர்களாயும் இறுமாப்புடனும் இருந்த அத்தூர்த்தர்களை சைனியாதிபத்தியத்திலிருந்து நீக்கியது தவருமோ? நீயே சொல். லோகிதாக்ஷ விஜயவர்மர்கள், அவர்களுடைய தாயாதிகளான சிலர்க்கு நீ செய்த வெகுமானத்தைக் காணச் சகியாதவர்களாய் ஓடிவிட்டார்கள். இதற்கு யார் என்ன செய்யக்கூடும்? பாகுராயணனே, பர்வதேசன் திடீரென்று எவரும் எதிர்பாரா திறந்த சமயத்தில், மலயகேதுவுக்கு இல்லாதன பல புகன்று, அவனை அவனது நாட்டிற் கழைத்துப்போய், ஆங்கு மந்திரி பதவியில் இருந்து வருகிருன். நீ புதிதாக அதிகாரம் வகித்து அரசனுயிருப்பதால், தங்கள் அதிகாரம்

இனி முன்போல் செல்லாதென எண்ணி டிங்கிராதனும் சிம்மபலனும் தாமே விலகிக்கொண்டு விட்டனர். இவர்களை அனுசரித்துப் பலகுப்த னும் சென்றுளான். இவர்கள் அனைவரும் தத்தம் சைனியங்களுடன் சென்று மலயகேதுவைபண்டி அவனது அதிகாரத்திலிருந்துவருவ தாகத் தெரிகிறது." என்றான்.

சாணக்யன் கூறியதை அதி கவனத்துடன் கேட்பதுபோல் அபி நயித்துவந்த சந்திரகுப்தன், "சரிதான் ஸ்வாமி! இவர்களிடத்திருந்த கெடுதல்களை நன்கறிந்த தாங்கள் அவர்களைத் தக்கபடி சிக்ஷித்து அடக்கி வசப்படுத்தியிருக்கவேண்டாமா? அங்ஙனம்செய்யப் போதியசாமர்த் தியம் உங்கட்கில்லையா? இருப்பின், 'அவர்கள் போனால் போகட்டும்' என்று சும்மா இருந்துவிட நிமித்தம் இல்லையே" எனச் சாணக்யன் ரோஷம் அபிநயித்து, "வேந்தே! நமக்குச் சாமர்த்தியம் இல்லாதிருக்க வில்லை. நவநந்தர்களின் ஐசுவரியத்தால் மதமடைந்துள்ள இச் சனங் களைக் கடுமையாகச்சிக்ஷித்து அடக்கிவிடுவோமானால், அவர்களிடம் பிரியமிக்கஜனங்களுக்கு அச்சமும் பீதியுமே உண்டாகும். அச்ச முள்ள இடத்தில் சாதாரணமாக அன்பு எங்ஙனம் இருக்கும்? பற் றில்லா இவர்களை வற்புறுத்தி அதிகாரத்தில் வைத்தோமாகில், ஏற் கனவே இறுமாப்புமிக்குள்ள அச் சேனாபதிகள், 'நம்மை விட்டால் இவர்களுக்கு வேறு கதியில்லை' என்று முற்றிலும் அழும்புசெய்துவர மாட்டார்களா? கௌமதி மஹோத்ஸவத்தை நான் நிறுத்திவிட்டதற் காக என்னைக் குறைகூறி வருந்தும் மன்ன! நான் இனி சொல்லப் புகு வதையும் கவனித்துக்கேள். உபேக்ஷையுடன் நாம் இருந்தபோது நம்மை விட்டுச்சென்ற இச் சேனாபதிகளை, அவர்களது சைனியங்க ளுடன், மலயகேது தன்கீழ் வேலைக்கு அமர்த்தியுள்ளான். அவன், ராக்ஷஸனது வார்த்தையைக் கடைப்பிடித்து அவற்றுடனும் தன் சேனைகளுடனும் நம் மீது தண்டெடுத்துவரச் சித்தமாய் இருக்கிறான். ஆகவே, நெருக்கடியான இச் சமயத்தில் நம்மிடமிருக்கும் படைகளை நாம் திரட்டி, கோட்டை கொத்தளங்களைப் பலப்படுத்திக் காத்து யுத் தத்திற்கு வேண்டியவற்றை ஸித்தப்படுத்தி வைத்துக்கொள்ள வேண் டாமா? இதுவா கௌமதிமஹோத்ஸவம்கொண்டாடிக் களிக்கும் சமயம்? இச் சமயத்தில் நாம் மெய்மறந்திருக்கக் கூடாதென்றே அவ் வுத்ஸவத்தை நிறுத்தினேன்," என்று சாணக்யன் உரைத்தான்.

அது கேட்ட சந்திரகுப்தன், "சரிதான் ஐய! இவ்வளவு அநர்த்தங்கட்கும் காரணனான மலயகேதுவைச் சிறை செய்யவோ, அவனுடன் சமாதானமோ செய்து கொள்ளாமலும், விரோதியான ராக்ஷஸனை அவன் இங்கிருந்தபோதே வெளிச் செல்ல விடாமற் பிடித்துக் கொள்ளாமலும் ஏன் இருந்தீர்கள்! இவை செய்திருந்தால் இவ்வளவு சங்கடங்களும் இருந்திராவே" என்ன, சாணக்யன், "தீர்க்காலோசனை செய்தல்லவா ஒரு காரியத்திற் புக வேண்டும்? மலயகேதுவை அப்பொழுதே சிறைப்படுத்தியிருந்தால் 'பர்வதேசனையும் நாமே கொன்றோம்' என்று வந்தடையாதா? அவனைச் சமாதானப் படுத்திப் பாதி ராஜ்யம் அளித்தால் அவனுக்கு முழு ராஜ்யமும் அளித்ததற்கு மேலன்றோ? இவற்றை உத்தேசித்தே வீணில் அஞ்சி ஓடிய அவனைத் தடுக்காதிருக்க வேண்டி வந்தது. இனி ராக்ஷஸன் விஷயத்தைக் கேள்: அவனோ வெகு காலமாக நந்தர்களிடம் மந்திரி பதவியி லிருந்து வந்தவன். அவன் பிரஜைகளை வசப்படுத்திப் பௌருஷத்துடனும் மகைசுவரியத்துடனும் சர்வாதிகாரத்துடனும் இருந்து வந்திருக்கிறான். ஆகையால் அவன் இவ்விடம் இருப்பின் ஏதேனும் கிருத்திரமம் செய்துகொண்டேயிருப்பான். அவன் ஊருக்கு வெளியே சென்றிருப்பின் நகரத்திலுள்ள ரகஸ்யங்களை அறியமாட்டான். ஆகையால் அவனையும் தடுக்காது விட்டுவிட்டோம்" என்றான்.

ராக்ஷஸனைப்பிடித்தற்குப் போதியவன்மை தங்கட்கில்லை. ஆதலால் உபேக்ஷையுடன் இருந்துவிட்டீர்கள். அதனைச் சொல்லிக்கொள்ள வெட்கமாயிருத்தலால் ஏதேதோ சமாதானம் கூறிப் பார்க்கிறீர்கள்" என்று சந்திரகுப்தன் கூற, சாணக்யன், "உண்மை உரைப்பதில் வெட்கமென்ன? ராக்ஷஸனைப் பலவந்தமாகப் பற்ற முடியாதுதான்: அவனோ அதிதீரன்; ஆப்தர்களும் பந்துக்களுமான சூர பரிவாரமுள்ளவன்; ஆதலால் அவனைப் பிடிக்க முயலும் உன் சேனைகளை அதிவிரைவில் அசகாயசூரனாகிய அவன் தொலைத்தே விடுவான். ஒருவேளை விதிவசத்தால் அவன் எக்கச் சக்கமாக அகப்பட்டுக் கொள்ள நேரின் மானசாலியாகிய அவன் தன் பிராணனையே விட்டு விடுவான். "உற்ற விடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர் பற்றலரைக் கண்டால் பணிவரோ?" ஆகவே, காரிய நிர்வாகியும் சூரசேனாபதியுமான ராக்ஷஸன் உயிரிழந்தாலும், அல்லது நீ உன் சேனைகளை

இழந்தாலும், இரண்டும் உன் அரசாட்சியின் ஆணிவேரையே அசைத்து விடும் பார். இவற்றை எண்ணியே ஏதும் செய்யாதிருந்தோம்." என்றான்.

சந்திரகுப்தன் மேல் ஏதும் பேசத் தெரியாதவனாய், யோசனையி லிருந்தவன்போல் சிறிதுநேரம் மௌனஞ் சாதித்துப் பின்பு சமாளித் துக்கொண்டு, சாணக்யனை நோக்கி "ஸ்வாமி மன்னிக்கவேண்டும். ராக்ஷஸன் ஒருவனே அதிபுத்திசாலி, தீரனும் அவனே. அவன் சாமர்த்தியம் பிறர்க்கு வரமாட்டாது" என, சாணக்யன், ரோஷங்கொண்டவன் போல் எழுந்து, "ஐய! யாது கூறினை? "ராக்ஷஸன் ஒருவனே புத்திசாலி" என்றதால் நாம் முட்டாள் என்று தானே அர்த்தம்? நல்லது. அதி தீரனா கிய அவன் செய்துமுடித்த காரியம்தான் யாது?" என்று கொக்கரித் தான்.

உடனே சந்திரகுப்தன், அதிவிரைவில் எழுந்து, "ஐயா! வெகு ளாதீர். ராக்ஷஸன் இந் நகரிலிருந்தபோது போர்முனையில் நின்றும், மந்திராலோசனைகளாலும் செய்த அதிசாகஸச் செயல்கள் எத்தனை? உங்கள் ஒருவரையேனும் அவன் லட்சியம் செய்தானா? அவன் நந்தர்கள் விஷயமாக நாம் அறியாது செய்துவந்த காரிய நிர்வாகங்களையும் சௌரியத்தையும் நாம் மறக்கமுடியுமோ? ஒருவரது குணத்தைக்கண்டு பொறாமை கொள்ளல் அழகோ? காரிய நிர்வாகிகள் யாவரேயாயினும் அவர் களிடம் எனக்கு மதிப்புண்டு. ஸ்வஜனங்களாயிருந்தாலும் குணமில்லா தாராயின் அவர்களிடம் எனக்கு மதிப்பும் அபிமானமும் இரா. என் சுவபாவம் இது" என்றான். சாணக்யன் நகைத்து, "நல்லது. ராக்ஷ ஸன் நீ சொல்லியபடி செய்தது உண்மையே. ஆயினும் உனது சத்துருக்களான நந்தர்களை வேருடன் களைந்து இவ் விராஜ்யத்தை நான் என்னை நம்பியிருந்த உனக்கு நிலையாக அளித்தேனே. ராக்ஷஸன் உன்னை வென்று தன்னை நம்பிய மலயகேதுவுக்கு இந்த ராஜ்யாதிபத்தி யத்தை ஏற்படுத்தினானா?" என்ன, சந்திரகுப்தன், ஐய, நான் ராஜ்யம் பெற நீங்கள் உதவி செய்தது உண்மையே. ஆயினும் ஏதோ அதிர்ஷ்ட வசத்தால் இந்த ராஜ்யம் எனக்குக் கிடைத்துளதென்பதை மறக்க வேண்டாம். இஃதறியாமல் என்னை மிகவும் அவமதித்து அடிக்கடி பேசுகிறீர்களே! எனக்குக் கிடைக்கப் பிராப்தியிருந்தால் உங்கள் உதவி

யில்லாவிடினும் கிடைத்திருக்கும். இனி 'நான் செய்தேன்' 'என்னுற் கிடைத்தது' என்று வீண்பெருமை பாராட்டி என் பெருமையைக் குறைக்கவேண்டாம்" என்றான்.

சாணக்யன் முன்னிலும் வெகுண்டவன்போல் அபிநயித்து "அரசே! யாது கூறினுய்? "நந்தர்களைக் கொன்றாலன்றி அவிழ்ந்து புரளும் என் சிகையைக் கட்டுவதில்லை" என்று நான் சபதம் செய்ததற்கேற்ப * நவாற்புத தனதிபதிகளான நந்தர்களைச் "சூரன்" என்ன நீ சொல்லும் ராக்ஷஸன்கண்காணச் சங்கரித்து, அவர்கள் குருதியினுல் பூத வேதாள பிசாசங்கட்கு விருந்தளித்தும் என் கோபாக்கினி முற்றும் அணைந்தபா டில்லை. என் கோபத்தை மேலும் கிளப்பாதே. கிளப்பின், விளைவு யாதாகுமோ?" என்று அச்சுறுத்துவோன்போல் கூறச் சந்திரகுப்தன், "ஸ்வாமி! ஆத்திரப்படலாகாது. இப்பெருத்த காரியத்தை நந்தர்களிடம் கோபங்கொண்ட 'விதி' முடித்துவைத்ததேயன்றித் தாங்களா முடித் தீர்கள்? அவ்விதியொன்றிலையேல் ராக்ஷஸன் உயிருடன் இருக்கும் பொழுது அக் காரியம் மற்றவர்களால் முற்றுப்பெறுமோ? என்றான்.

'சாணக்யன், "பேஷ்! பேஷ்!! நன்றாகச் சொன்னுய்! 'தலைவிதி' 'தெய் வம்' என்பன, கையாலாகாத பௌருஷமற்றவர்கள் சொல்லும் வார்த்தை களே. தான் நினைத்தவாறும் கூறியவாறும் முடிக்கவல்லானே ஆண்மை யுள்ளவன். ஊழையும் உப்பக்கம் காண்போர் அவர்களே" என்னச் சந்திரகுப்தன், "ஐய,! கற்றறிவார் கண்ட நடக்கம். உங்களிடம் நான் காண்பது தற்புகழ்ச்சியே. வித்வான்கள் ஆத்மஸ்துதி செய்துகொள்வது இழுக்கன்றோ? விதி வலிது, அதன் முன் எது நிற்கும்? ஓங்கியடித் துரைத்தால் உண்மையென நான் கொண்டுவிடுவேனே?" என்றான்.

சந்திரகுப்தன் பேசி முடிக்குமுன் சாணக்யன் எழுந்து நின்று, "அரசே! அதிகப்பேச்சு வேண்டாம். நீ நம்மை ஒரு வேலையாள் எனக் கருதிக் கண்டபடி வாய்க்குவந்தவாறு பேசத்தொடங்கிவிட்டாய்? நீ பேசப் பேச 'மறுபடியும் சபதம் செய்யவேண்டும்' என நம் மனம் துடித் துக்கொண் டிருக்கிறது. நந்த நாசத்தாற் சற்று அணைந்திருக்கும் என் கோபாக்கினியைத் தெய்வபலமற்ற நீ மீண்டும் கொழுந்துவிட் டெரியச்

---

* அற்புதம் - கோடிக்கும் அதிகப்பட்ட எண்.

செய்கின்றாய் போலும்!" எனக்கூறி, புருவத்தை நெறித்துச் சுளித்துக் கொண்டு, மிக வெகுண்டவன்போல் நடித்து, "இனி உன்னுடன் வீண் வார்த்தையாடுவதிற் பயன் இல்லை. நம்மினும் ராக்ஷஸனே புத்திசாலி என்று நீ அநுபவ சித்தமாக அறிந்திருப்பதால், அவனையே இனி மந்திரியாகக்கொண்டு உன் சகல காரியங்களையும் நடத்தி வருவாயாக. "நீ வேண்டாம்" என்று பகிரங்கமாகக் கூறுதற்குத் தைரியமற்று, என் காது கேட்க, அறுபது நாழிகையும் ராக்ஷஸனைப் புகழ்ந்து வருகிறாய். அதனைக் கேட்டுக்கொண்டிருக்க நான் சம்மதியேன். இனி என் மனம் போல் நான் செய்துகொள்ளுகிறேன்." என்றுரைத்து, மந்திரிபதத்திற் குரிய ஆயுதம் முதலியவற்றைச் சந்திரகுப்தன்முன் வைத்து, 'இதெல்லாம் ஒரு பெருங்காரியத்தின் பொருட்டு' என்பதை அவனுக்குக் கண் ஜாடையால் உணர்த்தி, ராஜசபை விட்டுச் சென்றான்.

செல்லலும், சந்திரகுப்தன், தூதர்களை நோக்கி, "இன்றுமுதல் சாணக்யனை மந்திரிவேலையினின்றும் நாம் நீக்கியிருக்கிறோம். வேறு மந்திரி நியமனமாகும்வரை நாமே நம் ராஜ்ய விசாரணையைச் செய்து வருவோம். ஆதலின் அதிகாரிகளும் பிறரும் இனி ராஜாங்க விஷயமாகச் சாணக்யனைக் கண்டுகொள்ள வேண்டியதில்லை." என்று ராஜ வீதிகள்தோறும் பறையறையுமாறு செய்க என ஆக்ஞாபித்தான். தூதர்கள் அவ்வாறே எங்கும் பறையறைவித்தனர்.

இஃதறிந்த யாவரும் "இன்றுவரை சாணக்யரை "எஜமானர்" எனச் சொல்லிவந்த இவ்வரசன், இப்பொழுது, "சாணக்யன்" என ஏக வசனமாக உரைத்ததைப் பார்த்தால் இவர்களுக்குள் பிரமாத மனஸ்தாபமேற்பட்டு வேரூன்றிவிட்டதாகவே எண்ணவேண்டி வருகிறது. சாணக்யருடைய அதிகாரம் பிடுங்கப்பட்டுவிட்டது என்பதிலும் ஐயமில்லை. இது தெய்வபத்தனம் என்று சொல்லவொண்ணாது. சிக்ஷிக்கப்படாத யானை மாவுத்தனை மீறுமாகில் அது யார்குற்றம்? பாகனுடையதேயன்றி யானையதாகுமா? அரசன் மந்திரியை வெறுப்பது மந்திரியின் மதிக்குறைவாலும் போதிய வன்மையின்மையாலுமே" என்று பேசிக்கொண்டார்கள்.

அப்பொழுது சமீபத்தில் நின்ற ஸ்துதி பாடகர்கள் தம் முயற்சி, பலன் அளித்ததைக் கண்டு முகமலர்ச்சியுடன் நிற்பதை அறிந்த சந்திர

குப்தன், ஏதும் அறியாதவன்போல் அவர்களை நோக்கி, "ஏதோ யோசிக்கிறீர்களே? என்ன விஷயம்?" என்று கேட்க, அவர்கள், "ஸ்வாமி! வேறொன்றுமில்லை, இன்று நிகழ்ந்த சம்பவங்களால் தேவரீர்க்குண்டான ஸ்வதந்தரத்தையே வியந்துகொண் டிருந்தோம்" என்றனர்.

மதியூகியான சந்திரகுப்தன், சபையிலுள்ளவர்களின் முகச்சாயலையும் ஸ்துதிபாடகர்களின் நடவடிக்கைகளையும் நன்கு கவனித்து, தனக்குள்ளே, "என் எஜமானரான சாணக்யர் இன்று என்னை வரம்புமீறிப் பேசச்செய்து கோபித்தெழுந்துசென்றதையும், அவர் சென்றதன் நிமித்தம் இவர்கள் சந்தோஷிப்பதையும் ஆலோசித்தால், மலயகேது நம்மீது தண்டெடுத்து வருமுன்னம் உபாயத்தால் அவனை வென்று ராக்ஷஸனைக் கிரகிப்பதற்காகவே அவர் (சாணக்யர்) இவ்வளவும் செய்திருக்கின்றனர் என்பது தெரிகிறது. நான் அவருடைய அபிப்பிராயத்திற் கிணங்கவே வரம்பு மீறிப் பேசினேனாயினும் என் மனம், அவரைத் தாழ்த்திப்பேசியதன் நிமித்தம் சஞ்சலமே அடைகின்றது. உண்மையில் குருவை நிந்திப்போர்க்கு க்ஷேமலாபம் சிறிது மில்லையாயின், எனது ஆபத்பாந்துவும் குலதெய்வமும் தந்தையும் குருவுமாகவுள்ள சாணக்யரை நான் உதாஸீனமாகப் பேசுதல் தகுமோ? இது நான் தெரியாதவனா? இனி நடக்கவேண்டிய ஒரு பெருங் காரியத்தை உத்தேசித்தே சாணக்யரது விருப்பிற் கிணங்க இவை நிகழ்ந்தன. மனப்பூர்வமாக நான் ஏதும் பேசாவிடினும் ஏதோ பரம அபராதம் இயற்றியதுபோல் ஏனோ என் மனம் வருந்துகின்றது." என்று எண்ணி யாவர்க்கும் விடையளித்துச் சாணக்யர் இருக்கும் திக்கை நோக்கி மனத்தால் நமஸ்கரித்து, அவருடைய திருவடிகளைத் தியானித்துக்கொண்டே தன் அந்தப்புரம் போய் அடைந்தான்.

---

## ஐம்பத்தெட்டாவது அத்தியாயம்.

## பாகுராயணன் மலயகேதுவைப் பேதித்தல்.

சாணக்ய சந்திரகுப்தர் செய்தி இவ்வாறிருக்க; ராக்ஷஸனால் முன்பு அனுப்பப்பட்டிருந்த கூடசாரனாகிய கரபகன், பாடலிபுரத்தில் நிகழ்ந்த (மேலத்தியாயத்திற் கூறியுள்ள) விஷயங்களை அமாத்யனுக்குத்

தெரியப்படுத்துமாறு, பர்வதராஜ்யம் வந்தான். வந்தவன், ராக்ஷஸனது வீட்டுவாயிலில் நின்றுகொண்டிருந்த சேவகனைக்கண்டு, 'கரபகன் என்பவன் வந்திருக்கிறான்' என்று அமாத்யருக்கு அறிவித்திடுக என்றான். சேவகன், "ஐய, கரபக! ராஜகாரிய சம்பந்தமான ஆலோசனை மிகுதியால், நம் எஜமானர் இரவு முழுதும் தூக்கமின்றித் தலைவலி உபத்திரவத்தால் கஷ்டப்பட்டு இப்பொழுதுதான் படுத்திருக்கிறார். சற்று நில். சமயம் அறிந்து வருகிறேன். என்று உள்ளே சென்றான்.

சேவகன் சென்ற சமயம், சகடதாஸனோடு படுக்கையில் உட்கார்ந்திருந்த ராக்ஷஸன், பெருங் கவலையுடன் அக் கணக்கனை நோக்கி, "சகடதாஸ! எந்தக் காரியத்தை நாம் தொடங்கினும் தெய்வம் குறுக்கிட்டு இடையூறே செய்து வருகின்றது. இதுவரை எதிலும் நாம் காரிய சித்தி பெறவில்லையே! சாணக்யன் நம்மை எதிர்த்தே வேலை செய்து வருகிறான். நாம் கருதிக் கடைப்பிடித்த காரியம் என்று நிறைவேறுமோ! 'சாணக்யன் எவ்விதம் நம் கையிற் சிக்குவான்' என்ற கவலையுடனேயே இராப்பொழுது கழிந்து வருகிறது.—என்ன என் இடது தோள் துடிக்கிறது. இது துர்க்குறியன்றோ? இனி யாது சம்பவிக்குமோ தெரியவில்லையே! வருவது வருக. பிடித்ததைச் சாதியாமல் பின்னிடேன்" என்று சொல்லிக்கொண்டே, ஆங்கு வந்த துவாரபாலகனை நோக்கி, "என்ன விசேஷம்?" என்று வினவினான்.

"ஸ்வாமி! பாடலிபுரமிருந்து கரபகன் என்பவன் தங்களைத் தரிசிக்க அபேக்ஷித்துக் காத்து நிற்கிறான்" என்று சேவகன் தெரிவிக்க, "அவனை உடனே வரச் சொல்" என்று உத்தரவிட்டான் ராக்ஷஸன். கூடசாரன் வந்ததும், ராக்ஷஸன் அவனை நோக்கிக் "கரபக! வருக உட்கார்" என்றுரைத்துச் சகடதாஸன் கூறும் மொழிகளுக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டிருந்தான். இது நிற்க.

அமாத்யனிடம் கூடசாரன் வந்திருப்பதைத் தனது ஆள் மூலம் அறிந்த பாகுராயணன், "சரி. நாம் இனி பேசாதிருக்கக் கூடாது" என்று மலயகேதுவிடம் வந்து இச் சமாசாரத்தை வேறொரு விதமாகத் தெரிவித்தான். பாகுராயணன்வார்த்தையைச் செவியுற்ற ராஜகுமாரன் "தாங்கொணாத் தலைவலியுடனிருக்கும் இச் சமயத்தில், பாடலிபுரக் கூடசாரனுடன் அமாத்யனுக் கென்ன பேச்சு? அவன் பேசும் அதிமுக்

கிய விஷயம்தான் இன்னதென்பதை நாம் சென்று மறைந்திருந்து அறிவோம்" என்று தீர்மானித்து, அரைக் கணமும் தாமதியாமல், பாகுராயணனுடன் கால் நடையாகவே புறப்பட்டு, அமாத்யன் கிருகம் வந்தான். அப்பொழுது பத்ரபடன் முதலியோரும் அவர்களது பரிவார ஆட்களும் மலயகேதுவைப் பின் தொடர்ந்து வந்தனர். இதைக் கண்ட மலயகேது, யாவரையும் பார்த்து, "சேனாபதிகாள்! அமாத்யர் தலைவலியால் இப்பொழுது வருந்துவதால், சந்தடியின்றி நானே நேரிற் சென்று சமய மறிந்து வருகிறேன். நீங்கள் இங்கேயே இருங்கள்" என்றான்.

இதுவே தமக்கு அநுகூல சமயமென்று, அவர்கள், பாகுராயணனை நோக்கி, "ஸ்வாமி! நாங்கள் துன்மந்திரியான சாணக்யனுக் குட்பட்டிருக்கும் சந்திரகுப்தன் கீழிருக்க மனமின்றி இங்குவந்து சேகரன் மூலமாகவே தங்களை யடுத்தோ மன்றி ராக்ஷஸரது சிபார்சினால் தங்களை அடையவில்லை. ஆதலின், தங்கள் உத்தரவின்படி நடக்கக் கனவிலும் காத்திருக்கின்றோம்." என்றனர். பிறகு மலயகேது, அமாத்யன் வீட்டு வாயிலை யடைந்ததும், பின்னொடுவந்த கஞ்சுகியை நோக்கி, "புஷ்கர! நாம் அமாத்யரைக் காணத் தனிமையிற் செல்லுகிறோம். நாம் திரும்பி வரும் வரை ஒருவரையும் உள்ளே விடாதே" என உத்தரவிட்டான். இதனால் அவன் வரும் செய்தி ராக்ஷஸன் அறிய முடியாமற் போய் விட்டது.

மலயகேது பாகுராயணன்கையைப்பிடித்துக்கொண்டு உள்ளே சென்றான். அப்பொழுது, பாகுராயணன் அவனுடன் சிறிது நேரம் ஏதோ சம்பாஷித்துப் பிறகு, "ஆம். ராக்ஷஸரைக் கண்டு விஷயம் விசாரிக்கவேண்டியது யுக்தமே. ஆயினும் பாடலிபுரத்திய ரகஸ்யத்தை அவர் தாமாகவே தெரிவித்திடும் பட்சத்தில் அவர் உசிதமானவற்றை மட்டுமே உனக்குத் தெரிவிப்பர் என்று எண்ணுகிறேன். உள்ளதுள்ளபடியே உரைக்க மாட்டார். உனக்கு என்ன தோன்றுகிறது?" என்றான். மலயகேது "இருக்கட்டும். நாம் அவசரப்பட வேண்டுவதில்லை. சமயம்போல் பார்த்துக்கொள்வோம்—இஃதிருக்கட்டும். நாமிங்கு வரும்போது "பத்ரபடன் முதலியோர் ஏதோ கூடமாகக் கூறினரே. அவர்கள் வாக்கியத்தின் கருத்தென்ன?" என்று கேட்டான்,

பாகுராயணன் ஏதோ ஆலோசிப்பவன்போல் அபிநயித்து, மலயகேதுவிற்கு ராக்ஷஸனிடமுள்ள நம்பிக்கையை மாற்றற்குரிய வழிகளை நாடி ஆய்ந்து, "ஐய, ராஜபுத்திர! "சேகரனைக்கொண்டு நாங்கள் தங்களை அண்டினோமேயன்றி ராக்ஷஸன் மூலமன்று" என்றதன் கருத்தாவது, "உலகில் குணவானாகிய பிரபுவை ஆசிரியிக்க வேண்டுமாயின், அவனுக்குப் பிரிய மித்திரரும் ஆப்தருமானவரைக்கொண்டு அநுசரிப்பதே நியாயம் என்பதே" என்றான்.

உடனே அரசகுமாரன், "ஆனால் ராக்ஷஸன் நமது மித்திரன் அல்லனோ?" என்ன, பாகுராயணன், "ஐய! நீ சொல்வது யுக்தமே யாயினும் ராக்ஷஸனுக்குச் சாணக்யனிடம் பகையிருப்பதுபோல் சந்திரகுப்தனிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. சாணக்யன் மகா கர்வியாயும், தன்னைப் பொருட் படுத்தாமலு மிருப்பதால், பிரபுவான சந்திரகுப்தன், ராக்ஷஸன்மீது கண்வைத்து, ஒருசமயம் சாணக்யனை மந்திரி பதத்திலிருந்து நீக்கிவிடக் கூடும். அச்சமயம் நந்த வம்சத் துதித்தவன் என்ற அபிமானத்தாலும், தன் குடும்பம் தற்காலத்தில் பாடலிபுரத்தில் அகப்பட்டிருக்கும் காரணத்தாலும், அமாத்யன், சந்திரகுப்தனிடம் சந்தி பேச ஆரம்பித்தாலும் ஆரம்பிக்கக் கூடும். அவ்விதமே மௌரிய புத்திரனும், பல்லாண்டுகளாக நந்தர்களிடம் மந்திரிபதம் வகித்தவனும்,பிரஜைகளைச் சந்தோஷப்படுத்தும் உத்தமகுணம் வாய்ந்தவனும், ராஜ கார்ய சமர்த்தனும், தீரனுமாகவுள்ள ராக்ஷஸனிடம் சமாதானம் செய்துகொள்ளப் பின்வாங்கான் என்பது திண்ணமே. விஷயம் இவ்வாறிருப்பதால், "பாடலிபுர ஜனங்கள் யாவருமே இப்படித்தான் இருப்பார்கள்" என்று தவறாக நீ நினைக்கக் கூடும் என்றெண்ணி, உன்பால் தங்கட்குள்ள விசுவாசம் தவறக்கூடாதென்ற பயத்தினால், பத்ரபடன் முதலியோர், தம் மெய்த்தொண்டை முன்னுக்கு முன்னாகவே அறிவித்துக் கொண்டனர் போலும். எனக்குத் தோன்றுவது இப்படித்தான்." என்றான்.

மலயகேது சிறிது ஆலோசித்து, "ஆம். எது எப்படியிருந்தாலும் ஜனங்கட்குச் சுதேசாபிமானம் நீங்காதுதான்." என்றுரைத்துப் பாகுராயணனுடன், அடியோசை கேளாவண்ணம் நடந்து, 'ராக்ஷஸன் என்ன பேசுகிறான்' என்று உற்றுக்கேட்க அவனிருந்த அறைக்கு அடுத்த சுவரின் புக்கம் நின்றான்.

ராக்ஷஸன் சகடதாஸனுடன் பேசி முடிந்ததும், வேவுகாரனை நோக்கி, "சார! பாடலிபுர வர்த்தமானங்களில் நமக்கேதேனும் சாதக முண்டோ?" என, கரபகன், "ஸ்வாமி, தங்கள் உத்தரவை நான் குஸுமபுரத்திலிருக்கும் ஸ்துதி பாடகர்கட் கறிவித்தேன். தங்கள் பிரபாவத்தால் தாங்கள் உத்தேசித்த காரியம் கைகூடி விட்டது" என்றான். வெளியிலிருந்த மலயகேது, பாகுராயணனை நோக்கி, "ராக்ஷஸன் உத்தேசித்திருந்த காரியம் யாதாயிருக்கலாம்?" என்று ஐயுற்று வினவ, பாகுராயணன், பதறாமல், "ஐய! ஆக்திரமேன்? முற்றும் கவனிப்போம். உண்மை தானாகவே வெளியாய் விடக் கூடும்." என்றான்.

மறுபடியும் ராக்ஷஸன், "நம் உத்தேசம் இவ்வளவு சீக்கிரத்திற் கைகூடிற்றா?" என, சாரன், "பிரபு! நிதானித்துக் கேட்கவேண்டும். நந்தர்கள் காலஞ் சென்றதால் விசனமடைந்திருக்கும் பிரஜைகளுக்குச் சந்தோஷமுண்டாமாறு கௌமதி மஹோத்ஸவம் நடத்தும்படி சந்திரகுப்தன் கட்டளையிட்டான். சாணக்யன் அதைத் தடுத்துவிட்டான். இஃதறிந்த சந்திரகுப்தன் கோபங்கொண்டு சாணக்யனைச் சபைக்கு வரவழைத்து, 'உத்ஸவத்தை நிறுத்திய காரணம் என்ன?' என்று கோபத்துடன் கேட்டான். அச்சமயத்தில், தேவரீரது உத்தரவுப்படியே ஸ்துதி பாடகர்கள் சந்திரகுப்தனுக்குச் சாணக்யன்மீது கோபம் அதிகரிக்கும்படி "மானிகளான அரசர்கள் தங்கள் ஆக்ஞை பங்கப்படுமாகில் அதனைப் பொறார்கள்" என்னும் பொருள்படக் கத்திய பத்தியங்களால் சந்திரகுப்தனைப் புகழ்ந்தனர்" என்றான்.

கரபகன்கூறிய வார்த்தையை ராக்ஷஸன் கேட்டு மகிழ்ந்து, "பிறகு என்ன நடந்தது? சாதாரண மனிதனும் தனது உத்தரவு தடை படுவதைக் காணச் சகியான். இது சகஜம். ஒரு பிரபு இதைச் சகிப்பனா?" என்ன, கரபகன், "ஸ்வாமி! பின்னும் கேளுங்கள்: சந்திரகுப்தன், சாணக்யனை நோக்கி, "ராக்ஷஸனைக் காட்டிலும் உனக்குப் புத்தி யுக்தி சாகஸங்களுண்டோ?" என்று கூறித் தங்களை மிகவும் சிலாகித்துச் சாணக்யனை அவமதித்துவிட்டான். அவமதிப்புப் பொறாத சாணக்யன் "வீண் வார்த்தையேன்? நாம் மந்திரியா யிருப்பதில் உனக் கிஷ்டமில்லையாயின் நாமே விலகிக் கொள்கிறோம்." என்று கூறித் தன் பதவிக் குரிய பிரதான ஆயுதமாதியவற்றைத் தக்ஷணமே கீழே வைத்து விட்டு அதி கோபத்துடன் சபையை விட்டு எழுந்து சென்றான்" என்றான்.

இதனைக் கவனித்துக் கேட்டு நின்ற மலயகேது, பாகுராயணனை நோக்கி, "ஐய, பாகுராயண! நீ கூறியதுண்மையேயாயிற்று. சாரன் கூறியதைக் கவனித்துக் கேட்டாயா? சந்திரகுப்தன் ராக்ஷஸனைப் புகழ்ந்து பேசியதால் அவர்க ளிருவர்க்கு முள்ள பரஸ்பர மெய் யபிமானம் நன்கு தெரிகிறது. நீ என்ன நினைக்கிறாய்?" என, பாகுராயணன், "அரசிளங்குமர! ராக்ஷஸனைச் சிலாகித்ததுடன் சந்திரகுப்தன் நிற்க வில்லையே! சாணக்யனை மந்திரி பதவியி லிருந்தன்றோ நீக்கியும் இருக்கிறான். இதனால் அவனுக்கு ராக்ஷஸன்மீதுள்ள பிரியம் இவ்வள வென்பது விளங்க வில்லையா?" என்றான். பிறகு அவர்கள் இருவரும் பின்னும் நிகழ்ந்த சம்பாஷணைகளைக் கவனித்துக் கேட்கலாயினர். ராக்ஷஸன், கரபகனைப் பார்த்து "சார! சந்திரகுப்தன் சாணக்யன் மீது இவ்வளவு கடுங்கோபங் கொண்டு அவனை அதிகாரத்தி னின்றும் நீக்கியதற்குக் கௌமதி மஹோத்ஸவ நிறுத்தம் மட்டும் காரணமோ? வேறு காரணமும் உண்டோ?" என, அவன், "ஸ்வாமி! பிற காரணங்களும் உண்டு. அவை தங்களைப் பாடலிபுரத்திலேயே இருக்கும்படி அவன் தடுக்காததும் மலயகேதுவை அப்பொழுதே சிறை செய்யாமையுமே." என்றான்.

இதனைக் கேட்ட ராக்ஷஸன் சகடதாஸனை நோக்கி, "ஏனையா, 'இனி சந்திரகுப்தன் என் கைவசப் பட்டு விட்டான்' என்பதில் தடை என்ன? சந்தனதாஸனையும் இனி அரைக் கணத்திற் சிறையி னின்றும் விடுவித்து விடுவேன். நீயும் சமீபத்தில் உனது பெண்டு பிள்ளைகளைக் காணலாம்" என, வெளியில் நின்ற மலயகேது, "ஐய, பாகுராயண! 'சந்திரகுப்தன் என் கைவசப் பட்டான்' என்று ராக்ஷஸன் இப்பொழுது கூறியதன் கருத்து யாதாக இருக்கலாம்?" என்று கேட்டான்.

"ராஜகுமார! சாணக்யனைச் சந்திரகுப்தன் நிராகரித்து விட்டிருப்பதால், தான், இனி, சாணக்யனைப் போல் இருந்து கொண்டிருக்கலா மென்பதும், அங்ஙனம் இருந்து கொண்டிருந்தால், தனது சாமர்த்திய விசேஷத்தினால் மௌரியபுத்திரன் தன் வசப்படக் கூடுமென்பதும் ராக்ஷஸனது கருத்தா யிருக்கலாம்" என்று பாகுராயணன் கூறினான். இதற்குள் உள்ளே ராக்ஷஸன், "கரபக! இப்பொழுது சாணக்யன் பாடலி புரத்தி லிருக்கிறானா? அல்லது சந்திரகுப்தன்மீதுள்ள கோபத்தால் சபதங்கள் கூறிச் சென்று விட்டானா?" என, அவன், "ஸ்வாமி!

'சாணக்யன் தபோவனம் 'செல்ல இருக்கிறான்' என்றே சொல்லிக் கொள்ளுகிறார்கள்" என்றான். ராக்ஷஸன், "சகடதால! நந்தர்கள் செய்த அபராதம் சகியாது தான் செய்த கடுஞ் சபதத்தை நிறைவேற்றிக் கொண்ட சாணக்யன், இப்பொழுது தானே அரசனுக்கிய சந்திரகுப்தனால் ஏற்பட்ட அவமதிப்பைச் சகித்தும், சபதம் ஏதும் செய்யாமலும், கையால் ஆகாதவன் போல், வனத்திற்குச் செல்ல இருக்கிறான் என்பது பொருத்தமாக இருக்கவில்லையே" என்ன, சகடதாலன், "ஸ்வாமி! சாணக்யன் உண்மையாகவே தபோவனம் செல்லக்கூடும். ஏனெனில், அநேக ராஜர்களால் சூழப்பட்ட சந்திரகுப்தன், சாணக்யனால் தனது ஆக்ஞை பங்கம் அடைந்ததாலும், தங்களுடைய சக்தி சாமர்த்தியங்களை நன்றாய் அறிந்தவனான படியாலும், சாணக்யனை மந்திரி பதவியிலிருந்து நீக்கியே இருப்பான். சாணக்யனும் முன்பின் அறியாத நந்தர்களிடம் கோபங்கொண்டு கொடிய சபதமிட்டுத் தெய்வ சகாயத்தினால் அதனை நிறைவேற்றிவிட்டானாயினும், பழக்கமுள்ள சந்திரகுப்தன் விஷயத்தில் கொடிய சபதம் செய்யத் துணியான். அவனிடமும் சபதம் செய்யின், தனக்கேற்பட்ட கீர்த்தி முழுதும் வீணாய் விடும். ஆகையால், "தேற்றா ஒழுக்கம் ஒருவன் கண் உண்டாயின் தூற்றாதே தூர விடல்" என்பதைக் கடைப் பிடித்து, "இனி உன் சகவாசம் வேண்டாம். போதும் போதும்" என்று சந்திரகுப்தனை வெறுத்துத் தபோவனம் செல்வான் என்பதில் தடையே இல்லை." என்றான்.

வெளியிலிருந்த மலயகேது, இதன் கருத்தென்னை?" என்று பாகுராயணனைக்கேட்க, அவன், "ஐய! சாணக்யன், அபகீர்த்தியை யோசித்து, சந்திரகுப்தன் செய்ந்நன்றி மறந்தவனாய்த் தன்னை அவமதித்ததையும் சகித்து, "இனி மௌர்ய புத்திரன் முகத்தில் விழிப்பதில்லை" என்று சபதம் செய்து தபோவனம் போவான். சாணக்யனது சம்பந்தம் சந்திரகுப்தனுக்கு எவ்வளவுக் கெவ்வளவு குறைகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு தன்து உத்தேசம் பலிக்கும் என்பதே ராக்ஷஸனுடைய அபிப்பிராயமாகும்" என்றான்.

மறுபடி ராக்ஷஸன் "சாணக்யன் தபோவனம் செல்ல இருக்கிறான் என்பது பிரசித்தமாக இருக்கிறதோ? என, கரபகன் ஆம். மிக்க பிரசித்தம்" என்றே பதில் அளித்தான். அதனைக்கேட்ட ராக்ஷஸன், "ஆம். உலகில் உத்தம புருஷன் தனக்கிருக்கும் கீர்த்தியைக் கவனிப்பானல்

லாது காமக்குரோதாதிகளுக்கு இடந்தரான். மற்றும் பிரபுவாயுள்ளவன் காரியவாதிகளை முன்னிட்டுக்கொண்டால்தான் அவனது காரியங்கள் இடையூறின்றி நிலைக்கக் கூடியதாக இருக்கும்" என்று உரைத்து, "சரி. இனி நீ வெளியேசென்று சிரமபரிகாரம் செய்துகொள்க" என்று கரபகனை அனுப்பினான்.

---

## ஐம்பத்தோன்பதாவது அத்தியாயம்.

## போர்க்கெழ முயற்சி செய்தல்.

கரபகன் வெளிச்சென்றதும், மலயகேது, தான் இருந்த இடம் விட்டு நகர்ந்து அமாத்யன் இருந்த அறைநோக்கிச் செல்லலானான். அப்பொழுது கூடவந்த பாகுராயணன், "ஐய, ராக்ஷஸனும் சகடதாஸனும் பேசிக்கொண்டதிலிருந்து ராக்ஷஸனுக்குச் சந்திரகுப்தனிடம் மெய்ப்பிமான முண்டாய் இருப்பதாகத் தெரியவருகிறது. இதில் ஏதேனும் ஐயமுளதோ? என்று கேட்டான். அதற்கு மலயகேது, "இனி நான் ராக்ஷஸனுடைய குணத்தை ஐயந்திரிபறப் பரிசோதித்தே ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். அதற்குமுன் ஒன்றுஞ் சொல்வதற்கில்லை" என்று தனக்குள் நிச்சயித்துகொண்டு, ஒன்றுமே பதில் அளியாமல் ராக்ஷஸனிருந்த இடம்போய்ச் சேர்ந்தான்.

ராக்ஷஸன் மலயகேதுவைக் கண்டதும் எழுந்துவந்து, அவன் கையைப் பிடித்து அழைத்துச்சென்று தன் படுக்கையில் உட்காரவைத்தான். பிறகு, தான் உட்கார்ந்துகொண்டு, பாகுராயணனையும் உட்காரச் சொல்லி, மலயகேதுவை நோக்கி, "ஐய, குமரனே! நித்திய தரித்திரன் வீட்டிற்குப் பாக்ய லக்ஷ்மி வந்ததுபோல் நீ வந்துளாய். அதனால் எனது கிருகம் மங்களகரமாயிற்று. என்ன விசேஷம்?" என, மலயகேது, "ஸ்வாமி அமாத்யரே? தாங்கள் தலைவலியால் உபத்திரவப்படுவதறிந்து தங்களைப் பார்த்துப் போகவே வந்தேன்" என்றான்.

ராக்ஷஸன், "குமார! 'ராஜாதிராஜன்' என்ற பெயர் உனக்குண்டாகும் வரை என் தலைவலி உபத்திரவம் எப்படித் தணியும்?" என, மலயகேது, அமாத்யரே! தாங்கள் என்னை அபிமானித் திருக்கும்போது,

இவ்விஷயம் ஈடேறுவதிற் றடையுண்டோ? இப்பொழுது இங்கு அள வற்ற சேனைகளை நிறுத்திக்கொண்டு சத்துருவிற்கு ஆகாத காலத்தை எவ்வளவு நாள் எதிர்பார்த்துக் காலதாமதம் செய்வது?" என்றான்.

அமாத்யன், "ராஜகுமார! இப்பொழுதே விஜயப் பிரயாணம் செய்யத்தக்க நற்சமயம் வாய்த்துளது: சத்துருவான சந்திரகுப்தனுக்கு மிக்க சஞ்சலமேற்பட்டுள்ளது." என, மலயகேது, அவனது கஷ்டம் எப்படிப்பட்டது?" என்று கேட்டான். ராக்ஷஸன், "சந்திரகுப்தனுக்கு இப்பொழுது சம்பவித்திருப்பது மந்திரியில்லாக் கஷ்டமே" என்றான்.

"மந்திரி சம்பந்தமான விசனம் பிரபுவாயுள்ள எவனுக்கும் ஒரு பெரிய காரியமாகமாட்டாது" என்று மலயகேது பலமாக ஆக்ஷேபிக்க, ராக்ஷஸன், "மற்ற அரசர்கள் விஷயத்தில் எவ்விதம் இருந்தாலும் சந் திரகுப்தன் விஷயமாக அங்ஙனம் கூறுவதும் கருதுவதும் பெருந் தவறேயாம்." என்றான்.

"அமாத்யரே! சந்திரகுப்தன் சாணக்யனிடம் சர்வாதிகாரத்தை யும் கொடுத்துவிட்டு 'அவனே தஞ்சம்' என்று இருந்ததால், பிரஜை களுக்கு இதுவரை அவனிடம் விசுவாசமில்லாதிருந்தது. அச் சாணக் யன் சந்திரகுப்தனைவிட்டுச் சென்றபின், பிரஜைகளுக்கு அவனிடம் இப்பொழுது அபிமானமுண்டாகி யிருக்கலாம்" என்று மலயகேது கூற, ராக்ஷஸன், "குமார! பிரஜைகள் இரு வகையினராவர்: சந்திர குப்தனுடைய க்ஷேமத்தை விரும்புவோர் சிலர். நந்தர்களிடம் பற் றுடையோர் சிலர். சந்திரகுப்தனிடம் அபிமான முள்ளவர்களுக்குச் சாணக்யனைக்கண்டு மனம் வெறுத்து, அதனால் சந்திரகுப்தனை உபேக்ஷை செய்ய ஏது உண்டாயிற்று. நந்தர்களிடம் அநுராகம் உள்ள வர்களுக்குச் சந்திரகுப்தனிடம் த்வேஷமே என்பது திண்ணம். இவ் விரு வகையினரும் வேறு கதியின்றிச் சந்திரகுப்தனை அனுசரித்துக் கொண்டிருப்பவர்கள் போல் இருந்து தமக்குத் தக்க அநுகூல சமயம் எதிர் பார்த்துக் கொண்டிருப்பர். அச் சமயம் வாய்த்துவிடின், சத் துருக்களை ஜயிப்பதிற் சமர்த்தனும், பிரஜா ரக்ஷகனும் ஆன உன் னையே அவர்கள் அண்டிச் சந்திரகுப்தனை வெறுத்து உனக்கே சாதகம் புரிவர். இதற்கு நானே சாக்ஷி. அதிகம் ஏன்?" என்றான்.

மலயகேது, "அமாத்யரே! சந்திரகுப்தன் ஸ்வயமாக ஆட்சி செய்ய வல்லவன் அன்றோ?" என, ராக்ஷஸன், "ஐய, அதற்கு வேண்டிய சாமர்த்தியம் அவனுக் கில்லை. ஏனெனில், தனது தோள்வலியால் ராஜ்யம் சம்பாதித்தவனுக்கே அதனை நிர்வகிக்கவும் சக்தியிருக்கும். இப்பொழுது சந்திரகுப்தனுக்குச்சாணக்யனுடையபுத்திசகாயமில்லாமல் ராச்சியத்தை நிர்வகிக்கும் சக்தி இல்லை. மந்திரி பலமில்லா அரசன், தாய்ப்பாலில்லாக் குழந்தையே ஆவன், அவனுக்குச் சாமர்த்தியசாலியான மந்திரியின்றி ராஜ்ய தந்திரத்தை நிர்வகிப்பது சிரமமாகவே இருக்கும்." என்றான்.

"ஸ்வாமி! இப்பொழுது சத்துருமீது நாம் தண்டெடுத்துச் செல்லலாமாயினும், ஒன்று நாம் யோசிக்க வேண்டியதுளதன்றோ? சத்துரு ஜயத்திற்குக் காரணம் பலவுளவே. அவனுடைய 'விசனகாலம்' ஒன்றைமட்டும் எதிர்பார்த்து நாம் யுத்தத்திற்குச் சென்றால் நமது காரியம் பலித்துவிடும் என்பது என்ன நிச்சயம். அஃதொன்றே ஜயத்திற்கு வழியாமோ?" என்று ராஜகுமாரன் கேட்க, ராக்ஷஸன், "நீ கேட்பது சரியான கேள்வியே. நான் கூறும் பிற காரணங்களைக் கவனமாகக் கேள்: முதலாவது, நீ சூர சைனியத்துடன் இருப்பவன்; இரண்டாவது, இப்பொழுது சாமர்த்தியமும் சாகஸமும் மிக்க மதிவல்லோனான சாணக்யன் தனது சர்வாதிகாரத்தையும் இழந்து சந்திரகுப்தனினின்றும் நீங்கிச் சென்றுவிட்டான்; மூன்றாவது, மௌர்யபுத்திரன் நூதனப் பிரபுவாயும், மதியூகியான மந்திரியற்றும் இருக்கின்றான்; நான்காவது, உனக்குத் தக்க சமயங்களில் உபாயங்கள் கூறிக்கொண்டு சகலகாரியத்தையும் நடத்த நான் உன்னைச் சேர்ந்திருக்கிறேன். இவை போதாவோ? ஆதலால் உனதெண்ணப்படி காரியசித்தியாகும் என்பதில் இனியும் ஐயமுண்டோ?" என்றான்.

இவற்றைக்கேட்ட மலயகேது, "அங்ஙனமாயின் தாங்களே நம் சேனாதிபதிகட் குத்தரவிட்டுச் சேனைகளைக் கௌட தேசத்தருகிலிருக்கும் சோணா நதிக்கரை சென்று இறங்கும்படி அனுப்புங்கள்." என்று கூறி அவன் செய்த மரியாதையைப் பெற்றுக்கொண்டு பாகுராயணனுடன் தனது அரமனை வந்து சேர்ந்தான்.

---

## அறுபதாவது அத்தியாயம்.

# ஜீவஸித்தியின் சேஷ்டை.

ராக்ஷஸன் உத்தரவுப்படி தேசாதிபதிகளும் அவர்கள் சைனியங்களும் பெருங்கூட்டம் கூடிப் பாடலிபுரத்தை முற்றுகையிடச் செல்லும் நிமித்தம் புறப்பட்டு, அகநாசினி தீரம் வரை வியாபித்துப் பூப் பிரதேசம் தென்படாமல் இறங்கிக்கொண் டிருந்தனர். அச் சைனியங்கள் நடத்தலால் உண்டான புழுதி ஆகாயம் முழுதும் மூடிற்று. அதனால் திக்குத் திசை யின்னதென்று தெரியாமல் இருந்தது. இதனைக் கண்ட கௌடதேசப் பிரஜைகள் முன்போல ஆதங்கப்பட்டு ஊரைவிட்டோட ஆயத்தமாக இருந்தனர்.

இவைகள் யாவையும் அறிந்தவனும் பாடலிபுரத்திலிருந்து துரத்தப்பட்டவனுமான க்ஷபணகன், இதுதான் சமயமென்று சாஹாரி நகரத்தில் ரக்ஷஸன் வீட்டு வாயிலிற்போய் நின்றான். அச் சமயம் ராக்ஷஸன், மலயகேதுவின் சைனியம் பாடலிபுரத்திற்குப் புறப்படும் நிமித்தம், நல்ல லக்நம் நிச்சயிக்கும் பொருட்டு தூதன் ஒருவனை நோக்கி, "சோதிடம் தெரிந்த தக்கோர் எவரேனும் தென்படுவராயின், அவர்களை அதி விரைவில் அழைத்து வா" என, அவன் சென்று திரும்பி, "மகா ஸ்வாமி! க்ஷபணக னொருவன் நம் வாயிலிலேயே நிற்கிறான்." என்றான் ராக்ஷஸன், "க்ஷபணகனா? முதல் முதல் க்ஷபணகனைத் தரிசித்தலினும் அபசகுனம் வேறொன்றில்லை.—ஆயினும் பாதகமில்லை. அழைத்து வா" என்று உத்தரவிட்டுச் சின்னாழிகைக் கெல்லாம் வந்த க்ஷபணகனை நோக்க, அவன், "தர்மசீலர்களுக்கு ஜயமுண்டாகுக." என்று சொல்லி நின்றான்.

அமாத்யன் "ஐய, க்ஷபணக! வந்தாயா? உட்கார். மீதி விஷயம் எதுவிருந்தாலும் பிறகு ஆகட்டும். இப்போது விஜய யாத்திரைக்கு ஒரு நன்முகூர்த்தம் நிச்சயப்படுத்து" என்ன, அவன், "ஐய, இன்று மத்தியானத்திற்கு மேல் நல்ல திதியும் பௌர்ணமியும் வருகிறது. உத்தர திக்கிலிருந்து தக்ஷிண திக்கிற்குச் செல்ல விரும்பியிருக்கும் உனக்கு நக்ஷத்திரம் வாமபாகப் படுவதால் இன்றே நன்னாளாகும். நான் குறித்த சமயத்திற் செல்லலாம்" என்றான்.

"ஐய! முன்பு விஜய யாத்திரைக்கு லக்கினம் உரைத்ததுபோல் இப்போதும் சொல்லாதே. தக்க ஜோதிடர்களையும் கலந்து நிர்ணயம் செய்து கூறுக." என்று ராக்ஷஸன் கூற, ஜீவஸித்தி, "நீயே சென்று எந்தச் சோதிடரையேனும் கேட்டுத் தெரிந்துகொள்." நான் போகிறேன்" என்று கோபித் தெழுந்தான்.

"சந்யாஸிக்கு இவ்வளவு கோபம் வரலாமோ?" என்று ராக்ஷஸன் கேட்க, "எனக்கு உன்மேல் கோபம் எதன் பொருட்டு?" என்று விடையளித்தான் ஜீவஸித்தி. "அங்ஙனமாயின் யார்க்கு என்மேல் கோபம்?" என்று ராக்ஷஸன் வினவ, அவன், "அமாத்ய! ஆசிரியிக்கவேண்டியவர்களை விட்டு, அந்நியரை அபேட்சித்துத் தெய்வபலவீனனாக இருக்கும் உன்மேல் தெய்வமே ஆக்ரகம் கொண்டுள்ளது" என்று கூறி, அக்கணமே அங்கிருந்து புறப்பட்டு வெளியிற் சென்றான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸித்தார்த்தகன் தனக்குள், "இனி நாம் தாமதிப்போமாகில் முன்னையினும் பன்மடங்கு கூடியுள்ள மலயகேதுவின் சைனியத்தினது காலடிகளாலேயே கௌட தேச மெல்லாம் நிலைகுலைந்து விடும். ராஜ காரியமும் கடுமையாக ஏற்பட்டு விடும்." என்றுணர்ந்து, ரகஸ்யத்தில் பாகுராயணனைக் கண்டு பேசி, அங்கிருந்து பாகுராயணன் சொன்ன விஷயங்களைப் பத்ரபடன் முதலியோர்க்குத் தனிமையில் அறிவித்துவிட்டுத் திரும்பவும் ராக்ஷஸன் வீடு வந்து, சகடதாஸனைக் கண்டு "ஐய, மித்திர! எனக்குப் பெண் கொடுத்த மாமனூர் கிராமம் இவ்விடத்திற்குச் சமீபத்திலுள்ளது. நான் அயல் தேசம் வந்ததும், என் மனைவி தனித்திருக்க அஞ்சித் தன் தாய் வீடு வந்திருக்கிறாளாம். நான் அவளைக்கண்டு அமாத்யரது பிரீதிக்குப் பாத்திரனாயிருப்பதை அவளுக்கு அறிவித்து, எனக்கு நம் எஜமானர் சந்தோஷத்தால் அளித்த ஆபரணங்களை அவளிடம் கொடுத்து, அவளுடைய விசனத்தை நீக்கிச் சந்தோஷப் படுத்திப் பின் திரும்பி வருவேன்" என்றான்.

"அது கேட்ட சகடதாஸன், "அவ்விதமே செய்க" என்று ஆபரணப் பெட்டியை எடுத்துக் கொடுத்தான். ஸித்தார்த்தகன் அதைப் பெற்றுக் கொண்டு, சாணக்யன் கூறியிருந்த விஷயங்களை நினைத்துத் தன்னிட மிருக்கும் கடிதத்துடன் வந்துகொண் டிருந்தான்.

இவன் முந்தியே சொல்லிவைத்தபடி, யுத்தசமயமாகையால் பாகுராயணன், 'சுங்கச் சாவடியில் யாராக இருந்தாலும் 'அநுமதிச் சீட்டு'ப் பெற்றே ஊர் நீங்கி வெளிச் செல்லவேண்டும்' என்று ஏற்பாடு செய்து, நகரின் தலைவாயிலில் தானே அதிகாரியாக உட்கார்ந்திருந்தான். அங்கு, அப்பொழுது அவ்வழி வந்து கொண்டிருந்த ஸித்தார்த்தகன், ஜீவஸித்தி தன்னெதிரில் வருவதைக் கண்டு, "பௌத்த சந்யாஸி எதிரிடல் பிறர் எவர்க்கும் அபசகுனம். ஆயினும் இந்த வேஷதாரியான க்ஷபணகனைக்கண்ட எனக்கு நற்சகுனமே ஆகும். இவனை 'விசேஷ மேதேனும் உண்டோ?' என்று விசாரிப்போம்" என்று அவனை நோக்கி "ஸ்வாமி, க்ஷபணகரே! நமஸ்காரம். தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? பிரயாணம் எவ்விடத்திற்கு?" என்றான். அவன் அதற்கு விடையேதுங் கூறாமல், "ஸித்தார்த்தக! நீ எஜமானரின் வார்த்தையை அநுசரித்துப் புறப்பட்டு விட்டாய் என எண்ணுகிறேன்" என, அவன், "க்ஷபணகரே! உள்ளதை உள்ளபடி நீர் ஜோதிடர் ஆதலின் அறிந்து கொண்டு விட்டீர் போலும்!" என்று கூறிச் சிரித்தான். க்ஷபணகனும் 'கடகட' வென்று சிரித்துக்கொண்டே, "உன்னிடமுள்ளது உன் பிரயாணத்தைத் தெரிவிக்கின்றது" என்றான்.

"க்ஷபணகரே! நான் வேறொரு தேசத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. பிரயாணத்திற்கு நாள் இன்று சரியாயிருக்கிறதா? பாரும்." என, க்ஷபணகன், "பேஷ்! பிரயாணம் புறப்பட்டபின்தான் லக்கினம் கேட்கிறதோ?" என்றான்.

ஸித்தார்த்தகன், "அஃதிருக்கட்டும். தாங்கள் எங்குச் செல்லுகிறீர்கள்? ஏதேனும் விசேஷமுண்டோ?" என்று விசாரிக்க, க்ஷபணகன், "ஸித்தார்த்தக! நேற்றுமுதல் "பாடலிபுர மார்க்கம் செல்பவர்கள் யாவரேயாயினும் அவர்கள், ஊருக்கு வெளியிலுள்ள சுங்கச் சாவடியில் சீட்டுப் பெற்றுக்கொண்டுதான் போகவேண்டு' மென்று இவ்வூர் அரசன் உத்தரவிட் டிருக்கிறானும். காவலாளர்கள் இமையும் கொட்டாது அங்கு நிறைந்திருக்கிறார்களாம். இராவேளையிற் சீட்டுப் பெற்றுச் செல்வதும் சிரம சாத்தியமா யிருக்கிறது. உனக்கு ராஜகுமாரன் முன் குற்றவாளியாக நிற்க ஆசையும் வேளையும் இருப்பின்; இராக்காலத்திற் சீட்டுப் பெறாது செல்க. ஆனல் நீ ராக்ஷஸனுடைய அரிகாரனாகையால் உன்னை

ஒருவரும் தடுக்காமல் விட்டுவிடவும் கூடும். உன் காரியம் ஈடேறும் சமயம் இப்பொழுது வாய்த்திருப்பதால், சீக்கிரம் சென்று, இரவை எதிர்பார்த்திரு. நான் இப்பொழுதே சீட்டைப் பெற்றுச் செல்லும்படி பாகுராயணனிடம் போகின்றேன்." என்று சொல்லிவிட்டுச் சுங்கச்சாவடி நோக்கிச் செல்லலானான்.

இச்சமயம், பாகுராயணன், தனக்குள், "ஆ! ஆ!! எஜமானரான சாணக்யருடைய சாகஸமானது நீதியை அநுசரித்து, அருஉருவா யும் அகாதமாயும் இருந்துகொண்டிருக்கிறது. மலயகேதுவின் சைனி யங்களோ, ராக்ஷஸனுத்தரவின்படி பாடலிபுரத்தை முற்றுகையிடப் பிரயத்தனப் பட்டுக்கொண்டிருக்கிறது. இச்சமயம் அநேக விசேஷங் கள் ஏற்படுவது திண்ணமாகையாலும், ராக்ஷஸனைப் போல் என்னையும் மலயகேது சந்தேகிக்கக்கூடும் ஆகையாலும், நான் மலயகேதுவிடமே இருந்துகொண்டிருப்பது அவசியமாக இருக்கிறது. ராஜபுத்திரன் எனக்குப் பரம மித்திரனும் என்னை நம்பியும் இருப்பது உண்மை யாயினும் பணத்திற் காசைப்பட்டுச் சரீரத்தை விற்பவன் போல், சாணக் யருடைய வாக்கிய கௌரவத்தால் இவனை வஞ்சிக்கவே கங்கணம் கட்டிக் கொண்டு விட்டேன். பராதீனனாக குலம், மானம், கீர்த்தி இவற்றிற் கண்வைக்காம லிருந்துவரும் எனக்கு ஸ்வாமி காரியமே பெரிது. 'இது யுக்தம்' 'இது அயுக்தம்' என்று நான் விசாரிப்பதிற் பயனென்ன?" என்று யோசித்துக் கொண்டே, ஒரு தூதனை நோக்கி, "சீட்டுப் பெறும் படி யாரேனும் வந்தால், அவர்களை என்னிடம் அழைத்துவா" என்று கட்டளை யிட்டான்.

அத்தூதன் சின்னாழிகைக் கெல்லாம் வாயிலில் வந்து காத்து நின்ற க்ஷபணகனை உள்ளே அழைத்துச் செல்ல, ஜீவஸித்தி, "தர்மிஷ்டர்களுக்குத் தர்ம விருத்தி உண்டாகுக" என்றுரைத்துக் கீழே உட்கார்ந்தான். அவனைப் பாகுராயணன் நோக்கி "சரி; இவன் ராக்ஷஸனுக்கு மித்திரனாக நடிப்பவன்" என்றறிந்து, "வாருங்கள் ஜீவ ஸித்திகளே! க்ஷேமமா?" என்று விசாரித்தான்.

இச்சமயம் மலயகேது, தனக்குள், "இப்பொழுது நமது சைனி யங்கள் சென்று பாடலிபுரத்தை முற்றுகையிட்டுத் தகர்க்க ஆரம்பித்து விட்டால், அப்பொழுது, பாகுராயணன் முன் ஊகித்துக் கூறியபடி,

ராக்ஷஸன், தன்பெண்டுபிள்ளைகள் குஸுமபுரத்தில் அகப்பட்டிருப்பதாலோ, சந்திரகுப்தன் நந்த வம்சத்து தித்தவன் என்ற வாஞ்சையினாலோ, தான் அவனிடம் மந்திரியாக அமரவேண்டும் என்ற ஆசையினாலோ, சந்திரகுப்தனிடம் சந்திபேசுவானோ? அல்லது, சொன்ன சொல் தவறக் கூடாதென்று என் காரியத்தையே சாதித்துத் தருவானோ! நிச்சயம் இன்னதெனத் தெரியவில்லையே! ஆதலின் இவ்விஷயத்தை நமது மித்திரனை பாகுராயணனுடன் நீரக்கலந்து ஆலோசித்து ஒருமுடிவுக்கு வருவோம்" என்றெண்ணி, தன்னருகிலிருந்த கஞ்சுகியைநோக்கி, "பாகுராயணர் எங்கிருக்கிறார்?" என, அவன் சென்று பார்த்துவந்து "மகாஸ்வாமி பாகுராயணர் சீட்டுப்பெற வந்திருக்கும் ஒரு பௌத்த சந்யாஸியுடன் ஏதோ பேசிக்கொண்டு சுங்கச் சாவடியில் உட்கார்ந்திருக்கிறார்" என்றான்.

அதுகேட்ட ராஜகுமாரன், "பாகுராயணனுடன் பேசிக்கொண்டிருக்கும் க்ஷபணகன், பாடலிபுரவாசியாகிய ராக்ஷஸ மித்திரனுகவே இருக்கலாம். அவர்களிருவர்க்குமுள்ள ரகஸ்ய விஷயம் ஏதேனும் முக்கியமானதாக இருப்பின் அதனை இன்னதென அறிவோம்" என எண்ணிச் சாவடியை நோக்கி வரலானான். அப்பொழுது கூண்டிலிருந்த கிளியானது, அரசகுமாரன் தூரத்தில் வருவதைக் கண்டதும், "பராக்! இளவரசே பராக்! சிற்றரசே பராக்!" என்று கூவிற்று.

சின்னாழிகைக்கு முன் கஞ்சுகி வந்து வாய்திறவா தெட்டிப் பார்த்துவிட்டுச் சென்றதையும், கிளி கூவியதையும் கவனித்த பாகுராயணன் "மலயகேது இங்கு ஏதோ காரணமாக வந்துகொண்டிருக்கிறான். இச்சமயம் நான் இக்ஷபணகனுடன் வாது செய்து, அவனுக்குக் கோபத்தை யுண்டாக்கி அவன் வாய்மொழியாலும் ராக்ஷஸனிடம் மலயகேதுவுக்கு அவநம்பிக்கையும் கோபமும் உண்டாகும்படி செய்ய வேண்டும்" என்று தீர்மானித்து, ஒன்றும் அறியாதவன்போல், "ஐய, க்ஷபணகரே! நீர் ராக்ஷஸரது பரம மித்திரர் அன்றோ? இப்பொழுது எங்குச் செல்லுமாறு வந்தீர்? பாடலிபுரம் செல்வோர்க்கு மட்டும் சீட்டு அவசியமன்றி வேற்றிடம் செல்ல அது வேண்டியதில்லை." என்றான்.

இதற்குள் மலயகேது, அடியோசை கேளாது மெல்லவந்து, வேடிக்கைக்குக் கண்ணைப்பொத்த வருபவன்போல் சந்தடியின்றிப் பாகு

ராயணன் பின்பக்கத்தில் திரைமறைவில் நின்றான். க்ஷபணகன் அவனை, இன்னானென அறியாதான்போன்றும், கவனியாதான்போன்றும் நடித்து, "பாபம்! பாபம்!!" என்று தன் செவிகளை இருகைகளாலும் பொத்திக் கொண்டு "ஐய! பாகுராயண! வஞ்சகனாகிய ராக்ஷஸனது வார்த்தையும் சிநேகமும் எனக்கெதற்காக? அவன் பெயரை உச்சரியாத தேசம் ஏதேனுமிருப்பின் அங்குச் செல்லப்போகின்றேன். ஆகையால், என்காது கேட்க அவன் பெயரை மறுமுறை கூறாதே" என்றான்.

"ஐயா! உமக்குப் பிராணசிநேகனான ராக்ஷஸனிடம் இவ்வாறு விளையாட்டுச்சண்டை ஏற்படக் காரணம் என்ன? அன்றி அவன் செய்த பிரமாத குற்றந்தான் என்ன? என்று பாகுராயணன் கேட்க, ஜீவஸித்தி, எதுவும் அவனைச்சொல்வதற்கில்லை. அது அவனது பிறவிக்குணம். வேறொன்றுமில்லை. நான் அவனை நம்பிச்செய்த காரியத்தின் பயனாக வெட்கமும் துக்கமும் அடைந்து இவ்விதம் நிர்ப்பாக்கியனானேன். அதெல்லாம் இப்பொழுது சொல்லக் கூடிய விஷயமில்லை. தவிரவும் அதனை வெளியிடுவதால் அது தீரப் போகிறதுமில்லை. சென்று போன காரியத்தைப்பற்றிப் பேசிப் பயனென்ன?" என்றான்.

பாகுராயணன், "ஐயீர்! நீர் சொல்ல விரும்பா அதி ரகஸ்ய சமாசாரம் நான் அறிய அதி ஆவலுள்ளவனா யிருக்கிறேன். மன்னிக்க வேண்டும். கொலை களவு நம்பிக்கைமோசங்களைக் கூற அஞ்சுவோர் போல அஞ்சி விஷயத்தை அடக்கி விட்டீரே. அவ்வளவு பிரமாத காரியமா அது?" என க்ஷபணகன், "ரகஸ்ய காரியம் ஒன்றுமில்லை. நடந்த விஷயம் உலகெலாம் அறிந்த தொன்றே. இருந்தாலும் அது கொலைத் தொழிலாதலாலும், சந்யாசியான நான் அதில் சம்பந்தப்பட்டிருப்பதாலும், அதை வெளியிட எனக்கு வெட்கமா யிருக்கிறது" என்றான்.

பாகுராயணன், "ஐய, நீர் இது விஷயத்தைப் பிரஸ்தாபிக்காமலே இருந்து விட்டால் நானாக அறிந்துகொள்ளப் போகிறதில்லை. ராக்ஷஸனை நீர் இவ்வாறு வெறுத்தற்கும் நடந்த விஷயத்தை ஒளித்தற்கும் காரணம் என்ன? உமது அநுபவத்தை வெளியிடுவீராகில், பிறராவது ஜாக்கிரதையா யிருக்கலாமல்லவா? இந்த உதவி நீர் செய்யலாகாதா?" என்று வினவ, க்ஷபணகன், "ஐய, பாகுராயண! இவ்வளவுதூரம் கேட்டதால் நான் தெரிவிக்கிறேன். நான் பாடலிபுரத்தில் அமாத்யனுக்கு

மித்திரனாக இருந்துவரும்போது நவநந்த வதமானதும் 'இதற்கெல்லாம் காரணம் பர்வத ராஜனே" என்று அவன் மீது பகை கொண்டு என் மூலம் விஷகன்னிகையை ரகஸ்யத்தில் அவனிடம் சேர்ப்பிக்க, அதனால் அவன் மாண்டு விட்டான். சில தினங்களுக் கெல்லாம் இவ்வுண்மையை அறிந்து கொண்ட சாணக்யன், 'ராக்ஷஸனுக்கு மித்திரனான ஜீவஸித்தி என்பவன் நமது ஆப்தனாகிய பர்வதேசனை விஷகன்னிகை மூலமாகக் கொன்றபடியால், இனி இவன் இக் கௌட தேசத் தெல்லையை மிதிக்கக் கூடாது' என்று பறை யறைந்து என்னை அவமானப்படுத்திக் குஸுமபுரத்தி னின்றும் ஓட்டி விட்டான். ஆதலின், வேறெங்கும் நான் ஆதரவு பெற முடியாமல் ராக்ஷஸனிடமே வந்து காலங்கழித்து வந்தேன். இங்கு வந்தும் ராக்ஷஸனுக்குத் துர்ப்புத்தி தொலைய வில்லையே! அவன் மனம்வேறு சொல்வேறு தொழில்வேறு பட்டவனாய், சில அரசர்களுடன் கூடி ஏதேதோ ஆலோசித்துக் கொண்டு சந்திரகுப்தனது சிநேகத்தை விரும்பி இப்பொழுதும் ஒரு பெரிய துரோகச் செயலை நடத்த எண்ணி விட்டான். ஆகையால், அவன் சகவாசத்தால், நான் முன்போல மறுபடியும் பாபத்தைப் பங்கிட்டுக் கொண்டும் நெஞ்சறிந்த வஞ்சனைக் குட்பட்டுக் கொண்டும் தவிக்க வேண்டுமே என்றஞ்சி 'எங்கேனும் தொலைவோம்' என்று துணிந்து புறப்பட்டேன்" என்றான்.

இவற்றைக் கேட்ட பாகுராயணன், "அங்ஙனமாயின் 'பர்வதேசனுக்குப் பாதிராஜ்யம்அளிக்கப் பின்வாங்கிய சாணக்யன், விஷகன்னிகை மூலமாகப் பர்வதேசனைக் கொன்றான்' என்று சொல்லும் உலக வார்த்தை பொய்யாயிற்றல்லவா?" என, க்ஷபணகன் தன் செவிகளைப் பொத்திக்கொண்டு "புத்தேச சாக்ஷியாகச் சாணக்யன் இஃதொன்றையும் அறியான். அவன்மீது வீண்தோஷம் கற்பித்தல் கூடாதகாரியம்." என்றான்.

அங்ஙனமாயின் இவ்விஷயத்தை ராஜகுமாரனாகிய மலயகேதுவின் முன்பாக நீ சொல்லலாமல்லவா?" என்று பாகுராயணன் கேட்க, ஜீவஸித்தி, "சொல்வதிற் சிறிதும் தவறில்லை, ஆயினும் இதுவரை மித்திரனாக விருந்த ராக்ஷஸனிடம் இப்பொழுது என் மனம் வெறுப்புற்றதாயினும், பகிரங்கமாய் அவனுக்கு எதிரியாக ஏற்பட என் மனம் துணிந்திலது. அவனை முழுதும் நம்பியிருக்கும் மலயகேதுவிடம் நான் வலியச்சென்று இவ்விஷயங்களைச் சொல்வது நீதியுமாகாது" என்றான்.

இதுவரை மறைந்திருந்து இருவர் சம்பாஷணையையும் கேட்டு நின்ற மலயகேது, தகப்பனை நினைந்து துக்கம்பொறுனையும், ராக்ஷஸன் மீது பெருங்கோபம்கொண்டவனையும் பாகுராயணன் முன்வந்து, "ஐய, மித்திர! யதார்த்த வாதியான இக்ஷபணகன் உன்னிடம் உரைத்த கர்ண கடூரமான மொழிகளைக் கேட்டதும், தந்தைசோகத்தை மறந்திருந்த எனக்கு இப்பொழுது முன்னையினும் பன் மடங்கு விசனமும் கோப மும் உண்டாயிருக்கின்றன" என்று துக்கம் தொண்டையை அடைக்கச் சொன்னான்.

ஜீவஸித்தி, மலயகேதுவினிடம் ராக்ஷஸனைப் பற்றி அவதூறு கூறத் தக்கதருணம் எதிர் பார்த்திருந்தவனாதலால், தன் காரியம் இப் பொழுது கைகூடிவிட்டமைக்கு மகிழ்ந்து, ராஜகுமாரனைக் கண்டு அஞ்சியவன்போல் நடித்து ஒளிந்தொளிந்து ஓடிவிட்டான்.

---

## அறுபத்தோராவது அத்தியாயம்.

## மலயகேதுவின் சீற்றத்தைத் தணித்தல்.

தன் வருகையினிமித்தம் எழுந்துநின்ற பாகுராயணனை மலய கேது நோக்கி "ஐய, மித்திர! இவ் அமாத்ய ராக்ஷஸன் எனது தந் தைக்குச் சிநேகமென்று நான் சர்வாதிகாரத்தையும் அவனிடம் அளித்து, அதிநம்பிக்கையுடன் நடந்து வந்தேன். இவன் இவ்விதம் அநுகூல சத்துருவாயிருந்து நமக்கு இவ்விதத் துன்பத்தையும் விச னத்தையும் விளைப்பதால் இவன் நாம் சம்பந்தப்பட்ட மட்டில் பிரத்யக்ஷ ராக்ஷஸனே ஆவன்" என்று கூறிக் கண்ணீர் விட்டான்.

பாகுராயணன், தனக்குள், "எஜமானரான சாணக்யர் நமக்குச் சொல்லியிருந்தபடியே இதுவரை முடித்துவிட்டோம். ராக்ஷஸன் மலய கேதுவை அடுத்து, யுத்தத்திற்கு யத்தனம் செய்வானாகில் நாம் அவ சியம் சில காரியங்கள் செய்து தீரவேண்டும். இப்பொழுது ராக்ஷஸ னிடம் மலயகேதுவிற்கிருக்கும் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் மாற்றிக் கோபமுண்டாம்படி செய்யவேண்டிய தவசியம். ஆயினும், ராக்ஷஸன் உயிருக்குச் சற்றும் மோசம் வராமற் பாதுகாத்துத் தீர

வேண்டும். எப்படியாவது அவனை இங்கிருந்து சாவதானமாக ஓட்டி விடவேண்டும், இதன் பிறகே மற்றும் ஆகவேண்டிய காரியங்களை நடத்தவேண்டும்.—இப்பொழுதோ மலயகேது க்ஷபணகன் சொன்னவற்றைக் கேட்டு ராக்ஷஸன்மீது பிரமாத கோபங்கொண் டிருக்கிறான். இதனால் மகத்தான விபத்து ராக்ஷஸனுக்கு நேர்ந்தாலும் நேரும். சமீபத்தில் இதைக்காட்டிலும் கோபத்தை விளைக்கக்கூடிய காரியம் ஒன்று நடக்கவே போகிறது. ஆதலால் இப்பொழுது மலயகேதுவைச் சமாதானப்படுத்தி மற்றக் காரியங்களையும் முடிக்கவேண்டும்." எனத் தீர்மானித்து, எதையோ ஆலோசிப்பவன்போல் பெருமூச் செறிந்து, "ஐய, ராஜகுமார! சென்றுபோன காரியத்தை நினைத்து நினைத்து வருந்துவதில் என்ன பிரயோசனம்? எனது மொழிக்குச் சற்றுச் செவிகொடுப்பாயாக: உலகில் ஆராய்ச்சிக் குறைவால் ஏற்படும் கோபம் பிறகு விசனத்தையும் அநர்த்தத்தையும் விளைவிக்குமென்று கற்றறிந்தவர்கள் சொல்வார்கள். நீதிமார்க்கத்தை அனுசரித்து நடக்கும் அரசர்களுக்கோ சகல சம்பத்தும் கீர்த்தியும் மிகுவதில் தடையில்லை. பின்னும் ராஜ்யாதிபத்தியம் செய்பவனுக்கு ஜனங்களுள் சத்துருக்களும் மித்துருக்களும் உதாஸீனர்களும் உண்டு. அவர்களில் சத்துரு மித்துருவாகவும், மித்துரு சத்துருவாகவும், சத்துரு உதாஸீனனாகவும், உதாஸீனன் சத்துருவாகவும், மித்திரன் உதாஸீனனாகவும், உதாஸீனன் மித்துருவாகவும் மாறிவிடுவதுமுண்டு. இது சமயபேதத்தால் ஏற்படுவதாகும். முன்பு நவநந்தர்களும் மாண்ட சமயத்தில், அவர்களுடைய தந்தையான சர்வார்த்தஸித்திக்கு ஸ்வீகாரபுத்திரன் ஏற்படுத்தி நந்த வம்சத்தை விளங்கச் செய்ய எண்ணியிருந்த ராக்ஷஸனுக்கு அச்சமயம் சாணக்ய சந்திரகுப்தரைப் போன்று பர்வதேசனும் சத்துரு நிலையிலிருந்ததுபற்றி அவனை ராக்ஷஸன் அவ்விதம் செய்திருப்பான். அதை ஒரு குற்றமாகப் பாராட்டலாகாது. பின்னும் சின்னாட்களில் விருத்த மன்னன் காலஞ்சென்று விடுவதன் நிமித்தம் ராக்ஷஸனுடைய எண்ணம் வீணாகவே, நந்தர்களின் வைரியான சந்திரகுப்தனைக் கொல்வதே முக்கியமென எண்ணிய ராக்ஷஸனுக்கு, தன் கருத்தை நிறைவேற்றிக் கொள்ள வேறு வழியில்லாததால், உன்னைக்கொண்டே சந்திரகுப்தனைக் கொன்று, நந்தராஜ்யத்தையும் உன் வசமாக்க ராக்ஷஸன் எண்ணியிருக்கக் கூடும். இஃது உண்மையாயின் அவன்மீது இச்சமயம் நீ தோஷம் நினைக்கக்

கூடாது. ராஜநீதியை நீ நன்கறிந்தவன் அன்றோ? ராஜ்ய தந்திரமானது சமயத்திற்கேற்றபடி மாறும். அப்பொழுது சத்துரு மித்துருவாவன்; மித்துரு சத்துருவாவன். ஆகையால் கௌடதேசம் உன் கைவசப் படக்கூடிய இச்சமயத்தில் ராக்ஷஸனிடம் வெறுப்புத்தோன்றினாலும், சென்றவற்றைச் சிந்தியாது உபேக்ஷையுடனிரு. நந்தராஜ்யம் நமது கைவசமானபின்பு, அவசியமாயின் ராக்ஷஸனை அநுசரிப்போம். இல்லாவிடில் சமயம்போற் செய்துகொள்வோம். எக்காரியத்தையும் ஆய்ந்து செய்யும் அரசனுக்கு ஆபத்துக்களும் சம்பத்துக்களாக மாறி விடும்." என்று நீதிகள் பலகூறி அவன் கோபத்தை ஆற்றினன்.

மலயகேது சிற்றந்தணிந்து, பாகுராயணனைப்பார்த்து "மித்திர! முன்யோசனையின்மையால் நான் ராக்ஷஸன்மீது கொண்ட கோபத்தை யாற்றி, எனக்கு நேர இருந்த அபகீர்த்தியை விலக்கினாய். இனி நடத்த யோசித்திருக்கும் காரியத்திற்கு விரோதமின்றிப் பொருத்தமான நீதி மொழிகளைப் போதித்தாய். ஆதலால் நீயே எனது ஆப்த நண்பன்" என்று புகழ்ந்து, அவனுக்குத்தரவளித்துத் தானும் தனது அந்தப் புரம் போய்ச் சேர்ந்தான்.

---

## அறுபத்திரண்டாவது அத்தியாயம்.

## ஸித்தார்த்தகனது சேஷ்டை.

மறுநாளிரவில் ஸித்தார்த்தகன் சுங்கச் சாவடியருகில் வந்து, அங்குச் சற்று நின்றும், பின்னே அடிவைத்தும், முன் சென்றும், நான்கு பக்கங்களையும் உற்று நோக்கியும், மிரள மிரள விழித்தும், ஒருவர் கண்ணிலும் அகப்படாமல் ஓட விரும்பியவன்போல் அபிநயித்தும், ஆங்கிருந்த காவலாட்கள் தன்னைக் கண்டு சந்தேகிக்கும்படி ஏதோபயந்தவன்போற் காட்டிக்கொண்டும், சுற்றிச் சுற்றி வந்தனன். அப்பொழுது அக்காவலாளர்கள் "இவன் யார்? எங்கோ எதையோ திருடி விட்டு ஓடப் பார்க்கிறான்போலத் தோன்றுகின்றது. இவன் இடுப்பிற் கட்டியிருக்கும் சவுக்கத்தில் ஒரு கடிதம் இருக்கிறது. இவனைப் பார்த்தால் சீட்டுப் பெற்றவன் என்றாவது, பெறும்படி தாமதிப்பவன் என்

ருவது, தோன்றவில்லை." என்று பேசிக்கொண்டே ஸித்தார்த்தகனுடைய மடியை இறுகப் பற்றிக்கொண்டு, "நீயார்? எங்குச் செல்பவன்? சீட்டைக் காண்பி" என்று அதட்டினர்.

"சீட்டென்ருல் என்ன?என்னிடம் சீட்டும் இல்லை. கடிதமும் இல்லை. உங்களுக்குப் புண்ணியமுண்டு. எப்படியாவது என்னைவிட்டு விடுங்கள்." என்று ஸித்தார்த்தகன் அவர்களைக் கெஞ்சினன். அவர்கள், "இவ்விரவில் உனக்கேற்பட்ட அவசர காரியம் என்ன?" என்று கேட்க, அவன் காரியமுண்டு; திரும்பவும் வந்து சொல்லுகிறேன். என்னை விட்டு விடுங்கள். உங்களுக்குப் புண்ய முண்டு. யாராவது வந்து விடப் போகிருர்கள். நான் சீக்கிரம் செல்லாவிடில் என் தலையே போய் விடும். சற்றுத் தயை செய்யுங்கள். என்னைத் தடுக்காதீர்கள்" என்று மன்ருடினன்.

"பைத்தியக்காரன் போல் நடிக்கும் இவன் பெருத்த மோசக் காரனே. இவனை இவனிடத்துள்ள கடிதத்துடன் பாகுராயணர் முன் கொண்டு போய் நிறுத்துவோம். அவர் விசாரித்துக் கொள்ளட்டும்." என்று கூறி, ஸித்தார்த்தகனைப் பிடித்திழுத்துச் சென்று, அந்தப்புர வாயிலில் நிறுத்தி வைத்துத் தாம் வந்த விவரத்தைத் துவார பாலகர்களுக்குத் தெரிவித்தார்கள். வாயில் காப்போர் உடனே உட்புகுந்து, முன் உப்பரிகையில் பாகுராயணனுடன் விநோதமாகப் பேசிக்கொண்டிருந்த மலயகேதுவைக் கும்பிட்டு, "ஸ்வாமி இவ் விராக் காலத்தில் சீட்டுப் பெருமல் ஓடிப்போக எண்ணிய ஒருவன் அகப்பட் டிருக்கிருனம். அவனிடம் உறையில் ஒட்டப்பட்டுள்ள கடிதம் ஒன்று இருக்கிறதாம். சுங்கச் சாவடியில் உள்ளே காவலாளர்கள் அவனைப் பிடித்து வந்து வாயிலில் நிறுத்தி யிருக்கிருர்கள். உத்தரவு என்ன?" என்று விக்ஞாபித்தனர். அதைக் கேட்ட மலயகேது, அவனை அவனது கடிதத்துடன் அழைத்து வாருங்கள்" என்று ஆக்ஞாபிக்க வாயிலாளர் கும்பிட்டு வெளிச் சென்றனர்.

பாகுராயணன் உடனே எழுந்து பலகணி வழியாக வாயிலை நோக்கி, ஸித்தார்த்தகன் நிற்பதைக் கண்டு, "இவன் வேண்டுமென்றே மாட்டிக் கொண்டவன். நல்ல வேளையாய் ராக்ஷஸனைத் தொலைக்கும் சமயம் இன்று நேர்ந்தது." என்று மகிழ்ந்து, அங்குள்ள ஓர் தூதனை நோக்கி, "அகப்பட்டுக் கொண்டவன் புதியவனு அல்லது இவ்விடத்திய அதிகாரிகளில் ஒருவனது சேவகனு?" என்று ஒன்றும் அறியாதவன் போற் கேட்டான்,

இதற்குள் உள் நுழைந்த ஸித்தார்த்தகன், "ஸ்வாமி! நான் அமாத்ய ராக்ஷஸரின் சேவகன்." என்று தானே பதில் அளித்தான். "அங்ஙனமாயின் நீயேன் இங்குச் சீட்டுப் பெற்றுக்கொள்ள வில்லை?" என, அவன், "ஸ்வாமி! 'அவசரகாரிய மிருப்பதாலும், ஸர்வாதிகாரியின் சேவகனெனபடியாலும், நம்மை யார் தடுக்கப் போகிறார்கள்?" என்று எண்ணிப் புறப்பட்டேன்" என்றான்.

"ராஜாக்ஞையையும் மீறிச் சீட்டுப் பெறுமற் செல்லச் செய்த அத்தகைய அவசர காரியம் என்னவோ?" என்று பாகுராயணன் வினவினான். அப்பொழுது மலயகேது, கஞ்சுகி கொண்டு வந்து கொடுத்த கடிதத்தைப் பாகுராயணன் கையில் அளித்து, "ஐய! இது இச் சேவக னிடமிருந்து கிடைத்த கடிதமாம். இதில் ஏதேனும் விசேஷம் உளதோ பார்" என்றான்.

பாகுராயணன் அதைப் பெற்று, "அரச குமார! இக்கடிதத்தில் ராக்ஷஸரது முத்திரை யிட்டிருப்பதால் நான் உடைத்து வாசித்தல் தகுமோ?" என்று மரியாதைகுன்றாதான்போல் கேட்க, மலயகேது, "பாதகமில்லை. முத்திரை கலையாமல் உடைத்துப் பார்." என்றான். பாகுராயணன் உடனே அக்கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அதில்,

"க்ஷேமம். எனது எதிரியை வேலையினின்றும் நீக்கி, அவன் காது கேட்கவே என்னைச் சிலாக்கித்துப் பேசிய விஷய மறிந்தும், தாங்கள் அன்புகூர்ந்து அனுப்பிய ஆபரணங்களைப் பெற்றும் மட்டற்ற மகிழ்ச்சி யெய்தினேன். இங்கு, நமக்கிஷ்டர்களாகித் தக்க சமயத்தை எதிர் பார்த்திருக்கும் மனிதர்களிற் சிலர் நம் காரியம் கை கூடிய பின் எதிரியின் பொக்கிஷத்தையும், சிலர் சத்துரு சேனைகளையும், சிலர் ராஜ்யத்தையும், பிரதிப் பிரயோஜனமாக விரும்புகின்றனர். இவ் விஷயம் ஞாபகத்தில் வைக்கவேண்டியதாகும். இக் கடிதத்துடன் அனுப்பியுள்ள ஆபரணங்களைத் தாங்கள் காண்பதாலேயே எனக்கு இங்கு சர்வாதிகாரமும் சகல சுதந்திரமும் இருக்கிற தென்றும், நான் எண்ணியதையும் முடிக்க வல்லவனென்றும், அறிந்துகொள்ள வேண்டியது. இச்சமயம் கடித வாயிலாக அதிகம் எடுத்துரைத்தல் தவறு. பிற விஷயங்களை விவரமாக இக்கடிதம் கொண்டுவரும் ஆள் நேரிற் சொல்வான்."

என்று எழுதியிருந்தது. அதனை ஒரு முறைக் கிருமுறை வாசித்தானதும், பாகுராயணன், ஸித்தார்த்தகனை நோக்கி, "அடா! இக்கடிதம் கொடுத்தவர் யார்?" என்ன, அவன், "ஸ்வாமி! இதைக் கொடுத்தவரது அடையாளத்தை நான் அறியேன்" என்றான்.

பாகுராயணன், மறுபடியும், அது போகட்டும். உன்னிடமுள்ள நகைகளை எடு" என்றதும், அவன், "ஸ்வாமி! நகைகள் என்றால் என்ன!" என்று திருடன் போல் விழித்தான். அது கண்டு பாகுராயணன் தனது ஆட்களை நோக்கி, "இவன் மகா வஞ்சனைகத் தோன்றுகிறான். இவன் உண்மையைக் கக்கும் வரை சவுக்கினால் உரித்துப் போடுங்கள்" என்று கட்டளை யிட்டான்.

அவர்கள் பொய்யடி அடிக்கத் தொடங்கலும், ஸித்தார்த்தகன், அடி பொறாதவன் போல் தவித்து நடுங்கி தன்னிடமிருந்த நகைப் பெட்டியைத் தானே கீழே விழச் செய்தான். அதனைத் தூதர்கள் எடுத்து மலயகேதுவின் முன் வைத்தனர். மலயகேது, "இஃதென்ன? கடிதத்திலிட்ட முத்திரையைக் கொண்டே இப்பெட்டியிலும் முத்திரை யிடப்பட்டிருக்கிறது, இதனைத் திறந்து பார்ப்போம்" என்று திறந்து இருப்பனவற்றை வெளியில் எடுத்தான். உடனே அவன் "ஆ! நாம் சபையில் ராக்ஷஸனுக்கு அளித்த ஆபரணங்க ளன்றோ இவை? ராஜ யோக்யமான இவ் வாபரணங்களைச் சந்திரகுப்தனுக் கனுப்பி அவனைச் சந்தோஷப் படுத்தி மந்திரி பதவியைப் பெற விரும்பி விட்டான். இவனது மனோபாவம் நமக்கு இப்பொழுது தான் தெரிந்தது." என்றான்.

பாகுராயணன், "அவசரம் வேண்டாம். விஷயத்தை நன்றாய் விசாரிப்போம்" என்றுரைத்து, தன் தூதர்களை நோக்கி "இத்துஷ்டனைத் தலைமுதல் கால்வரை ரத்தம் பீறிடுமட்டும் சவுக்கினால் அடியுங்கள்" என்று கட்டளையிட்டான். உடனே ஸித்தார்த்தகன் நடுநடுங்கினவன் போல் அபிநயித்துக் கீழே விழுந்து நமஸ்கரித்து "ஸ்வாமிகாள்! நானோ சேவகத் தொழிலிலிருந்து வயிறு வளர்ப்பவன். எனக்கு அபயமளித்து என்னை உபத்திரவம் செய்வதில்லையென்று உறுதிமொழி கூறினால் உண்மையை உரைத்து விடுகிறேன். என்னை அனியாயமாக அடித்து ஹிம்ஸியாதீர்கள்." என்று கெஞ்சினான்.

"அட, முட்டாள்! சேவகனுக இருப்பவன் உண்மையை மட்டும் உரைத்துவிட்டால் அவசியம் அபயமளிக்கப்படும். நீ பயப்படவேண்டிய நிமித்தமே இல்லை. உண்மையை மட்டும் ஒளியாது உரை" என்று மலயகேது கூற, ஸித்தார்த்தகன் எழுந்து கைகட்டி வாய்புதைத்து நின்று, "ஸ்வாமி! எனது எஜமானராகிய அமாத்ய ராக்ஷஸர் 'இக் கடிதத்தையும் பெட்டியையும் பாடலிபுர மன்னுன சந்திரகுப்த மகாராஜாவிடம் ஒப்புவித்து வா' என்று என்னை அனுப்பினுர். நான் அவரது தூதனுகையால் 'நமக்குச் சீட்டு வேண்டியதில்லை' என்று எண்ணிச் சுங்கச்சாவடி தாண்டிச் சென்றேன். என்னை இங்கு நிற்கும் இவர்கள் கட்டிப் பிடித்து அடித்து உபத்திரவப்படுத்தி இவ்வாறெல்லாம் அவமானப் படுத்தி விட்டார்கள்." என்று தேம்பித் தேம்பி யழுதான்.

"துடிப்பயலே! அழுகை ஏன்? இஃதெல்லாம் தெரிந்த விஷயம் தானே. அமாத்யர் சந்திரகுப்தனுக்குத் தெரிவிக்கச் சொன்ன வாய்மொழி என்ன?" என்று பாகுராயணன் கேட்க, ஸித்தார்த்தகன், அதற்கு விடையளியாமல் "இல்லை ஸ்வாமி! நான் அமாத்யருடைய தூதன் என்றும் அவசரமாகப் போய்த் தீரவேண்டுமென்றும் காவலாளிகளைக் கெஞ்சினேன். நல்ல வார்த்தைகள் எவ்வளவோ சொல்லியும் இப்படியெல்லாம் என்னை ஹிம்ஸைப்படுத்திக் கழுத்தைப் பிடித்து நெட்டித் தள்ளிக் கர கர வென்று இழுத்து வந்து விட்டார்கள்' என்றுன்.

பாகுராயணன் இவனது சாமர்த்தியத்தை மெச்சியும், மலயகேது இவனது மூடத் தனத்தைக் கண்டும் சிரித்தார்கள். பாகுராயணன், "அடா! இது போகட்டும். அமாத்யர் சொல்லியனுப்பிய விஷயமென்ன? சீக்கிரமாகச் சொல்." என, "இல்லை ஸ்வாமி!" என்று தொடங்கி ஸித்தார்த்தகன் மறுபடியும் ஏதோ புராணம் வாசிக்கத் தொடங்கினுன். பாகுராயணன் கோபமுண்டெழுந்தவன் போல் அபிநயித்து, "எடு சவுக்கை. கட்டு இவனை இந்தத் தூணில். 'மயிலே மயிலே இறகு போடு' என்ருல் போடாது" என்று அதட்டியதும், ஸித்தார்த்தகன் நடுங்கிப் பதறி "ஐயா! ஐயா! இதுதான் உண்மை. சொல்லிவிடுகிறேன். ராக்ஷஸர், "இங்கு நமக்கு ஆப்தர்களான ஐந்தரசர்களும் உங்கள் காரியத்தில் அதி விழிப்பாகவும் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கிருர்கள். இங்கிருக்கும் பிறரும் நமக்கு அதி ஆப்தர்களாக இருப்பதால்

உங்கள் எண்ணம் அதிவிரைவில் நிறைவேறத் தடையே இல்லை. ஆகை யால் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றித் தீரவே வேண்டும்." என்று தெரிவித்து "அவர்கள் ஐவரும் இன்னாரின்னார் என்பதையும் அறிவி என்றார்" என்றான்.

"அவ் வரசர்கள் ஐவரும் யாவர்?" என்று பாகுராயணன் கேட்க, "ஸ்வாமி! இவ்வளவும் கூறிவிட்டேன். பிற விஷயங்கள் மறந்துபோயின" என்றான்.

மலயகேது பாகுராயணனை அருகில் அழைத்து, "ஐய, இவன் சர்வ முட்டாளாகவும் வஞ்சகனாகவும் இருக்கின்றான். இத்தன்மை யோரைக் கொண்டுதான் சாமர்த்தியசாலிகளாயுள்ளோர் தங்களை வெளிப் படுத்திக் கொள்ளாமல் தாங்கள் எண்ணிய காரியத்தை முடித்துக்கொள் வது வழக்கமாக இருக்கின்றது. ஆகையால் இவனை அதட்டிப் பேசா மல் நயமொழிகளாற் பேசிச் சமாசாரத்தைக் கிரகிப்பாயாக. இல்லையேல் நாம் அறிந்துகொள்ள வேண்டிய முக்கிய விஷயம் தெரிய வாராமலே போய்விடும். எஜமானனது உத்தரவை அனுசரிக்கும் இவனைக் கொன் றாலும் நாமடையக்கூடிய பயன் எதுமில்லை. ஐந்து அரசர்கள் பெயரை யும் கேட்டுக்கொண்டு விட்டால் பிறகு நமக்கு யாவும் விவரமாகத் தெரிய வந்துவிடும். இதுவே முக்கியம். ஆகையால் சமாதானமாகப் பேசி அதை முதலில் அறிந்து கொள்க" என்று ரகஸ்யமாகக் கூறினான்.

பாகுராயணன், "சரி" என் றுரைத்து, ஸித்தார்த்தகனை நோக்கி, "அடா, உனக்குப் பெண்டு பிள்ளைகள் இருக்கிறார்களா?" என, அவன், "ஸ்வாமி! எனக்குக் கல்யாணமாகி ஸம்ஸாரம் வீட்டிற்கு வந்தவுடனேயே சாணக்யன் வந்து தோன்றி நந்தர்களை நாசப்படுத்தியதால் ராக்ஷஸருடன் இங்கு வந்து சேர்ந்தேன். என் மனைவி இப்பொழுது தன் பிறந்த வீட்டில் இருக்கிறாளாம்" என்றான்.

"அங்ஙனமாயின் நீ அங்குச் செல்லவேண்டாமா? என்று வினவ, அவன் "ஸ்வாமி! இப் பெட்டியையும் கடிதத்தையும் சந்திரகுப்தரிடம் கொடுத்து விட்டு அவரளிக்கும் வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டு என் மாமனார் கிராமம் செல்லப் போகிறேன்" என்றான்.

"சரி. நாழிகையாயிற்று. இக் கடிதத்தையும் பெட்டியையும் எடுத்துச் செல். சீட்டு நீ பெறவேண்டும் என்ற அவசியமில்லை." என்று பாகுராயணன் கூற, ஸித்தார்த்தகன், "ஸ்வாமி! நான் மாட்டேன். மாட்டவே மாட்டேன். சீட்டில்லாவிடிற் காவலாளிகள் பிடித்துக்கொள் வார்கள்" என்றான்.

பாகுராயணன், "அப்படியா? ஆனால் சீட்டுக்கொடுத்து விடுகிறேன். நீ உன் இஷ்டம்போல் உபத்திரவமேயின்றிச் செல்லலாம். அந்த ஐந்து அரசர்களின் பெயரென்ன? அதை மட்டும் சீக்கிரமாகச் சொல்" என, ஸித்தார்த்தகன், "அவர்களா? குலூதபதியாகிய சித்திரவர்மா; மலய தேசாதிபன் ஸிம்மநாதன்; காஷ்மீர மன்னன் புஷ்கராக்ஷன்; ஸிந்துதேச மன்னனாகிய ஸிந்துஷேணன்; பாரஸீகத்தரசன் மேகநாதன்.' என்று அமாத்யர் கூறினார்" என்றான்.

இதைக் கேட்ட மலயகேது திடுக்கிட்டு, அத்தியந்த விசன மடைந்து, "ஆ! ஆ!! இது காலஞ்செய்யும் கொடுமையே. சித்திரவர்மன் முதலியோரும் எனக்குத் துரோகம் செய்ய நினைத்து ராக்ஷஸன் வசப் பட்டதன் பின் நான் யாரைத்தான் ஆப்தரென நம்புவேன்! சிவ! சிவ! இத் துவேஷத்தை இவர்கள் எத்தனை தினங்களாகத் தம் மனத்தில் அடக்கிவைத்துக் கொண்டிருந்தார்களோ! இப் பரம துஷ்டர் ஐவரையும் என் தந்தை பாராட்டிப் போற்றி வந்தது பாம்புக்குப் பால் வார்த்துப் போற்றியதே போலாயிற்று." என்றுரைத்து, அருகில் நின்ற கஞ்சுகியை நோக்கி, "ஹம்ஸக! நீ சென்று அமாத்ய ராக்ஷஸர் என்ன செய்துகொண் டிருக்கிறார் என்று பார்த்து வா" என்றனுப்பினான்.

## அறுபத்து மூன்றாவது அத்தியாயம்.

## ராக்ஷஸன் மலயகேதுவிடம் வரல்.

மலயகேதுவின் கட்டளையை யேற்றுக் கஞ்சுகி ராக்ஷஸனிடம் சென்ற சமயத்தில், ராக்ஷஸன், தன் தூதனை நோக்கி, "பிங்கல! கௌட தேசம் செல்லச் சைனியங்களெல்லாம் தயாராக இருக்கட்டும். ராஜ புத்திரனாகிய மலயகேதுவைச் சுற்றித் தத்தம் சைனியங்களை அணி

வகுத்துக்கொண்டு, சித்திரவர்மன், ஸிம்மநாதன், புஷ்கராக்ஷன், ஸிந்து ஷேணன் ஆகிய இவ் வைந்து அரசர்களும் நம் உத்தரவின்படி அதி ஜாக்கிரதையாகச் செல்லவேண்டியது. நாம் பின்னால் வருகிறோம். நம்முடன் மகத, காந்தார, சக, தேசத்திப மன்னர்கள் வரட்டும். சீன ஹூண அதிபர்கள் நமக்குப் பின் வரட்டும். சேனாதிபதியாகிய சேகரன் பார்வதேயர்களின் சேனைகளுடன் இந் நகரை ரக்ஷித்துக்கொண்டு இவ் விடமே இருந்துகொண் டிருக்கட்டும்." என்று நாம் கட்டளையிட்டதாகத் தளபதிகளுக் குரைத்து வா" என்று ஆக்ஞாபித்துக்கொண் டிருந்தான். தான் கண்டு கேட்ட விஷயங்களை அக் கஞ்சுகி மலயகேதுவிடம் வந்து தெரிவித்தான்.

மலயகேது பாகுராயணனைப் பார்த்து, "நண்ப! ராக்ஷஸன் சைனியங்களுக்குக் கட்டளை யிட்ட விதத்தைக் கவனித்தாயே? நமது வம்ச பரம்பரையாக ஆப்தர்களாக இருக்கும் பர்வதேய சேனைகளுடன் சேகரன் இங்கேயே இருக்கவேண்டுமோம்! நமக்குத் துரோகிகளாய் விட்ட சித்ர வர்மன் முதலியோர் அணி வகுத்து அவன் கட்டளைக் கிணங்க அதி விழிப்புடன் நம்மைச் சூழ்ந்து செல்ல வேண்டுமோம்! தான் சில தேசாதிபர்களுடன் நமக்குப் பின்னால் வருகிறானும்! இதனாலேயே இப்பொழுது பிடிபட்ட 'சேவகன் உரைத்தவை முழுதும் மெய்' என்பது உறுதியாய் விட்டது." என்றுரைத்து முகத்தைக் கடுகடுத்து ராக்ஷஸன் மீது அளவற்ற கோபங்கொண்டு, "அவனை வரவழை" என்று பாகுராயணனுக் குரைத்தான்.

பாகுராயணன் "ஹம்ஸக! அமாத்யரை அழைத்து வருமாறு உத்தரவாகி யிருக்கிறது. அவரைக் கையோடு அழைத்து வருக" என்று கட்டளையிட, அவன் "உத்தரவு" என்று கும்பிட்டுச் சென்றான். செல்லும்போதே, ஹம்ஸகன், தனக்குள், "இன்று யாது காரணம் பற்றியோ கடுகடுத்த முகத்துடன் அரசன் "அவனை வரவழை" என்று ஏக வசனப் பிரயோகம் செய்தார். குளிர்ந்த முகத்துடன் "அமாத்யரின் சமய மறிந்து, அவர்க்குச் சாவகாசம் இருக்குமாகில் அழைத்து வா" என்று இன்று அவர் கட்டளை யிடவில்லையே. ராக்ஷஸர் ஏதோ வித்தியாசமாய் நடந்து கொண்டு விட்டதால் தான் அரசர்க்கு இவ்வளவு வெறுப்புண்டா யிருக்கவேண்டும்." என எண்ணிக் கொண்டே சென்று,

அமாத்யனருகில் தடையின்றிப் போய் நின்று, தலைகுனியாதே வேண்டா வெறுப்பாய் ஒரு கும்பிடு போட்டு, "ஸ்வாமி! அரசரின் உத்தரவா யிருக்கிறது. சீக்கிரம் புறப்படுங்கள்" என்றான்.

ராக்ஷஸன், தனக்குள், "இதுகாறும் தூர நின்று அதி வணக்கத்துடன் தலை வணங்கி தரையில் கைபடும்படி குனிந்து கும்பிட்டு வந்த இக் கஞ்சுகி, "என்ன விசேஷமடா?" என்று நாம் கேட்ட பின், "மகா ஸ்வாமி!" என்று தலையைச் சற்று நிமிர்த்தித் தான் வந்த காரியத்தைப் பயபக்தியுடன் சாவதானமாகத் தெரிவிப்பது வழக்கமா யிருக்க, இப்பொழுது சற்றும் மரியாதை யின்றி அதி சமீபத்தில் நின்று "சீக்கிரம் புறப்படுங்கள்" என்று நம்மை அவசரப் படுத்துகிறான். இதனால் பாலகனாகிய மலயகேது வஞ்சகர் சிலர் வார்த்தையால் மதிமயங்கிப் பகிரங்கமாகவே ஏதோ சொல்லியிருப்பான் என்று தோன்றுகிறது. அக் காரணம் பற்றி இக் கஞ்சுகி நம்மை லக்ஷ்யம் செய்யாதும், சாமானியமாகவும் கருதி இவ்விதம் நடந்துகொண்டானன்றி வேறில்லை. உலகில் பிரபுவாயுள்ளவன் யாரிடம் கௌரவம் வைக்கிறானோ அவனிடம் ஜனங்களும் வணக்கமாய் நடந்துகொள்வார்கள். அவ்வாறின்றிப் பிரபுவே உபேக்ஷிப்பானாயின் தாங்கள் உதாஸீனமாக நடந்துகொள்வார்கள். இது சகஜம். அன்றியும் பிரபு பால்யனாக இருப்பின் அவன் மனத்தை வஞ்சகர்கள் வசப்படுத்திக்கொண்டு தங்கள் காரியத்தைச் சாதித்துக்கொள்வதுடன் குணத்தைத் தோஷமாகவும் தோஷத்தைக் குணமாகவும் காட்டுவார்கள். பிரபுவுக்கு உண்டாகக் கூடிய தீங்கைச் சிறிதும் கவனியாமல், பெரியோர்களிடத்து அவனுக்குள்ள நம்பிக்கைவிசுவாசங்களை மாற்றி விடுவார்கள்." என்று பலப்பல எண்ணிக் கஞ்சுகியை நோக்கி, "சற்று நில். வருகிறோம்" என்றுரைத்துச் சகடதாஸனையழைத்துவரச்சொல்லி, அவனை நோக்கி, "ஐய! ராஜகுமாரன் சொல்லியனுப்பி யிருக்கிறான். அவன் அளித்த ஆபரணங்கள் வெகுமதி யளிக்கப்பட்டுவிட்ட படியாலும், ஆபரணங்களின்றி ராஜசமுகம் செல்வது மரியாதைக்குறைவாதலாலும், இப்பொழுது, வர்த்தகரிடமிருந்து முன் நாம் விலைக்கு வாங்கி வைத்துள்ள ஆபரணங்களை எடுத்து வா" எனக் கட்டளையிட்டான்.

சகடதாஸன் பர்வதேசனது ஆபரணங்களைக் கொண்டுவந்ததும், ராக்ஷஸன் அவற்றை அணிந்துகொண்டு, புறப்பட்டான். போகும் போதே அவன், "பிரபுவின் சந்நிதானத்தில் பிரமுகனாயிருக்கும் ஒருவன்,

தனக்கு எந்த வேளையில் என்ன நேரிடுமோ என்று பயத்துடனும் ஆலோசனையுடனும் நடந்து கொள்வதால், அவன் அப்பிரபுவின் கடாட்சத்திற்குப் பாத்திரனாகி உயர்ந்த பதவிகள் அடைவன். அதனைத் துஷ்டஜனங்கள் கண்டு பொறாது, அவன் செய்யும் காரியங்களை அவனில்லாத சமயத்தில் இகழ்ந்தும், இருக்கும்பொழுது புகழ்ந்தும் பேசிச் சமயம் பார்த்துப் பிரபுவிற்கும் அவனுக்கும் பகைமூட்டி, அவனை மறுபடி தலையெடுக்க வொட்டாமலே செய்து விடுவார்கள். எதையும் தீர விசாரித்துக் குணகுணங்களைப் பகுத்தறியவல்ல பிரபுவை உலகிற் காண்பது அருமை." என்று உலகியலைச் சிந்தித்துக்கொண்டே ராஜ கிருகத்தருகே வந்தான்.

ராக்ஷஸனைக் கண்டதும், பாகுராயணன், "ராக்ஷஸனை மலயகேது விசாரிக்கப் போகும் இச் சமயத்தில் ஸித்தார்த்தகன் அவன் எதிரில் இருப்பானாகில், அமாத்யன் உடனே 'இவை யாவும் சாணக்யனுடைய தந்திரங்களே' என்றறிந்து, அவற்றை ராஜபுத்திரனுக்கு மெய்ப்பித்தும் விடுவான். இதுகொண்டு பாடலிபுரத்திலிருந்து வந்திருப்போர் யாவருமே இவ்விதம் சாணக்யனால் அனுப்பப்பட்டவர்களென்று ஊகித்து, இப்பொழுது தனக்கேற்படும் அவஸ்தையைப் பத்ரபடன் முதலிய நம் யாவர் தலையிலும் சுமத்திவிடுவான். ஆதலின் இச் சமயம் ஸித்தார்த்தகனை மறைவாக இருக்கச் செய்வ தவசியம்" எனத் தனக்குள் தீர்மானித்து, மலயகேதுவை நோக்கி, "ராஜகுமார! இச் சேவகனை இப்பொழுது கண் மறைவாக இருத்துவது அவசியமும் நலமுமெனத் தோன்றுகிறது." என, மலயகேது, "அதுவே சரி" என்று ஒப்புக்கொண்டான். உடனே ஸித்தார்த்தகன் காவலாட்களுடன் வெளியே அனுப்பப்பட்டனன்.

---

## அறுபத்து நான்காவது அத்தியாயம்.

## மலயகேதுவின் உத்தரவு.

ஸித்தார்த்தகன் வெளிச்சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் ராக்ஷஸன் மலயகேதுவினருகில் வந்து, "எக் காரணத்தாலோ இவன் கவலையாற் பீடிக்கப்பட்டுளான்," என்று கண்டு, அவனை நோக்கி, "ஜய,

குமார! உனக்கு ஜயமுண்டாகுக என்னை வரவழைத்த காரணம் என்ன?" என்று வினவினன். மலயகேது எழுந்துநின்று, "எஜமானரான அமாத்யரே! தமது திருவடிகளுக்கு வந்தனம்" என்று நமஸ்கரித்து, ராக்ஷஸனைத் தன் படுக்கையில் உட்கார்த்தித் தானும் உட்கார்ந்துகொண்டு, "தங்களைப் பார்க்க விரும்பியதால் வரவழைத்தேன்" என்றான்.

"அன்பார் குமர! சேனைகளைப் பிரயாணத்தின் பொருட்டு நான் சித்தப்படுத்திக் கொண்டிருந்தேன். ஆதலின் நீ அழைத்த அக்கணமே நான் வரக்கூடாமற் போயிற்று." என்று ராக்ஷஸன் கூற, மலயகேது, "அமாத்யரே! தாங்கள் சேனை விஷயமாகச் செய்திருக்கும் ஏற்பாட்டை அறிந்துகொள்ள விரும்புகிறேன்." என்றான்.

ராக்ஷஸன், சிறிது நேரத்திற்குமுன் கஞ்சுகி வந்து கூறிய வண்ணமே கூற, மலயகேது, "சித்திரவர்மன் முதலிய ஐந்து அரசர்களையும் கொண்டு என்னைச் சிறைசெய்து சந்திரகுப்தனிடம் இவன் ஒப்புவிப்பது உண்மையே" எனத் தனக்குள் நிச்சயித்து, "அமாத்யரே! இப்பொழுது பாடலிபுரம் செல்லக் கூடியவர்கள் எவரேனும் உளரோ?" என்று வினவினன். அதற்கு ராக்ஷஸன் நாமே சேனையுடன் செல்லக்கூடியவர்களாக இருக்கிறோம்." என, மலயகேது வெகுண்டு, "இக்கடிதமும் முத்திரையும் யாருடையவை? பாரும். பிறகு பேசும்" என்று அவற்றை அவனிடம் அளித்தான். ராக்ஷஸன் கடிதத்தை வாசித்து முடித்து, "ஆ! இது நமது சத்துருக்களது கிருத்திரமமே. முத்திரையும் அப்படியே" என்று கூற, மலயகேது, "அப்படியா? அங்ஙனமாயின் இந்த நகைப் பெட்டி யாருடையதோ?" என்று கூறிக்கொண்டே அதனைக் கொணர்ந்து அவன் முன் வைத்தான்.

நகைகளைக் கண்ணுற்ற ராக்ஷஸன், "இவை நாம் ஸித்தார்த்தகனுக்கு அளித்தவை யல்லவா? இங்கு அவை வரக் காரணம் என்ன? இக்கடிதத்தினால் இங்குள்ள ஐந்து அரசர்களைக் கொண்டு நான் மலயகேதுவைச் சந்திரகுப்தன்வசமொப்புவிக்கத் தீர்மானித்து விட்டதாக அவன் நம்ப இடமுண்டாயிருக்கிறது. அவன் அங்ஙனம் நம்பியே விட்டதால் நமக்கும் ஐந்து அரசர்களுக்கும் மகத்தான ஆபத்து நேர்ந்துள தென்பதில் தடையே இல்லை. இந்தச் சூழ்ச்சிகளெல்லாம் சாணக்யனதேயன்றி வேறெவரது மில்லை. இனி என்ன விபரீதம் நிகழுமோ?" என்று தனக்

குள் எண்ணி, ஏதேதோ யோசித்துக்கொண்டிருக்கும்போது, மலயகேது, "அமாத்யரே! ஆபரணங்களை நேரிற் கண்டும் வாயடைத்திருக்கக் காரணம் என்ன?" என, ராக்ஷஸன், "ஐய, ராஜபுத்திர! இப் பூஷணங்களும் நம்மதல்ல" என்றான்.

"இவை தங்கள் பூஷணங்களென ஏற்படுமாகில், "யாவும் சத்துருக்களின் கபடம்" என்று பிறகு சொல்ல முடியாதல்லவா? தாங்கள் தரித்துக் கொள்ளுமாறு நான் அளித்த ஆபரணங்களை இப்பொழுது தயை செய்து வரவழையுங்கள்" என்று மலயகேது கூற, "ராஜகுமார! நீ அளித்த உடைமைகளை ஒரு சந்தோஷ காரியத்தின் நிமித்தம் வெகு மதியாக ஒரு சேவகனுக்குக் கொடுத்துவிட்டோம். அவைகளே இங்குக் காணப்படுவன. ஆயினும் பிறர்க்களிக்கப்பட்டுவிட்டமையின் இனி இவை நம்முடையன ஆகா." என்று ராக்ஷஸனுரைத்தான்.

இதனைக் கேட்டுக்கொண்டிருந்த பாகுராயணன், "ஐய, அமாத்யரே! நீங்களே தரித்துக்கொள்ள வேண்டுமென்று ராஜகுமாரனால் விரும்பியளிக்கப்பட்டவிலை மிகுந்ததும் அரசர்க ளணியத்தக்கதுமான தமது சொந்த ஆபரணங்களைக் கேவலம் ஓர் எளிய சேவகன் தரிப்பது உசிதமாகுமோ? அவைகளை நீங்கள் அவனுக்குத் தந்தது சரியோ? அது உசிதமான காரியமென உங்களுக்குத் தோன்றிற்றோ? உங்களைப் போன்றோரே இவ்வாறு உலக சம்மதமற்ற வார்த்தைகளை உரைத்தால், இனி எவ்வித விபரீதந்தான் நிகழாது?" என, ராக்ஷஸன், "ஐய, பாகுராயண! நாம் அளித்தது ஒரு காரியார்த்தமாகவேயன்றிப் பாத்திரம் கருதியன்று." என்றான்.

உடனே மலயகேது பாகுராயணனைப் பார்த்து, "மித்திர! அமாத்யர் ஒரு பெருத்த காரியத்தின் பொருட்டே அளித்திருக்கிறார். அதில் என்ன சந்தேகம்? அவர் சொல்வது உசிதந்தானே?" என்று ஆத்திரத்துடன் கூறி வாய் மூடுமுன், பாகுராயணன், ராக்ஷஸனை நோக்கி, "ஐய! இக்கடிதத்திலும் பெட்டியிலுமுள்ள முத்திரையும் தங்களுடையதில்லையோ? கடிதத்திலுள்ள எழுத்து உங்கள் ராயஸக்காரன் சகடதாஸனதல்லவா?" என்று கேட்க, "நமது சகடதாஸன் இவ்விதம் ஒருக்காலும் எழுதமாட்டான்" என்று அவனிடத்துள்ள நம்பிக்கையால் துணிந்தும், காலவசத்தாலும், ராக்ஷஸன், "இவை சகடதாஸனது எழுத்தே இல்லை" என்று சாதித்தான்.

உடனே மலயகேது சமீபத்திலிருந்த ஒருவனை அனுப்பிச் சகடதாஸன் கைப்பட ஒரு கடிதத்தில் இரண்டு வரிகள் எழுதி வாங்கிவரச் செய்து அதனை ராக்ஷஸன் கையிற் கொடுத்தான். இவ்வெழுத்தும் தன்முன் வைக்கப்பட்ட கடிதவெழுத்தும் ஒரே மாதிரியாக இருப்பதை ராக்ஷஸன் கண்டு பிரமித்து, தனக்குள் "ஆ! ஆ!! சற்குணமிக்க சகடதாஸனும் சாணக்யனுடைய வஞ்சனைக்குட்பட்டு, இவ்வாறெல்லாம் எழுதித் தன்னிடமுள்ள முத்திரையாலேயே 'மொஹ'ரிட்டு, நாம் வெகுமதியளித்த ஆபரணங்களுடன் ஸித்தார்த்தகன் கையில் கொடுத்தனுப்பிவிட்டான்போ லிருக்கிறது! இத் தந்திரங்கள் சாணக்யன் சகடதாஸன் ஸித்தார்த்தகன் ஆகிய மூவரும் கலந்து ஆலோசித்து முடித்திருக்க வேண்டும். அல்லது சகடதாஸன் சாணக்ய ஸித்தார்த்தகர்களின் கபடத்திற்குட்பட்டு ஏமாந்துபோய் இவ்வித மெழுதியிருக்கக் கூடும். உண்மை எப்படியிருப்பினும் இப்பொழுது நாம் நமது சொல்லைக் கொண்டே அகப்பட்டுக்கொண்டுவிட்டோம்." என்று ஒன்றும் பேசத் தெரியாமல் இருக்கும்பொழுது, மலயகேது, அதிகோபத்துடன் அமாத்ய ராக்ஷஸனை உற்று நோக்கினான். அப்பொழுது அவன் தேகத்திலிருந்த ஆபரணங்களை அவன் கவனிக்க நேர்ந்தது. உடனே அவன், "இவை என் தந்தையார் அணிந்திருந்தவை போல் காணப்படுகின்றனவே" என எண்ணி, பக்கத்திருந்த ஹம்ஸகனை நோக்கி, "அமாத்யர் அணிந்திருக்கும் இவ் வாபரணங்களை இதற்குமுன் நீ யாரிடமேனும் பார்த்திருப்பாயோ?" என்று கேட்க, அவன், "ஸ்வாமி! நன்றாய் அறிவேன்." என்றான். மலயகேது அவன் வாயையடக்கி, ராக்ஷஸனைநோக்கி, "ஐய! இவ்வாபரணம் ஏது?" என்று கேட்க, அவன், "இவற்றைச் சின்னாட்களுக்கு முன் நான் விலைக்கு வாங்கினேன்" என்றான். உடனே மலயகேது ஹம்ஸகனை நோக்கி, "கஞ்சுகி! அமாத்யர் உரைத்ததைக் கேட்டாயா?" என, அவன், "ஸ்வாமி! நன்றாயிருக்கிறது" நமது பெரிய அரசர் பாடலிபுரத்திற்கு விஜயப் பிரயாணம் செல்லும் சமயம் அணிந்திருந்த ஆபரணங்கள் இவைகளே இவைகளே" என்றான்.

ராஜகுமாரன் அவ்வாபரணங்களைக் கண்டதும், தன் தந்தையை நினைத்து விசனித்து, "ஆ! குலபூஷணமாக விளங்கிய எந்தையே! ராஜாதி ராஜனே! இவ்வாபரணங்களைத் தரித்து, நக்ஷத்திரங்களின் நடுவில் இருக்கும் பூரணசந்திரன் போல, சகல ராஜ்யாதிபதியாக இவ் விராஜ்

யத்தை ஆண்டுவந்தீரே! ஆ தந்தையே! சத்துருக்களின் கபடத்திற்குட் பட்டு எங்கள் யாவரையும் அநாதர்களாக்கி எங்கு ஒளித்திருக்கிறீர்? நான் இச்சமயம் சத்துரு மத்தியில் தவிப்பதறிந்தும், புத்திர வாஞ்சையில்லா தார்போன்று என்னை அநாதரவு செய்து எங்கிருக்கின்றீர். எல்லோரை யும் மறந்து சென்றீராயினும் சிறுவனாகிய என்மீதுள்ள அபிமானத்தை யும் உம்மால் மறக்க முடிந்ததோ? ஆ! தந்தையே! இடையிற் கண்டோரை 'மித்திரர்' என்று பாவித்ததினால் அடைந்த கஷ்டம் உங்களுடன் போக வில்லை. ஐயோ! இத்தகைய நயவஞ்சகர் எங்கிருந்தாலும் அங்கு ஏது க்ஷேமம்? க்ஷேமலாபங்கள் அடையவேண்டும் என்று இந்த ராக்ஷஸனை அநுசரித்த நிரபராதியான என்னை என் குல தெய்வங்களே காத்துக் கருணைபுரிய வேண்டும். ஆ! தந்தையே! ஆ! தெய்வமே! ஆ!!" என்று கண்ணீர் பெருக்கிப் பிரலாபித்துக் கதறினான்.

அமாத்ய ராக்ஷஸன் இது கண்டு, "ஆ! ஆ!! நான் தரித்துள்ள ஆபரணங்களோ பர்வதேசன் ஆபரணங்கள். கடிதவிஷயமோ சகடதாஸ னது கையெழுத்திலுளது. ஆபரணப் பெட்டிக்கு இடப்பட்டுள்ளதோ என் சொந்த முத்திரையாக இருக்கிறது. ஆகவே, யாரும் என்னை எவ் விதமும் சந்தேகிக்கலாம். எவ்விதமும் என்மீது தோஷாரோபணஞ் செய்யலாம். அவ்வளவும் பொருத்தமானதாகவே ஏற்பட்டிருக்கிறது. எனது எதிரியாகிய சாணக்கியனே வர்த்தகர்கள் மூலமாக இவ் வாபா ணங்களை அனுப்பியிருக்கிறான். இன்னும் என்னென்ன அப் பாவி செய்துளானோ?" என்று திகைத்து எண்ணுதன எல்லாம் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, மலயகேது, பாகுராயணனை நோக்கி, "ஐய, மித்திர! அமாத்தியர் தம் தேகத்தில் அணிந்துள்ள ஆபரணங்களைத் தாம் வர்த்தகரிடமிருந்து விலைக்குவாங்கியவை என்கிறாரே. நீ அதனை ஒப்புகிறாயா?" என்ன, பாகுராயணன், தனக்குள், "நான் இப்பொழுது ஒருவிதமாகச் சொல்லாவிடில் காரியம் கெட்டுவிடும்." சாணக்யருடைய உபாயங்களும் வீணாய்விடும். என்று தீர்மானித்து, "ராஜ குமார! இக் கடிதத்தில் "தாங்கள் அனுப்பிய ஆபரணங்கள் கிடைத்தன" என்று எழுதியிருக்கும் பூஷணங்கள் இவைகளே என்று தோன்றுகிறது. உல கில் அயலரசர்களின் ஆபரணங்கள் தங்கள் வசமானால், அதனை ஒரு பெருமையாக அரசர்கள் ராஜபொக்கிஷத்தில் கட்டிவைப்பதுண்டு. அப் படியே சாணக்கியனும் பர்வதேசனுடைய ஆபரணங்களைப் பொக்கிஷத்

தில் அதிஜாக்கிரதையாக வைத்திருப்பான். சாணக்கிய சந்திரகுப்தர்களுக்கு மனஸ்தாபமுண்டான காலத்தில் தனக்கு வேண்டியவனது பிரியத்தைச் சம்பாதிக்கும்பொருட்டுச் சந்திரகுப்தன் பொக்கிஷத்திலிருக்கும் இவ் வாபரணங்களின் வரலாற்றை அறியாமல், "இவை அதி சிலாக்கியமும் ராஜயோக்கியமுமானவை" என மதித்து அவற்றை அமாத்தியருக்கு வெகுமதியாக அனுப்பியுள்ளான். அவற்றின் உண்மையைச் சந்திரகுப்தன் மட்டும் அறிந்திருப்பானுனல் அவனிடம் அனுப்பியேஇரான்" என்ருன்.

மலயகேது, "நீ சொல்வது பொருத்தமாகவேயிருக்கிறது" என்று கூறி, ராக்ஷஸனைநோக்கி, "ஐய, அமாத்தியரே! சந்திரகுப்தன் இந்த ஆபரணங்களால் அதிலாபம் அடையும்பொருட்டு, அவற்றை உமக்களித்திருப்பதால், அதற்குக் கிரயமாக என்னையே அவன் வசம் ஒப்புவிக்க யத்தனம்செய்து விட்டீரல்லவா?" என்று கூற, ராக்ஷஸன், "சிவ! சிவ! இத்தகைய அபவாதம் எனக்கு ஏற்படல் தகுமோ? சத்துருக்களின் கபடம் நன்ருகப் பலித்துவிட்டதே. இச் சமயம் எதற்கேனும் 'ஆம்' என்ருவது 'இல்லை'யென்ருவது சொல்லமுடியாமல் இருக்கிறதே!" என்று தத்தளிக்கும்போது, மலயகேது மீண்டும் எழுந்துநின்று, "எஜமானரே! இதுவரை செய்யவேண்டியவை யாவையும் செய்துவிட்டீர். இனி என்ன செய்யப்போகிறீர்?" என்று வெகுண்டுகேட்க, காலக்கொடுமையைக் கண்டு மனம் வெதும்பிய ராக்ஷஸன், மனம் வெறுத்து, "ஐய, பிரபுவே! உமது எஜமானர் யாரோ அவரை இனிக் கேளும். நாம் இனி உமது எஜமானர் அல்லர். இப்பொழுது நாம் பயனற்றவரே ஆனேம்." என மொழிந்தான்.

மலயகேது முன்னிலும் முனிவுகூர்ந்து, "அடா ராக்ஷஸ! சந்திரகுப்தன் உனது எஜமான புத்திரனை மௌர்யகுமாரனுயிருக்கிருன். நானே உன்னை மித்திரன் என்றெண்ணியிருந்த பர்வதேசன் மகன்.— அங்கு, சந்திரகுப்தன் உனக்கு எதையேனும் அளித்தால் உண்டு. இங்கு, நீ எனக்குத் தந்தால் உண்டு.—அங்கு உனக்கு அடிமைத்தொழில். இங்கு சர்வசுதந்திரமும் பெற்றிருந்தாய். இவ்வாறெல்லாம் இருந்தும், இத்தகைய துராலோசனை செய்து மீளாநரகுக் காளாக்கினுயாதலின் எனக்குப் பயனற்றவனே ஆனுய், சந்தேகம் என்ன?" என, ராக்ஷஸன் மனம்

புழுங்கி, "ஐய, பிரபுவே! நீ இதனினும் கொடுஞ்சொற் கூறினும் தகும். உன்னைக் குற்றம் சொல்வதற்கில்லை." என்று கண்களில் நீர் ததும்ப உரைத்தான்.

இவ் வார்த்தையாற் கடுஞ்சினம் எய்திய மலயகேது அப் பெட்டியையும் கடிதத்தையும் காலால் உதைத்துத் தரையில் தள்ளிவிட்டு, ராக்ஷஸனை நோக்கி, "அடா செய்ந்நன்றி மறந்தவனே! குற்றமற்றவன் போல் கூறிவருகிறாயே? எங்கே இது கற்றாய்? குற்றம் உன்னுடையதன்று என்றால் பின்னை யாருடையது? மகாத்துரோகி" என, ராக்ஷஸன், "அரசே! நான் மிக்க தாழ்ந்த அவமதிப்பிற்கிடமான சேவகத்திலிருந்தவனே. ஆயினும் நன்றியறிவுமிக்க நவநந்தர்கள் என்னைக் கௌரவித்துப் பாராட்டி வந்தமையின், உலகெலாம் மதித்துப் போற்றிப் புகழும்படி காலங்கழித்து வந்தேன். அத்தகைய நந்தர்களை மாள்வித்தும், என்னைச் சத்துருவினதடிமையாக்கி ஸ்வாமிபக்தியால் நான்செய்து வரும் காரியங்களை ஈடேறாது செய்தும் வருகிற ஈசுவரமாயையின் குற்றமே, இவ்வாறெல்லாம் நிகழ்வதன் காரணமாகும். வேறு எவருடைய குற்றமும் இம்மியும் இல்லை" என்றான்.

இதனைக்கேட்டதும் மலயகேதுவின் முகம் கோபத்தால் முன்னினும் பொங்கிற்று. "அடா பிரத்யக்ஷ ராக்ஷஸ! என்ன சொன்னாய்? ஈசன் செயலா? வஞ்சக! தியாகியும் குணவானுமாகிய என் தந்தை, உன்னை 'சத்திய சந்தன்' என்றும், 'காரிய நிர்வாகி' என்றும், தன் 'மித்திரன்' என்றும் எண்ணி, கொல்புலி ஆத்தோல் போர்த்த கொள்கையினனாகிய உன் குணமும் குறியும் அறியாமல், ஐயோ! தனக்குக் கிடைக்க வேண்டிய நந்த ராஜ்யத்தின் பாதியை உனக்கே அபிஷேகம் செய்வித்து, உன்னைத் தன் மந்திரியாக்கிக்கொள்ளத் தீர்மானித்திருந்தான். அத்தகைய நல்லோனை நீ விஷகன்னிகையாற் கொன்றாய். உன் வஞ்சகம் அறியாமல் நானும் ஏமாந்து நல்லோன் என எண்ணி 'சர்வாதிகாரி' யாக நியமித்தேன். அதற்குப் பலன் கைமேல் கிடைத்துவிட்டது: மாமிச விக்ரயம் செய்பவன்போல, என் வைரியான சந்திரகுப்தன் வசம் என்னை ஒப்பித்துவிடவும் துணிந்து தீர்மானித்தும் விட்டாய்." என ராக்ஷஸன், "சிவ! சிவ!!" என்று இரு செவிகளையும் பொத்திக்கொண்டு "நான் பர்வதேசனைக் கொன்றவன் அல்லன்" என்றான்.

"நீ இல்லையேல் பின்னை யார் கொன்றது?" என்று மலயகேது உரத்துக் கூற, ராக்ஷஸன், "அந்தக் கேள்வியைத் தெய்வத்தினிடமே கேட்கவேண்டும்" என்ருன். மலயகேது "ஜீவஸித்தி என்ற க்ஷபணகனை இதைப்பற்றிக் கேட்கவேண்டாமே அப்படியானல்?" என்று ஆத்திரத்துடன் கேட்க, ராக்ஷஸன், "ஆ! ஆ!! க்ஷபணகன் சத்துருக்களின் கூடசாரனுய் விட்டபிறகு, என் மனமும் மானமும் எதிரிகளின் வசமானதற்குச் சமானமாயிற்று. என் ரகஸ்யங்களை க்ஷபணகன் அறிந்தபின் இனி யான் செய்யும் காரியம் என்ன இருக்கிறது? ஒன்றும் பலியாதுதான். ஜீவஸித்தி! பகையாளியின் குடியை உறவாடிக் கெடுக்கவா சாணக்யனிடமிருந்து வந்து என்னை அடுத்தாய்? ஐயோ! தெய்வபலமற்ற என் புருஷப் பிரயத்தனத்தினல் யாது பயன்?" என்று ஆச்சரியமும் அதி துக்கமும் அடைந்தவனுய், ஒன்றும் பேசத் தோன்ருமல் அசைவற்றிருந்தான்.

அப்பொழுது தாங்கொணுக் கோபம் எய்தியவனுய், மலயகேது திடீரென எழுந்து தன் கைப்பட ஒரு கடிதத்திற் சில வரிகள் எழுதி, அதற்கு முத்திரையிட்டுக் கலவிங்கன் என்ற ஒரு கஞ்சுகி கையிற் கொடுத்து, அவனை நோக்கி, "பிடி இதை. எடு ஓட்டம். கொடு சேகரனிடம். பதில் கொண்டுவா" என்று அவனை அனுப்பினன். ராஜதந்திரியான ராக்ஷஸன், இதனைக்கண்டு, "ஓ! ஓ!! யார்க்கோ பெருத்த ஆபத்து நேர்ந்துவிட்ட"தென்று தீர்மானித்துக்கொண்டிருக்கும்போதே, சென்ற கஞ்சுகி விரைந்தோடிவந்து, சேகரன் அளித்த பதில் கடிதத்தை மலயகேதுவிடம் தந்தான்.

கடிதத்தைப் பிரித்துப்பாராமல் மலயகேது, "நீ சென்ற இடத்தில் நிகழ்ந்த விசேஷம் யாது ? என்று கஞ்சுகியைக்கேட்க, அவன், "ஸ்வாமி! சேகரன் தேவரீரது கடிதத்தைக்கண்டதும், வேந்தர் ஐவரையும் 'ஒரு அவசரகாரியம்' என்று வரவழைத்தான். அவர்களுள் சித்திரவர்மன், ஸிம்மநாதன் புஷ்கராக்ஷன் என்ற மூவரையும் பூமிக்குள் இறக்கி மூடினன். ஸிந்துஷேணன் மேகநாதன் ஆகிய இருவரையும் ஆனைக்காலில் இடறச்செய்தான். பிறகு இக் கடிதம் கொடுத்தான். இவ்வளவுதான்" என்ருன்.

மலயகேது ராக்ஷஸனை நோக்கி, "அடா ராக்ஷஸ! உன்னுடன் சிநேகித்ததன்பயனுகச் சித்ரவர்மன் முதலியோர் இவ்வுலக ஆசையையே துறந்துவிட்டார்கள். உன்னை இன்னசெய்வதென எனக்கு இப்பொழுது தெரியவில்லை. நீ பிராமணன் என்று பெயர்கொண்டு திரிபவன். உன் போன்ற நன்றியில் பாதகன் நான் அல்லன். ஆகையால் உன்னை உயிருடன் விடுக்கின்றேன். நீ இனி சந்திரகுப்தனைச்சேர்ந்து எந்த ராஜ காரியம் இருந்தாலும் செய்துகொள். துர்நீதியானது தர்மார்த்தகாமங்களைக் கெடுப்பதுபோல, நானே உன்னைச் சந்திரகுப்தனுடன் நிக்ரகிக்கின்றேன். நில்லாதே என் முன்" என்று தன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டான்.

அப்பொழுது பாகுராயணன், "ஐய, ராஜகுமார! பிரயாணத்திற்கு இந்த லக்கினம் சிலாக்கியமானதாகத் தோன்றுததினுல் வேறு லக்கினம் பார்த்துக்கொண்டு பாடலிபுரத்தின்மீது தண்டெடுத்துச் செல்வதே உசிதமாகும். இரவு இப்பொழுது மூன்றுஜாமமாயிற்று. சித்திர வர்மன் முதலியோரது வஸ்து வாகனங்களை அங்குள்ளோர் கொள்ளையிடாது அவற்றை ராஜ பொக்கிஷத்திற் சேர்க்குமாறு சேகரனுக்கு உத்தரவிடுக" என, மலயகேது அவ்வாறேசெய்யக் கட்டளையிட்டு எழுந்தான்.

மலயகேது எழுந்ததைக்கண்ட பாகுராயணன், "நல்லது. அமாத்யரது சேவகனுக்கு என்ன உத்தரவு?" என்று கேட்க, அவன், "தூதனைச் சிக்ஷித்தல் தவறு. அன்றியும் அவன் உண்மையை ஒளியாது உரைத்தும் இருக்கிருன். ஆகையால் அவனது எஜமானனுடன் அச்சேவகனையும் சேர்த்து நமது நாட்டினின்றும் இக்கணமே அகலுமாறு உத்தரவிடுக" என்றுரைத்துத் தன் சயனக்கிருகம் அடைந்தான்.

---

## அறுபத்தைந்தாவது அத்தியாயம்.

## ராக்ஷஸன் நகரினின்றும் நீங்கல்.

"ராக்ஷஸனது சேவகன் யாராயிருக்கலாம்?" என்று அறிய அங்கிருந்தோர் அதி ஆவல் கொண்டிருந்த சமயத்தில், பாகுராயணன் ஸித்தார்த்தகனை வரவழைத்து, "அடா! உன் எஜமானனுடன் உன்னை ஓட்டி

விடும்படி அரசர் ஆக்ஞாபித்திருக்கிறார். ஆதலிற் செல்க" என்றான். உடனே ஸித்தார்த்தகன் ராக்ஷஸனருகிற் சென்று நமஸ்கரித்து, வெட்கமும் துக்கமும் உற்றவன்போல் தலைகுனிந்து நின்றான். அது கண்ட ராக்ஷஸன் "இவனாலேயே இந்த அனர்த்தங்களெல்லாம் நடந்திருக்கக் கூடும் என்று நிச்சயித்து, அவனை நோக்கி "அடா! நீ யாருடைய சேவகன்?" என, அவன் கேட்டதற்கு விடையளியாமல், கிறுக்கன் போன்று, "ஸ்வாமி! உத்தரவுப் பிரகாரமே ஜாக்கிரதையாகத்தான் சென்றேன். என்ன செய்வேன்! எனது உபாயங்களொன்றேனும் சுங்கச் சாவடியிற் பலிக்க வில்லையே!" என்றான்.

"நீ ஏது பெரும் போக்கிரியாக இருக்கிறாய்? உனக் கென்னடா நாம் உத்தரவிட்டோம்?" என்று ராக்ஷஸன் அதட்டிக்கேட்க, அவன், "ஸ்வாமி! கடிதத்தை ஒருவர் கண்ணிலும் படாமல் மறைத்துக்கொண்டு தான் இருந்தேன். என்ன செய்வேன்!" என்றான்.

"என்னடா பிதற்றுகிறாய்? கடிதம் ஏது? யார் தந்தது? உன் எஜமானர் யார்?" என்று ராக்ஷஸன் கேட்க, ஸித்தார்த்தகன், "ஸ்வாமி! நான் செய்யக்கூடியது தான் என்ன? அடி பொறுக்க முடியவில்லை, கடிதத்துடன் பெட்டியும் கீழே விழுந்து அவர்கள் கையில் அகப்பட்டு விட்டது" என்றான்.

"பெட்டி ஏதடா?" என்று ராக்ஷஸன் வினவ, அவன், "ஸ்வாமி ஆபரணங்கள் வைத்து அனுப்பியது தான்" என்றான். "ஆபரணங்கள் என்றால் என்ன?" என்று அவன் மீண்டும் கேட்க, ஸித்தார்த்தகன், "ஸ்வாமி! முத்திரையிட்டு என்னிடம் தந்த பெட்டியிலிருந்தவைகள்" என்றான். "அடா, துரோகி! முத்திரையிட்டவர்கள் யாரடா?" என்று பதறிக் கேட்க, ஸித்தார்த்தகன், "ஸ்வாமி! நானாகக் கற்பித்து ஏதும் கூறவில்லையே! தங்களுத்தரவின்படி சகடதாஸனே முத்திரையிட்டான்." என்றான்.

"அடா பாதக! முத்திரையிட்டது சகடதாஸனா? நிசந்தானா?" என ஸித்தார்த்தகன், "ஸ்வாமி பாதசாக்ஷியாக நான் என் வாயைக் கொண்டு எதுவும் வெளிப்படுத்தியதில்லை. முன்னுக்கு முன்னாகவே கள்ளங்கபடு அறியா க்ஷபணகன் சகலமும் அறிவித்து விட்டான். நான் என்ன செய்வேன்!" என்றான்.

ராக்ஷஸன், அடா துராத்மா! க்ஷபணகன் என்றால் யார்?" என்று, கர்ச்சிக்க, ஸித்தார்த்தகன், "ஸ்வாமி! என்ன ஒன்றுமே அறியாதவர் போலப் புதிதாகக் கேட்கிறீர்களே? முன் விஷகன்னிகையைத் தங்கள் உத்தரவின்படி பர்வதேசனிடம் அழைத்துச்சென்ற ஜீவஸித்தி யன்றோ?" என்றான்.

இவற்றைக் கேட்ட ராக்ஷஸன், "சிவ! சிவ!! இத் துராத்மாவான வன் குடிகாரனைப்போல் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத வார்த்தைகளைப் பிதற்றுகின்றான். இவனுடன் பேசியதே மூடத்தனம்" என்றெண்ணித் தலைகுனிந்து, "இந்த ஸித்தார்த்தகன் க்ஷபணகன் சகடதாஸன ஆகிய மூவரும் சத்துருபக்ஷத்தினர்கள் என்று அறிந்து கொள்ளும் ஆற்றலின்றி அவர்களுடன் பழகியதால் இத் துர்த்திசை நமக்கேற்பட்டுவிட்டது. பாகுராயணன் பத்திரபடன் முதலியோரும் வஞ்சகனான சாணக்யனால் ஏவப்பட்டே இங்குவந்திருக்கக்கூடும். பாவம்! இவர்கள் சமயம்பார்த்து மூட மலயகேதுவை நிக்ரகிக்கவே போகிறார்கள். மலயகேது சித்திரவர்மன் முதலிய ஐவரையும் கொன்று சேகரனைச் சேனையுடன் நகரைவிட்டுச் செல்லுமாறு அனுப்பியுள்ளதால், அதி சீக்கிரத்தில் மலயகேதுவிற்கு ஆபத்து நேரிடவேபோகிறது." என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில், எரியும் கட்டையில் எண்ணெய் ஊற்றியது போல, பாகுராயணன் எழுந்து, "ஸ்வாமி அமாத்தியரே! தக்கசமயத்திற்குதவுவான் என்றே இவனைச் சேவகனாகப் பாவித்தீர்போலும்!" என, ராக்ஷஸன், "ஆம் ஐய, பாகுராயண! சத்துருவால் சூழப்பட்ட மலயகேதுவை இந்த ராஜ்யத்திற் கழைத்துவந்து அவனுக்கு ஆப்தனாக நீ இருப்பதுபோலவே, இந்த ஸித்தார்த்தகனும் சகடதாஸனை இவ்விடம் அழைத்துவந்து நமக்கு ஆப்தனாகஇருந்தான். இவனால் நாம் அடைந்த பலனே, உன்னால் சீக்கிரம் மலயகேதுவும் அடையப்போகிறான்." என்றுரைத்து, ராஜசபைவிட்டெழுந்து மனவெறுப்பெய்தியவனாய் அந்நகரினின்றும் நீங்கலானான்." நிற்க,

சித்திரவர்மன் முதலியோர் திடீரெனக் கொலையுண்டதறிந்து, அவர்களுடைய பல்வகைப் படைகளும் நானா பக்கங்களிலும் அஞ்சி ஓடலாயின. அவற்றை ஒன்றுசேர்க்குமாறு சேகரன் தன் சேனைகளுடன் அவற்றைத் தொடரலானான். இவ் வர்த்தமானங்களை அறிந்த

சக, சீன, ஹூண, காந்தார அதிபதிகள் தாங்கள் அங்கிருப்பின் தங்கட்கும் சித்திரவர்மன் முதலியோரது கதி சம்பவிக்கும் என்று பயந்து அதிவேகத்துடன் தத்தம் சைனியங்களுடன் தத்தம் தேசம் செல்லலாயினர். நிற்க.

ஊரினின்றும் நீங்கிச் சென்று கொண்டிருந்த ராக்ஷஸன், தனக்குள் "ஆ! ஆ!! ஸ்வாமிபக்தியை முன்னிட்டு நான் எவ்வளவு விதத்தில் எவ்வளவு சாகஸச் செயல்கள் புரிந்தும், தெய்வ சகாயம் அவற்றிற்கின்மையால் அவை யாவும் பயனற்றவையாய் விட்டன. என்னுல் சித்திரவர்மன் முதலிய மன்னரும் நிரபராதிகளாக இருந்தும் அநியாயமாகக் கொலையுண்டனர். 'இனி வேறெவரையேனும் அடுத்து நினைத்த காரியத்தை முடிப்போம்' என்றுல் இப்பொழுது நிஷ்காரணமாக எனக்குற்ற அபவாதம் நான் வேறெங்கும் தலைகாட்ட முடியாமற் செய்துவிட்டது. இனி, தபோவனம் அடைவோம் என்றுல் பெருத்த வைரங்கொண்டுள்ள இம் மனதிற்குத் திருப்தி எவ்விதத்தில் உண்டாகும்? பிராணனை இழப்போம் என்றுல் அங்ஙனம் செய்வது மூர்க்க குணமுள்ள ஸ்திரீகளின் தொழில் ஆகும். ஆயுதபாணியாகச் சென்று சந்திரகுப்தன்மேல் விழுந்தடித்து அவனைக்கொல்லலாமென்றுல் அதன் முடிவு எவ்விதமிருக்குமோ? முற்கூறிய எதுவும் இப்பொழுது யுக்தமென எனக்குப்படவில்லை. இச் சமயத்தில் எனது பெண்டு பிள்ளைகளின் நிமித்தம், குடும்ப சகிதம் சிறைப்பட்டிருக்கும் எனது ஆப்த நண்பனை சந்தனதாஸனை எவ்வித உபாயத்தாலேனும் விடுவிப்பேனுகில், அதுவே இகபர மிரண்டினுக்கும் பரம சாதகமான காரியம் ஆகும்" என்று தீர்மானித்துப் பாடலிபுரத்தை நோக்கி வரலானுன்.

---

## அறுபத்தாருவது அத்தியாயம்.

## மலயகேதுவைச் சிறை செய்தல்.

ராக்ஷஸன் பாடலிபுரத்தை நோக்கிச் சென்றதையும், காந்தாராதி தேசாதிபதிகள் தமது படைகளுடன் ஓடிவிட்டதையும், சேகரன் தன் சேனைகளைத் தொடர்ந்து அவற்றை அழைத்துவரச் சென்றதையும்,

அறிந்துகொண்ட பாகுராயணன், தனக்குள், "எஜமானரான சாணக்யர் நமக்கு உரைத்து அனுப்பியபடியே காரியங்கள் யாவும் கைகூடி விட்டன. மலயகேதுவைச் சிறை பிடித்துச் செல்லவேண்டியதொன்றே இனி நடக்கவேண்டிய காரியம்." எனத் தீர்மானித்துப் "பத்ரபடனாதியோர்களின் யோசனையையும் கலந்தறிவோம்" என்றெண்ணிக்கொண்டு வெளியே வந்தான். அப்போது ஒரு தூதன் வந்து கும்பிட்டு, "ஸ்வாமி! தங்கள் சமயமெப்படி என்றறிந்து வருமாறு பத்ரபடன் முதலியோர் என்னை அனுப்பினார்கள்" என்றான்.

அது கேட்ட பாகுராயணன், தூதா! நமது சேனாபதிகள் மிருக வேட்டையாட உத்தேசித்திருக்கிறார்கள். நீ உடனே அவர்களிடம் சென்று 'அருணோதய கால மாயிற்று; நித்திரையிலிருக்கும் மிருகம் எழுந்து தனது இனங்களுடன் கூடிச் செல்லு முன்பே வேட்டைக்குரிய சாமக்கிரியைகளைச் சித்தப்படுத்திக்கொண்டு வளைந்து வந்து அதைப்பிடிக்கா விட்டால், பிறகு அதனை அதி சிரமப்பட்டுப் பிடிக்க நேரும்.' என்று நாம் உரைத்ததாகத் தெரிவித்திடுவாயாக" என்றான். தூதன் விரைந்தோடித் தனக்கு ஆக்ஞாபிக்கப்பட்ட வண்ணமே கூறினான். பத்ரபடாதியோர் அதன் கருத்தை அறிந்து, நகரத்தைச் சூழ்ந்து முற்றுகையிட்டு நகரவாயிலை நோக்கி ராஜவீதிவழி வந்துகொண்டிருந்தனர். அவர்களைப் பாகுராயணன் கண்டு, அவமானப்படுத்தாமலும் அதி மரியாதையுடனும் அரச குமாரனைப் பிடித்துப் பாடலிபுரம் கொண்டு வாருங்கள்" என்று உரைத்தான். பிறகு அவன், "ராக்ஷஸன் செல்லும் வழியறிந்து சாணக்யர்க்கு நிகழ்ந்த யாவையும் அறிவித்திடுக" என விஸ்தார்த்தகனுக்குக் கட்டளையிட்டு, ஓர் குதிரை மீதேறிப் பாடலிபுரம் நோக்கிச் சென்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம், பத்ரபடாதியோர் அதிவேகமாக வந்து ராஜத் துவாரத்திற் பலவந்தமாகப் புகுந்து சயனக் கிருகத்திற் காவல் செய்துகொண்டிருந்த கஞ்சுகிகளைக் கட்டிப்போட்டு, ஆங்கிருந்த அரசகுமாரர்களையும் அடித்தோட்டினர். ஓட்டவும், மலயகேது ஜன சந்தடியால் விழித்தெழுந்தான். தூக்கந் தெளியாதும், ஒன்றும் தெரியாதும் திகைப்பும் ஆச்சரியமும் கொண்டு அவன் நின்ற அச்சமயத்தில், ஆயுதபாணிகளான அச் சேனா வீரர் அவனைச் சூழ்ந்துகொண்டு, ஐய!

ராஜபுத்திர! காரியத்தை நிறைவேற்ற வல்ல அமாத்ய ராக்ஷஸர் பாடலி புர ராஜ்யாதிபத்தியத்தை உனக்கு அளிப்பதாகச் சபதம் செய்திருந்தாரல்லவா? அவரது சபதம் பலித்துவிட்டது. அந்நகரம் உன் ஸ்வாதீனப் பட்டுவிட்டது. உன்னை அதி ஜாக்கிரதையாக அழைத்து வருமாறு எம்மை இப்பல்லக்குடன் அனுப்பிவிட்டுத் தாம் முந்திச் சென்று கொண்டிருக்கிறார். தாமதியாமல் சிவிகையி லேறத் திருவுளம் பற்றுக." என்றனர்.

அது கேட்ட மலயகேது, "ஆ! ஏதோ மகத்தான விபத்தே எனக்கு நேர்ந்துளது!. என்னாற் புறக்கணிக்கப்பட்டு ஓடிய ராக்ஷஸன் எனக்குச் சிவிகை அனுப்பவாவது? என்ன விபரீதமோ இது!" என்று எண்ணித் திகைத்து, சேனாபதிகளை நோக்கி, "நமது பாகுராயணன் எங்கிருக்கிறான்?" என்று கேட்டான். அதற்கவர்கள் "ஐய, ராஜகுமார! அவன் அமாத்ய ராக்ஷஸனுடன் அப்பொழுதே புறப்பட்டுப் போய் விட்டானே" என்றார்கள்.

"அடடா! ராக்ஷஸன் மீது குற்றம் சுமத்தி அவனை நான் ஓட்டு தற்குக் காரணனா யிருந்தவனும் எனக்கு ஆப்தனாக இருந்து வந்தவனுமான பாகுராயணன், இப்பொழுது அந்த ராக்ஷஸனையே பின் தொடர்ந்து சென்றுளான் என்றால் அதிகம் சொல்லவும் வேண்டுமோ? பாடலி புரத்தி லிருந்து இங்கு வந்தவர்கள் யாவரும் சத்துருக்களால் அனுப்பப்பட்டவர்களே.—அவர்களே தக்க சமயம் எதிர்பார்த்திருந்து என்னை இவ்வித ஆபத்திற்குள்ளாக்கி விட்டவர்கள் என்பதில் அணுவளவும் ஐயம் இல்லை. உள்ளூறப் புரையோடிய ரணமானது சிறிது நாள் கழித்து அபாயத்தை விளைவிப்பதுபோல், இவர்களது சேர்க்கை எனக்கு இத்துன்பத்தை விளைத்து விட்டது. என் எண்ணமெல்லாம் லோபியின் செல்வம்போல் பயனின்றிப்போய்விட்டன. சேவகர்களுடன் விளையாட்டாகப் பேசித் திரியும் பிரபுவின் கௌரவமே போல், காம்போஜாதி தேசாதிபதிகளின் படைகள் என் கையினின்றும் தப்பிப்போயின. திரவியம் இழந்தவனது சுற்றமே போல், சக ஹூணர்களின் சேனைகளும் ஓடி விட்டன. வஞ்சகருடன் ஆலோசிக்கும் விஷயங்களைப் போலவே சித்ரவர்மாதி மன்னர்கள் மடிந்தனர். அதிகமாகப் பேசுபவனது ஆக்ஞையைப் போன்றே, சேகானுடைய சைனியமும் பயன்

படாது விலகிச் சென்று விட்டது. தூர திருஷ்டி யின்மையால் காரிய மிழந்தவனது கழிவிரக்கம்போல் இப்பொழுது காரியம் நிகழ்ந்து விட்டது. பெருத்த ஆபத்தும் சம்பவித்து விட்டது. மீறிப்போன விஷயத்தைக் குறித்துச் சிந்தித்தாவதென்ன? இச்சமயம் இவர்களை நான் எதிர்ப்பேனாயின், இவர்கள் என்னிடம் அவமதிப்புக் காட்டிக் கட்டி விலங்கிட்டே செல்வார்கள்." என்று சிந்தித்து, அவர்களை நோக்கி, "வீரர்காள்! அமாத்யர் நம்மை அழைத்து வருமாறு உங்கட் குரைத்த துண்டோ? நீங்கள் எனது மித்திரர்கள். உங்கட்கு இக்காரியம் சம்மதியாகில் நான் உடன் படுகிறேன்" என்றான்.

பத்ரபடாதியோர் இம்மொழி கேட்டதும் அதி வருத்தமுற்றவர்களாய் "அரசே! பெண்டு பிள்ளை வீடு பணம் முதலியவற்றின் மீது ஆசைவைத்து, சரீரத்தை எஜமானனாகவேற்பட்டவனுக்கு விற்றுவிட்டு, அடிமைத்தொழில்பூண்டு, லோகாபவாதத்தைப் பொருட்படுத்தாமற் காலங் கழித்து வரும் எம்போன்றார்க்கே உன்னைப் பிறர் வசப்படுத்தல் சம்மதமாகுமன்றிப் பிற நல்லார்க்குச் சம்மதமாமோ? ஆயினும் கவலைப் படாதே. உன்னுடைய க்ஷேம லாபங்களை எங்கள் க்ஷேம லாபங்களாகவே கருதுவோம். புறப்படுக" என்றனர்.

இவர்களுடைய முகக் குறியையும் சந்திரகுப்தனுடைய நற்குணத்தையும், சாணக்யனுடைய நீதியையும் மலயகேது பன்முறை சிந்தித்து, "சரி நமக்குப் பிராணபயமில்லை. இது நிச்சயம். ஈஸ்வரனது சங்கற்பப்படியே எதுவும் நடக்கும்" என்று தீர்மானித்து, தலையை மூடிக் கொண்டு சிவிகையில் உட்கார்ந்து கொண்டான். பத்ரபடாதியோர் அங்கிருந்த ராஜபுத்திர பரிவாரங்களைப் பிடித்துக் காவலிலிட்டு, அந்தப் புரத்தை அதி ஜாக்கிரதையாகக் காத்துவருமாறு விஜயவர்மன் என்ற சேனாபதியை நியமித்து மலயகேதுவின் சிவிகையைச் சூழ்ந்து கொண்டவர்களாய், காவலுடன் ஸாஹஸ்புரி நகரம் நீங்கிப் பாடலிபுரத்திற்கு வந்துகொண்டிருந்தனர்.

## அறுபத்தேழாவது அத்தியாயம்.

### சாணக்யனும் ஸித்தார்த்தகனும்.

நிகழ்ந்த யாவையும் அறிந்த ஸித்தார்த்தகன், ராக்ஷஸன் சென்ற வழியே சென்று, அவன் காணுது அவனைத் தொடர்ந்து போய், சோணு நதிக்கரையில் சித்தமா யிருந்த சந்திரகுப்தனுடைய சைனியங்களையும், கோட்டை கொத்தளங்களில் யுத்தத்திற்கு ஆயத்தமாய் நின்ற பதாதிகளையும் பார்த்துக்கொண்டே பாடலிபுரம் அடைந்து, அருணோதயத்தில் ஜபாஸனத்தில் உட்கார்ந்திருந்த சாணக்யனை நமஸ்கரித்து நின்றான்.

சாணக்யன் ஜபத்தை முடித்துக்கொண்டு, "ஸித்தார்த்தக! க்ஷேமமாக வந்தாயா? உட்கார், நீ சென்ற காரியங்கள் என்னவாயின? ராக்ஷஸனது செய்தி என்ன?" என்று விசாரிக்க, அவன், "மகா சந்நிதானத்தின் உத்தரவுப் பிரகாரமே, சென்ற காரியம் யாவும் ஜயமே." என்று தான் சாணக்யனை விட்டுப் புறப்பட்டதுமுதல், பத்ரபடனுதியோர் மலயகேதுவைச் சிறைசெய்து வந்ததுவரை நிகழ்ந்த சகல விருத்தாந்தங்களையும் உரைத்து, "ராக்ஷஸன் வேறெங்கும் போகத் தோற்றுதவனுய்க் கட்கபாணியாக இந்நகரமே வந்துளான். அவன் இப்பொழுது உத்தரதிக்கிலுள்ள வஸந்த வனத்தில் மறைந்து திரிகிறுன். மகா ஸ்வாமிகளின் தவப்பிரபாவத்தால், கருதிய காரியம் யாவும் பாத்திரம் அறிந்தளித்த தானம்போல் அணுவேனும் சிதருமல் சபலமாயின." என்று விக்ஞாபித்தான்.

சாணக்யன் அதி சந்தோஷத்துடன் எழுந்து, ஸித்தார்த்தகனுடன் அரமனை வந்து சந்திரகுப்தனைக் கண்டான். உடனே அவன் எழுந்து சாணக்யனை நமஸ்கரித்து, ஒரு உயர்ந்த ஆசனத்தில் உட்கார்த்தி, அவனது உத்தரவு பெற்று ஸித்தார்த்தகனுடன் ஓர் ஆசனத்தமர்ந்தான். அமர்ந்ததும், சாணக்யன் அவனை நோக்கி, "ஐய! நீ கட்டளையிட்ட கௌமதி உத்ஸவத்தை நிறுத்தி, உன்னுடு சண்டையிட்டு நான் வெளிச்சென்ற தந்திரத்தாலுண்டான பயனை இச் சித்தார்த்தகன் மூலம் அறிவாயாக" என, ஸித்தார்த்தகன், சகல சமாசாரங்களையும் தான் சாணக்யனிடம் கூறியவாறே கூறினன்.

சந்திரகுப்தன் பரம ஆச்சரியமடைந்து, மறுபடியும் சாணக்யனை நமஸ்கரித்து, "சிறுவனாகிய யான் அறிவின்மையால் இழைத்த சொற் குற்றத்தைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறேன். தங்கள் சரணார விந்தங்களின் அனுக்கிரகத்தால் மலைபோல் எனக்குற்ற சகல விபத்துக் களும் பரிதிமுன் பனிபோல் நீங்கிவிட்டன. இந் நந்தராஜ்யத்தின் மகா சாம்பிராஜ்ய பதவியானது முன்னிலும் பலமாக எனக்கு நிலைத்துவிட் டது. அணுவாயிருந்த என்னைக் கைகொடுத்து மகாமேரு வாக்கினீர் கள். எஜமானராகிய தேவரீரது திருவடித்துணையால் யான் உற்ற இப் புகழ் சந்திர சூரியருள்ளவரை நிலைத்திருப்பதாகும்." என்று அவனது இரு கால்களையும் பற்றிக்கொண்டு ஆநந்தக் கண்ணீர் வடித்தனன்.

சந்திரகுப்தனைச் சாணக்யன் தன் இரு கைகளாலும் எடுத்து ஆலிங்கனம் செய்துகொண்டு, "குழந்தாய்! சொற்குற்றம் எதுவுமே உன்னால் ஏற்படவில்லையே. சத்துருக்களை நிக்ரகிக்கும் பொருட்டு நாம் செய்திருந்த சூக்ஷ்மம் அறிந்து, நமது போக்கை அநுசரித்து, நீ நடந்துகொண்டது பற்றி நான் அதிக சந்தோஷமே அடைந்தேன். உன்னை அதற்காகக் கோபிப்பேனோ? நீ இப்பொழுது செய்யவேண்டிய தென்னவென்றால், ஆதியில் பர்வதராஜனால் நீ பெற்ற பேருதவியை நினைந்து, இப்பொழுது சிறைசெய்யப்பட்டுவரும் மலயகேதுவைப் பல விதத்தும் சன்மானித்துப் பிறகு அவனை அவனது ராஜ்யத்திற்கு அனுப்பலே யாகும். அதன் பின்னரும் அவனது க்ஷேமலாபங்களுக் குப் பாத்தியப்பட்டவனாக நீ நடந்து சுகமாய் வாழ்ந்திருக்க வேண்டு மென்பதே எனது விருப்பம்." என்று கூறி அவனை ஆசீர்வதித்து, ஸித் தார்த்தகனை அழைத்து, "அப்பா! இன்னுமொரு அதி முக்கிய காரியம் உளது. அதனையும் முடித்து வருவாயாக" என்றுரைத்து, அதிரகஸ்ய மாக ஏதோ சில சொற்களை அவன் செவியில் ஓதி, அவனை அனுப்பினான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பாகுராயணன், தூரவிருந்தபடியே சாணக்யனை நமஸ்கரிக்க, சாணக்யன் அவனை நோக்கி, "ஐய, சேனா பதியே! நியமித்த வண்ணமே காரியங்களை அணுவளவும் தவறாது செய்து முடித்து க்ஷேமமாக வந்தாயா? சந்திரகுப்தனுக்கு உங்களை யொத்த ஆப்தர்கள் இருக்கும்போது எக்காரியம்தான் அசாத்தியம்? சகல சேனாதிபத்தியமும் இனி உனக்கேதான், நீ முன்னிலும் கீர்த்தி மிக்கோ

னுய் க்ஷேமமாக இரு" என்று உரைத்து, அவனுக்குத் திவ்ய வஸ்திர பூஷணங்கள் அளித்து அவனை நோக்கி, ஐய, சேனபதியே! இங்குவரும் மலயகேதுவிற்கு வசதிகள் யாவும் குறைவற வாய்ந்த ராஜயோக்யமான ஒரு விடுதியைத் தயாரித்து, சங்கோசமின்றி அங்குக் காத்திருந்து, அவனுக்குத் தன் நகரினும் அதிசௌகரியம் ஏற்படுமாறு ராஜோபசாரம் செய்து வருக" என்று கட்டளையிட்டுத் தனது பர்னசாலை வந்தான்.

---

## அறுபத்தெட்டாவது அத்தியாயம்.

## ராக்ஷஸனும் பசுலோமனும்.

சாணக்யனது உத்தரவுபெற்றுச் சென்ற ஸித்தார்த்தகன், பசுலோமனிடம் சென்று, தனக்குக் கட்டளையிடப்பட்டிருந்த வண்ணமே அவனுக்கு அதிரகஸ்யமாக ஏதோ சில கூறி, ஸமித்தார்த்தகனிடம் சென்று, அவனிடமும் சில கூறினன். பிறகு அவனும் ஸமித்தார்த்தகனும் சண்டாளவேஷம் தரித்து, காவலிலிருந்த சந்தனதாஸனைக் கழுவிலேற்றும் வண்ணம் கொலைக்களத்திற்கு அழைத்துவரச் சென்றனர். நிற்க.

ராக்ஷஸன் தனது மித்திரனன சந்தனதாஸனுடைய யோக க்ஷேமத்தையும் சங்கதியையும் விசாரிக்க யாதொரு வழியும் காணுதவனுய், முன் நவநந்தர்கள் வேடிக்கையாய்ப் பொழுதுபோக்கிவந்த உத்தியான வனத்தைக்கண்டு, "ஆ! நவநந்தர்களே! பூபதிகளே! ஸார்வபௌமர்களே! அரசகுமாரர்களே! நீங்கள் உத்தம லக்ஷணமுள்ள அசுவ மீதேறிவந்து இத் தடாகத்தில் ஜலக்கிரீடைசெய்து, இச் சித்திர மண்டபத்திலுட்கார்ந்து என்னுடன் சல்லாபமாகப் பேசிக்கொண்டிருப்பீர்களே! இத்தகைய ராஜபோகங்களை அநுபவிக்கும் இவ் வுத்யானவனம் இப்பொழுது கருதுவாரின்றிப் போய்விட்டதே! உங்களை நினைக்குந்தோறும் என் மனம்படும் பாட்டை என்னசொல்வேன்! ஆ! மன்னர்களே!" என்று வாய்விட்டலறினன். இவ்வாறு கதறிக் கதறி நெஞ்சு காய்ந்த அவன், ஆங்கிருந்த தடாக நீரை அருந்தி அப்பாற் செல்லும்போது, ஸித்தார்த்தகனல் ஏவப்பட்டிருந்த பசுலோமன், இவன் வருவதைக் கண்டு விட்டான்.

ராக்ஷஸனைக் கண்ட அக்ஷணமே, அவன், ஒரு மரக்கிளையிற் கயிற்றைக்கட்டிக் கீழிருக்கும் ஒரு புற்றின்மேல் நின்று, சுருக்கைக் கழுத்தில் மாட்டிக்கொண்டு, நான்கு திக்குகளையும் நோக்கிக் கும்பிட்டுத் தெய்வங்களைப் பிரார்த்திப்பவன் போல, "சகல லோகேசுவரர்களாகிப் பிராணிகளின் அந்தரங்கங்களை அறிந்து அவற்றின் கர்மத்திற்குத் தக்கபடி பலனளிக்கும் இந்திராதி தேவர்களே! தர்ம சாட்சியாக இருக்கும் சூரிய பகவானே! ஆகாசமே! பூமாதேவியே! உங்களனைவர்க்கும் எனது கடைசி வந்தனத்தை அளிக்கின்றேன். நான் பிறந்தது முதல் இதுவரை மனப்பூர்வமாக யாதொரு பாவமுஞ் செய்தறியேன். உலகாபவாதத்திற் கஞ்சியே எதையும் செய்து வந்திருக்கிறேன். காமக்குரோதாதிகட் குள்ளானவனுமல்லன். எனது மித்திரற்கு நேர்ந்த அகால மரணத்தைக் கண்டு சகியாது பிராணனைவிடத் துணிந்திருக்கும் எனக்கு ஆத்மஹத்தி தோஷம் வராமல் நீங்களே காக்கவேண்டும்." என்று கூவிப் புலம்பினான்.

இம் மொழிகளைக் கேட்டுக்கொண்டே சமீபம் வந்துவிட்ட ராக்ஷஸன், "ஆ! ஆ!! இவ் வுத்தம புருஷன் யாரோ தெரியவில்லையே! நம் போன்று மித்திர நாசங் காணச்சகியாது விசனமேலீட்டால் உயிர்விடத் துணிந்திருக்கிறான் இவன். இவன் விஷயத்தை விசாரித்தறிவோம்.' என்று, அவனருகிற் சென்று, "ஐய! நீ யார்? துஷ்டஸ்திரீகள் போல் உயிர்விடத் துணிந்திருக்கிறாயே? நீ இவ்வித சாகஸம் செய்வது ஸ்திரீ வியோகத்தாலா? சொன்ன சத்தியம் தவறியதாலா? பிரமாத காரியம் ஏதேனும் விளைந்துவிட்டதாலா? எவர்மூலமேனும் ஏற்பட்ட பிரமாத விரோதத்தாலா? தீரா வியாதியாலா? அல்லது சிநேகன் பொருட்டா? உண்மையை உரைத்திடுவாயாக" என்று கூற, பசுலோமன், "அன்பிற் சிறந்த ஐய! பாக்கிய வீனனான என் விருத்தாந்தத்தை நீ ஏன் கேட்கிறாய்? இதனால் உனக்கென்ன பிரயோஜனம் உண்டாகப் போகிறது? வீண் தாமதத்திற் கிடமின்றி நீ வந்த வழியை நோக்கிச்செல்க" என்று தீனமான குரலிற் கூறினான்.

அதற்கு அமாத்ய ராக்ஷஸன், "ஐய! அபிமானத்துடன் கேட்பதற்குப் பதிலுரைக்காமல் பிராணனைப் போக்கடித்துக் கொள்ளும் நிமித்தம் ஏன் இவ்வளவு அவசரப்படுகிறாய்? விமானத்துடன் வந்த தேவ தூதர்கள் உன்னைத் துரிதப்படுத்துகிறார்களோ?" வென்று மீண்டும்

பரிதபித்துக் கேட்க, அவன், "ஐய அவ்வளவிற்கு நான் பாத்திரனல்லனே- என் விஷயம் இதுவே: இப் பாடலிபுரத்தில் எனக்கு ஆப்தனுன விஷ்ணுதாஸன் என்ற வர்த்தகனுக்கு ஏற்பட்டுள்ள புத்தி பூர்வமான மரணத்தைப் பற்றிக் கேள்வியுற்றேன். அது சகியாத யான், 'அவன் இறக்கும் முன்னரே நாம் உயிரை விட்டு விடுவோம்' என்று தீர்மானித்து ஜன சஞ்சாரமற்ற இவ் வனத்திற்கு வந்தேன்." என்ருன்.

ராக்ஷஸன் "ஐய, புருஷனே! அவ் விஷ்ணுதாஸற் குற்ற புத்தி பூர்வமான மரணத்திற்குக் காரணம் யாது?" என்று வினவ, "ஐயோ! அவ்வாச்சரியமும் பரிதாபமும் மிக்க செய்தியை என்னவென் றுரைப்பேன்! விஷ்ணுதாஸனது பரம உபகாரியும் சிநேகனுமான சந்தனதாஸன் என்பவனுக்கு ஏற்பட்ட ஆபத்தை அறிந்து, அவ்விசனத்சைச் சகிக்கமாட்டாமல் அவன் தன் வீடு வாசல்களைத் தானம்செய்துவிட்டு அக்கினிப் பிரவேசம் செய்ய நிச்சயித்துப் புறப்பட்டுவிட்டான். அஃதறிந்த யான் அவனைத் தடுக்கும் வழியின்றி இம்மண்ணுசையை நீக்கி உயிர் துறக்க நிச்சயித்து விட்டேன்." என்ருன்.

"ஆ! ஆ!! ஏதோ பிரமாதம் விளைந்தே விட்டது போல் தோன்றுகிறதே! சந்தனதாஸனது யோக க்ஷேமத்தை விசாரிக்க எண்ணி வந்த இச்சமயம் இவ் வசுப சமாசாரத்தைக் கேட்க நேர்ந்ததே. இதுவரை அவன் உயிர்த்திருப்பானுயின், என் உயிரைக் கொடுத்தேனும் அவனைக் காப்பாற்றியே தீருவேன். இல்லையேல், அவனைப் பின் தொடர்ந்து அவன் சென்ற வழியே நானும் செல்வேன்" என்று ராக்ஷஸன் தனக்குள் தீர்மானித்து, பசுலோமனை நோக்கி, "ஐய நீ சொல்லும் சந்தனதாஸனுக்குற்ற விபத்தென்ன? விவரமாகச் சொல் பார்ப்போம்" என்று கெஞ்சினுன்.

பசுலோமன், "தெய்வத்தின் கொடுமையை என்னென் றுரைப்பேன்! சந்தனதாஸன் அமாத்ய ராக்ஷஸனுக்கு மெய்ந் நண்பனும். அவ்வமாத்யன் தனக் கிடருண்டான சமயத்தில் தன் பெண்டு பிள்ளைகளை ரகஸ்யமாக அவ்வர்த்தகனின் வசம் ஒப்புவித்துவிட்டுத் தேசாந்தரம் சென்று விட்டானும். இதனை எவ்வாருே அறிந்து கொண்ட கொடியனுன சாணக்யன், சந்தனதாஸனை அழைத்து வரச் செய்து ராக்ஷஸனது குடும்பத்தினரைத் தன்னிடம் ஒப்புவித்து விடுமாறு பல விதத்

திலும் நிர்ப்பந்தித்தான். அப்பொழுது சந்தனதாஸன் ராக்ஷஸனது குடும்பம் தன் வச மில்லாததாலோ, அல்லது அவன்பாற்கொண்ட சிநேக வாஞ்சையாலோ, அங்ஙனம் செய்யாமல் "நான் அவர்களைப் பற்றிய எவ்விஷயமும் அறியேன்" என்று சாதிக்க, கடுஞ்சினமுற்ற சாணக்யன் சந்தனதாஸனைக் கழுவிலேற்றும்படி உத்தரவு செய்து விட்டான். இதற்கிடையில் சாணக்யன் மந்திரிபதம்விட்டு நீங்கிவிட்டபடியால் இதுவரை அவ்வுத்தரவு நிறைவேறாம லிருந்து வந்தது. எவனோ ஒரு அதிகாரி முன்னைய உத்தரவுகளைக் கவனித்து, "சந்தனதாஸன் ராஜத்துரோகி யாகையால் அவனுக்கிவ்வித தண்டனை ஏற்பட்டது" என்று எழுதி யிருந்ததைக் கண்டு அதை நிறைவேற்றி விடுமாறு இன்று கட்டளை யிட்டு விட்டான். அவனை இப்பொழுதுதான் கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்கின்றனர். இஃதறிந்த விஷ்ணுதாஸன், அக்கினிப் பிரவேசம் செய்யு நிமித்தம் வெளிப் புறப்பட்டான். உடனே நானும் இங்கு வந்தேன்." என்று துக்கம் தொண்டையை யடைத்தவன் போல் தியங்கித் தியங்கிக் கூறினான்.

இது கேட்ட ராக்ஷஸன், "ஐய! காரியம் ஒன்றும் மீறிப்போய் விடவில்லை. நீ என் வீணாக உயிரிழக்கின்றாய்? சந்தனதாஸற் குற்ற ஆபத்து நீங்கிவிட்டது. நீ அஞ்சவேண்டாம்" என்றுரைத்து, நீ உடனே சென்று விஷ்ணுதாஸனை அக்கினிப் பிரவேசத்தினின்றும் நிறுத்துக—விரைவிற் செல்க." என்றுரைத்து, "சிபிச் சக்கரவர்த்திக்குண்டான அழியாப் புகழே சந்தனதாஸனுக்கும் இக்கலி காலத்தில் உண்டாயிருக்கிறது" என்று மகிழ்ந்தான். அப்பொழுது பசுலோமன், "ஐய, பிரயாணியே! சந்தனதாஸனது கஷ்டம் எவ்விதம் பரிகாரமாயிற்று? நீ என்ன ஜோதிடனோ?" என்று கண்ணீர் வடித்துக் கேட்க, ராக்ஷஸன், "தனது கைவாளை உருவிப்பிடித்து, "ஐய, அன்ப! இந்த வாளினாலேயே சந்தனதாஸனது விபத்துப் பரிகாரமாயிற்றென்பதை உறுதியாக நம்பு." என்று கர்ச்சித்தான்.

இது கண்ட பசுலோமன், "ஓ! ஓ!! இவன் யுத்த முகத்தால் சந்தனதாஸனை விடுவிக்கத் துணிந்திருக்கின்றான். அசகாய சூரனாகிய இவன் இங்ஙனம் செய்யப் புகுவானாகில் விபரீத முண்டாகத் தடையே இல்லை" என்று கலங்கி, ராக்ஷஸனை நோக்கி "ஸ்வாமி! வாடும் பயிர்க்

கிரங்கி, வருஷிக்கும் மேகம் போன்று, சந்தனதாஸற்குற்ற விபத்தை நீக்குமாறு வந்துள தங்கள் நாமதேயம் யாதோ? தாங்கள் யாவரோ?" என்று ஆனந்தக் கண்ணீர் விட்டவன் போல் வினவ, அவன் "ஐய, நண்ப! நந்தர்களை இழந்து, மித்திரனை ஆபத்தில் ஆழ்த்தி, ராக்ஷஸனைப் போலவே கல் நெஞ்சு படைத்து உயிர் வாழும் யான் 'அமாத்ய ராக்ஷஸன்' என்று அறிவாயாக" என்றான்.

உடனே, பசுலோமன், யாவும் அறிந்தவன் போல் ஆச்சரியம் அபிநயித்து, தன் கழுத்தில் மாட்டி நின்ற கயிற்றுச் சுருக்கை அறுத்தெறிந்து, "ஸ்வாமி! அசகாய சூரரான தமக்கல்லாது பிறர்க்கு இது சாத்தியமாமோ? தங்கள் பெயரைக் கேட்டவுடனேயே எங்கள் எல்லோருடைய ஆபத்தும் நீங்கியே விட்டதென்பதில் என்ன தடை? தாங்கள் எப்படியும் சந்தனதாஸனுக்குற்ற விபத்தை நிவிர்த்தி செய்வதாகச் சபதம் செய்து விட்டீர்களாதலின் அது தவறாமல் நிறைவேறுமாறு ஒரு விசேஷ சமாசாரம் அறிவிக்கின்றேன்: முன்பு சாணக்யன் சகடதாஸன் என்பவனைக் கழுவிலேற்றுமாறு உத்தரவிட, அதன் பிரகாரம் அவனைக் கொலைக்களத்திற் கிழுத்துச் செல்லும்போது, ஒருவன் ஆயுதபாணியாக வந்து கொலையாளிகளைத் தாக்கி ஓட்டிச் சகடதாஸனை விடுவித்துக்கொண்டோடிவிட்டான். இச் செய்தியறிந்த சாணக்யன் அதிகோபமுற்று, அக் கொலையாளிகளையே அக் கழுவிலேற்றி, அத்துடன் நில்லாமல், அதுமுதல், "ராஜத் துரோகிகளைக் கொலைக்களத்திற் கிழுத்துச் செல்லும்போது, யாராவது ஆயுதபாணிகளாகத் தூரத்தே வருவது கண்டால், அக்கணமே, அவ்விடத்திலேயே குற்றவாளியைக் கொன்று அதன் பிறகு, ஆயுதத்துடன் அவனை மீட்க வந்தவனை சிக்ஷிக்குமாறு கட்டிப் "பிடித்துக் கொணர்க" என உத்தரவு பிறப்பித்துளான். இப்பொழுது சந்தனதாஸனைக் கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லும் சமயமாயிற்று. காலதேச வர்த்தமானங்கள் அறிந்திருக்கும் தங்களுக்கு நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. உசிதம்போற்செய்து சபதத்தை ஈடேற்றிச் சிநேகனைக் காப்பாற்றவேண்டியதே தங்கள் கடமை" என்றான்.

ராக்ஷஸன் இதைக்கேட்டு, தனக்குள், "சாணக்யனே ஸித்தார்த்தகனை அனுப்பிச் சகடதாஸனை விடுவித்ததுபோற் செய்வித்து நம்மிடம்

அவனைச் சேர்த்து இவ்வித தந்திரங்கள் எல்லாம் செய்திருக்கக்கூடுமோ? ஓ! இராது. ஏனெனில் அவன் கொலையாளிகளைக் கொன்றுவிட்டா னுமே. ஆதலால் அங்ஙனம் எண்ண இடமில்லை—ஒருவேளை, ஸித் தார்த்தகன் சகடதாஸனது நண்பனுகவே இருந்து அவனைப் பிழைப் பித்து நம்மிடம் அழைத்து வந்திருக்கக் கூடுமோ என்றால், அப்படியும் இராது. ஏனெனில், சகடதாஸன் ஸித்தார்த்தகனிடம் சந்திரகுப்த னுக் கனுகூலமாகப் பொய்க்கடிதம் எழுதித்தர நியாயமே இல்லை.— சாணக்யன் மந்திரிபதவியினின்று நீங்கியதும் பொய்யோ என்று பார்த் தால், இப்பொழுது இவனது வார்த்தையால் அது மெய்யென்றே தெரி கிறது.—சந்திரகுப்தனுவது நியாயத்தை விசாரித்துச் சந்தனதாஸனை விடுவிக்கவேண்டாமோவென்றால், முன்பு சாணக்யன் சர்வாதிகாரமும் வகித்திருந்த சமயம், சந்தனதாஸன் ராஜத் துரோகி என்று குற்றஞ் சாட்டி விட்டானுதலின், சந்திரகுப்தன்மீது குறைகூறுதற் கில்லை. எவ் விதம் யோசித்துப் பார்த்தாலும், சாணக்யனுடைய தந்திரோபாயம் இவ்விதம்தான் என்று நிச்சயித்துரைக்க முடியாமலிருக்கிறது. அது மின்னெளிபோலும், பரமாத்ம ஸ்வரூப லக்ஷணம்போலும் அசாத்திய மாக இருக்கிறது—எது எவ்விதமாயினும் சரி. இப்பொழுது இவன் சொன்னதிலிருந்து நமது சௌகரியத்தை முன்னிட்டும் சந்தனதாஸ னுக்கு க்ஷேமமுண்டாக்க முடியுமெனத் தோன்றவில்லை. ஏதேனும் ஓர் உபாயம் செய்து நானும் அவனும் க்ஷேமமுறவேண்டியதே என்றால், அதுவும் காலதாமதமின்றி உடனே முடியக்கூடிய விஷயமன்று. என் பொருட்டே ஆபத்தில் அகப்பட்டு இப்பொழுது உயிர் துறக்கச் சித்த னுக இருக்கும் சந்தனதாஸனை நான் காப்பாற்றவேண்டுமானால், அவ னுக்குப் பதிலாக என்னையே கழுவிலேற்றுமாறு செய்துகொள்வது தான் உபாயம்" என்று தீர்மானித்து, கையிலிருந்த வாளை விட்டெறிந்து விட்டு, பசுலோமனை விஷ்ணுதாஸனைக் காப்பாற்றி வருமாறு அனுப்பித் தான் கொலைக்களம் நோக்கி அதிவேகமாகச் செல்லலானான்.

---

## அறுபத்தோன்பதாவது அத்தியாயம்.

## சந்தனதாஸன் கொலைக்களம் சார்தல்.

ராக்ஷஸன் சென்றதும், பசுலோமன், ஓட்டமாய் ஓடிச் சாணக்ய னிடம் நிகழ்ந்த விருத்தாந்தங்கள் யாவையும் தெரிவித்தனன். உடனே சாணக்யன், சந்தனதாஸனை அதிவிரைவில் கொலைக்களத்திற் கிழுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டான். அக்கணமே, சண்டாள வேஷம் தரித்த ஸித்தார்த்தகனும் ஸமித்தார்த்தகனும் சந்தனதாஸனைச் சிறைச்சாலையி னின்றும் வெளிப்படுத்தி அவன் கழுத்தில் எருக்கம்பூ மாலையிட்டு 'ராஜத் துரோகியைச் சிக்ஷிக்கும் முறை இதுவே' என்று கூவிக்கொண்டு ராஜவீதிகளைச்சுற்றிக் கொலைக்களத்திற்கு இழுத்துச் சென்றனர். அப்பொழுது அந்நகர ஜனங்கள் ஆங்காங்கு கூடி நின்று பற்பலவாறு தாம் கண்ணுற்ற விஷயத்தைப் பேசலாயினர்: சந்தனதாஸன் தன் மித்திரன் பொருட்டு உயிரும் இழக்கத் துணிந்ததைப் பாராட்டி வியந் தனர் சிலர்; கொலையாளிகள் அவனை முன்னின்று இழுத்துச் செல்ல, அவனிற் பிரியாத அவனது அன்பார்ந்த மனைவியும் அருமைக் குமார னும் கதறிப் பின்பற்றிச் செல்வதைக் கண்டு கண்ணீர் வடித்தனர் சிலர்; அரசன தாணைக் கஞ்சி வாய் திறத்தற்கும் துணியாது வாடி நின்றார் பலர்.

அப்பொழுது சந்தனதாஸன் தன்னைப் பின்தொடரும் மனைவியை நோக்கி, "அன்பே! அநியாயம் செய்து அதனால் அரச தண் டனைக்குள்ளாகிய ஒரு குற்றவாளியின் மனைவியைப்போல், நீ விசனிப்ப தேனோ? ஆப்த நண்பன் பொருட் டாருயிரைத் திரணமாக மதித்துள்ள எனது பத்தினியான நீ சஞ்சலப்படுவது தவறேயாம். வேட்டைக் காரர்கள், தாம் கண்ணிற்கண்ட மிருகம் எதுவானாலும் அடித்தழிப் பார்களல்லவா? அதுபோல் இக்கொலைஞரும் என்னை இழுத்துக் கொல்லப் போகின்றனர். நான் உயிர் பிழையேன். ஆதலின் நீ என் ஆசையைத்துறந்து திரும்பி வீடு செல்க" என்று அவளுக்கு ஆறுதல் கூறும்போது கொலைக்களம் சமீபித்து விட்டது.

சமீபித்ததும், ஒருவன், "ஐய, செட்டி! கொலைக்களம் அதோ வந்து விட்டது. உன் தேகத்திலுள்ள சகல ஆபரணங்களும் எங்களைச் சேரவேண்டியவை. ஆதலின் அவற்றைக் கழற்றித் தருக. உன் ஜனங்களை அனுப்பி விடுக. தாமதம் வேண்டாம்" என்றான். அப்பொழுது அவன் மனைவி முன்னிலும் பதறிக் கதறினாள். சந்தனதாஸன் அவளை நோக்கி, "பேதாய்! விசனப்படுவதாற் பயனென்னை? மனதைத் தேற்றிக்கொள். குழந்தையைக் கூட்டிக்கொண்டு வீடு போய்ச் சேர். இங்கு இனி நடக்கும் கோர கிருத்தியத்தை அவன் கண்ணுறுவானாகில், அவன் உளம் நடுங்கி உயிரிழந்தாலும் இழப்பான். எனக்குப் பின் உனக்கு ஆதரவும் ஆறுதலும் அளிக்கக்கூடிய இவ்வொரே மகனையும் இழந்து அநாதையாய் அல்லலுறாதே" என்று அவட்கு நன்மதி கூறினான்.

அது கேட்ட அக் கற்பரசி, "ஆ! நாத! உன்னிற் பிரிந்து யான் எதன் நிமித்தம் உயிர்வாழ்வதோ? நீ செல்லுமிடமே எனக்குச் சுவர்க்கம். நானும் வருகிறேன்." என்று பிரலாபிக்க, சந்தனதாஸன், "ஆ! பைத்தியக்காரி! நமதருமைப் புதல்வன் அதி சிறுவனாயிற்றே. அவன் உலக விவகாரம் ஒரு சிறிதும் அறியாதவன் ஆதலின் அவனைக் காக்கும் பொருட்டேனும் நீ உயிர்த்திருப்பது அவசியமன்றோ? அவன் எனது சிற்றுரு என்பதை அறிந்திருந்தும் இவ்விதம் விசனித்தல் தக்கதோ?" என்றான்.

அதற்கவ் வுத்தமி, "ஆ! காந்த! விதிவசத்தால் சின்னாட் பிரியும் புருஷர்களின் மனைவியரும் அப் பிரிவு சகியார்களே. சீக்கிரத்தில் அவர்களைக் காணலாம் என்ற நிச்சயபுத்தி இருத்தலினாலேயே அவர்கள் உயிர் தரித்திருக்கின்றனர். இல்லையேல் இறந்தே விடுவர். உண்மை ஈதாக, வேறுலகு அடைய இருக்கும் உன்னை விட்டுப் பிரிந்து நான் அநாதையாக உயிர் வாழ்வேனோ? அதனினும் உன்னுடன் நீ செல்லுமிடம் செல்வது எவ்வளவு சிலாக்கியமானது! குழந்தையைப் பற்றி ஏனோ கவலை? கற்பித்தான் போனானோ? காக்கக் கடன் இலையோ? ஸத்தியம் என்பது ஒன்றிருந்தால் நம் இருவர்க்கும் இதுவே நற் கதியளிக்கும்" என்று திட புத்தியுடன் கூறித் தன் குமாரனை நோக்கி, "அப்பா, குழந்தாய்! உன் தந்தை முகத்தைக் கடைசியாக இப்பொழுதே நன்றாகப் பார். அவர் சொல்லும் புத்திமதிகளை நன்றாகக் கேட்டுக்கொள் என்று துடிதுடித் தழுதாள்,

அதுகேட்ட அச்சிறுவன் தந்தையினடியில்விழுந்து புரண்டழுது "அப்பா! அப்பா!" என்றலறி, எந்தாய்! இனி நான் யாரை 'அப்பா!' வென்றழைப்பேன்! யாரை நமஸ்கரிப்பேன்! யார் என்னை ஆதரிப்பார்கள்! உங்களிற் பிரிந்து நான் எவ்விதம் உயிர் வாழ்வேன்! ஐயோ! இனி என்னைத் 'தந்தையில்லாப் பிள்ளை' என்று எல்லோரும் சொல்வார்களே! அதை எப்படிச் சகிப்பேன்! இனி நான் பிழைக்கும் வழி என்ன?" என்று பரிதவித்தான். அவனைச் சந்தனதாஸன் வாரி எடுத்தணைத்துக்கொண்டு உச்சிமோந்து "செல்வச் சிரஞ்சீவி! 'சாணக்யன்' என்ற பெயரும் உச்சரிப்பும் எந்தத் தேசத்தில் இல்லையோ அங்குச் சென்று வசிப்பாயாக. எவ்வித கஷ்ட நிஷ்டூரங்கள் நேரிடினும் சத்தியத்தைக் கை விடாதே. பிறர்க்குத் துரோகம் செய்யாதும், அடைக்கலப் பொருள்களை ஆருயிரினும் மேலாக மதித்தும் வருவாயாக. இவ்விதம் நடந்து கொண்டால் மட்டுமே உண்மையில் எனது புத்திரனாவாய்." என்று புத்திமதி கூறிக் கொண்டிருக்கும்போதே, கொலையாளிகள், "செட்டி! போதும் போதும் சூலம் சித்தமாய் விட்டது. வா இங்கே முன்னால்" என்று அவனை நெட்டித் தள்ளினர்.

அப்பொழுது வர்த்தகனது மனைவி, கொலைஞரை நோக்கி "அண்ணன்மார்களே! நீங்கள் என் போன்ற பெண்களுடன் பிறந்ததில்லையோ? என் நாயகனை நீங்கள் கழுவேற்றி விட்டால், ஐயோ! நான் அமங்கலியாவேனே! நானும் என் மைந்தனும் அநாதையர் ஆவோமே! எங்களைக் காப்பாற்றுங்கள். மங்கலியப்பிச்சை தாருங்கள். குழந்தைமுகம் பாருங்கள்." என்று கையெடுத்துக் கும்பிட்டுக் கோவென்று கதறி வேண்டி மன்றாடக் கொலைஞர், அவளை நோக்கி, "பேதையர்க் கரசே! ஐயோ! உனக்கு நாங்கள் என்ன செய்யக் கிடக்கிறது? நாங்கள் பராதீனர்கள்; அதிகாரியின் உத்தரவின்படி நடந்தே தீரவேண்டியவர்கள். எங்களை வேண்டிக்கொள்வதனால் பயனே இல்லை. காலன்வசமடைபவனது பெண்டுபிள்ளைகளை ஈசனே காக்கவேண்டும்" என்று கூறிச் சந்தனதாஸனைத் துரிதப்படுத்தினர்.

அப்பொழுது, சந்தனதாஸன், அதுவரை மார்போடணைத்திருந்த தன் அருமைப் புதல்வனைக் கீழிறக்கத் தொடங்கலும் அப்பாலகன், அவனது தோள்களைத் தனது இருகைகளாலும் பற்றிக்கொண்டு

விம்மி யழலானான். சந்தனதாஸன் அவனை நோக்கி, "கண்மணி! அருந் தவப் புதல்வ! இனி நீ இங்கிருக்கக் கூடாது. உன் தாயைச் சமா தானப்படுத்தி அழைத்துச் செல். தாமதியாதே" என்று கூற, அச் சிறுவன், "தந்தாய்! உலகோர் பரோபகாரத்தின் பொருட்டுச் சகல சொத்துக்களையும் இழந்து கீர்த்தி சம்பாதிப்பதுண்டு. நீயோ இப் பொழுது பிறர் பொருட்டுப் பிராணனையே இழக்கவும் சித்தமாயிருக் கின்றாய். ஆதலின் உனக்கு இருமையிலும் புகழுண்டு. ஆயினும் எங்கள் கதி யென்ன? நாங்களிருவரும் அநாதைகளாயினோமே" என்று பதறி அழுதான். அவ்வழுகைக்குரல் கேட்டதும், இதுவரை சற்றும் மனங்கலங்காதிருந்த சந்தனதாஸன் மனம் கலங்கிவிட்டது. அவன் தன் மகனைத் தடவிக்கொடுத்துத் தன்னை யறியாமலே கண்ணீ ருகுத்தான்.

இவற்றைக்கண்டு கொலையாளிகள் வர்த்தகனது மனைவி மக்களை "இனி, தாமதிக்க முடியாது. இனி நீங்கள் இங்கு இருக்கவும் கூடாது. போங்கள்! போங்கள்!" என்று அதட்டி ஓட்டச் செட்டியின் மனைவி தனது மார்பிலும் தலையிலும் அடித்துக்கொண்டு அழுது தரையில் விழுந்து கடகடவென்று உருண்டு, "ஐயோ! தெய்வமே! ஆ! விதியே! எனக்கு மங்கலியப்பிச்சை அளிக்கக்கூடியவர் இல்லையோ?" என்று கூவிக் கதறினாள். "அப்பா! அப்பா! ஐயோ! அப்பா!" என்று அவன் மகன் நெஞ்சுலறக் கதறினான்.

---

## எழுபதாவது அத்தியாயம்.

## ராக்ஷஸன் தன்னை ஒப்புக்கொடுக்க உடன்படல்.

சந்தனதாஸனது பிரிவாற்றாது அதி பரிதாபமாகக் கதறிய இரு வருடைய குரலும் அதிவேகமாகக் கொலைக்களத்தை நோக்கி வந்து கொண்டிருந்த ராக்ஷஸனது செவியிற் பட்டன. உடனே அவன் "அடடா! காரியம் மிஞ்சிப்போய்விட்டதோ என்னவோ தெரியவில் லையே!" என்று ஓடோடியும் வந்து, 'நல்லவேளையாய்ப் பயமில்லை' எனத் தெளிந்து, சந்தனதாஸன் மனைவியை நோக்கி, "அம்மணி! என் தாயே! நீ கதறியழ வேண்டாம் அம்மா! உன் பதியை மீட்டுத் தருகிறேன்"

என்று உரக்கக் கூறி, சூலத்தருகிற் சென்று, "கொலையாளிகளே! பிரபுக்களான நந்தர்களை யிழந்து சிநேகனை இவ்வித ஆபத்திற்குட்படுத்திய மகாபாபியான என்னைக் கழுவிலேற்றவேண்டுமே யல்லாது, நிரபராதியான இச் சந்தனதாஸனைக் கொல்லல் சரியோ? சந்தனதாஸற்குற்ற சிக்ஷை என் நிமித்தமாகவன்றோ? தண்டனைக்குப் பாத்திரனான நானே நேரில்வந்திருக்கும்போது அவனையேன் உபத்திரவிக்கவேண்டும்? அவனைத் தயைசெய்து விட்டுவிடுங்கள்" என்றுரைத்துத் தான் கழுமரத்திலேறத் தொடங்கினான்.

அப்பொழுது சந்தனதாஸன் அவனை நோக்கி, "அமாத்யரே! இன்றுவரை நான் செய்துவந்த சாகஸத்தை வீணாக்கியும், நிறைவேற்ற உத்தேசித்திருந்த பெருங் காரியங்களை நிறைவேற்றற் கிடனின்றியும் அற்ப மனிதனேயான என்பொருட்டுத் தாங்கள் இங்கு வரலாமோ? நான் செத்தால் போவது ஒருயிர்தானே? சகல ஜன ரக்ஷகராயும் அநேக ஜன போஷகராயும் இருக்கும் தாங்கள் மரணத்திற்குத் துணிந்து இது செய்யலாமோ? இவ்விதம் தாங்கள் அவசரப்பட்டு முன்வந்தமைக்கு என் மனம் வருந்துகின்றதே" என்ன; ராக்ஷஸன், "ஐய, மித்திர சிகாமணி! என்விஷயத்திய கவலையை இனி நீ விட்டுவிடு. நீ செய்த உபகாரத்திற்குப் பிரதி யுபகாரம் எதும் செய்யமுடியாதவனாக இருக்கிறேன். என்னாலியன்றவரை உசிதமான காரியமே செய்யத் துணிந்தேன்." என்றுரைத்து, கொலையாளிகளை நோக்கி, "அதர்மங்களுக் காதாரமாகிய இக் கலியுகத்தில், பௌத்த மதத்தினனாகிய இச் சந்தனதாஸன், சிபிச் சக்கரவர்த்தியேபோல் தன் உயிரையும் கொடுத்து நம்பினவரைக் காப்பாற்றுகிறதென்று யார்பொருட்டு நிச்சயித்துச் சாசுவதமான கீர்த்தியை அடைந்துளானோ, அந்த ராக்ஷஸனான நான், இதோ கழுவிலேறச் சித்தமாக இருக்கிறேன். என்னைக் கழுவிலேற்ற உடன்படுவீராயின் நானே கழுமரத்தை அடைவேன்" என்றான்.

அதனைக்கேட்ட கொலையாளிகள், "ஸ்வாமி அமாத்யரே! நீர் இவ்விதம் செய்து எங்களை ராஜாக்ஞைக் குட்படுத்தல் நியாயமாகாது. பிரபுவின் உத்தரவின்றி உங்களைக் கழுவிலேற்றவோ சந்தனதாஸனை விட்டுவிடவோ எங்கட் கதிகாரம் ஏது? உங்கட்குச் சிநேகவாஞ்சையுள்ள துண்மையாயின், தாங்களே நேரில் வந்து அரசரிடமிருந்து

விரும்பும் உத்தரவைப்பெறுங்கள்; நாங்கள் அதுவரை சந்தனதாஸனைக் கழுவிலேற்றுது காவலில் வைத்துவிட்டுத் தங்களுடனேயே வரு கிறோம்." என அமாத்யன், "ஆம்! இவர்கள் சொல்லுவது சரி" என் றுணர்ந்து, அவர்கள் சொல்லிய வண்ணமே செய்யத்தீர்மானித்தான். பிறகு அவன், சந்தனதாஸனை அவனது பெண்டு பிள்ளையுடன் ஒரு மா நிழலில் உட்கார்ந்திருக்க ஏற்பாடுசெய்து, சாணக்யனுடைய பர்ண சாலையின் சமீபத்தில் வந்துகொண்டிருந்தான்.

அப்பொழுது, உத்தரதிக்கில் பிரளயமேகங்களுடைய கர்ச்சனை போல் பெரும் பேரிரைச்சலுடன் பத்ரபடாதியர்சேனை பேரிகாகள வாத் யங்களுடன் வந்துகொண்டிருந்தன. அவற்றின் கால்களின் தூளிகளால் திக்குக்கள் மூடிப்போயின. பூமி இரு பிளவாகப் பிளந்து போகுமென அஞ்சுமாறு எங்கும் பல்வகைப் பேரொலி கேட்டது. ஒருக்கால் சத் துரு சைனியங்கள் வருகின்றனவோ என்று சாமானிய ஜனங்கள் பயந் தார்கள். இவற்றைக் கண்ட ராக்ஷஸனும் சந்திரகுப்தன் மீது மலய கேது தனக்குற்ற வைரத்தைத் தீர்த்துக் கொள்ளுமாறு, வருகின்றான் போலும் என்று யோசித்துக் கொண்டிருக்கையில் யுத்தமென்ற கவலையே யின்றியும், எவ்வகைப்பிரயத்தனமும் செய்யாதும், பிராகாரமீதிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டும் நின்ற ஜனங்களையும், முகநோக்கி ஒருவர்க்கொருவர் பரிகசித்தவண்ணமாகச் சிரித்துக்கொண்டு தன் னுடன் வரும் சண்டாளர்களையும் கண்டு, ராக்ஷஸன், "இஃதென்ன சூழ்ச்சியோ தெரியவில்லையே! கோட்டை மீது யுத்தப் பிரயத்தினமே யின்மையால், வரும் சைனியம் சந்திரகுப்தனது பகைவர்க ளதன்று:— ஆம். பத்ரபடாதியர் சைனியமெனவே தோன்றுகிறது. உண்மை இப் பொழுதுதான் விளங்குகின்றது: மலயகேதுவின் அருகில் நான் இருப் பின் அவனைப் பிடிப்பது அசாத்யமான காரியம் என்றே, முதலில் பொய்க்கடிதம் எனக்கு விரோதமாகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. அஃ தேற்படாவிடின் என்னை ஓட்ட முடியாதல்லவா? அதி சூரர்களான சித்ர வர்மாதியர்களுமன்றோ இக்கற்பனைகடிதத்தால் இறந்தனர். இறந்த மன்னரது சேனைகளைத் திரட்டி வருமாறு சேகரன் அனுப்பப்பட்டதும் மலயகேதுவிற்கான உதவி குன்றவே அன்றோ? பாடலிபுர சேனாபதிகள் யாவரும் வந்ததும் மலயகேதுவைச் சமயம் பார்த்துப் பிடித்துச் செல் லவே தான். சாணக்யனது சூழ்ச்சிதான் என்ன! பாவம்! மலயகேது

உதவி செய்ய யாருமின்றித் தனித்திருக்கையில் சேனாபதிகளால் பிடி பட்டு இங்கு வருகிறான் போலும்! அவனைக் கொண்டுவருவோரது ஜய பேரிகையே நான் கேட்பது. வேறில்லை. சாணக்யன் ஒரு காரியத்தைச் செய்தது இருவித பிரயோஜனங்களை அடைந்து விட்டது. நான் ஸித்தார்த்தகனையும் சகடதாஸனையும் ஆப்தரென்றெண்ணி மோசம் போனதுபோல் பாவம்! பேதை மலயகேதுவும் பாகுராயணனை நம்பி மோசம்போய்விட்டான்." என்று யோசித்துக்கொண்டே சாணக்யனது பர்ணசாலைக் கருகில் வந்து சேர்ந்தான்.

---

## எழுபத்தோராவது அத்தியாயம்.

## சாணக்யன் ராக்ஷஸனைச் சரிப்படுத்துதல்.

ராக்ஷஸனுடன் வந்த கொலையாளிகள் அவனைப் பர்ணசாலையின் புறத்தே நிறுத்தி, வாயிற்படியில் நின்ற சிஷ்யர்களைத் தூரத்திலிருந்த வண்ணமே கூவி, "ஸ்வாமிகாள்! "அமாத்ய ராக்ஷஸர், நீதியாகிய பாசத் தாற் கட்டுண்டு தங்களைத் தரிசிக்குமாறு இங்கு வந்திருக்கிறார்" என எஜமானருக் கறிவியுங்கள்" என்றார்கள். அதனைக் கேட்ட சிஷ்யர்கள் உள்ளே ஓடி அச் சமாசாரத்தைச் சாணக்யனிடம் அறிவிக்க, அவன் வாயிற்சந்தின் வழியாய் எட்டிப்பார்த்து, "ஆ! ஆ!! இவனே மகா புருஷனாகிய அமாத்ய ராக்ஷஸன்!" என்று அதிசயித்து ஆசனத்தைவிட் டெழுந்து, கொலையாளிகளில் ஒருவனை நோக்கிச் "சுடர்விட் டெரியும் அக்கினியை மடியிற் கட்டுவது போன்றும், சண்டமாருதத்தைத் தளை யிடுவதுபோன்றும், கடுஞ்சினத்த சிங்கத்தைக் கையால் தடவுவதுபோன் றும், இம் மகாத்மாவை இங்கு எவ்விதம் அழைத்து வந்தீர்கள்?" என்று வினவ, அவன், "ஸ்வாமி! இக் காரியானுகூலத்திற்குச் சந்நிதானத்தின் நீதிமேன்மையே காரணமாம். அஃதன்றிப் பிற எதனாலேனும் இது முடியக்கூடியதன்று" என்றான். அது கேட்ட சாணக்யன், "அன்று; அன்று. நந்தர்களிடம் பகைமைகொண்ட தெய்வமே ராக்ஷஸனை இங்கு அழைத்து வந்தது என்று சொல்லவேண்டும்." என்றான்.

இங்ஙனம் எண்ணியும் பேசியும் நின்ற சாணக்யனைத் தூரத்தி லிருந்தவண்ணமே கண்ட ராக்ஷஸன், "இவனே துராத்மாவான சாணக்ய

ருதல்வேண்டும்." என்று எண்ணினன். பிறகு சிறிதுநேரத்திற் கெல்லாம்—"சீ! இவன் மேதாவி; குணசம்பன்னன். ஆதலின் இவனைத் துராத்மா எனத் தூஷிக்க வொண்ணாது. இவன் சகல சாஸ்திரங்களிலும் அளவற்ற பயிற்சியுற்றவன்; அன்றியும் பெருத்த கீர்த்திலாபங்களில் மகாவிரக்தன். ஆதலின் இவனை 'மகாத்மா' வென்றே சொல்லவேண்டும். தேஜஸினால் அக்கினிபோற் பிரகாசிக்கும் இவ் வந்தண சிகாமணியை அவமதித்ததினாலேயே நந்தர்கள் நாசமடைந்தார்கள் என்பதிற் சந்தேகமில்லை. இவனுடைய சாகஸத்தை மெச்சாவிடில் நான் அசூயை உள்ளவனே ஆவேன்" என்று பலவாறு எண்ணமிட்டுக்கொண் டிருந்தான்.

சாணக்யனோ, தனக்குள், "இம் மகாபுருஷனை வரவழைக்கவேண்டுமென்ற கவலையினாலேயே எனக்கு ஆகார நித்திரைகளும் ருசிக்காமற் போய்விட்டன. சந்திரகுப்தனது சேனைகளும் அதிசிரமப்பட்டுக்கொண் டிருந்தன. இன்று இவன் நிக்ஷேபமே போற் கிடைத்துளான். இன்றே எனது எண்ணம் முற்றும் நிறைவேறியது; எனது சாகஸமும் பலித்தது" என்று நினைத்துக்கொண்டே, ராக்ஷஸன் அருகில் வந்து, "ஸ்வாமி! அமாத்ய ராக்ஷஸரே! சணகனது புத்திரனும், "விஷ்ணுசர்மன்" என்ற பெயரினனுமான நான் நமஸ்கரிக்கின்றேன்" என்று கூறி நமஸ்கரித்தான்.

உடனே ராக்ஷஸன், "ஐய, மகாதேஜஸ்விகளான சாணக்யரே! சண்டாளர்களால் சூழப்பட்டுள்ள இப் பதிதனைத் தங்களைப்போன்றவர்கள் நமஸ்கரிக்கலாமோ?" என்று ஏங்கிக் கூற, சாணக்யன், "ஸ்வாமி, அமாத்யரே! உண்மையை ஏன் யான் ஒளித்து உங்களுடன் உரையாடல் வேண்டும்? தங்களுடன் வந்திருப்பவர்கள் சண்டாளர்களே யல்லர். சண்டாள வேஷதாரிகளே. இது சத்தியம்" என்றான்.

"ஆ! அப்படியா? அங்ஙனமாயின், நான் இன்னும் சீரழிந்து கேடு கெட்டுப் போகவில்லை. பிராமணோத்தமரான தங்கட்குச் சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கின்றேன்". என்று கூறி நமஸ்கரித்தெழுந்து, "சண்டாளர்கள் இல்லையேல், அவர்கள் யாவரோ?" என்றான். அதற்குச் சாணக்யன் "ஐய! ஒருவன் உங்களிடமேயிருந்துகொண்டிருந்த ஸித்தார்த்தகன் என்பவன். இவனே உங்கள் ராயஸக்காரனான சகடதாஸன்கண்ணில் மண்ணடித்து அவன் கைப்படக் கடிதம் எழுதிவாங்கியவன். மற்றொருவன் ஸமித்தார்த்தகன். இவர்கள் நிற்க; இதோ நிற்பவன் உங்களுக்குச்

சிநேகனுயிருந்த க்ஷபணகனுன இந்து சர்மன்: இவன் என்னுடன் குருகுலவாசம் செய்து அத்தியயனம் செய்தவன். பாகுராயணன் முதலிய யாவரும் என்னால் அனுப்பப்பட்டே தக்க சமயம் எதிர்பார்த்திருந்து காரியத்தை முடித்தவர்கள். பர்வதேசன் தரித்திருந்த ஆபரணங்களை வர்த்தகர்மூலம் உங்களிடம் சேர்ப்பித்தவன் நானே. முன்பு நவநந்தர்களையும் வஞ்சித்த மாஸோபவாஸி இவன்தான். இன்று கழுத்திற் சுருக்கிட்டுக்கொண்டு உங்களிடம் விவகரித்தவன் பசுலோமன்; அவன் இவன்.—சந்திரகுப்தன் சன்மார்க்கனுயும், நிர்த்தோஷியாயும் இருப்பதாலும், இனி நான் விரக்தனுத் தபோவனம் செல்லவேண்டிய தவசியமாதலாலும், உங்கட்கும் அவனுக்கும் சந்திசெய்து வைத்தற்பொருட்டே, இவ்வளவு கபடமும் சூதும் மிக்க சூழ்ச்சிகளை நான் கையாடவேண்டி வந்தது. உள்ளபடியே உங்கள்மீது அணுவளவு துவேஷமும் எனக்கில்லை." என்றுரைத்து, ராக்ஷஸனுடைய கையைப் பிடித்துக்கொண்டு தன் பர்ணசாலைக்குள் நுழையலானுன். நுழைந்தவன், "உள்ளே ஒருவரையும் விடாதே" என்று தன் சிஷ்யனுகிய சாரங்கரவனுக்குரைத்துத் திரும்பிவந்து, அமாத்யனுக்குப் பிரம்பாற் செய்த ஓராசனம் அளித்து, தர்ப்பாஸனத்தில் தானுட்கார்ந்துகொண்டு அவனுடன் சம்பாஷிக்கலானுன்.

"ஐய, அமாத்யரே! சகல விருத்தாந்தங்களையும் தங்களிடம் நான் சத்தியமாகத் தெரிவிக்கின்றேன். இப்பொழுது தங்கள் மனதிற் குடிகொண்டுள்ள பிற விசனங்களை விட்டு, கோப்பிராமணர்கட் கிதமாக நான் கூறுவனவற்றை நன்கு யோசித்துப் பாருங்கள். அவை தங்கள் மனத்திற்கும் 'சரி' என்று படுமாகில் அவ்விதமே நடத்துங்கள். இக் கலியுகத்தில் நவநந்தர்கள் பர்வதராஜன் சித்திரவர்மன் முதலிய துஷ்ட க்ஷத்திரியர்கள், பௌத்தம் முதலிய துர்மதங்களை ஆதரித்து, வேதாந்தமும் சாஸ்திரோக்தமுமான சற்கருமங்களை நடத்தாதும், பிராமணுத்தமர்களைப் பரிபாலியாதும், துன்மார்க்கங்களை அநுசரித்தும் பூமிக்குப் பெரும் பாரமாகி விப்ரசிகாமணிகளான தங்களைப்போன்ற மந்திரி சிரேஷ்டர்களின் மனதிற்குச் சம்மதமற்றதும் நீதியற்றதுமான காரியங்களிற் பிரவர்த்தித்து வந்தனர். இது தாங்கள் அறியாததன்றே! பிருகு வம்சத்திலுதித்தவரான எனது ஆசாரிய புருஷர் இவை யாவும் கண்டு, உலகத்தை ரக்ஷிக்கும்பொருட்டு எனக்குத் தண்ட நீதியை நன்குபதேசித்து

"பரம துஷ்டர்களான இவ் வேந்தர்களைச் சங்கரித்துச் சிஷ்டராயிருப்பவர்களுக்கு ராஜ்யாதிபத்தியமேற்படுத்தி அவ் வரசர்களைத் தக்கோர் வசம் ஒப்புவித்துப் பாஷண்ட மதம் தலையெடாமல் தர்மஸ்தாபனம் செய்வதே நமக்கு நீ நல்கும் குருதக்ஷிணை" என்று ஆக்ஞாபித்தருளினர். அதனாலேயே நான் இக்காரியத்திற் பிரவேசித்தேன். நந்தர்கள் அயோக்கியர்களென்றும் சந்திரகுப்தன் யோக்கியன் என்றும் அறிந்திருக்கும் தாங்கள், ஸ்வாமிபக்திமேலீட்டாலேயே சந்திரகுப்தனுக்குத் துரோகம் எண்ணினீர்கள். ஆயினும் என்ன? 'தருமமே ஜயம்' பாருங்கள். அதற்கே தெய்வ சகாயமுண்டாதலின், எக்காரியத்திலும் எக்காலத்தினும் வீண்போகாத தங்கள் பௌருஷம் இவர்கள் விஷயத்தில் வீண்போய் விட்டது. இம்மட்டோ? ஒருவிதத்திலும் தங்கள் நீதிக்கு நிகராகாத என் நீதி (குரு வசனப் பிரகாரம்) தருமஸ்தாபனத்தின் பொருட்டுச் செலுத்தப் பட்டமையின், பலித்துவிட்டது. உள்ளபடியே நான் எண்ணிய எண்ணங்கள் சற்றும் தவறாமல் நிறைவேறியதற்குக் காரணம் இதுவே. "காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தல் அறிவுடையார் கண்ணதே." இதனை முற்றும் உணர்ந்த தங்கட்கு நான் அதிகம் சொல்ல என்ன இருக்கிறது? நீதிக்கு விரோதமில்லாததும் உலகத்தைப் பாலிக்க வல்லதுமான எனது நல்யோசனைக்குத் தாங்கள் இணங்கியருளினால் பல நன்மைகள் உண்டாகத் தடையே இல்லை. 'சிநேக தருமத்தைக் கடைப்பிடித்துச் சந்தனதாஸனைக் காக்குமாறு, சந்திரகுப்தனுக்கு மந்திரியாக இருக்க அமாத்ய ராக்ஷஸர் சம்மதித்துவிட்டார்' என்ற சந்தோஷமும் அறிவும் ஜனங்கட்குண்டாகும். இதனால் தங்கட்குச் சித்திப்பது என்றும் அழியாப் புகழேயாம். பல சொல்வானேன்? இனி சந்திரகுப்தனைப் பெயருக்கு அரசனாக வைத்துக்கொண்டு, சகல ராஜ்யாதிபத்தியத்தையும் தாங்களே நிர்வகித்து வரல் வேண்டும். அவன் கீழ் அடங்கிய அரசர்களைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டு துர்மதங்களைக் கண்டித்துத் தர்மஸ்தாபனம் செய்யவேண்டும். நான் இன்றே கிருதார்த்தனானேன். எனது குருசந்நிதானத்திற்கு நான் செல்ல உத்தரவளிக்க வேண்டும்." என்று சாணக்யன் வணக்கமாகவும் மெய்ப்பாடு தோன்றவும் வேண்டினன்.

சாணக்யன் கூறியவை யாவும் உண்மையென உணர்ந்தறிந்த ராக்ஷஸன், அவனை நோக்கி, "ஸ்வாமி, தபோநிதிகளே! தங்கள் சத்தியம் நிரம்

பிய வாக்கை நன்ருய் ஆலோசித்தேன். இத் துஷ்ட அரசர்களின் சக வாசத்தினுல் என்மனத் தடைந்திருந்த மாசு மறுக்கள் எல்லாம் இப் பொழுது நீங்கிவிட்டன. தாங்கள் கட்டளையிட்டருளிய வண்ணமே நான் ராஜ தந்திரத்தை அநுசரித்துத் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபால னம் செய்து தங்கள் ஆசீர்வாத அநுக்கிரக விசேஷத்தால் விளையாட்டுப் போல் தர்மஸ்தாபனம் செய்யத் தடையே இல்லை. ஆனல் ஒன்று: என் குமாரன் தலையெடுக்கும் வரை தங்கள் விருப்பிற்கிணங்கி இருந்து வரு கிறேன். என்னைத் தாங்கள் சிஷ்யனுக அனுக்கிரகித்து, சாணுரவிந்த தரிசனம் அடிக்கடி அளித்து ராஜ்ய தந்திர விஷயங்களால் அழுக்குற்ற என் இருதயத்தைத் தருமோபதேச நீரால் பரிசுத்தப்படுத்தியருளவேண் டும். என் ஸ்தானத்திற்கு வரக்கூடிய நிலைமையை என் புத்திரன் அடைந்ததும் அவனுக்கும் தங்கள் ஆக்ஞையை உபதேசித்துத் தங்கள் சந்நிதானத்திற்குப் பத்தினி சமேதனுக வருகிறேன். எனக்குச் சர்வ பாப பரிகாரமாக இம் மனத்தின் உபசாந்திக்குரியதை உபதேசித்து யான் முத்தியுற அருளவேண்டும்,'' என்று பிரார்த்தித்தான்.

அதற்குச் சாணக்யன் "தர்மகாரியத்திற் பிரவேசித்திருக்கும் தாங் கள் பிறர்மூலம் உபதேசம் பெறல் அநாவசியம். தாங்களே ஞானுபதேச குருவாக இருந்து பாமர ஜனங்களைப் பாப விமுக்தர்களாகச் செய்வதால் தங்களுக்குஆயுளையும் ஆரோக்ய அபிவிருத்தியையும்அஷ்டலக்ஷ்மிகடாட் சத்தையும், முடிவில் மோக்ஷத்தையும் ஸ்ரீமந் நாராயணர் அநுக்ரகிப்பர் என்பதில் தடையே இல்லை. தங்களிடம் வியாஸ, பராசர வால்மீகாதி மகரிஷிகளின் அம்சம் இருப்பதாலேயே இக் கலியுகத்தில் உங்களுக்கு இவ்வித ஞான முண்டாகியுள்ளது. ஆயினும், தங்கள் மனத் திருப்திக் காக எனது ஆசாரியரைக்கொண்டும் உபதேசம் செய்விக்கின்றேன். இனி நாம் இருவரும் உலக வியாபாரத்தில் மித்திரராக இருப்போம் என் பதிலும் ஐயமில்லை. இதனைச் சத்தியமாக நம்புங்கள்'' என்று ராக்ஷஸன் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு சந்திரகுப்தனிடம் வந்தான்.

## எழுபத்திரண்டாவது அத்தியாயம்.

## அமாத்ய ராக்ஷஸன் அமைச்சனாய் அமர்தல்.

சாணக்யனையும் ராக்ஷஸனையும் கண்டதும் சந்திரகுப்தன் எழுந்து எதிர்சென்று அவர்களைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து உயர்ந்த ஆசனங்களில் இருத்தி, அர்க்கிய பாத்யாதிகளால் உபசரித்து அவர்களது உத்தரவின் மேல் ஒரு பீடத் தமர்ந்தான். அமர்ந்ததும், சாணக்யன், சந்திரகுப்தனை நோக்கி, "ராஜ குமார! உங்கள் குலத்துப் பரம்பரை நீதிமானும் மதியூகியும், சகல தந்திரங்களும் அறிந்தவரும், சுதந்தரமாக ராஜ்யபாரத்தை வகிக்கக் கூடியவரும் தைரிய. வீரிய சௌரிய பராக்கிரம சாலியுமான இவ் அமாத்ய ராக்ஷஸர் நீ நந்த வம்சத் துதித்தவன் என்ற அபிமானத்தால் உன்னிடம் அன்புபாராட்டித் தாமாகவே இங்கு வந்துளார். என்னிடமுள்ள பிரதான சஸ்திரத்தை இவரிடம் சமர்ப்பித்து, இவரை மந்திரி பதத்தில் வைத்து, தந்தையிடம் பிள்ளைபோலும், குருவினிடம் சிஷ்யன்போலும், பயபக்தி விசுவாசத்துடன் நடந்து வருவாயாக. அவரது ஆக்ஞையை அணுவளவும் கனவிலும் மீறாமல் அவரால் அபிவிருத்தி அடைந்து வரும் சகல சாம்பிராஜ்ய பதவிகளையும் அநுபவித்துச் சுகமாக வாழ்வாயாக. இன்றே நான் எடுத்துச்செய்ய முற்பட்ட காரியத்தை முடித்தவனானேன்." என்றான்.

சந்திரகுப்தன், "ஸ்வாமி! யஜமானரே! தங்கள் உத்தரவை வேத வாக்காகக்கொண்டு இச் சரீரமுள்ள வரை நடந்து வருவேன்." என்றுரைத்துப் பிரதான சஸ்திரத்தையும், விலை மதிக்க முடியாத உயர்ந்த வஸ்திர பூஷணங்களையும் வரவழைத்து அமாத்ய ராக்ஷஸன் முன் வைத்துச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். நமஸ்கரிக்கவும், அமாத்யன் "ஐய, அரசே! ஜயசீலனாகவும் அரோக திடகாத்திரத்துடனும் நீடு வாழ்வாயாக." என்று ஆசீர்வதித்து அவன் அளித்த அவற்றைக் கிரகிக்கத் தியங்கி நின்றான். அப்பொழுது சந்திரகுப்தன், "ஸ்வாமி, அமாத்யரே! எஜமானர்களான தாங்கள் இருவரும் என் ராஜ தந்திரங்களை நிர்வகிக்கச் சம்மதித்துள்ளபோது நான் ஜயசீலனாவதிற் சந்தேகமும் உண்டோ?" என்றான்.

இதைக் கேட்ட ராக்ஷஸன், தனக்குள், "இவன் பிறப்பிலிருந்தே விநய சம்பத்துள்ளவன். இவனிடமுள்ள உயர்ந்த குணங்களையும் ராஜ லக்ஷணங்களையும் பார்த்து, "இவன் பிரபு பதத்திற் குரியவன்" என்றும், "ராஜ பதவிக்கு வருவான்" என்றும் நான் அடிக்கடி நினைத்த துண்டு. ஆயினும் விருத்த அரசனுக்குப் 'போக ஸ்திரீயின் பௌத்திரனாகப் பிறந்தவன் இவன்' என்பது பற்றியும் நந்தர்கள் ஒன்பதின் மரும் உயிருடன் இருந்ததாலும் அது விஷயமாய் எனக்குச்சிறிது ஐய முண்டாயிற்று. தெய்வ சங்கற்பத்தை அறிவார் யார்? குட்டி யானையே யானைகளுக் கரசானது போல், இப்பொழுது இவனே பிரபு வாகி விட்டான். வீண் மாற்சரியத்தாலேயே இவனிடம் நமக்கு விகற்பம் தோன்றிற்று. இது நியாயமாகாது. சிலாக்கிக்கத்தக்க அரும் பெருங்குணங்கள் இவனிடத் திருப்பது பற்றியே இச்சாணக்யன் கீர்த்திசாலியும் புத்திமானுமாகிய இவனை அநுக்கிரகித்து, அதனால், தானும் பெரும் புகழ் அடைந்துளான். உலகில் பிரபுவானவன் ஜனங்களின் யோக்கியதா யோக்கியதையை அறிந்து அவர்களை அதிகாரத்தில் நியமிக்கவேண்டும். சிலர் பார்வைக்குச் சாதுக்களாயும் இருதயம் சுத்த மற்றும் இருக்கின்றனர். சிலர் குரூபிகளாக இருந்தும் சுத்த இருதயம் வாய்ந்திருக்கின்றனர். ஆத்லின் பிரமத்தின் நிச்சயம் போல் ஒருவனிடமுள்ள குண குணங்கள் எளிதில் அறியக் கூடியனவா யில்லை. கால வித்யாசத்தை அநுசரித்துக் குணம் தோஷமாகவும், தோஷம் குணமாகவும் தோன்றும். ஆகையால் உண்மையை அறிதல் எளிதன்று. ஆயினும், அதிகாரம் கொடுக்கும்போது ஒருவனுடைய குலம், நடவடிக்கை, சுபாவ முதலியவற்றை நேருக்கு நேராகவும் காணவிடத்து விசாரித்து அறிந்தும், அவனவனது தகுதிக் கேற்ற உத்யோகங் கொடுத்தும் சமயோசித சம்பள சன்மானங்கள் அளித்தும், கர்விகளைச் சிதைத்தும், பூஜ்யர்களை அவமதியாதும், அபூஜ்யர்களை வணங்காதும், இருந்து வரல்வேண்டும். காரிய விசேஷங்களில் ஜனங்களுக்கு உற்சாகம் உண்டாகும் வழியைத் தேடி, வீண் அகங்காரம் கொள்ளாது நீதி மார்க்கம் அறிந்து ராஜ்ய பாரத்தை நிர்வகிக்கும் அரசனும் தானும் சன்மார்க்கத்தில் நடந்து ஜனங்களையும் அம் மார்க்கத்தில் நடத்துவோனாவான். ஜனங்களுடைய குறைகளை அறிந்து அவர்களை அன்பாதரவுடன் நடத்துவதால் அவன் கீர்த்தி சுகங்களை

அநுபவிப்பான். அவனுடைய திடபுத்திபோலவே ராஜ்யலக்ஷ்மியும் அவனிடம் நிலைகுலையாது நிலைநிற்பள். இவ்வாறின்றி ஜனங்களின் நடவடிக்கைகளைச் சற்றும் விசாரியாமலும், தன் மனம்போனவாறு அதிகாரம் கொடுத்தும், ஆதாய செலவுகளை அறியாதும், அவசிய காரியங்களைச் செய்யாதுவிட்டும் காலங்கழிக்கும் அரசனால் காரியவாதிகளுக்கு அவமதிப்பும் சாதுக்களுக்கு அபவாதமுமே நேரிடும். அதனால் பிரஜைகட்குப் பீடையும் துர்ப்பிக்ஷமும் கவலையும் பயமுமே ஏற்படும். அன்றியும் அகம்பாவிகளான ஜனங்கள் செல்வவானகளாகத் தம்மைத் தாமே நினைந்துகொண்டு எஜமானனான அரசனை லக்ஷ்யம் செய்யாமல் அவனது பிரபுஸ்தானத்தைத் தாமே அடைய அபேக்ஷிப்பர். அது கைகூடாவிடில் பிரபுவாயிருப்பவனுக்குள்ள காரியங்களைக் கெடுத்து அவனுடைய அபகீர்த்திக்கும் க்ஷேமக்குறைவுக்குமான வற்றையே பல்விதத்தும் செய்து வருவர். ஆதலால் ஒருவனது இயற்கைக் குணத்தை அறிவதினும் அரியதொன்றில்லை. ஒருவகைச்சிரமமுமின்றி அதிபுத்திமானாகிய சாணக்யன் சந்திரகுப்தனுக்கு வலியக் கிடைத்து மந்திரிபதம் வகித்திருப்பது ஈசுவரப் பிரயத்தனமேயன்றி மனிதப் பிரயத்தனம் ஆகாது. நானோ மதிக்குறைவு மிக்குற்ற மலயகேதுவை அநுசரித்து இவ்விதமானேன். உலகில் ஜயசீலனும் உற்சாகமுள்ளவனும் விவேகியுமான அரசனை அநுசரித்து நீதிவழி நடக்கும் மந்திரிக்கே கீர்த்தியுண்டாகிறது. ஆண்மையற்றவனும் சபலசித்தனும் தூரதிருஷ்டி இல்லாதானுமாகிய அரசன், இருகரைகளையும் இடித்துத் தள்ளி ஆங்காங்கு நின்ற விருக்ஷங்களை வீழ்த்தி இழுத்து அதிவேகமாகச் செல்லும் காட்டாறுபோன்று, தானும் கெட்டுத் தன்னைச் சேர்ந்தாரையும் கெடுத்து உலக அபவாதத்திற்குப் பாத்திரனாகின்றான்." என்று ஏதேதோ யோசித்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது சாணக்யன், "ஐய, அமாத்யரே! சந்திரகுப்தன் உங்களைப்பற்றிச் சபையில் மிகவும் சிலாக்கித்துப் பேசியதால் உங்களிடம் அவனுக்குள்ள அன்பும் பக்தியும் கரைகடந்ததென்பது தெரியவந்திருக்கும். நீங்கள் இப்பொழுது இங்கு வந்தது சர்க்கரையில் தேன்கலந்தது போலாயிற்று. விருத்தாஜனது பௌத்திரனும் கீர்த்தியுடன் விளங்குபவனுமான இச் சந்திரகுப்தனை முன்னிருந்த அபிமானத்தை முன்னிட்டுப் பார்க்கவேண்டி வந்தீர்களோ? அல்லது மித்திரனாகிய சந்தனதாஸனது க்ஷேமத்தை உத்தேசித்து வந்திருக்கிறீர்களோ? தயைசெய்து சொல்லுங்கள்" என்றான்.

அதற்கு ராக்ஷஸன் "க்ஷேமத்தையே அளிக்கக்கூடிய பிரபுவைத் தரிசித்தபிறகு சந்தனதாஸனுக்கு நற்காலம் ஏற்படாதிருக்குமோ?" எனச் சாணக்யன், "சந்தனதாஸன் விஷயம் உங்களுக்கு முக்கியமாகில், நீங்கள் சந்திரகுப்தனை அனுக்கிரகித்து மந்திரிபதத்தை ஒப்புக் கொண்டே தீரவேண்டும். இது செய்யின் சந்தனதாஸன் க்ஷேமமுறுவது சத்தியமே" என்றான்.

அப்பொழுதும் ராக்ஷஸன் சிறிது தியங்கி, "சாணக்யரே! பல் விதத்தும் என்னிலும் பன்னூறுமடங்கு மேன்மைவாய்ந்த தங்களால் கிரகிக்கப்பட்ட இப் பிரதான சஸ்திரத்தைக் கிரகிக்க நான் அருகனவேனோ? இது தான் எனக்கு யோசனையாயிருக்கிறது" என்றான்.

சாணக்யன், "ஐய, அமாத்யரே! உங்கள் சாக்ஸத்தை நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறோம். கர்வித்த சத்துருக்களைச் செருக்கடக்கும் அதிசூரரான உங்களுடைய பராக்கிரமத்தின் அதிசயத்தாலேயே எங்கள் சேனை ஜனங்கள் குதிரை முதலிய வாகனங்களில் ஏறி அன்னுகாரங்களுக்கும் இடமின்றி, நின்றவிடம் நில்லாமலும், கடிவாள ஜேணங்களையும் மாற்றாதும், தூக்கமேயின்றிச் சுற்றிக்கொண்டும் துரும்புபோல மெலிந்து அதி சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர். இவ்விதம் சத்துரு பக்ஷத்தியவர்களுக்கு ஆதங்கம் உண்டு பண்ணக் கூடிய தாங்களே மந்திரி பதத்திற்கு அருகரல்லரென்றால், பின் யார் தான் ஏற்றவர்கள்? நீங்கள் இவ்வாறெல்லாம் கூறுவதை ஆய்ந்து நோக்கின் இன்னும் உங்கள் மனம் சமாதானம்அடையவில்லையென்றும் உள்ளிலொன்றும் உதட்டிலொன்றுமாகக் கொண்டு பேசுகிறீர்களென்றும் நினைக்க இடமுண்டாகிறது. சந்தேக விபரீதங்கட் கிடமின்றி நான் கூறுவதைக் கேளுங்கள்: உங்களது உயிர்த்தோழனாகிய சந்தனதாஸனுக்கு க்ஷேமமும், அரசனாகிய சந்திரகுப்தனுக்குச் சந்தோஷமும் விளைவிக்க உங்கட்கு உண்மையில் விருப்பம் இருப்பின் உடனே மந்திரிபதத்தை மாறேதும் கூறாது ஒப்புக்கொண்டு விடுங்கள்" என்று கண்டித்துரைத்தான்.

ராக்ஷஸன் இதுகேட்டுத் தனக்குள், "நந்தர்களுக்கு நம்மிடமிருந்த விசுவாசத்தை நினைப்போமாகில், அவர்களுக்குப் பின் எந்தப் பிரபுவையும் அனுசரிக்க நம்மனம் உடன்படேன் என்கிறது. மித்திரனாகிய சந்தனதாஸனது பரிதாப நிலையை உத்தேசிக்கும்பொழுது எதுவும்

செய்ய இம்மனம் துணிகின்றது. என் செய்வேன்!" என்று தியங்கித் தத்தளித்து நிற்கும்போது, சாணக்யன், "தர்ம சங்கடத்தால் இவன் தவிக்கிறான்' என்பதை அவனுடைய முகக்குறியா லுணர்ந்து, "அந்த ணோத்தம! ஏன் அநாவசிய யோசனை? எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி நெஞ்சைப் புண்ணாக்கிக் கொள்வானேன்? நந்தர்களும் போய், ஸர்வார்த்தஸித்திமன்னனும் சந்ததியற்றுப்போனபிறகு நீங்கள் செய்யக்கூடிய தென்ன இருக்கிறது. அவன் வம்சத்தாரில் ஒருவனுக்குப் பட்டங்கட்டவேண்டுமென்பதுதானே உங்கள் விருப்பும் கடமையும். சந்திரகுப்தனைத் தவிர இப்பொழுது அந்நிலைமை வாய்ந்தவர்கள் யாவருளர்? தெய்வ சங்கற்பத்தைத் தடுக்க யாரால் ஆகும்? நடந்தது நடந்து விட்டது. இனி நடக்க வேண்டிய தென்ன? நவநந்தர்களின் அடாத முறைகேடான செய்கைகளாலேயே அவனுக்கு வைரியாக வேண்டி வந்த சந்திரகுப்தனை, சந்தனதாஸனது க்ஷேமம் கருதியேனும் அனுசரித்தல் உங்கள் கடமையன்றோ? பெற்றுக்கொள்ளுங்கள் இச் சஸ்திரத்தை." எனக் கூற ராக்ஷஸன், சிறிது யோசித்து, "அதி புத்திமானாகிய சாணக்யரே! தாங்கள் உரைக்கும் ஒவ்வொரு மொழியும் உண்மையே. உலகில் பிற யாவினும் மித்திர க்ஷேமமே அதிகம். எனது ஆருயிரினும் சீரிய நண்பனான சந்தனதாஸனது க்ஷேமத்தை முன்னிட்டுத் தாங்கள் சொல்வதைக் கேட்க என் மனம் துணிந்து விட்டது. ஆதலின் சந்திரகுப்தனைப் பற்றிய கவலையும் இனித் தங்கட்கு வேண்டா" என்று பிரதான சஸ்திரத்தைச் சந்திரகுப்தனுடைய கையிலிருந்து பெற்றுக்கொண்டான். அப்பொழுது சங்கம் பேரி காகளம் முதலிய மங்கள வாத்தியங்கள் முழங்கின. அமாத்தியன் சந்திரகுப்தனுக்குக் கை கூப்பி "இத்துடன் நந்தர்களின் நினைப்பு விட்டது" என்று மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, சாணக்யனை நமஸ்கரித்து மந்திரிக்குரிய ஆசனத்தில் உட்கார்ந்தான்.

---

எழுபத்து மூன்றாவது அத்தியாயம்.

## மலயகேதுவுக்கும் சந்தனதாஸனுக்கும் மரியாதைசெய்தல்.

ராக்ஷஸன் ஆசனத்தமர்ந்ததும், "பத்ரபடன் முதலியோர் மலயகேதுவைச் சிறைசெய்துவந்து நகர வாயிலிற் காத்திருக்கிறார்கள்." என்று தூதர் சிலர் வந்து சாணக்யனிடம் தெரிவித்தனர். சாணக்யன்,

## மலயகேதுவுக்கும் சந்தனதாஸனுக்கும் மரியாதைசெய்தல்

அமாத்ய ராக்ஷஸனை நோக்கி, "ஐய! மலயகேதுவின் விஷயமாகச் சந்திரகுப்தன் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமோ அதனை அவனுக்கு அறிவியுங்கள்" என, ராக்ஷஸன் சந்திரகுப்தனைப் பார்த்து "ராஜகுமார! இம் மலயகேதுவின் தந்தை ஆரியரான சாணக்யரது வாக்கியத்தை அநுசரித்து உனக்குச் சகாயம் செய்திருப்பவன். அன்றியும் அவன் எனது மித்திரனாகவும் இருந்தவன். இந்த மலயகேதுவும் சில தினங்கள் என்னைச் சம்மானித்து வந்தவன். பின்னும் குற்றமற்றவன். கள்ளங்கபடறியாதவன். ஆதலின் அவன் நன்றியறிவுள்ள நம்மெல்லோராலும் மரியாதை செய்யப்பட வேண்டியவனே." என்றான்.

ராக்ஷஸன் கூறிய யாவும் 'சரி' என்று சந்திரகுப்தன் அங்கீகரித்து அவனுடனும் சாணக்யனுடனும் பரிவார சமேதனாகச் சிவிகைமீதேறி வரும் மலயகேதுவைச் சந்திக்கச் சென்றான். இவர்கள் எதிர்கொண்டு அழைக்கவருவதைத் தூதர்மூலம் அறிந்த பத்ரபடன், அச்செய்தியை மலயகேதுவிற்கு அறிவித்து, "ஐய, ராஜகுமார! நாங்கள் உங்கள் சேவகர்களேயன்றி வேறில்லை. உத்தரவை எதிர்பார்த்த வண்ணமாக இருக்கின்றோம்." என்று வணங்கிக் கூறினன்.

மலயகேது சாணக்ய சந்திரகுப்த அமாத்ய ராக்ஷஸர்களின் நற்குணத்தையும் மரியாதையையும் வியந்து பரவசமடைந்து சிவிகையை விட்டுக் குதித்துப் பத்ரபடாதி சேனாபதிகளுடன் கால்நடையாக எதிரில் வந்துகொண்டிருந்த சாணக்யனையும் ராக்ஷஸனையும் நமஸ்கரித்துச் சந்திரகுப்தனை ஆலிங்கனம் செய்துகொண்டான். மௌரிய புத்திரனும் அவனை அபிமானத்தினால் ஆலிங்கனம் செய்து, நவரத்தினகசிதமான பல்லக்குகளில் சாணக்யனையும் ராக்ஷஸனையும் உட்கார்த்தித் தான் மலயகேதுவுடன் பட்டத்துயானைமீதலங்கரிக்கப்பட்ட அம்பாரியில் உட்கார்ந்து மிக்க வைபவத்துடனும் ராஜமரியாதையுடனும் விருதுகளுடனும் ஆஸ்தானம் வந்து யானையைவிட்டிறங்கி உட்சென்றான். சென்றதும், ஓர் திவ்ய சிம்மாதனத்தின்மீது மலயகேதுவை உட்காரவைத்து, உயர்ந்த ஆசனங்களில் சாணக்யனையும் அமாத்ய ராக்ஷஸனையும் இருத்தினான். பிறகு தானும் ஒரு பீடத்தமர்ந்து சாணக்யனது சகபாடியான இந்துசர்மனை வரவழைத்து எதிர்சென்றழைத்து நமஸ்கரித்து, அர்க்கியபாத்யம் முதலிய சோடசோப சாரங்களும் செய்து பூஜித்தான்.

அப்பொழுது ராக்ஷஸன், "ஐய, மகிமைமிக்க இந்துசர்மரே! அமாத்ய ராக்ஷஸன் நமஸ்கரிக்கின்றேன்" என்று சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்க, இந்துசர்மன், "ஐய! ஒப்பற்ற பராக்ரமம் வாய்ந்த அமாத்ய ராக்ஷஸரே! இப்பொழுதுதான் எங்கள் சிரமத்திற்குப் பயன் கண்டோம்" என்றுரைத்துப் பதில் நமஸ்காரம் செய்து உட்கார்ந்துகொண்டான்.

சிறிதுநேரத்திற்கெல்லாம் சாணக்யன் சந்திரகுப்தனைநோக்கி, "ஐய! பாபத்தொழிலே பெரும்பாலும் நிரம்பியுள்ள இக் கலியுகத்தும், மித்திர ரத்தினமாகிய சந்தனதாஸனுக்குச் சமானமான ஒரு புருஷன் இதுவரையிலுமுண்டோ? இனியேனும் பிறக்கப் போகிறானோ? இவன் போன்று தன் பெண்டு பிள்ளைகள்மீது நிராசைகாட்டிச் சிநேகன் பொருட்டு உயிரைத் திரணமாக மதித்த உறுதியான உள்ளத்தினன் ஒருவன் உண்டோ? அவனை அதிமரியாதையுடன் இச் சபைக்கு அழைத்துப் பெருமைப்படுத்தவேண்டுமே" என்றான்.

உடனே சந்திரகுப்தன், அருகிலிருந்த தூதர்களை நோக்கி, "தூதர்காள்! சந்தனதாஸனைக் கொலைக்களத்திலிருந்து அழைத்துவந்து மங்களஸ்நானம் செய்வித்துப் பொக்கிஷத்திலிருந்து உயர்ந்த வஸ்திராபரணங்களையும் சந்தன புஷ்பங்களையும் எடுத்துப்போய் அவனை அலங்கரித்து, ஆனைமேல் அம்பாரிவைத்து அதில் அவனை உட்காரச்செய்து, சகல வாத்திய கோஷ்டத்துடனும் அவனது நற்குணங்களைப் புகழ்ந்து கூறிக்கொண்டு, நமது ஆஸ்தானத்திற்கு அழைத்து வாருங்கள்" என, அவர்களும் அவ்வாறு செய்தனர். ஆஸ்தானமுற்ற சந்தனதாஸன், சாணக்ய அமாத்ய ராக்ஷஸருக்கும், சந்திரகுப்த மலயகேதுவிற்கும் நமஸ்காரஞ்செய்து நின்றான். உடனே சந்திரகுப்தன் தனது பீடம்விட்டெழுந்து சந்தனதாஸனைச் சந்தோஷத்துடன் ஆலிங்கனம்செய்து அவன் உட்கார ஓர் பீடம்போட உத்தரவிட்டான். அதுகண்டு சந்தனதாஸன் பூஜ்யர்களுக்கும் மகாத்மாக்களுக்கும் முன்பும் மகா பிரபுக்களின் சமூகத்திலும் பாமரனும் சர்வ சாமானியனுமான எனக்கு உட்கார யோக்கியதையுண்டோ?" என்று விநயமாகக் கூறினன்.

அதுகேட்ட சாணக்யன், "ஐய, மகாத்மாவான செட்டியே! சிபிச் சக்ரவர்த்திக் குற்றதுபோலவே உனக்கும் சந்திரசூரியர் உள்ளவரை சாசுவதமான பெருங்கீர்த்தி நிலைத்துவிட்டது. நீ இந்தப் பீடத்தில் இப்

பொழுது உட்காருவது ஓர் அதிசயமன்று. நெடுநாள் ஆயுள் ஆரோக்ய ஐசுவரிய புத்திர பௌத்திராதிகளுடன் வாழ்ந்திருந்து முடிவில் ஸ்வர்க்க லோகத்தில் இந்திரனால் அளிக்கப்படும் உயர்ந்ததோர் ஆசனத்திலும் உட்காரப் போகிறாய்" என்று சொல்லி அவனை அப் பீடத்தின்மீது உட்கார்த்தி, முன் பறிமுதல்செய்திருந்த அவனுடைய சொத்துக்களையும், அதற்கு நூறுபங்கு அதிகமான திரவியங்களையும் வஸ்திராபரணங்களையும் நவரத்தினாதிகளையும் ராஜ பொக்கிஷத்தினின்றும் அவன் வீட்டிற்கனுப்பினான். பிறகு அவனுக்குக் கனகாபிஷேகம் செய்வித்து அவனை நோக்கி, "உனக்கு இவ்வளவு உறுதி அமாத்ய ராக்ஷஸரிடம் உண்டாகியிருந்ததாலேயே நீ பெரும்புகழுற்றாய். சந்திரகுப்தனுக்கும் க்ஷேமத்தை உண்டாக்கினாய்" என்று புகழ்ந்து, திரும்பவும் அவனை யானைமீ தேற்றி அவனது விடுதிக் கனுப்பினான். இதன் பின்னர், யாவரும் உடன் சென்று மலயகேதுவை ராஜயோக்யமான விடுதியொன்றில் இறங்கச் செய்து அவனது ஆக்ஞைப் பிரகாரம் சகலரும் செய்யுமாறு பாகுராயணனுக்குக் கட்டளையிட்டு ஆஸ்தானம் திரும்பினர்.

---

## எழுபத்துநான்காவது அத்தியாயம்.

## சந்திரகுப்தனுக்குப் பட்டங்கட்ட முயற்சிசெய்தல்.

ஆஸ்தானமுற்றதும் சாணக்யன் ராக்ஷஸனை நோக்கி, "ஐய, மந்திரி! சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டுமென்று நான் எண்ணியிருந்தும், தங்களை மந்திரிபதத்தில் ஏற்படுத்தித் தங்களைக் கொண்டே அதனைச் செய்விக்கத் தீர்மானித்திருந்தேன். தாங்களோ இப்பொழுது மந்திரியாய்விட்டீர்கள். நாளை மறுதினம் நன்னாளாயுளது. அன்று சுபமுகூர்த்தத்தில் தாங்கள் சந்திரகுப்தனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்தால் நானுமிருந்து அவ் வுத்ஸவத்தைக் கண்டு களித்து, தபஸின்பொருட்டு நைமிசாரண்யம் செல்வேன்" என்றுரைத்து, எனக்கிப்பொழுது பர்ணசாலை செல்ல உத்தரவளியுங்கள்" என்றான்.

அதுகேட்ட அமாத்ய ராக்ஷஸன் சாணக்யனது விநயத்தையும் மரியாதையையும் வியந்து சந்திரகுப்தனுடன் சாணக்யனது பர்ணசாலை வரை சென்று அவனுடைய அநுமதி பெற்றுத் திரும்பினான். பிறகு

அவன் ஆஸ்தானம்வந்து உட்கார்ந்துகொண்டு, அதிகாரிகளை வரவழைத்து அவர்களை நோக்கி "ஐயன்மீர்! நாளை மறுதினம் பிராதக் காலத்தில் நம் சந்திரகுப்த மகாராஜர்க்குப் பட்டாபிஷேகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் உடனே நகர்முழுதும் நன் கலங்கரிக்கப்படட்டும். சிறைக்கூடத்துள்ள குற்றவாளிகள் விடுதலை பெறட்டும். ஆஸ்தான வித்வான்களுக்கும் கப்பம் கொடுக்கும் தேசாதிபதிகட்கும் அவரவர்கள் தகுதிக்கேற்ப வஸ்திர பூஷண கந்த மாலிகைகள் பொக்கிஷத்திலிருந்து அளிக்கப்படட்டும். சகல ஜனங்களுக்கும் இம் மஹோத்ஸவம் முடியும்வரை விருந்து நடைபெறட்டும். பிராமண சிரேஷ்டர்களுக்கு மிருஷ்டான்னத்துடன் போஜனமும் பூரி தக்ஷிணைகளும் கொடுபடட்டும். அநாதைகட்கும் ஏழைகட்கும் அன்ன வஸ்திரங்கள் அளிக்கப்படட்டும். தேவாலயங்களில் அபிஷேக ஆராதனைகளும் உத்ஸவமும் நடக்கட்டும். சேனைகள் சர்வாலங்காரத்துடனும் விளங்கட்டும். ராஜவீதிகள் யாவும் புஷ்பப் பந்தல்களாலும் நாட்டியப் பெண்களின் நடன சங்கீதங்களாலும் விளங்கிக்கொண் டிருக்கட்டும். பட்டாபிஷேகத்திற்குரிய கங்கை யமுனை முதலிய புண்ணியநதிகளின் தீர்த்தங்களும், சகல ஔஷத விசேஷ ரஸங்களும், சத்திர சாமரையாதி பதார்த்தங்களும் சித்தமாகட்டும். நகரவாசிகள் யாவரும் வஸ்திராபரண பூஷணங்களுடன் விளங்கட்டும். சிற்றரசர்களும் தேசாதிபர்களும் இறங்கக்கூடிய விடுதிகள் சித்தமாகட்டும்" என்று ஆக்ஞாபித்து, பாகுராயணனைநோக்கி, "இவை யாவும் விமரிசையாக நடைபெறச் செய்வது உனது பொறுப்பாகும்" என்று கூற, அவன், "மகா ப்ரஸாதம்" என்று கூறி இதர அதிகாரிகளுடன் யாவும் சித்தப்படுத்தச் சென்றான்.

பிறகு ராக்ஷஸன் சிற்றரசர்களுக்கும் கப்பம் கட்டிவரும் காசிராஜனுதியோர்க்கும், "புத்திர மித்திர களத்திர பந்து ஜனங்களுடன் கப்பசகிதம் அபிஷேக சமயத்தில் வந்து தயாராக இருக்கவேண்டும்" என்று பத்திரிகைகள் எழுதச் செய்து அவற்றிற்குத் தன் முத்திரையிட் டனுப்பினன். பிறகு அவன் அபிஷேகத்திற்குச் சித்தமாகிக் கொண்டிருந்த சாமக்கிரியைகளைத் தன் கண்ணுல் நேரிடப்பார்த்தான். அவற்றுள் அதிகம் சேகரிக்கவேண்டியவைகளைச் சேகரித்தான். அதிகாரிகளை அவரவர்களுக்குரிய தொழில்களில் நியமித்தான். பொக்கிஷங்களில் தனங்களையும் நவரத்தினங்களையும் குவியல் குவியலாகக் குவித்

தான். யுத்தத்திற் சிதறிக்கிடந்த அரமனைக் காரியங்களைச் சீர்திருத்தினான். பிராகாரமீதேறிநின்று நகரிற் செய்யப்படும் அலங்காரங்களைக் கண்டு மகிழ்ந்தான். அபிஷேக விஷயமாய் மிக்க உற்சாகத்துடனும் பொறுப்போடும் சகல ஏற்பாடுகளும் செய்துவந்தான்.

---

## எழுபத்தைந்தாவது அத்தியாயம்.

## பட்டாபிஷேக வைபவம்.

ராக்ஷஸனது உத்தரவின்படியே ராஜவீதிகளெங்கும் பனிநீர் தெளிக்கப்பட்டது. புஷ்பப்பந்தல்களாலும், மேற்கட்டுக்களாலும், அகில் சந்தனம் இவற்றின் தூபங்களாலும் நல்முத்து, பூங்கொத்து, முதலிய ஸரங்களாலும், விதம் விதமான தீப வரிசைகளாலும், வாழை தென்னை கமுகு முதலியவற்றின் குலைகளாலும், மகரதோரணங்களாலும் சகல வீதிகளும் அலங்கரிக்கப்பட்டன.

இவ்வாறு அலங்கரிக்கப்பட்ட ராஜமார்க்கங்கள் ராஜ்யலக்ஷ்மியின் பூஜா மண்டபம்போல் விளங்கின. சிற்சில இடங்கள் வஸந்தோத்ஸவ சமயத்தை நினைப்பூட்டின. எங்கும் நந்தவனங்கள் வைத்ததுபோலிருந்தது. சிலவிடங்களிற் சதங்கைகள் கட்டிய நாட்டியப்பெண்களின் நர்த்தன ஓசையும் சங்கீத ஒலியும் நிரம்பியிருந்ததால் 'இது கந்தர்வ லோகமோ!' என்று எவரும் ஐயுறவேண்டியதாயிற்று. சமுத்திர ஒலியையும் அடக்கிய பல்லியங்கள் ஒலித்தன. சிலஇடங்கள் அந்தணர்களின் 'ஸ்வஸ்தி' வாசகங்களால் பிரமலோகமே பிரத்தியக்ஷமானதுபோல் தோன்றின. சம்பிரமமாக அலங்கரித்துக்கொண்டு நடக்கும் விடசமூகமும், அதி சாதுரிய வேலைப்பாடமைந்த ஜலயந்திரங்களால் வீதிகளில் இறைக்கப்படும் நீர்த்துளிகளும் வர்ஷாகாலத்தை ஞாபகப்படுத்தின. வந்தியர் மாகதர்களின் ஸ்துதிவசனங்களால் அஷ்டதிக்கும் செவிடுபட்டது. தலை நிறையப் பூச்சூடி நடக்கும் ஸ்திரீகளின் தலையிலிருந்து உதிர்ந்த மலர்களால் ராஜவீதிகள்யாவும் புஷ்பமாரி பெய்யப்பட்டனபோல் தோன்றின. ஆஸ்தானமுழுதும் ராஜராஜர்களின் நவரத்னமகுட காந்திமயமாகவும், ஆகாயவீதியெல்லாம் சந்தனதூபமயமாகவும், உப்பரிகைகளிலுள்ள

சாளரங்கள் ஸ்திரீகளின் முகத்தாமரைகளாலும், பிரஜாசமூகங்கள் பூஷணங்களாலும் விளங்கின. இவ்வாறு நகர் முழுதும் "அமராவதியோ? அளகாபுரியோ ? போகவதியோ ?" என்று எவரும் ஐயுறுமாறு மங்களகரமாக விளங்கிக்கொண்டிருந்தது.

தவிரவும், பிராமணக்கூட்டங்கள் போஜனம் செய்து எழுந்தபின் கைகழுவிய இடம் 'நெய்மடு' வென்னும்படி இருந்தது. நெய், பால் தயிர் இவைகள் எல்லாம் கால்வாய்கள் போன்றும்' பலகாரவர்க்கங்கள் பர்வதம் போன்றும், தோன்றின.

இவ்வித வைபவங்களுடன் மஹோத்ஸவம் நடக்கும்போது பட்டாபிஷேகதினத்தில் அதிகாலையில் சந்திரகுப்தன் எழுந்து ஸ்நானம் செய்து மடியுடுத்துத் தனது பத்தினியுடன் சாணக்யனிருந்த பர்ணசாலைக்குச்சென்று, அவனது இருகால்களையும் கழுவி, அவற்றிற்குக் கனகாபிஷேகம்செய்து விதிப்படி பூஜித்தான். பிறகு, நவரத்னங்களால் இழைக்கப்பட்ட பாதுகைகளைச் சாணக்யன் கால்களில்தரிப்பித்துப் பாததீர்த்தப் பிரஸாதத்தைத் தான் பத்தினியுடன் உட்கொண்டு, அவரது பழைய மிதியடிகளைப் பக்திசிரத்தையுடன் எடுத்துத் தன் சிரமீது வைத்துக்கொண்டு "இவைகளே எனக்குத் தேவதாஸ்வரூபம். இவற்றை நான் தினம் செய்யவேண்டிய பூஜையின் நிமித்தம் அனுக்கிரகிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்துப்பெற்று, அவற்றிற்கு வஜ்ரகவசம் அணிந்து பூஜையறையில்வைத்துத் திரும்பிவந்து சாணக்யனை மறுபடி நமஸ்கரித்து, அவனிடம் அநுமதிபெற்று அரமனைவந்து மங்களஸ்நானம் செய்தான். அவன் பிறகு வஸ்திரபூஷணங்கள் அணிந்து ஹாரகேயூர கடக கங்கணம் முதலிய சர்வாபரண பூஷிதனாகத்தோன்றி, விப்ரசிரேஷ்டர்களுக்குச் சோடசமகாதானங்கள் அளித்து, சகலஜனங்களின் அநுமதியையும் பெற்று மங்களவாத்யம் முழங்க, சுபமுகூர்த்தத்தில் மகாஸிம்மாஸனத்தமர்ந்தான். அப்பொழுது மாணிக்ககவசந்தரித்திருந்த அவன், நக்ஷத்திரங்களின்மத்தியில் விளங்கும் பூரணசந்திரனென ராஜசமூகநடுவில் விளங்கினான். தேவர்கள் முன்னிலையில் விளங்கும் தேவேந்திரனெனச் சோபிக்கும் சந்திரகுப்தனுக்கு அந்தண சிரேஷ்டர்கள் மந்திராக்ஷதைகளைச் சிரத்திலணிந்து ஆசீர்வதித்தார்கள். யௌவன மங்கையர் நவரத்ன ஆலாத்திகளும் மங்கள ஆலாத்தியும்

எடுத்து நின்றனர். "ஜய! ஜய! ராஜாதி ராஜ! ஜய! குருகுலசந்திர! ஜய! சந்திரகுப்த சார்வ பௌம! ஜய! ராஜேசுவர!" என்று வந்தியர் மாகதர் புகழ்ந்தனர். பாகுராயணன் சுவேத சத்திரம் பிடித்து நின்றான். பத்ரபடனாதியோர் வெண்சாமரை வீசினர். அமாத்ய ராக்ஷஸன் சந்திர குப்தனைப் புஷ்பங்களால் பூஜித்து ரத்தின காணிக்கைகளை ஒப்புவித்தான். காசிராஜனும் அவனைப் பூஜித்துத் தலைவணங்கிநின்று கப்பங்களை ஒப்புவித்தான். மச்ச மைதில பங்காள கலிங்க போஜ பாஞ்சால ஸௌராஷ்டிர ஓட்ர தேசாதிபதிகள் அநேக பூஷணங்களையும் வஸ்து வாகனங்களையும் நவரத்னங்களையும் ஒப்புவித்துக் கைகூப்பி அவனைப் புகழ்ந்து கொண்டாடினர். பேரிகை காகளம் மிருதங்கம் மத்தளம் நாகஸ்வரமாதி பதினெண் வாத்தியங்களும் ஒலித்தன. சுகந்தத்துடன் மந்தமாருதம் வீசிற்று. திருப்பாற்கடலைக் கடைகையில் அமிர்தமுண்டான காலத்தும், கிரிஜையின் விவாக வைபவசமயத்தும் தேவாதியோர்க்குற்ற மகிழ்ச்சி இப்பொழுது சகலர்க்கும் உண்டாயிற்று.

பர்வதேச குமாரனாகிய மலயகேதுவும் பிரியத்துடனும் நட்புரிமையோடும் பிரத்யேகமாக உயர்ந்த வெகுமதிப்பொருள்களைச் சந்திரகுப்தனுக்குச் சமர்ப்பித்தான். சந்திரகுப்தன் அவனைத்தனதருகிலிருந்த உயர்ந்ததோர் ஆசனத்தில் உட்கார்த்தினான். அமாத்ய ராக்ஷஸன் சகல மன்னர்களையும் அவரவர்களுக்கேற்ற மரியாதை செய்து, திவ்ய வஸ்திர பூஷண கந்தமாலிகைகளால் உபசரித்துக் கற்பூர தாம்பூலம் அளித்து அவர்களைச் சுவர்ணபீடங்களில் உட்கார்த்தினான்.

அச்சுபலக்கினத்திலேயே சாணக்யன் அமாத்ய ராக்ஷஸனது அபிப்பிராயத்திற்கிணங்கச் சந்திரகுப்தனுக்கு அவன்போன்று ராஜ குலத்துதித்த அரசகுமாரி ஒருத்தியைப் பாணிக்கிரகணம் செய்வித்து விவாககாரியங்களை நடத்தினான். சந்திரகுப்தன் அச்சமயம் பொக்கிஷத்திலிருந்து கோடிக்கணக்கான திரவியம் வரவழைத்துப் பிராமணர்களுக்குப் பூதான சாஸன பத்திரத்துடன் தானம் அளித்துச் சாணக்யனை நமஸ்கரித்து அமாத்ய ராக்ஷஸனாதியோர்க்குத் தக்க மரியாதைகள் செய்து வக்ரநாசன் சுமதி முதலிய மந்திரிகளை வெகுமதித்து ருக்மன் முதலிய முக்கிய அதிகாரிகளுக்குப் பரிசு அளித்து மங்களாசீர்வாதம் பெறும்போது, "ஜய! விஜயீபவ!" என்று எல்லாரும் வாழ்த்தினர். இவ்விதம் சகலரும் பரமாநந்தங்கொள்ள யாவும் நிறைவேறின.

இவற்றைக் கண்ணாரக் கண்டு களித்த சாணக்யன், "நான் எண்ணிய கர்மம் முற்றுப் பெற்றது" என மகிழ்ந்து சகல ராஜர்களும் சைனியங்களும் சூழ, பேரிகையாதி வாத்யங்கள் முழங்க, சந்திரகுப்தனைப் பட்டத்து யானை மீதேற்றி, அவனுக்கிருபுறமும் அமாத்ய ராக்ஷஸனும் மலயகேதுவும் வர ஏற்பாடு செய்து, சத்திர சாமரைகளாதி ராஜ சின்னங்களுடனும், வந்தியர் மாகதர் ஸ்துதிகளுடனும், வார ஸ்திரீகளின் ஆடல் பாடல்களுடனும் யானை குதிரை பரிவாரங்களுடனும் ஊர்வலம் வரச் செய்து பரமானந்த பரிதனானான்.

---

## எழுபத்தாறுவது அத்தியாயம்.

## சாணக்யன் சந்திரகுப்தனுக்குச் சற்புத்தி கூறல்.

பட்டாபிஷேக வைபவம் நிறைவேறிய சில தினங்களுக் கெல்லாம் சாணக்யன் அமாத்ய ராக்ஷஸனுடன் கூடியிருந்த சமயத்தில் சந்திரகுப்தனைக் கண்டு ஆசீர்வதித்து, அவனை நோக்கி, "ராஜாதி ராஜனான சந்திர குப்த! என்னிலும் அதிகரான ராக்ஷஸர் உனது கீர்த்தியையும் க்ஷேம லாபங்களையும் விரும்பி மந்திரி பதத்தில் அமர்ந்துளராதலின் உனக்கு இனி எவ்வித குறைவும் நேருவதற்கில்லை. சகல ராஜர்களும் உனது பரிவாரமாயினர். நீ சார்வ பௌமன் என்ற பெயரும் பெற்றாய். இனிச் சிரஞ்சீவியாகவும் மிக்க புகழுடனும் வாழ்க" என்று ஆசீர்வதித்து, "நான் இனித் தவம் புரிய எனது ஆசிரமத்திற்குச் செல்லல்வேண்டும். போக எனக்கு அனுமதி தருக" என்றான்.

அவ்வார்த்தையைக் கேட்டதும் சந்திரகுப்தனது இரு கண்களினின்றும் நீர் ததும்பிச் சொரிந்தன. தன் மைந்தரிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து விரக்தனாய் வனஞ்செல்லும் தந்தையின் பிரிவாற்றாது தவிக்கும் அரச குமாரனைப் போன்று பெரிதும் வருந்திக் கைகட்டி வாய் புதைத்து நின்று சாணக்யனை நோக்கி, "மகானுபாவரான எஜமானரே! ஆபத்துக்களாகிற ஆழியின் நடுவில் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருந்த என்னைக் கரையேற்றி "ராஜாதி ராஜன்" எனப் பேர்பெறச் செய்தீர்கள். எனக்குத் தாங்களே இஷ்ட தெய்வமாதலால் தங்களைக் குறித்துச் செய்யும் ஸ்தோத்திரங்கள், சூரியனுக்குத் தீபோபசாரம்

செய்வது போன்றும், சரஸ்வதியை வாக்கியங்களால் துதிப்பது போன்றும், மேரு பர்வதத்திற்கு ஸ்வர்ண புஷ்பம் சமர்ப்பிப்பது போன்றுமே ஆகும். தங்கள் பாதசேவைசெய்ய எனக்குக் கொடுத்து வைத்திருக்குமானல் நான் ஆரண்யத்தில் வசித்தாலும் அது மகா சாம்பிராஜ்ய பதவி உற்றது போல் சுபகரமாகவே எனக்குத் தோன்றும். தங்களை விட்டுப் பிரியின் இவ் விராஜ்யாதிபத்தியத்தால் என்ன சுகம் அடையப் போகிறேன்! ஆயினும் இனி, தங்களை நான் என் விஷயமாக நிர்ப்பந்தித்திருத்துவது தகாத் காரியம். தங்களுடைய சரணுனுக்ரகத்தால் எனக்குக் கிடைத்துள்ள இவ்விராஜ்ய சம்பந்தமாக நான் நடந்து கொள்ள வேண்டிய புத்திமதிகளையும் நீதி மார்க்கங்களையும் தயை செய்து அருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

அதற்குச் சாணக்யன், "ஐய! ஆதி முதல் நடந்து வரும் தேச மரியாதைகளுக்குத் தவறுதலின்றிக் காப்பாற்றி வருவதே "ராஜ்யபார நிர்வாகம்" எனப்படும். பலவித உதவிகொண்டு நிறுத்திய பாரமிக்க கற்றூணனது சிறிதும் அசையாமல் மனிதனது ஸ்வாதீனத்திருப்பது போன்றும், சமுத்திரத்திற் சஞ்சரிக்கும் படகுகள் துடுப்புப் பிடித்தவன் வசத்திருப்பது போன்றும், பூர்வ மரியாதைக்குத் தாழ்வின்றி நடத்தி வருவோனது வசப்பட்டிருப்பதே ராஜ்யபார நிர்வாகமென அறிக. இந்த மரியாதைதான் யாதெனில் கூறுவேன். பிரஜைகளின் வருணுசிரமதர்மம் வேறுபடாமல் கவனித்து நடத்தி நிக்ரக அனுக்ரகம் செய்து வருவதே அது. இதை மட்டும் உபேக்ஷித்தால், எஜமானன் வேலைக்காரன்—உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்யாசம் இல்லாமற் போய்விடும். அதனல் தருமத்திற்கு ஹானியுண்டாகி உலகமே கஷ்ட நஷ்டங்களுக்குள்ளாகும். இஃதுணர்ந்தே பூர்வீகமன்னர்கள் இந்த மரியாதைக்கு மாறுதல்களை உண்டாக்காமல் ராஜ்யத்தை அதி சுலபமாக நிர்வகித்துப் பெருங் கீர்த்தி அடைந்து வந்தார்கள். இஃதறியாதாரும், அறிந்தும் இதனை உபேட்சித்தாரும் பெருந்துன்பத்திற்காளாகித் தம் சுதந்தரங்களை யிழந்து தாழ்வுற்ருர்கள். இம் மரியாதைநியமத்தைக் காப்பாற்றிவருவதால் இகபரம் இரண்டினும் புகழே சித்திக்கும் என்பது சத்தியம் என்றறிந்துகொள். நீ பூர்வீக முறைக்கிணங்கவும் நீதிக்குக் குறைவின்றியும் நடந்து வந்தால் மட்டுமே சகல பிரஜைகளும் தங்கள் தங்களுக்குரிய தொழிலை அநுசரித்து

நடக்க முடியும். அதனுல்தான் உன் ராஜ்யத்தில் தர்மம் தலையெடுக்கும். தேசமும் விருத்தியடைந்து ஆதங்கமற்றிருக்கும். இத்தன்மையால், கொழுத்துக் கொழித்திருக்கும் பிரஜைகள் செலுத்தும் வரிப் பணங்கள் விருத்தியாகும். அவற்ருல் உனது பொக்கிஷங்கள் நிரம்பிய வண்ணமாகவே இருக்கும். இப்பணத்தை நீ ராஜ்ய தந்திரங்களுக்கு உபயோகப்படுத்தி வரவேண்டுமென்றி, சுயமாகவும் வீணுகவும் இஷ்டப்படிக்கும் செலவிடக்கூடாது. பிரஜைகள் கொடுப்பன உனக்கு இவ்வுலகில் கீர்த்தியையும் விர்த்தியையும் உண்டு பண்ணுதல் போலவே, உன் பிரஜைகள் செய்யும் சற்கருமங்களாலுண்டான புண்ணியமும் பரலோகத்தில் உனக்குக் கீர்த்தியுண்டாக்கத் தடையே இல்லை. இம் "மரியாதை" குன்ருது போற்றலினும் வேறு சிறந்த தர்மம் அரசருக்கில்லை. நீதியுடன் பிரஜைகளைப் பரிபாலித்து அவர்களுடைய க்ஷேமலாபங்களை உனது மக்களின் க்ஷேமலாபங்கள் போல் நன்கு கவனித்து வருவாயாக. உன்னிடம் பயம் விசுவாசம் ஆகிய இரண்டும் அவர்களுக்கிருக்கும்படி காரியங்களை நடத்தி வா. கட்டளையையும் நீதியையும் மீறி நடப்போரை அவர்களின் யோக்யதா யோக்யதைக்கேற்பத் தண்டிப்பாயாக. உனது தயா தாக்ஷண்யங்கள் சாதுக்களிடமும் சற்புருஷர்களினிடமும் ஸ்திரமாக இருக்கட்டும். நியாயமறிந்து நீதியைக் கவனித்தே எக்காரியமும் செய்து வருக.

"உலக அபவாதத்திற்கஞ்சி நட. அபூஜ்யர்களைப் பூஜியாதே. நன்மையை எண்ணி உன் காரியங்களைக் கண்டிப்பவர்களை உன் ஆப்த பந்துக்களென்றே எண்ணுக. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி. பாபத்திற் கஞ்சும் வித்வான்களை வணங்குக. கார்யநிர்வாகிகள்முன் கையாலாகாப் பேடிகளைக் கண்யப் படுத்தாதே. வஞ்சகர் மொழியை மனத்திருத்தாதே. அன்று செய்யவேண்டியதை அன்றே செய்து விடு. நாள்கழித்தாகவேண்டியவற்றிற்கு அப்போது முதல் ஆத்திரமும் அவசரமும் வேண்டா. நீயே நேரிலிருந்து செய்யவேண்டியவற்றை அதிகாரிகள் செய்யுமாறு விடாதே. பிறர் செய்யவேண்டியவற்றில் நீ பிரவேசித்துத் தேக சிரமத்தையும் மனக் கவலையையும் தேடிக்கொள்ளாதே. "ஏன் செய்தோம்!" என்று கவலைதரக்கூடிய விஷயங்களை ஆரம்பியாதே. நீ செய்யத் தொடங்கும் பெருங் காரியங்களின் பயன் இவை யென ஜனங்களுக்கு வெளிப்படுத்தாதே. விதை யூன்றி விருத்தி

யடைந்து நாளடைவில் விஸ்தாரமாகும் உத்யானவனவிருக்ஷத்தை ரக்ஷிப்பது போல், புண்யத்திற்கும் கண்பத்திற்கும் ஆதாரமான காரியங்களை ஆரம்பத்திற் சிறிதாகவும் பிறகு வரவர விஸ்தாரப் படவும் செய்து அவை இடையிலும் பிறகும் அழியாவண்ணம் இயன்றவாறு நிர்வகித்து வருவாயாக. இயற்கைக் குணங்களை யறிந்து கொள்ளாமல் அதிகாரிகளை நியமனம் செய்யாதே. அவரவர்க்குரிய ஜீவனங்களை ஏற்படுத்துவதில் அசிரத்தையுடன் இராதே. உனக்கு இததனையே வேண்டுவோரும் காரிய நிர்வாகிகளுமான அதிகாரிகளுக்கு உற்சாகம் அதிகரிக்குமாறு காரியங்களைச் செய். தீனர்களையும் அநாதர்களையும் காப்பாற்று. உதிக்கும் வேளையிற் றோன்றும் பூரணச்சந்திரன்போல் எல்லோருக்கும் சந்தோஷகரனுக இரு. வசந்தகாலங்களில் ஊன்றிப் பரவும் கிரணங்களால் பூமியிலுள்ள நீரைக் கிரகித்து மறுபடியும் அக் கிரணங்களாலேயே மழையை உண்டாக்கிப் பயிர் பூண்டாதிகளை வளரச் செய்யும் சூரியனைப்போல், உலக க்ஷேமத்தின்பொருட்டு, திரவிய வர்த்தகர்களிடமிருந்து நியாயப்படி பகுதிகளும் கப்பங்களும் பெற்று, ஏழைப் பிரஜைகளை ரக்ஷித்து, அவர்கள் மிதமிஞ்சிச் செருக்கடையாமலும், ஏழைமையால் தாழ்மையுறாமலும் காப்பாற்றி வா. காலதேச வர்த்தமானங்களை அனுசரித்தும் குணதோஷங்களை விசாரித்தும் ஒரு காரியத்தைத் தொடங்கவேண்டும். “பிரஜைகள் நமது அடிமைகள்” என்றும், நமது சுகபோக சந்தோஷங்களுக்காகவே அரசாட்சியும் பொக்கிஷங்களும் ஏற்பட்டுள்ளன என்றும் எண்ணிவிடாதே. நான் கூறும் விதம் நீ ராஜ்ய பாரத்தை வகித்து வந்தால் சத்துருக்களும் உன்னைச் சரண் அடைவார்கள்; பிரஜைகளும் தூர் வியாபாரங்களில் தலையிடார்கள். சோம்பேறிகளும் காரிய வாகிகளுக் கடங்கி நடப்பார்கள். சகலரும் உனக்கு வணங்கி நடப்பார்கள். இதனால் இக் கலியுகமும் கிருதயுகம் போன்று ஆதங்கமற்றுப் புஷ்டி அடைந்திருக்கும். உலகுக்கே க்ஷேமமுண்டு. இவ்வாறு நீதி தவறாது “காதல் கவறாடல் கள்ளுண்டல்” ஆதியவற்றை விலக்கி ராஜ்யத்தைப் பாலிக்கும் உன் மன உறுதியைப் போன்றே சாம்பிராஜ்ய லக்ஷ்மியும் உன்னைவிட்டசையாது நிலைத்திருப்பள். இதுவே தண்ட நீதி யறிந்த பண்டிதர்களின் உபதேசமாகும். இவை புரிந்துவரின் தர்மாதி புருஷார்த்தங்களும் பெறுவாய். இந் நீதிகளை மனத்திலிருத்துபவன் மேதாவியாகத் தடையே இல்லை. . உலக விவ

காரம் இவைகளே. இவற்றை அநுசரித்து நடப்பவனே ராஜராஜனுகப் பிரகாசிப்பவன். இது நீதி சாஸ்திரமாகையால் நீதிக்குரியவனும் அதிகாரியுமாகிய உனக்குத் தெரிவித்தேன். இவற்றை நன்றாக மனத்தில் வாங்கிக்கொள். அரசனும் அமைச்சனும் ராஜ்யமென்னும் வண்டியின் இரு சக்கரங்களே. அவ் விருவரும் இதனை நன்குணரவேண்டும். உனக்குக் கிடைத்திருக்கும் மந்திரியைப் பற்றி நான் சொல்லுவது முகஸ்துதியாகவே முடியும் ஆதலின் உனக்குத் தெரிவிக்க வேண்டியவை இவைகளே என்றான்.

---

## எழுபத்தேழாவது அத்தியாயம்.

## சாணக்யனுதியோர் நைமிசாரண்யம் செல்லல்.

சாணக்யன் கூறிய நன்மொழிகளைப் பயபக்தி விசுவாசத்துடன் கேட்டுக்கொண்டிருந்த சந்திரகுப்தன் ஆனந்த பரிதனுகி, அவனை நமஸ்கரித்து, "மகாநுபாவரான எஜமானரே! தங்கள் நல்லுபதேசங்களால் என் மனம் தெளிவுற்றது. கட்டளையிட்ட வண்ணமே நடக்கத் தடையில்லை. ஆயினும்—" என்றுரைத்து மேலேதும் கூற முடியாமற் கண்ணீர் உகுத்துக் கலங்கிநின்றான். அதனைக் கண்டுகொண்ட சாணக்யன், "அப்பா, குழந்தாய்! ராஜாதிராஜ! ஏன் நீ இவ்விதம் விசனமடைய வேண்டும்? உனக்குப் புத்திரோத்ஸவமானதும் அச் சந்தோஷத்தைக் கண்டுகளிக்க மற்றுமொருமுறை இங்கு வருவேன். இனி நீ கலங்காது எனக்கு உத்தரவு கொடுப்பாயாக. நீ இனி அமாத்ய ராக்ஷஸரது உத்தரவிற்கடங்கி நடந்து, அதனல் அபிவிர்த்தி அடையும் ஸாம்ராஜ்ய பதவியை அனுபவித்துச் சுக சந்தோஷத்துடன் இருப்பாயாக" என்று கூறி அவனிடம் பிரியா விடைபெற்றுப் புறப்படலானான்.

அப்பொழுது அமாத்ய ராக்ஷஸன் இந்துசர்மனையும் அவன் சிஷ்யர்களையும் அபரிமிதமான பொருள்களாலும், ஸ்படிகமயமான கமண்டலங்கள் மிருதுவான கிருஷ்ணஜனதிகளாலும் வெகுமதித்து மணமயமான ரதங்களை வரவழைத்து முனிவர்களின் பிரயாணத்தின் பொருட்டு நிறுத்தினன். நிறுத்தவும் சந்திரகுப்தனது வேண்டுகோட்கிணங்கிச் சாணக்யன்முதலியோர் ரதங்களிலேறினர். மலயகேது

முதலிய மன்னர்கள் நமஸ்கரித்து ஸ்தோத்திரங்கள் கூறி நின்றனர். அவர்கள் யாவரையும் சாணக்யன் நன்மொழிகளால் உபசரித்து, சந்திர குப்தனுக்கு அடங்கி நடந்துகொள்ளுமாறு அவர்களுக்குப் புத்தி புகட்டிப் புறப்பட்டான். பின்னர், சந்திரகுப்தன் ராக்ஷஸனுடன் வேறொரு ரதத்திலேறி மன்னர் பரிவாரம் சூழச் சாணக்யனுடன் புறப்பட்டான். அப்பொழுது, புத்திரனாகிய தேவேந்திரனது வைபவத்தைக் காணுமாறு வந்த காசிபமுனிவரைத் திரும்பவும் அவரது ஆசிரமத்திற்கு அனுப்பும் தேவேந்திரனது பரிவாரம்போல் சந்திரகுப்த சைனியம் விளங்கின. சாணக்யனது ரதத்தின்மீது ஜனங்களால் வாரி இறைக்கப்பட்ட புஷ்பம், ரத்நம், தனம் முதலியவற்றால் ராஜமார்க்கங்கள் நிரம்பின. இவ் வைப வங்களைக் காணவிரும்பி உப்பரிகை சாளரங்களிடையில் நிற்கும் ஸ்திரீ ஜனங்களின் கமலமொத்த கண்ணொளியால் மண்டலாதிபதிகளின் சத் திரங்கள் யாவும் மயிலிறகின் நிறம்வாய்ந்து விளங்கின. இவ்வாறு சாணக்யனுடைய ரதமானது நகரவாயிலைத் தாண்டி நைமிசாரண்யமுகம் திரும்பிற்று. திரும்பியதும், சந்திரகுப்தன் தன்னுடன்வந்த மன்னர் மண்டலீகர் அதிகாரிகள் முதலிய அனைவரையும் நிற்குமாறு கட்டளை யிட்டுத் தான் ராக்ஷஸ ஸமேதனாகச் சாணக்யனுடன் நைமிசாரண்யம் அடைந்தான். நான்கு தினங்கள் அங்கு இருவரும் இந்துசர்மனது ஆசிரமத்தில் சாணக்யனுடன் தங்கியிருந்தனர். ஐந்தாநாள் சந்திரகுப் தன் சாணக்யனைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவனது ஆசீர்வாதம் பெற்று அமாத்யனுடன் பாடலிபுரம் திரும்பினான்.

---

## எழுபத்தெட்டாவது அத்தியாயம்.

## பின்னர் நிகழ்ந்தவை.

சாணக்யனது வாக்கை வேதவாக்காகக்கொண்டு சந்திரகுப்தன் ஆட்சிபுரிந்து வருகையில், ஒருநாள், அமாத்யராக்ஷஸன் சந்திரகுப்தனை நோக்கி, "ஐய, குமார! ஆரியரான சாணக்யர் செய்த உபகாரத்திற்கு நம்மால் செய்யக்கூடிய பிரதி உபகாரம் ஒன்றுமில்லை. ஏதேனும் செய் யினும் அதனை அவர் ஸ்வீகரிக்கக்கூடியவரல்லர். ஆயினும் நாம் சில செய்தே தீரவேண்டும். அது சம்பந்தமாக எனக்குத் தோன்றுவன

வற்றைத் தெரிவிக்கின்றேன்: அவரது ஞாபகார்த்தமாக அவர் வசித்து வந்த பர்ணசாலை இருந்தவிடத்தில் விஷ்ணு ஆலயம் ஒன்று கட்டி, அங்கு லக்ஷ்மிநரசிம்ம ஸ்வாமியைப் பிரதிஷ்டை செய்து, அவ்விடததிலேயே ஆரியரான விஷ்ணுகுப்தரின் விக்ரகத்தையும் ஸ்தாபித்து, அவற்றிற்குச் சம்பிரமமாக நித்யோத்ஸவம், பக்ஷோத்ஸவம், மாஸோத்ஸவம், வருஷோத்ஸவம் முதலியன நடைபெறுமாறு சர்வமானியங்கள் விடவேண்டும். அவர் தங்கிய இடங்களில் அன்னசத்திரங்கள் கட்டவேண்டும். அவர் சஞ்சரித்த இடங்களில் அக்ராரம் தடாகம் பூந்தோட்டம் இவைகளை நிருமிக்கவேண்டும். நைமிசாரண்யத்திற்குச் செல்லும் பாதைகளின் மருங்கே தோப்புகளும் உத்தியான வனங்களும் உண்டாக்கி அலங்கரிக்க வேண்டும்" இது விஷயமாக உன் உத்தரவையும் அபிப்பிராயத்தையும் எதிர்பார்க்கிறேன்" என்றான்.

இது கேட்ட சந்திரகுப்தன், "ஸ்வாமி, எஜமானரே! எனது பிதாமகரான ஸர்வார்த்தஸித்திமன்னர், தந்தையாகிய மௌரியர், ஆசாரியரான சாணக்யர் ஆகிய இவர்களது ஸ்தானங்களில் இப்பொழுதிருப்பவர் தாங்களே. சாணக்யர் சம்பந்தமாக எந்தெந்தக் காரியங்களை எந்தெந்த விதம் நடத்தவேண்டுமோ அந்தந்த விதங்களில் என்னைக் கேளாமலே நடத்திக் கொள்ளுங்கள்" என்று அதி விநயமாக விடையளித்தான். அளிக்கவும் அமாத்யராக்ஷஸன் தான் கருதியவாறே சந்திரகுப்தனது மனமும் மகிழ யாவும் செய்து முடிக்க ஏற்பாடுகள் செய்தான். பிறகு அவன் சந்திரகுப்தனுடன் மலயகேதுவின் விடுதிக்குச் சென்று, அவனை விலைமதிக்க முடியாத வஸ்திராபரணங்களால் அலங்கரித்து "பர்வத ராஜ்யமும் நமது ராஜ்யமும் ஒன்றேயாதலால் இனி நீ என்றென்றும் சந்திரகுப்தனுடன் சகோதர வாஞ்சையுடன் பழக வேண்டும்" என்று மரியாதையாக உரைத்து, அவனைப் பத்ரபடாதி சேனைகளுடன் அவனுடைய ராஜ்யத்திற்கு அனுப்பி, இதர மன்னர்

களுக்கும் தக்க மரியாதை செய்து அவர்களைத் தத்தம் ஊர்செல விடுத்து, பாடலிபுர ராஜ்ய விசாரணைகளை முன்னிலும் பன் மடங்கு நடத்தி வந்தான். சந்திரகுப்தமகாராஜனும் "ராஜ ராஜன்" எனப் பெயர்பெற்று அஷ்டைசுவரியமும் பெற்று, மாற்றலரும் போற்ற அரசாட்சி செய்யலானான்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

சாணக்ய சாகஸம் என்ற
சந்திரகுப்த சரித்திரத்தின்
இரண்டாம் பாகம்
முற்றுப்பெற்றது.

*8. தேனும் தேளியும், நற்பவளமும்— 0-10—0

[இதுகாறும் தமிழ் மக்களறிந்து மகிழ்வுறாத இரண்டு அரிய வியாசங்கள்.]

*9. விசுவநாதன் அல்லது கடமை முரண் 0-10—0

[பிதுர்பக்தியையும் ராஜபக்தியையும் ஏககாலத்தில் விளக்கிய உத்தமமைந்தன் ஒருவனது உண்மைச் சரித்திரம். மனோன்மணீயம், விசுவநாதம், மானவிஜயம் இவற்றைப்போல் அகவற்பாவில் எளிய இனிய நடையில் எழுதப்பெற்றுள்ள ஓர் சிறந்த நாடகம்.]

10. ஷை நாடக அநுபந்தப்பாக்கள் 0—4—0

["விசுவநாத"னை நடிக்க விரும்புவோர்க்குப் பயனுகுமாறு நூதன வர்ணமெட்டுக்கள் அமைந்த சங்கீதப்பாக்கள் வாய்ந்தது. மதுரை வித்வான் ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடுகாரு இயற்றியது.]

11. கமலாவதி:— 0-12—0

[ஸ்ரீ: கி, வேங்கடராமையர் இயற்றி ஸ்ரீ ம. கோ. பருக்கிப் புதுக்கிப் பதிப்பித்தது. பல நீதிகளைக் கற்பிக்கும் பான்மையது.]

*12. பன்னூற்றிரட்டு—ஈகை 0-12—0

[காலஞ்சென்ற பாலவநத்தம் ஜமீந்தாரும் மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபகருமான ஸ்ரீமத். பாண்டித்துரைத் தேவர் தொகுத்த செய்யுட்களும், ஸ்ரீ ம. கோ. இயற்றிய பதவுரை, விருத்தியுரை, இலக்கணக்குறிப்பு முதலியனவும் கொண்டது.]

13. விவேகபாநு 4, 6, 7-ஆவது வால்யூங்கள்
தொகுதி ஒன்றுக்கு ரூ. 3—8—0

*14. தமிழ் வியாசங்கள் 0-12—0

[ஸ்ரீமத். V. ரெங்கசாமி ஐயர் இயற்றியது. 'வியாசம் எழுதும் முறை' முதல், 'காப்பத விரதம்' ஈறாக 51-அரிய விஷயங்கள் கொண்டது மாணவர்க்கும் எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர்களுக்கும் பிறர்க்[கும்] நலந்தருவது.]

*15. ரோமியோ ஜூலியத் 0—8—

[ஒரு ஷேக்ஸ்பியர் நாடகக் கதைச்செய்யுள். விருத்தப்பாவில் எளியநடையில் தமிழ் மணங்கமழ ஆனைமலை ஸ்ரீமத்-A. R. ஸ்ரீநிவாஸ முதலியார் எழுதியது. பண்டிதர் பாமரர் பலரும் பாராட்டிப் படிக்கத்தக்கது.]

16. தனித்தமிழ்ப் பாக்கள்:— 0—6—

[தமிழ்வளர்ச்சி கருதி ஸ்ரீமத்-A. R. ஸ்ரீநிவாசமுதலியார் விநோதார்த்தமாக எழுதி வெளியிட்டது. பல நீதிகளை, விநோதகதைகள் இயற்கைப்பொருள்கள் முதலியன மூலமாக உண்மையாகவும் அதி சாதுரியமாகவும் எடுத்துக்கூறுவது. மிக்க எளிய நடையில் எழுதப்பட்ட ஓர் அரிய நூல்]

17. மனிதர்க்கு நல்லுணவு மாமிசமா? மரக்கறியா? 0—2—

[இது ஸ்ரீமத்-அபேதாநந்த ஸ்வாமிகள் அமெரிக்காவில் பிரசங்கித்தருளிய "Why A Hindu is a Vegetarian?" என்பதன் நேரிய மொழிபெயர்ப்பு. புலால் மறுக்கும் புண்ணியர் வாங்கி விநியோகிக்குமாறு 100-பிரதிகள் ரூ. 6—8—0-க்கும் 200-பிரதிகள் ரூ. 10-க்கும் கொடுபடும்.]

18. டோரா 0—1—

[முழுவலன்பின் மூவகை இலக்கணத்தையும் இனிது விளக்கிய ஓர் உத்தமியின் வரலாறு. டென்னிஸன் என்னும் கவிஞன் இயற்றிய 'Dora' என்பதன் மொழிபெயர்ப்பு. சிறந்த சொல்லும் குறித்தமொழியும் கொண்டு எளிய நடையில் எழுதப்பட்டது.]

இவைகளும் பிறவும் வேண்டுவோர், எமக்கேனும், மதுரை புதுமண்டப புத்தகவியாபாரம் செய்யும் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார்க்கேனும் எழுதிப்பெறுக.

பண்டித ம. கோபாலகிருஷ்ணையர்

Lecturer in Tamil, National College, Trichinopoly